உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தப்பட விளக்கம்.

இஃது

காரைக்காலைச் சேர்ந்த

பொன்பேத்தியில் எழுந்தருளியிருந்த

திருக்கைலாய பரம்பரை

தருமபுரவாதீனம்

ஸ்ரீலஸ்ரீ அருணந்தி தேசிக ஞான

சம்பந்தப் பண்டாரச்சந்நிதியவர்கள்

திருவருள்பெற்ற

பஞ்சாட்சரபுரம்

ஸ்ரீ வாலையானந்த சுவாமிகளால் இயற்றி

சென்னை

சைவவித்தியாநுபாலன அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1917.

*Copyright reserved.*

Title page with preface printed by Solden & Co., Madras.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

அருணந்தி தேசிகன் அரவிந்தத்தாளே துணை.

# முகவுரை.

அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளாகிய சிவபிரான் அனாதியே ஆணவமல சம்பந்தமுற்ற ஆன்மாக்கள் அறிந்து உய்யும் வண்ணம் அருளிச்செய்த முதல் நூல்கள் வேத சிவாகமங்கள். அவைகளின் சாரமே மெய்கண்டசாத்திரம் என்னும் சித்தாந்த சாத்திரங்கள். இவைகள் மிக ஆழ்ந்த கருத்துள்ள செய்யுட்களால் அமைந்தும் கடினமான வசனங்களால் உரையிடப்பட்டும் இருக்கின்றமையால் யாவரும் எளிதில் ஓதியுணர முடியவில்லை. இவைகளிற் கண்ட விஷயங்களை உள்ளடக்கிக் கூறுகின்ற கட்டளை முதலிய வசன நூல்களும் அனேகமுள.

மேல்நாட்டாரால் இயற்றப்பட்ட சித்திரப்படங்கள் வாயிலாகவே தாம் கற்க வேண்டியவைகளைச் சிறுபிராயமுதல் எளிதாகக் கற்றுவந்தவர்களாகிய நமது சகோதரர்களுக்கு அவ்வசன நூல்களைப் படிப்பதும் அசாத்திய மாயிற்று. படத்தின்மூலமாகவே படித்துப் பழகிவந்த தம தறிவைக்கொண்டு வசன நூல்களைப் படித்தும் அவைகளின் உண்மையை உணரமுடியாது மயங்கித் தமதறிவு பழகியவாறே போதிக்கும் இதரமத நூல்களை அனுசரித்து அவைகளையே மிகவும் பாராட்டுகிறார்கள்.

பெறுதற்கரிய மானுடப்பிறவியைப்பெற்றும் வேதாகமங்கள் வழங்கும் இப்பரதகண்டத்தில் சிவமணங் கமழும் சைவசமயத்தினுதித்தும் சித்தாந்தத்தேனையுண்டு ஆனந்தியாது, விபூதி முதலிய சிவச்சின்னங்களை விடுத்தும், அவற்றைத்தரித்துக்கொண்டே பரமகருணாநிதியாகிய சிவபெருமானை வழிபடாது பிறந்திறந்துழலும் பிறதெய்வங்களை வழிபட்டும், காயம் அழியாமல் இருப்பதே முத்தி, பிராணவாயுவே சீவன் அதை அடக்கினால் எக்காலமும் தேகம் அழியாமல் வாழலாமென்று மூச்சடக்கியும், காயசித்தி செய்ய அலைந்தும் வருந்துகிறார்கள். இவர்கள் தமக்கு உண்மை புலப்படாமையினாலன்றோ இவ்வாறு மயங்கி யிடர்ப்பட்டுத் தம் வாணாளை வீணாளாக்குகிறார்கள்.

ஆகையால் அவர்களது அறிவு பழகிய முறையிலேயே சித்தாந்த சாத்திரத்தைச் சித்திரப்பட வாயிலாக விளக்கினால் எளிதில் உணர ஏதுவாகுமென்று சில நண்பர்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு சித்திரப்பட மெழுதத் துணிந்தேன். எண்ணில்லாத கிரந்தங்

களாலும் அறுதியிட்டுக்கூறமுடியாததும் வாக்கு மனாதீத கோசரமானதுமான பதிப்பொருளின் தத்துவத்தை அளவிட்டு ஒரு படத்தில் அமைக்க ஒருவன் துணிந்தால் அவனது அறியாமைக்கு வேறுசான்றும் வேண்டுமோ? என்றாலும் சித்தாந்த சாரத்தைப் படத்தின் வாயிலாக ஒருவாறு உணர்த்தவந்ததால் ஆன்றோர்கள் அகமகிழ்வார்களென நினைக்கிறேன்.

சித்தாந்த உண்மைகளைப் படத்தின் வாயிலாக முற்றிலும் விளக்க ஓரே படத்தில் முடியாமையால் ஒரு படத்தில் அமையக் கூடியவைகளை அமைத்து எழுதியிருக்கிறேன். அதில் பரசிவ பராசத்தி சிருட்டிகள், பசுக்களின் பேதங்கள், மாயையின் பகுப்பு, தத்துவங்கள், அவைகளின் எல்லை, கலைகள், அவைகளின் எல்லை, புவனங்கள் புவனாதிபதிகள், சில புவனங்களுக்குமட்டும் திசைகளும் புவனவாசிகளும், கலைகளில் தத்துவங்களும் தத்துவங்களில் புவனங்களும் அடங்கியிருக்குமுறை முதலியவைகளை விவரமாய்க் காட்டியிருக்கிறேன். புவனங்களின் விசாலம், திசை, தூரம், புவனவாசிகள் முதலியவைகளை நன்றாய் விளக்கிக்கூறும் நூல்களை எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தேடியும் அவைகள் முற்றும் கிடைக்கவில்லை; கிடைத்தவைகளைக்கொண்டே ஒருவாறு எழுதி முடித்திருக்கிறேன்.

இதயதாமரை, அத்துவாக்கள், பஞ்சேந்திரிய நுகர்ச்சியில் தொழிற்படுங் கருவிகள் முதலியவைகளைக் குறிக்கும் படங்கள் இப்புத்தகத்தில் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.

சித்தாந்தப்படத்திலும் இப்புத்தகத்திலும் திருத்தவுஞ் சேர்க்கவுங் கூடியவைகளை தெரிவிக்கும் நண்பர்களுக்கு நன்றிபாராட்டி அவ்வாறே மறுபதிப்பில் பதிப்பிப்பேன்.

இப்படம் எழுதி முடிவுறும் வரையும் தமது நலத்தையும் சரீரசுகத்தையும் எண்ணாது உடனிருந்து ஊக்கந்தந்து தமது பொருட்செலவிலேயே அச்சிற் பதிப்பித்த மண்ணுக்குமுண்டான மகா-ள-ள-ஸ்ரீ கோ. வேங்கடாசலப்பிள்ளை அவர்களுடையவும் அவர்கள் சகோதரர்களுடையவும் பெருந்தகைமைக் குணங்கள் என்னாலும் பிறராலும் மிகவும் பாராட்டற்பாலனவேயாம்.

இன்னும் சித்தாந்தசாத்திர இரகசியங்களைப் படவாயிலாகவே விளக்க உத்தேசித்திருக்கும் எனது விருப்பத்தை முற்றுவிக்கவும் ஆன்மகோடிகளெல்லாம் சித்தாந்த உண்மையை யறிந்து உய்ய அருள்புரியவும் அனவரத நடம்புரியும் எல்லாம் வல்ல இறைவனை நமஸ்கரித்துப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை:
பிங்கள௵
ஆவணி௴ 14௳.

பஞ்சாட்சரபுரம்
வாலையானந்தம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

அன்னப்பன் பேட்டை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சபாபதித் தாயுமான பண்டாரச் சந்நிதியவர்கள்

இயற்றியது.

இருக்குமுடி யிருக்குமொரு தளிப்பரம னருள
விலகியவா கம நாலே ழியம்பு பொருண் மூன்றைச்
சுருக்கமுற வொருபடத்திற் காட்டியவை விளங்கத்
தொன்மையநூற் படிவிளக்கம் விரித்துமுரை செய்தான்
கருக்குழியில் வீழாம லேயுயிர்கள் பஞ்சாக்
கரபுரத்து வாலையா னந்தனெனுந்தருமைத்
திருக்கறுக்கு மருணந்தி ஞான சம்பந்த
தேசிகன்ற னருளார்ந்த திருப்புதல்வன் றானே.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து

ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள்

இயற்றியது.

போதமுத லாஞ்சித்தி புகல்பொருளைப் புகரறவே புகலக் கேட்டோன்
சீதமதி யருணந்தி தேசிகனார் தாந்தெருட்டத் தெளியக் கொண்டோன்
பேதமதி யாதவர்தா மின்புறுவ திவ்வுலகம் பெறவே வேண்டல்
வாதமதி யியலாத வளம்படைத்தார் வழக்கன்றோ வழங்கக்காண்டல் (1)

தினவிருளகலத் தேசுசேருலகஞ் சீர்த்திடு மாறுபோ லடியார்
மனவிரு ளகலத் தத்துவவிளக்கம் வகுத்தனர் பற்பலா யிரரே
முனம்விரித்துரைத்தவனைத்தையு நோக்க மூதறிவின்மையனேனுஞ்
சனத்தொகை கணக்கி லமைவுறு சாற்றுந் தகையதோ சாற்றரிதாமால் (2)

நிற்பதுபஞ்சாக் கரபுர மெனவே நின்றிடும் வாலையானந்தன்
பற்பலவருணத் தவரெவரெவரும் பார்த்திதை யப்படத்தெழுதி
நிற்பதுகருதி பற்பலவருண ரோர்தரத் தத்துவ விளக்கங்
கற்பதற் கொருநூல் பொற்படத் தோடே காட்டினன் காசினியகத்தே (3)

தில்லைவளாகம்

சிவானந்தநிலய மடாலய வாசியாகிய

திருச்செந்தூர்

ஸ்ரீலஸ்ரீ ஆனந்த சண்முகஸரணாலய சுவாமிகள்

இயற்றியது.

---

பூமே லவனும் பொன்மார் பினனு
மன்னமு மேனமு மாகி யலமரச்
சுயஞ்சுட ரான சொரூபநிட் களசிவ
மநாதி முத்தசித் துருவா மமல
னனாதி பெத்தசித் துருவான் மாக்க
ளநாதி பாச மகன்று கதிபெற
நிட்கள சகள நிலையுரு வாகி
நிகமா கமங்க ணெறியா வருளி
நிகமம் பொதுவா கமஞ்சிறப் பெனவைத்
துலகோர் நிகம நெறிநின் றொழுகவுஞ்
சத்திநி பாதத் துத்தம ராகமச்
சார்பி னின்றே சரியை கிரியைமா
யோகமுங் கடந்தே யுயர்சிவ ஞான
மெய்திசா யுச்சிய மேய்தற் பொருட்டே
நந்திமா முனிகணங் கட்கு நவிற்றிய்ப்
பரம்பரை யாகப் பரவிய நூல்க
ளளப்பில வாயினு மறிஞர் வகுத்த
சிவஞான போதஞ் சித்தி யிருபா
வுந்தி களிறுய ருண்மை விளக்கஞ்
சிவப் பிரகாச நற்றிருவருட் பயன்
போற்றிப் பஃறொடை புறச் சங்கற்ப
நிரா கரணம் நெஞ்சுவிடு தூது
உண்மை நெறி கொடிக் கவிவினு வெண்பா

வென்ன வீரெழு நூ லிலகிய தெனினு
மெண்ணு மெழுத்து மியன்ற பேரறிவும்
பெற்றோர்க் கன்றிப் பிறர்க்குப் பயன்றரா
திருத்தலைநோக்கி யெளிதி லுணர்வகை
யியற்றித் தரவென் றிசைத்தனன் யாவன்
மாநதி சூழ்ந்த மண்ணுக் குண்டா
னெனுநகர்க் கதிப னீகைமிக் குடையோன்
கோவிந்த சாமி யெனுங் குண சீல
னருந்தவப் புதல்வ ரைவரி லொருவன்
ஞான சித்தி விநாயக ராலயப்
பிரதிட்டை செய்து பெரும்புகழ் பெற்றோன்
சிவனடி யவரைச் சிவனெனத் தேறி
வழிபடு மியல்பு மருதசற் சீலன்
வந்தவ ருண்க வருவிருந் தெதிர்பார்த்
தந்தியும் பகலு மமுதளித் திடுவோன்
ஆய நாயனு ரான்பணி யெனவே
சந்ததங் கணேசர் சந்நிதி சார்ந்து
வேணுகான மிகவிசைத் திடுவோன்
வெங்கடா சலமெனு மெய்த்தவ னருகும்
ஆங்கதற் கிசைந் தருளிய தென்னெனின்
சுத்த சிவபரா சத்தியின் சொரூபமுஞ்
சம்புபட் சத்ததி தெய்வநற் சார்பு
மணுபட் சத்ததிட் டானர்வாழ் நிலையுஞ்
சத்திக ளவரவர்ச் சார்தரு மியல்புஞ்
சுத்தா வத்தையிற் றோன்று மானந்தம்
பெறத்தச காரியப் பேறுசோ பானமும்
விந்து மோகினி மாவென்ன விரிந்த
தத்துவந் தொண்ணூற் றாறின் றகைமையும்
புவன மிருநூற் றிருபத்து நான்கும்
பொருந்து மூவகைப்பிர பஞ்சப் பேரிவு
மதனிற நிலை முதல் யாவு மமைத்து

அக்ஷர மைம்பத் தொன்றி னடைவும்
பதமெண் பத்தொன் ருகிய பரிசும்
ஆரைந் தாகிய மந்திர வமைவும்
பஞ்ச கலையின் பகுதியு மான
ஆறத்து வாவி னறுநிலை விளக்கிச்
சித்தாந் தப்படத் திருவுரு வமைத்த
தன்றியுங் கரதலா மலக மெனவவை
விளங்குற நூலும் விரித்தியற் றியதா
ரெனிற்பஞ் சாக்ஷர புரமம ரேந்தல்
வடமொழி தென்மொழி வரம்புகண் டமர்வோன்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யென்னும்
இலக்கண விலக்கிய மியல்பெற வுணர்ந்தோன்
வேதா கமநெறி மெய்யெனத் தேறி
வைதிக சைவம் வளர்க்குஞ் சீலன்
பத்தி நெறியே பரசா யுச்சியம்
பயக்கு மென்பதைப் பகரும்வாய்ச் சாலன்
வாசகா ஞான மன்றியெஞ் ஞான்றுஞ்
சிவானு பூதி யிற் றிளைத்திடுஞ் செல்வன்
தத்துவப் பிரகா சத்தினி னாலைத்
தாரக மாகத் தழுவியு மேனைய
சைவசித் தாந்த சாகரங் கடைந்தே
யுய்வகை யமுத முதவிய வொருவன்
வாலையா னந்த மாதவ யோகியே.

---

சிறப்புப்பாயிரம்

முற்றும்.

# அறிவிப்பு.

சித்தாந்தப்படமும் சித்தாந்தப்பட விளக்கமும் சேர்ந்தது விலை ரூ. **4-0-0** வி. பி. சார்ஜ்வேறு. வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

கணபதி அண்டு கோ.,

**4-22** உலகப்பமேஸ்திரி வீதி
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

அருணாசலம்
சீர்காழி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தப்படவிளக்கம்

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழனளு மறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

சித்தாந்தப்படமென்பது, வேதாகமமுதலிய சாத்திரங்களிற் கூறப்படும் தாற்பரியமான பதி பசு பாசங்களின் தத்துவங்களைத் தன்வாயிலாக விளக்குவதோர் கருவியாம்.

அவன் என்றும் அவள் என்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச்சுட்டி யறியப்படும் * அவயவப்பகுப்புடைய இவ்வுலகமானது, கண்கூடாய்க் காணக்கிடத்தலானும் "இல்லதற் குத்தோற்றமின்மையானும்" உள்பொருளேயாம்.

அது நிலைபெற்றிருக்கும் இத்திதிகாலத்தும், முற்கூறியபடி பலவாய்ச் சுட்டியறியப்படும் அவயவப்பகுப்புடையவைகளாயுள்ள பூதகாரியங்கள் தோற்றநாசங்களைத் துணையாகக்கொண்டே நிலை பெற்று வருவதால், அவ்விலக்கணங்களோடு கூடியுள்ளதாகிய உலகமுழுவதும் தோற்றநாசங்களையுடையதாகும்.

தனக்கெனச் சுதந்திர அறிவில்லாத சேதனப் பொருள் களும், அறிவேயில்லாத அசேதனப்பொருள்களும் கூடிய உலக மானது மேற்கூறியபடி முத்தொழிற்படக் காணுதலால் அவ் வாறு செய்யச் சுதந்திர அறிவு முதலியனவுடைய ஒருமுதல்வன் வேண்டப்படும்.

---

* அவயவமென்றது, ஆடையின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப் படும் நூல்கள்போல ஒரு பொருளின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப் படுந் தகுதியுடையவற்றை.

அம்முதல்வன் ஓர் உள்பொருளை இவ்வாறு முத்தொழிற் படுத்துவானேனெனில், முதல்வனுக்கும் அசேதன உலகத்திற்கும் வேறாயுள்ள அச்சேதன மெனப்படும் எண்ணில்லாத ஆன்மாக்கள் பொருட்டேயாகும்.

இவ்வான்மாக்கள் அனாதியே (என்றுள்ளதோ அன்றுதொட்டே என்றபடி) பாசபந்தமுற்றுத் துன்புறுவதாகும். அவைகள்மாட்டுக் கருணைமிக்க முதல்வன் அப்பாசப்பிணிப்பினின்று நீங்கி அவைகளின்புறும்படி செய்வதற்கு அவைகளுக்கு உதவியாக உலகத்தை உதவினனென்க.

சேதன இவ்வுயிர்களின்றேல் இந்த அசேதன உலகத்தை உண்டாக்கியது வெறுஞ்செயலாய் முடியும்.

உயிர்களையும் கடவுளே சிருட்டித்தாரெனின், அவ்வுயிர்கள் பலவாய்ப் பல்வகையான சுகதுக்கங்களை யனுபவித்துவருவதைப் பிரத்தியட்சமாய்க் காணுதலால், உயிர்களைக் கடவுளே சிருட்டித்தாரென்பது அக்கடவுளது பெருங்கருணைக்கும் நடுநிலைமைக்கும் இழுக்காகிக் காரணசூனியமாய் முடியும்.

அவர் தன்பொருட்டுச் சிருட்டித்தாரெனின், "வேண்டுதல் வேண்டாமையில்லாத" முதல்வனுக்கு அது இழுக்காய் முடியும்.

அக்கடவுளே இவ்வாறு பல்வகைப்பட்டாரெனின், அது அவரது அனாதி முத்தத் தன்மைக்கு வழுவாகும்.

அவைகள் கானல்நீர்போலத் தோற்றமாத்திரமே யன்றி யதார்த்தத்திலில்லையெனின், நீராகிய உள்பொருளை முன்னர் அறிந்த ஒருவனே பின்னர்க்கானலாகிய உள்பொருளைக் காணும்போது இது நீரென மயங்கிக் கண்டதுபோல, இவைகளையும் மயங்கிக் காண்பதற்கு இவற்றின் வேறாகிய ஒருவன் வேண்டப்படும்; அம்மயக்கத்துக்குக் காரணமும் வேண்டும். அஃதன்றி இல்பொருளைக் காண்டல் என்றும் இயலாது.

ஆகையால் அனாதிமலசகித ஆன்மாக்கள் பொருட்டேகடவுள் உள்பொருளாகிய இவ்வுலகத்தை யுதவினனென்பது சித்தாந்தம்.

---

இவ்வாறாகலின் இவ் வுலகத்தைச் சங்கரித்து மீளத்தோற்றுவிக்குஞ் சங்காரகாரணனே உலகிற்கு நிமித்தகாரணனாகிய பதியெனவறிக.

## பதி.

யாவர்க்கும் தலைவர் ஆதலினால் * கடவுள் பதியென்று சொல்லப்படுவார்.

கடவுள் முற்கூறிய பதி பசு பாசமென்னு மூன்றனுள் மேலானவராய், உருவம் அருவம் உருவாருவமில்லாதவராய், அவை உள்ளவராய், நித்தியராய், ஏகராய், ஒப்பற்றவராய், பரிபூரணராய், அசைவற்றவராய், சாந்தராய், நிர்க்குணராய், தன்வயம், தூய வுடம்பு, இயற்கையுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசங்களினீக்கம், வரம்பிலின்பமாகிய எண்வகைச் சிற்குணங்களுடைய வராய், † பாசஞான பசுஞானங்களா னறியப்படாதவராய், சுட்டுணர்விறந்தறிதலாகிய பதிஞானமொன்றுனே யறியப்படும் ஞான சூரியராயுள்ளவர். இதற்குப் பிரமாணம். ‡சிவப்பிரகாசம் பொது. 1.

**"பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபாசந் தெரித்தல் பதிபரமே யதுதா, னிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி, நின்மலமா யேகமாய் நித்தமாகி, யலகிலுயிர்க் குணர்வாகி யசலமாகி யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச், செலவரிதாய்ச் செல்கதி யாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே."**

எனவரும்.

---

* கடவுள் என்பது கட உள் எனப் பிரிக்கப்பட்டுக் கடத்தலையுடையவர் எனப் பொருள்தரும்; கடத்தல் என்னும் பொருளையுடைய கட பகுதி, உள் தொழிற்பெயர்விகுதி; எல்லாத் தத்துவங்களையும் கடந்தவர் என்பதாம்; ஆகவே தத்துவாதீதர் என்பதறிக.

† பாசஞான பசுஞான பதிஞானங்களை, "இருவகையாம் மாயையி லுண்டான ஞான மெவ்வளவுண் டவ்வளவும் பாச ஞானம்—மருவியதற் போதத்தாற் சித்தி முத்தி மதித்தழுந்து நிட்டைபசு ஞான மாகும்—பரவுமிவை யஞ்ஞானம் பாச ஞானம் பசுஞானஞ் சுதந்தரஹீ னன்றே னென்றே—யிருவகைஞா னமுநீங்கி யருளா லாவி யீசனடி கூடவிறை ஞான மாமே." என்னும் சிவஞானதீபச்செய்யுளாலுணர்க.

‡ சித்தாந்த நூல்களுளொன்றான இச் சிவப்பிரகாசமே எளிதில் ஓதியுணர்தற்கேதுவாயிருத்தலினால் இதையே முக்கிய உதாரணமாக எடுத்துக் காட்டியதென்க. அதனை, "மற்றிரண்டு மாய்ந்து மறுவிலுமர் பதியார்—சொற்ற சிவப்பிரகா சத்தொன் னூல்—அற்றநிலை—யாங்கதுவே சீவன்முத்த ருக்குவிக்கு மந்நூலே—யோங்குகதி யேழியும்பின் னும்." என்பதனாலறிக.

அவருக்கு அக்கினியிற் சூடும் பூவின் மணமும் பரிதியிற் கிரணமும்போற் பிரிவற்றுச் சமவாயமாயும் அனந்தசத்தி ரூபையாயுமுள்ள பராசத்தி யென்றொரு சத்தியுண்டு. சத்தியென்றது வல்லமையை.

சித்தாந்தப்படத்தில் மேலே சூரியனைப்போல் கிரணங்களை வீசிக்கொண்டிருப்பதுதான் ஞானசூரியனென்னும் சிவசூரியன். அதில் தோன்றிச் சூழப்பிரிந்துநிற்குங் கதிர்கள் கடவுளின் அனந்த சத்திகளைக்குறிக்கும். அக்கிரணக் கற்றைகளின் தொகுப்பே பராசத்தியாகும்.

சிவனைச் சூரியனென்றதற்குப் பிரமாணம். உபதேசவிளக்கம்:-

**சூரியன் சிவன்கண் சீவன் சுடரொளி யருண்ம லந்தான்**
**கூரிரு ளாதுங் கண்டான் கொள்ளிரு ளொளியா னீங்கிச்**
**சூரிய னொளிநேர் நிற்கிற் சூரிய னுமக் காலைப்**
**பேரிரு ளொளியாய் நித்தியம் பெறுந்திரி பொருண்முத் தீப்பால்**

எனவரும்.

கடவுள் தனதபின்னசத்தியாகிய பராசத்தியை யதிட்டித்து, அநாதியே ஆணவமலசம்பந்தமுற்று அறிவற்று மூடமாய்க் கிடக்கும் ஆன்மாக்களை இரட்சிக்கத் திருவுளங்கொண்டு, பராசத்தியின் ஆயிரத்திலொரு கூற்றினின்றும் ஆதிசத்தியைத் தோற்றுவிப்பார். ஆதிசத்தியின் ஆயிரத்திலொருகூறு இச்சாசத்தியாகும். இச்சாசத்தியின் ஆயிரத்திலொருகூறு ஞானசத்தியாகும். ஞானசத்தியின் ஆயிரத்திலொருகூறு கிரியாசத்தியாகும்.

இங்ஙனஞ் சத்திகள் தோன்றுமென்பதற்குப் பிரமாணம்.

## சதாசிவரூப அகவல்.

அன்ன சிவமா யிரமா யதிலோன்
றுன்னிய பரையதி லாயிரத் தொருகூ
றதியா யதிலோ ராயிரங் கூற்றொரு
பேத மிச்சை யதிலா யிரம்பிறி
விந்தள ஞானம தீரைந் நூற்றொரு
பந்த தொழிலிவை பஞ்சசத் திகளே.

எனவரும்.

பராசத்தி: உயிர்கட்கு அனுக்கிரக மாத்திரங் குறித்துப் பொதுவகையான் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானமொன்றே சிவசத்தியின் சொரூபம், அதுவே பராசத்தி யெனப்படும்.

ஆதிசத்தி: இதுவே திரோதானசத்தி. இந்தத் திரோதம் அவதார சத்தியாகி ஓரவதாரத்திலே தோன்றுகையால் ஆதிசத்தி யெனப் பெயர் பெற்றது. இதற்கு அருட்சத்தி யென்றும்பெயர். இதுதான். மற்ற நான்கு கிருத்தியங்களுக்குங் காரணமானது; ஆன்மாக்களுக்கு மலத்தைச் செலுத்திப் பக்குவப் படுத்துவது.

இச்சாசத்தி: சிவன் ஆன்மாக்களை யிரட்சிக்கத் திருவுளங் கொண்ட பொழுது அந்த நினை வெழுந்த அவசரத்துக்கு இச்சா சத்தி யென்று பெயர்.

ஞானசத்தி: அப்படி ஆன்மாக்களை யிரட்சிக்க இச்சை கொண்ட சிவன அவ்வவ் வான்மாக்களுக்குரிய வினைப்பயன்களை யறிந்த வவதாரத்துக்கு ஞானசத்தி யென்றுபெயர்.

கிரியாசத்தி அவ்வாறறிந்த வினைப்பயன்களை ஆன்மாக்க ளுக்கு ஊட்டும் நிமித்தம் அவர்களைப் பிரபஞ்ச காரியப்படுத்து மவதாரத்துக்குக் கிரியாசத்தி யென்றுபெயர்.

பராசத்தி ஒன்றே வியாபார பேதத்தான் இவ்வாறு நாம பேதத்தை யடைவதேயன்றி வஸ்து பேதமில்லை. அஃதென் போலவென்னில், அக்கினியினுடைய உஷ்ணசத்தி ஒன்றாயிருந் தும் உலோகம் காஷ்டம் இலவணம் அன்னமுதலான விஷயபேதத் தினாலே உருக்குகிறது கொளுத்துகிறது வெடிக்கிறது சமைக்கிற தென்று வெவ்வேறு பெயரடைகிறது போலாம். ஆகையால் பஞ்ச சத்திகளும் ஒன்றுக்கொன்று சஹஸ்ராம்ஸ மென்றது கிருத்தியதா ரதம்மியத்தினாலே உரைத்ததன்றிக் கண்டிப்பாகச் சொன்ன தன்று.

இச்சத்திகளை அதிட்டித்த சிவனும் பராசத்தியை யதிட் டித்தபோது பரசிவமென்றும் ஆதிசத்தியாகிய திரோதானசத் தியை யதிட்டித்தபோது திரோபவன் என்றும் இச்சாசத்தியை யதிட்டித்தபோது இச்சிதா என்றும் ஞானசத்தியை யதிட் டித்தபோது ஞாதா வென்றும் கிரியாசத்தியை யதிட்டித்தபோது கர்த்தா வென்றும் பெயர் பெறுவர்.

சித்தாந்தப் படத்தில் நேரே கீழ்நோக்கி முதலில்மேல் விதாயும் வர வரத்தடிப்பாயு மிருக்கிற சிவப்புக் கதிரில் மேலிருக் கும் மற்றக் கதிர்களுடைய அளவு அஃதாவது கதிர்களின் வெளி வட்டம் வரைக்கு முள்ள பாகம் ஆதிசத்தி அல்லது அருட்சத்தி யாகும். அது முதலில் சிறுத்து மற்றக்கதிர்களுடன் ஒத்த பருமனு

யிருந்து வரவர அதிகமாய்த் தடிப்பதானது ஆன்மாக்களிடத்திலே சிவபிரான்றிருவருள் அதிகரிப்பதைக் காட்டுகிறது. அதற்குமேல் நீண்டு கீழ்நோக்கும் பாகம் இச்சாசத்தியாகும். அதுவும் வர வாத் தடித்திருப்பது சிவபிரான் ஆன்மாக்களை யிரட்சிக்க இச்சை கொண்டபோது அதன் மிகுதியைத் தெரிவிக்கிறது. பெரிய வட்டத்துள் (மாயா கோளத்துள்) மேலே கெடியார சக்கரம்போல் பல்வைத்திருக்கும் 36-வது சக்கரத்துளுள்ள வெண்மை நிறமானது ஞானசத்தியைக் குறிக்கிறது. அதற்குங்கீழே 35-வது விந்து தத்துவச் சக்கரத்துள்ளிருக்கும் செந்நிறமானது கிரியாசத்தியைக் குறிக்கிறது. இங்ஙனம் பஞ்ச சத்திகளுந் தோன்றும். இதுவரையில் சிவ சிருட்டியாகும்.

இனி சத்தி சிருட்டி எப்படியெனில்:—சிவத்தின் ஆயிரத்திலொரு அம்சம் அனுசிருதமேவர். அவர் வாமபாகத்தை யெப்பொழுதும் பிரியாத சத்தி அனுசிருதையாகும். இந்த அனுசிருத தேவரைச்சூழ நாலுதிக்கிலும் அனுதர், அனந்தர், வியோமரூபர், காரணவியாபகர் என்னும் நால்வர் தமது சத்திகளாகிய அனுதை, அனந்தை, வியோமரூபை, வியாபினி என்னும் நால்வர்களுடன் சேவித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களும் சிவாம்சமேயாவார்கள்.

இவர்களைவரும் பரநாதகலையிலிருக்கும் ஐந்து புவனங்களுக்கும் அதிபதிகளாய்ச் சுத்த மாயையில் பஞ்சகிருத்தியங்களை நடத்துவார்கள்.

இவர்களில் வியாபகருடைய அம்சமான ஆடகேசுரர் சப்த பாதலங்களை அதிட்டித்து நிற்பர். வியோமரூபருடைய அம்சமான கூஷ்மாண்டர் இருபத்தெட்டுக்கோடி நரகங்களையும் அதிட்டித்து நிற்பர். அனந்தருடைய அம்சமான காலாக்கினி ருத்திரதேவர் பிரமாண்டத்தை இரட்சித்துக்கொண்டிருப்பர். இர்கள் மூவரும் பிரமாண்டத்தின் கீழ்ப்பாகத்தில் காலாக்கினி தத்துவத்திலுள்ள புவனங்கள் மூன்றினதிபதிகள். அனுதேவருடைய அம்சமான ஆதாரசத்தி அண்டத்தைச் சுமந்துகொண்டிருக்கும். அனுசிருத தேவருடைய அம்சமான அனந்ததேவர் முப்பத்திரண்டு கோடி உருத்திராலே சூழப்பட்டு ஆதாரசத்தியுடனே கூடியிருப்பர்.

இனி, கண்ணடியுள் நிழல்போலவும் ஆகாசத்தில் இந்திர தனுசுபோலவும் நிஷ்களத்திற் சகளந்தோன்றும். இதற்குச்சாதாக்

கிய மென்றுபெயர். இதுவே யோகிகள் ஞானிகளுக்குத் தியானம் பண்ணவுரியது.

இந்தச் சாதாக்கியம் சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கருமசாதாக்கிய மென ஐவகைப்படும்.

இவற்றுள் பராசத்தியில் பத்திலொருகூறு சிவசாதாக்கியம்; இது பராபரமாயிருக்கும். ஆதிசத்தியில் பத்திலொருகூறு அமூர்த்திசாதாக்கியம்; இது பரமாயிருக்கும். இச்சாசத்தியில் பத்திலொருகூறு மூர்த்திசாதாக்கியம்; இது சூக்குமாசூக்குமமாயிருக்கும். ஞானசத்தியில் பத்திலொருகூறு கர்த்திரு சாதாக்கியம்; இது சூக்குமதூலமாயிருக்கும். கிரியாசத்தியில் பத்திலொருகூறு கருமசாதாக்கியம்; இது தூலமாயிருக்கும். இந்தப் பஞ்சசாதாக்கியங்களும் தத்துவமெனப்படும்.

இவைகளுக்கு முறையே சதாசிவன், ஈசன், பிரமன், ஈச்சுரன், ஈசானன் என்னும் ஐவர்கள் அதிபதிகளாவார்கள். இவர்கள் மூர்த்திகள்.

இந்தத் தத்துவங்களும் மூர்த்திகளும் தங்களில் ஐக்கியமான அவசரத்தில் ஈசாநாதிகளாய் நிற்றல் பிரபாவமெனப்படும். ஈசாநாதிகளாவன:—சிவசாதாக்கியமாகிய தத்துவமும் சதாசிவனென்கிற மூர்த்தியும் ஐக்கியமான அவசரம் ஈசானம். அமூர்த்திசாதாக்கியமாகிய தத்துவமும் ஈசனென்கிற மூர்த்தியும் ஐக்கியமான அவசரம் வாமதேவம். மூர்த்திசாதாக்கியமாகிய தத்துவமும் பிரமனென்கிற மூர்த்தியும் ஐக்கியமான அவசரம் சத்தியோசாதம். கர்த்திருசாதாக்கியமாகிய தத்துவமும் ஈஸ்வரனென்கிற மூர்த்தியும் ஐக்கியமான அவசரம் தற்புருடம். கர்மசாதாக்கியமாகிய தத்துவமும் ஈசானனென்கிற மூர்த்தியும் ஐக்கியமான அவசரம் அகோரம். தத்துவமென்று சொல்லப்பட்ட பஞ்சசாதாக்கியங்களும் நிஷ்களமாயிருக்கும். சதாசிவாதி பஞ்சமூர்த்திகளும் சகளமாயிருக்கும். ஈசாநாதி பஞ்சப்பிரபாவங்களும் சகள நிஷ்களமாயிருக்கும்.

ஈசாநாதி ஐந்தும் பஞ்சப்பிரம மெனப்படும். இவற்றிற்கு முறையே ஈசானர், வாமதேவர், சத்தியோஜாதர், தற்புருடர், அகோரர் என ஐவர் மூர்த்திகளாவார்.

ஈசானர்:—சர்வ ஜகத்திற்கும் மேலாயிருக்கிற குணத்தினாலே உலகங்களுக்கெல்லாம் ஈஸ்வரனாயிருக்கிறதினாலும் தற்பதத்தை ஆன்மாக்களுக்குக் கொடுக்கையினாலும் ஈசானர் எனப்படுவர்.

வாமதேவர்:—ஆன்மாக்களைத் தர்மார்த்த காமங்களினாலே வஞ்சித்து அதோமாயையிலே கவிழ்க்கையினாலே வாமர்; பிரகாச ஸ்வபாவராகையினாலே தேவர்; ஆதலாலே வாமதேவர் எனப் படுவர்.

சத்தியோஜாதர்:—ஆன்மாக்களுக்கு விஞ்ஞானானந்தகோச மாகிய காரணதேகம் முதலில் உண்டானவளவில் மனோமயாதி கோசத்திரயமான சூக்கும தூல சரீரங்களைத் தம்முடைய இச்சா மாத்திரத்தினாலே மந்திரேஸ்வர மந்திரங்களை அதிட்டித் துடனே யுண்டாக்குகையினாலே சத்தியோஜாதர் எனப்படுவர்.

தற்புருடர்:—ஆன்மாக்களிடத்தில் அந்தர்யாமியாய் அதிட் டித்துக்கொண் டிருக்கையினாலே தத்புருஷர் எனப்படுவர்.

அகோரர்:—கோரம் என்பது அஞ்ஞானம்; அஞ்ஞான விரோ தியாயிருக்கிற ஞானம்பாலிக்கையால் அகோரர் எனப்படுவர்.

பஞ்சசாதாக்கியங்களுள் ஈசானத்தின் சத்தி ஈசானி; தற்புரு டத்தின்சத்தி பூரணி; அகோரத்தின்சத்தி ஆர்த்தி; வாமதேவத் தின் சத்தி வாமை; சத்தியோஜாதத்தின்சத்தி மூர்த்தி யெனப் படும்.

ஈசானிக்கு:—சசினி, அங்கதை, இட்டை, மரீசி, சுவாலினி என ஐந்து கூறுகளுண்டு,

பூரணிக்கு:—சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி, யென் னும் நான்கு கூறுகளுண்டு.

ஆர்த்திக்கு:—தமை, மோகை, சயை, நிட்டை, மிருத்தியு, மாயை, பயை, சரை யென்னும் எட்டுக் கூறுகளுண்டு.

வாமைக்கு:—இரசை, இரட்சை, இரதி, பாலி, காமை, சம்ய மினி, கிரியை, புத்தி, காரி, தாத்திரி, பிராம்மணி, மோகினி, பவை என்னும் பதின்மூன்று கூறுகளுண்டு.

மூர்த்திக்கு:—சித்தி, இருத்தி, தியுதி, இலக்குமி, மேதை, காந்தி, சுவதை, திருதி என்னும் எட்டுக் கூறுகளுண்டு.

இங்ஙனம் கூறப்பட்ட சசினியாதி முப்பத்தெட்டுக் கூறு களும் அஷ்டத்திரிம்சத்கலை யெனப்படும்.

இனி முன்னர்க் கூறிப்போந்த அனுசிருதாதி ஐந்துபேர்க ளும் சுத்தமாயையிலே பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுகையினாலே அனுசிருததேவர் காரியமான சதாசிவதேவ நாயனாரும் ஐந்து அவசரப் பட்டு அசுத்தமாயையிலே பஞ்சகிருத்தியங்களைப் பண் ணுவர். அஃதாமாறு:—ஞானமுங் கிரியையும் சமமாயொத்த அவ சரத்தில் சதாசிவனும், கிரியைமிகுந்து ஞானங் குறைந்த அவச ரத்தில் மஹேஸ்வரனும், ஞானம்மிகுந்து கிரியை குறைந்த அவ தாரத்தில் உருத்திரனும், மேற்கூறிய மஹேஸ்வரர்பாற் றோன்றிய விஷ்ணுவும் பிரமாவும் ஆகிய பஞ்சமூர்த்திகளும் எதிர்நிரை நிறை யாகப் பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவார்கள்.

இங்கே கூறப்பட்ட விஷ்ணு பிரமர்கள் சிவபெருமானது நவ வடிவங்களில் சகளவடிவம் நான்கனுட்பட்டுச் சுத்தவித்தியா தத்துவத்தில் வைகும் விஷ்ணுபிரமர்களாகிய காரணேஸ்வரர்கள்; சகலரில் தவத்தாலதிகாரம் பெற்ற காரியேசுராகிய விஷ்ணு பிர மர்களன்று.

நவவடிவங்களாவன:—சிவம் சத்தி நாதம் விந்து என அரு வம் நான்கும் சாதாசிவன் என்னும் அருவுருவ மொன்றும் மஹே சன் உருத்திரன் விஷ்ணு பிரமன் என உருவம் நான்குமாம்.

உருத்திருள்ளும் பிரளயாகலரில் தவத்தால் அதிகாரம் பெற்றுச் சுத்தவித்தியாதத்துவாதிபதியாகிய உருத்திராற் பிரே ரிக்கப்பட்டு ஸ்தூல பிரபஞ்சமாத்திரையே யழிக்கும் உருத்திரரு முளர். ஆனால் காரியேஸ்வரர்களாகிய இவர்களுக்கும் தத்தம் கார ணேஸ்வரர்களுக் குரிய சின்னங்களும் நாமங்களுமுண்டு. காரியேஸ் வரர்கள் அண்டங்கள் தோறும் வெவ்வேறு அதிகாரிகளா யிருப் பார்கள்; காரணேஸ்வரர் பல்லாயிரகோடி அண்டங்க ளெனப்படும் உலக முழுமைக்கும் ஏக அதிகாரிகள். அவ்வவ்வண்டத் தலைமை நோக்கிக் காரியேசுராகிய உபவிஷ்ணுக்களை ஆதிவிஷ்ணுக்களாக வும் உபப்பிரமரை ஆதிப்பிரமராகவும் சங்கற்பிப்பார்கள்.

அண்டங்கள் தோறும் பிரம விஷ்ணு உருத்திரர்கள் உண் டென்பதை "இறைமை யிவ்வாறு பகுத்திடத் தகாதே லுனை யெர்ழிந் தியாண்டு முற்றுறுமோ—முறைமையுறு முண்டந் தொறுமய

னான்மால் மூவரும் வேறு வேறாகிப்—பிறழுறுங் கற்பந தொறு நவநவமாய்ப் பிறந்துநின் னாணையி னடங்கி—யுறைவரே யாதியந்தமு மின்றி யொழிவற நிறைந்தவான் பொருளே" என்னும் சிவதத்துவ விவேகம் 42-வது செய்யுளானும் பிறவாற்றானும் அறிக.

பஞ்சகிருத்தியங்களாவன:—சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்பனவாம்.

சிருட்டியாவது:—ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டுப் பிரளயத்தில் பக்குவப்பட்ட அவரவர் கன்மங்களை முற்றும் புசிப்பித்துத்தொலைக்க ஆன்மாக்களைத் தனுகரணபுவனபோகங்களுடன் கூட்டுதல். தனுவென்பது பஞ்சபூதங்களும அவையிற்றின்காரியங்களிருபத்தைந்துங்கூடின பூததேகம். கரணமென்பது மனம்முதலிய உட்கரணங்களும் உடம்புமுதலிய புறக்காரணங்களுமாம். புவனமென்பது கன்மங்கள் புசித்தற்குரிய இடம். போகமென்பது ஆன்மாக்களுக்குப் புசிப்பாயுள்ள சத்தாதி விடயங்கள்.

திதியாவது:—ஆன்மாக்களுக்குக் கன்மமலங்களைப் புசிப்பித்து இயல்பிலே மலபாகம் வருவித்தற்பொருட்டு அவற்றை நிலைபெறச் செய்தல்.

சங்காரமாவது:—கன்மமலம் பரிபாகமாதற் பொருட்டும், தனுவாதிகளைத் தோற்றுவிக்குஞ் சத்தி குன்றியமாயைக்குத் திரும்பச் சாமர்த்தியமுண்டாக்குதற் பொருட்டும் தனுகரணாதிகளுடன் சனனமரணங்களிற் கூடுதல் பிரிதல் சுவர்க்கநரக பூமிகளிற் போதல் வருதல்முதலிய தொழில் வேறுபாட்டால் அலைப்புண்ட ஆன்மாக்களை இளைப்பாற்றுதல்.

திரோபவமாவது:—சிவம். ஆன்மாக்களுக்குப் போகங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைத் தொலைப்பிக்குமளவும், தன்னை மறைத்துப் பிரபஞ்சத்தை மெய்யாக்கிக் கன்மங்களை ருசிப்பித்து அவற்றை அக்கன்ம பலன்களாகிய போக்கியப் பொருளில் அழுந்தச் செய்தல்.

அனுக்கிரகமாவது:—மலபரிபாகமுற்ற ஆன்மாக்களைச் சிவபிரான் தனது திருவடியிலே சேர்த்துக்கொள்ளுதல்.

இனி மஹேசராதியர் தோன்று முறைமையாவது:— முன்னே கூறப்பட்ட கருமசாதாக்கியமூர்த்தியின் ஆயிரத்திலொருகூற்றினின்றும் மஹேஸ்வரர் தோன்றுவர். மஹேஸ்வரரின் ஆயிரத்தி

லொரு கூற்றினின்றும் உருத்திரர் தோன்றுவர். மேற்கூறிய மஹேஸ்வரரின் கோடியில் ஒரு கூற்றினின்றும் விஷ்ணு தோன்றுவர். விஷ்ணுவின் கோடியில் ஒரு கூற்றினின்றும் பிரமா தோன்றுவர்.

இனி, சத்திபேதங் கூறுமிடத்துப் பராசத்தி பேதமாகும் இச்சாஞானசத்தி சொரூபிணியானசத்தி சுத்தமாயையைக் கலக்கியபோது அந்தச் சத்தியில் சஹச்ராம்சமாக நாதமூர்த்தி உண்டாம். நாதத்திலே நின்றும் சஹச்ராம்சமாக விந்துமூர்த்தி உண்டாம். விந்துமூர்த்தியினது சத்தி விந்துரூபசத்தியாகும். விந்துரூபசத்தியின் தசாம்சத்தில் ஒரு கூற்றினின்று உமாசத்தியும், இவரின் பத்திலொரு கூற்றினின்று அம்பிகையும், இவரின் பத்திலொரு கூற்றினின்று கணேசையும், இவரின் பத்திலொரு கூற்றினின்று ஈஸ்வரியும், இவரின் பத்திலொரு கூற்றினின்று மனோன்மணியும் தோன்றுவர். இவர்களைவரும் பஞ்சசாதாக்கியங்களின் சத்திகளாவர்.

இனி மனோன்மணியின் ஆயிரத்திலொருகூற்றி னின்று கௌரியும், கௌரியினின்று உமை, இலக்குமி, சரஸ்வதி முதலிய சத்திகளும், வாமை முதலிய சத்திகளும் தோன்றுவார்கள். இவர்களுள் மகேஸ்வரரது சத்தி கௌரி; இவரை மகேசையென்று கூறுவதும் உண்டு. உருத்திரரது சத்தி உமை; இவர் உருத்திரி யென்றும் கூறப்படுவர். விஷ்ணுவின் சத்தி இலக்குமியாகும். பிரமனது சத்தி சரஸ்வதியாகும். வாமை முதலான அஷ்ட சத்திகளும் * அனந்தாதி அஷ்ட வித்தியேஸ்வரர்களது சத்திகளாம்.

இன்னும் சத்திபேதம் கூறுமிடத்து "†எத்திற நின்றானீசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்றபடி பஞ்சகிருத்திய நிமித்தம் சத்தர், உத்யுத்தர், பிரவிருத்தர் முதலாய எவ்வெப் பெயர்பெற்று யார்யாரைக் கடவுளதிட்டித் திருப்பரோ அததற்கேற்ப ஹாரிணி, ஜனனி, ரோதயித்திரி முதலாகப் பல திறப்பட்டு நிற்கும்.

ஹாரிணியானது ஆன்மாக்களுடைய தனுகரணாதி சர்வத்தையும் மாயையிலே யொடுக்கிப் பக்குவமலரைப் பரசிவத்திலே யடை

* அஷ்ட வித்தியேசுரர்களைப்பற்றிப் பசுவியலில் கூறியிருக்கிறது.

† சித்தியார் உ-ம் சூ-ம் செ-எ௬. சூத்தியாய்.

விக்கும். ஆகையால் சங்காரமும் அனுக்கிரகமும் ஹாரிணியினுடைய கிருத்தியங்களாகும்.

ஜனனியானது ஜகத்துற்பத்தியைப் பண்ணுவிக்கும். ஆகையால் சிருட்டி ஒன்றே ஜனனியின் கிருத்தியமாகும்.

ரோதயித்திரியானது திதிகாலத்திலே ஆன்மாக்களுக்குப் போகநியமனத்தையும், பிரளயத்திலே சகலர்க்கு மாயாதோபாகத்திலும் பிரளயாகலர்க்கு மாயாமத்தியிலும் விஞ்ஞானகலர்க்கு மாயோபரி (உச்சி)யிலும் வாசநியமனத்தையும் பண்ணுவிக்கும். ஆகையால் திதியும் திரோதானமும் ரோதயித்திரியினுடைய கிருத்தியங்களாகும்.

ஹாரிணியின் சத்திமான் சத்தர். இவரே சாந்தர்.

ஜனனியின் சத்திமான் உத்புத்தர். இவரே சதாசிவர்.

ரோதயித்திரியின் சத்திமான் பிரவிர்த்தர். இவரே ஈசர். இவர்களை முறையே இலயி, போகி, அதிகாரி என்றுங் கூறுவர்.

இனி, பிரமாதி பஞ்சமூர்த்திகளும் காரியப்படுவது எவ்வாறெனில்; சத்தியோசாதம் பிரமாவைச் சேட்டிக்கப் பிரமா சிருட்டிப்பர்; வாமதேவம் விஷ்ணுவைச் சேட்டிக்க விஷ்ணு இரட்சிப்பர்; அகோரம் உருத்திரரைச் சேட்டிக்க உருத்திரர் சங்கரிப்பர்; தற்புருடம் மஹேசுவரரைச் சேட்டிக்க மஹேசுவரர் திரோபவிப்பர்; ஈசானம் சதாசிவரைச் சேட்டிக்கச் சதாசிவர் அனுக்கிரகிப்பர்; இவ்வாறு பிரமாதி காரணேஸ்வரர்களால் ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியப் படுவார்கள்.

பதி இயல் முற்றிற்று.

## பசு.

ஆன்மாக்கள் அனாதியே பாசபந்த முடைமையிற்§பசுக்களெனப்படுவார்கள். (பச்—பந்தித்தல் உ-செயப்படு பொருள் விகுதி) ஆன்மா வென்னுஞ் சொற்குப் பொருள் வியாபக மென்பதூஉம் சித்தசித்து என்பதுமாம்.

ஆன்மாக்கள் எண்ணில்லாதவர்களாய், நித்தியர்களாய், அனாதியே பாசத்தொடர்புடையவர்களாய், அவரவர்களுக்குரிய இருவினைகளுக் கீடான சரீரங்களைச் சிவபெருமானது காருண்யத்தினாலே யடைந்து, அவன் அவள் அதுவாகிய அந்த வுடம்பெனைத் தானென்னத் தோன்றுமாற் பிரிவற்று நின்று, அந்த வுடம்புகளோடுங் கூடுகையாலே எண்ணிறந்த போகங்களைப் புசிக்குமவதாத்து உண்டாகிய இதாகிதங்களினாலே மீளவும் புண்ணிய பாவங்களையார்ச்சித்துக்கொண்டு, அவற்றாலே யிறந்து பிறந்து வருவார்கள்.

இப்படியே தமக்கொரு நிலையில்லாமல் கொள்ளிவட்டமுங் காற்றாடியும்போற் சனன மரணச் சக்கரத்திற் சுழன்று வரும்போது, அனாதியே ஆன்மாக்களை மறைக்கப்பட்ட ஆணவமலமானது தனதுசத்தி தேய்ந்து குன்றிய வவதாத்துச் சிவபிரான் றிருவருளாலே அவர்களுக்குச் சிவஞானம் பிரகாசிக்கும். அப்படிப் பிரகாசிக்குஞ் சிவஞானத்தினாலே அந்த ஆணவமல மறைப்பை நீங்கிப் பக்குவப்பட்ட சுத்தான்மாக்கள், தாம் அழிந்த தாகாமலும், சிவனேயாகாமலும், அவனையன்றிக் காரியப்படாமலும், அம்முதல்வனுக்கு வேறாகாமலும், சிவபெருமானுடன் சுத்தாத்துவிதமாய்ப்பொருந்தி நிற்றலாகிய பரமானந்தாவச சாயுச்சிய சிவபோகமுத்தியை யடைவார்கள். இதற்குப் பிரமாணம்

---

§ அசித்தரு வியாபகம்போல் வியாபக மநுவமின்றய்
வசித்திட வரும்வியாபி யெனும்வழக் துடையனுகீ
நசித்திடா ஞானச்சேய்தீ யநர்தியே மறைத்துநிற்தும்
பசுத்துவ முடையனுகிப் பசுவேன நிற்துமான்மா.

என்னுஞ் செய்யுள் வலியுறுத்துகிறது. சிவஞானசித்தியார் சு—ம் சூ—ம் உ௦.

சிவப்பிரகாசம்பொது. 7.

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவையவரா யதனு
லலகினிகழ் போகங்க ளருந்து மாற்றற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கா லருளா
லுண்ணிலவு மொளியதனு லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே.

எனவரும்.

பரமானந்தாவச சாயுச்சிய சிவபோக மென்பதைச் சித்தாந்தப்படத்தில் குடிலைக்குமேல் பரவெளியில் தடித்த சிவப்புக் கோட்டுக்குள் இலக்கமிட்ட 19. புள்ளிகளாகிய 19. படிகளுக்கு மேல் சிவசூரியனுக்குள் பரசிவம் பராசத்திகளுக்கு மத்தியில் 20—வது படியாகக் காட்டியிருக்கிறது. பரவெளியெனவே, மனவெளி அண்டவெளி, பரவெளி, அருள்வெளியென வெளி நால்வகைப் படுமெனவறிக. மனவெளியென்பது மனம் விரிந்த விடம். அண்டவெளி யென்பது ஒவ்வோரண்டத்தைச் சூழ்ந்திருக்கும் வெளி. பரவெளி யென்பது எல்லாவற்றையுந் தன்னுளடக்கி யிருக்கும் வெளி. அருள்வெளி யென்பது முதல்வன் சன்னிதானமாம்.

இங்ஙனங் கூறப்பட்ட ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்த பாசபேதத்தால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர். என மூன்று வகைப்படுவார்கள்.

---

## க. விஞ்ஞானகலர்.

இவர்களுக்குப் "பிரபோதாகலர்" என்றும் பெயருண்டு. (பிரபோதம்—விஞ்ஞானம். இதனுலே கட்டுப்படுகிறவர் விஞ்ஞானகலர். ஞானத்தாலே கலையை யகன்றோ ரென்றலுமாம்.)

இவர்கள் ஆணவமலம் ஒன்றே யுடையவர்கள்; சுத்தாத்துவாவாசிகள்; சேமோ பரமேஸ்வ ரானுக்கிரக யோக்கியர்கள்; விந்துவி லிருந்துண்டாகிய சுத்ததனு கரண புவனபோகங்களை யுடையவர்கள். இவர்களுக்குச் சிவபெருமான் உண்ணின்று திருநோக்கத்தான் அனுக்கிரகிப்பர்.

இவர்கள் அநாதியே மலபந்தமாத்திர முடைய விஞ்ஞானகலரும், இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்தம் கன்மபந்தம் முழுவதும் நீங்கி மலபந்தம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலரும் என இருவகையர்.

இவர்கள் பக்குவமலர், பக்குவாபக்குவமலர், அபக்குவமலரென மூவகைப்படுவார்கள்.

## க. பக்குவமலர்.

இவர்கள் அணுசதாசிவர் அஷ்டவித்தியேசுரரென இரண்டு வகையாவார்கள்.

### அணுசதாசிவர்.

இவர்கள், பிரணவர், சுதர், சுதிப்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தசேசர் எனப்பதின்மர். இவர்கள் அன்பேவடிவானவர்கள். இவர்கள் அதிகாரசிவனுடைய அனுக்கிரகத்தைப்பெற்று அதோமாயா புவனங்களில் உள்ளவர்களுக்குப் (பிரளயாகலருக்குப்) பக்குவத்தில் அனுக்கிரகஞ்செய்து சாதாக்கிய தத்துவத்திலே போகங்களைப் புசித்துக்கொண்டு சதாசிவ மூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண்டு இருப்பார்கள். இவர்களிற் றீவிரசத்திநிபாத முற்றவர்கள் அனந்தஞான முதலாயுள்ள ஆறுகுணங்களாலே விளங்கி யாவரையு மிரட்சித்துக்கொண்டு அளவிறந்த போகங்களுடனே விந்துதத்துவத்திலே வசிப்பார்கள். இவர்களனைவருக்கும் போகத்தில் வைராக்கியம் பிறந்தபோது தீவிரதரத்திற் றீவிரதரமென்னுஞ் சத்திநி பாதத்தால் சிவன் மோட்சங் கொடுத்தருளுவர்.

### அஷ்டவித்தியேசுரர்.

அஷ்டவித்தியேசுரராவார்:—அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகவுருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சீகண்டி எனும் எண்மர்கள். இவர்களுக்கு அதிகாரமலம் மாத்திரம் உண்டு. இவர்கள் அசுத்தமாயா கிருத்தியத்துக்கு அதிகாரிகள்; ஈச்சுரதத்துவத்திலுள்ள புவனங்களுக்கு அதிபதிகளாய் அவ்விடத்தில் வசிப்பவர்கள்.

இவர்களில் அனந்தர் மோட்சமடைந்தால் பரமேஸ்வரர் அதற்குக் கீழ்ப்பட்ட சூக்குமரை அனந்தர் அதிகாரத்தில் வைத்து

அதற்குக் கீழ்ப்பட்டவரைச் சூக்குமாதிகாரத்தில் வைப்பரென பௌட்கரம் ச-வது பசுபடலம் ருஅ-வது சுலோகத்தில் கூறியிருப்பதால் அனந்தாதி நாமங்கள் மந்திரி பிரதானிகளைப்போல அதிகார நாமங்களே யெனவறிக.

அனந்தாதிகளுக்கு, அனந்தரைக் காட்டிலும் ஒவ்வொருகலை அடைவே குறைந்து குறைந்து வருவதால், அவர்களில் சீகண்டி முதலாகக்கொண்டு ஒருவர்க்கொருவர் மேன்மேல் உயர்ந்தவர்களாவார்கள்.

அனந்தர் மோட்சமடைந்தால் அதற்குக் கீழ்ப்பட்ட சூக்குமர் அவ்வதிகாரத்தைப் பெற மற்றவர்களும் இவ்வாறு அடைவே அதிகாரத்தைப் பெறுவார்கள். எல்லோர்க்குங் கடைசியான சீகண்டிபதம் பாழாய்க்கிடவாமல் விஞ்ஞானகலரில் பக்குவமுண்டானவர் ஒருவரை எண்மரிற் குறையாமல் அப்பதத்தில் சிவன் கூட்டுவர்.

இவர்களுடைய சத்திகள் வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி எனப் பெயர் பெறுவார்கள். இந்த வாமாதிகளை, பவாதி எண்மராகிய அஷ்டமூர்த்திகளுக்குரிய அஷ்டசத்திகள் என்பர் சிலர். பவாதி எண்மருக்கும் அடைவே தாரிகா, தீப்தி, அத்யுக்ரா, ஜ்யோஸ்னு, சேதா, பலோத்கடா, தாத்திரி, விபவீ என வேறு அஷ்டசத்திகள் கூறப்பட்டு இருத்தலால், வாமாதிகள் அஷ்டவித்தியேசுரர்களது சத்திகளே.

இச்சத்திகளை யன்றோ வாதவூரடிகள் தாம் அருளிச்செய்த திருவெம்பாவையில் உண்ணேக்கான் அமைத்துப்பாடியது மெனக். அஃதாமாறு:— க-வது ஆதியுமந்தமும் என்னுந் திருவாசகம் மனோன்மனியென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ச் சர்வபூததமனி யென்னுஞ் சத்தியையும், உ-வது பாசம் பரஞ்சோதி என்னுந் திருவாசகம் சர்வபூததமனியென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ப் பலப்பிரதமனியென்னுஞ் சத்தியையும், ங-வது முத்தன்னவெண்ணகையாய் என்னுந் திருவாசகம் பலப்பிரதமனி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ப் பலவிகரணியென்னுஞ் சத்தியையும், ச-வது ஒண்ணித்தில நகையாய் என்னுந் திருவாசகம் பலவிகரணியென்னுஞ் சத்தியின் திருவாக்காய்க் காளியென்னுஞ் சத்தியையும், ரு-வது மாலறியா நான்முகன் என்னுந் திருவாசகம் காளியென்னுஞ்

சத்தியின் திருவாக்காய் இரௌத்திரி யென்னுஞ் சத்தியையும், கூ-வது மானே நீ நென்னலை என்னுந் திருவாசகம் இரௌத்திரி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ச் சேட்டையென்னுஞ் சத்தியையும், எ-வது அன்னேயிவையும் என்னுந் திருவாசகம் சேட்டை யென்னுஞ் சத்தியின் திருவாக்காய் வாமையென்னுஞ் சத்தியையும் உணர்த்துவனவாம்.

இவ்வாமாதிகளும் சாதாக்கிய தத்துவாதிபதியாகிய சதாசிவரது சத்தியான மனோன்மனியுங்கூடி ஆக ஒன்பதின்மரும் நவசத்திகள் எனப்பட்டு, சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள நவ புவனங்களுக்கும் அதிபதிகளாவார்கள்.

சஹஸ்ரவிலோசனி சஹஸ்ரானனி, சஹஸ்ரபுஜை, அஸ்வாரூடை, அயோமுகி, த்வனிகை, பிரேதாசனி, விச்வை, கௌரி என்னும் வேறு நவசத்திகளும் உண்டு. இவர்கள் நிவிர்த்திகலையிலுள்ள அண்டகோடிகளை நிலைகுலையாமற் காக்கத் தவத்தான் உமாதேவியின் அருளைப்பெற்றவர்கள்.

வாமாதிகளில், வாமை சிருட்டியாதாரரூபை, சேட்டை திதியாதாரரூபை, இரௌத்திரீ சங்காரரூபை, காளி திரோபவரூபையாகும். கலவிகரணி அவயவ சூனியமானது. பலவிகரணி பலத்தை விசேஷமாகச்செய்வது, பலப்பிரதமனி பலத்தையழிப்பது, சர்வபூததமனி ஆன்மாவினுடைய புண்ணியபாவங்களை அடக்குவது, மனோன்மணி அனுக்கிரக சொரூபை.

அஷ்டவித்தியேசுரர்களில் முதல்வரான அனந்த தேவரானவர் அசுத்தமாயாகாரியங்களைத் தோற்றுவிப்பார்.

இவர்களுக்குப் போக வைராக்கியத்திலே சிவன் முத்தி கொடுத்தருளுவர்.

## உ. பக்குவாபக்குவமலர்.

பக்குவாபக்குவ மலராவார் சப்தகோடி மகாமந்திரர். சப்த கோடி மகாமந்திரர்என்றது ஏழுவிதகோடிகளை யீற்றிலுடைய மந்திரங்களுக்கு அதிபர்களை. இவர்களும், பௌட்கரம் 4-வது பசுபடலம் 55-வது சுலோகத்தில் கூறியபடி, எண்ணிக்கையினால் ஏழு கோடியாவார்கள்.

மந்திரங்களினீற்றி லமையும் ஏழுவித கோடிகளாவன:—நம ஒருகோடி, சுவாஹா ஒருகோடி, சுவதா ஒருகோடி, வௌஷட் ஒரு

கோடி, வஷட்ஒருகோடி, பட்ஒருகோடி, ஹூம்ஒருகோடியாகும் இவற்றுள் நமவென்பது இருடிகட்கும், சுவாஹா வென்பது தேவர் கட்கும், சுவதாவென்பது மாதரு பிதருகட்கும், வௌஷட்டென் பது பூதமுதலியவர்கட்கும், வஷட்டென்பது மானுடர்க்கும், பட் டென்பது உக்கிரவிக்கிரகங்களுக்கும், ஹூம் என்பது ஆக்ஞைத் தலைவர்களுக்குமாம்.

சப்தகோடி மஹாமந்திரங்களுக்கும் ஈஸ்வரிகளாகிய பிருகுண்ீ பிரம்மவேதாளீ, ஸ்தாணுமதி, அம்பிகை,ரூபிணீ, நந்தினீ, ஜ்வாலை எனும் எழுவித்யேஸ்வரிகளும் மண்டலேஸ்வரர்களாலே துதிக்கப் பட்டு சுத்தவித்தியாதத்துவத்தில் வசிப்பார்கள். மந்—திரம் என் னும் இரண்டு சொற்களின் புணர்ச்சியாலாயது மந்திரம். மந்—தன் னைநினைக்கிறவனை, திரம்—இரட்சிப்பது என்பது பொருள்.

சப்தகோடி மகாமந்திரர் அஷ்டவித்தியேசுரராலே பிரேரிக் கப்பட்டுச் சுத்தவித்தியா தத்துவத்தில் வசிப்பவர்கள். இவர்கள் மூன்றரை மூன்றரைக் கோடிகளாய்ப் பிரிக்கப்பட்டு, முதல் மூன்ற ரைக்கோடி பேர்கள், சிவன் குருமூர்த்தத்தை யதிட்டியாமல் நிரா தாரமாய் நின்று சுத்தவித்தியா தத்துவத்திலும் அதன்கீழுமுள்ள விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் அனுக்கிரகிக்கு மிடத்து அதற்குக் காரணமாயிருந்து, அதிகாரத்திலுள்ள வைராக்கியத்தி னாலே சிருட்டிக்குப் பின்பு மோட்சத்தில் சேர்க்கப்படுவார்கள். மற்ற மூன்றரைக்கோடி பேர்களும் குருக்களாவார்கள். அஃதா வது சிவன் குரு மூர்த்தத்தை யதிட்டித்துச் சகலரை யிரட்சிக்கு மிடத்து அதற்குக் காரணமாயிருந்து மகாப் பிரளயகாலத்திலே சிவனாலே மோட்சத்தை யடைவார்கள்.

இவர்களைப் படத்தில் சுத்த வித்தியாதத்துவத்தில் சிவப்பு நிறமுள்ள செறிந்த சிறிய வட்டவடிவங்களாகக் காட்டி யிருக் கிறது. அதிலும் எழுவகுப்பாகவே காட்டியிருக்கிறது. சுத்த வித்தியாதத்துவச் சக்கரத்தின் வலதுபாகத்தில் முன் மூன்றரைக் கோடியும் இடதுபாகத்தில் பின் மூன்றரைக் கோடியுமாகக் காட்டி யிருக்கிறது.

பிரளயம்:—நித்தப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப் பிரளயம், மஹாப்பிரளயம், பிரதமமஹாப்பிரளயம், என ஐவகைப் பட்டு நிவிர்த்தாதி ஐங்கலைகளின் சங்காரத்தைக் குறிக்கும். இவ்ற்

றுள் நித்தப்பிரளயம் பிரமாண்டப்பிரளயமெனவும், பிராகிருதப் பிரளயம் அவாந்தரப்பிரளயமெனவும் பெயர் பெறும்.

## ௩. அபக்குவமலர்.

இவர்கள் சுத்தவித்தைக்குக்கீழ் மாயைக்குமேல் வாசஞ்செய் பவர்கள். சித்தாந்தப்படத்தில் இவர்களைப் பச்சை நிறமான செறிந்த வட்டவடிவமாகக் காட்டியிருக்கிறது. கேவலத்தில் ஆன் மாநிற்குந்தன்மைபோல், இவர்கள் ஒருவடிவுமற்று ஆணவமல சொரூபராய்ச் சுத்தமாயையிலே தோற்றமு மொடுக்கமுமாகை யால், ஆணவமலபரிபாகம் வருமளவும் பெத்தராயிருப்பார்கள்.

இவர்களுக்கு இந்தவிஞ்ஞானகலப் பிராப்தி அனுபவத்தா லும், விஞ்ஞானத்தாலும், யோகத்தாலும், சந்நியாசத்தாலும், தீக் கையினாலும் இடையே மாயாபந்தம் கன்மபந்தம் முழுவதும் நீங்கி அசுத்தமாயைக்குமேல் உள்ள புவனங்களில் நுகரக்கடவன வாகிய போகங்கட்கு ஏதுவாய் நின்ற ஆணவமல பந்தம் ஒன்றே உடைமையால் வந்து கூடியது. இதற்குப்பிரமாணம் சிவநெறிப் பிரகாசம்.

சன்னியாசத்தால் யோகசாதனையாற் றவத்தாற் சற்குருவான் முக்கலை யிற் சாரும்வினையனைத்து, மன்னுது சோதனைசெய்திடுதலினாலாதன் மாயை யிருவினையனைத்து மாயையு நீங்கிடவே, யின்னுதவாணவத்தாற் றடைப் பட்ட ஞானவியல்பினதா யறிவின்றியிருந்து மலபாகத், தன்னுளி னா னருளான் முத்தியினையடையு மறியிலிது விஞ்ஞானகலரதி லக்கணமே."

எனவரும்.

இவர்களுக்கும் பரமேஸ்வரர் மலபரிபாகதாரதம்மியத்துக் குத் தக்கபடி, மந்திரபதத்தையும், மந்திரேசபதத்தையும், தமது பதத்தையுங் கொடுத்து மோட்சங் கொடுக்கிறார்.

கீழுள்ளதத்துவ வாசிகளுக்கு மேலுள்ளதத்துவ வாசிகள் உயர்ந்தவர்கள்.

## ௨. பிரளயாகலர்.

பிரளயத்தில் மாயாதத்துவத்தில் கட்டுப்படுகிற படியால் பிரள யாகலரென்றது. பிரளயத்தில் கலாதி நீங்கினவரெனினும் பொருந் தும்.

இவர்கள் ஆணவம் கன்மமாகிய இரண்டு மலங்களை யுடையவர்கள். சுத்தாசுத்தாத்துவா (மிஸ்ராத்துவா) வாசிகள். அசுத்த மாயா தோற்றமான சூக்குமதனு கரண புவன போகங்களை யுடையவர்கள். இவர்களுக்குச் சிவபிரான் முன்னின்று திருநோக்கம் பரிசம் திகழும் வாக்கென மூவகையானும் அனுக்கிரகித் தருளுவர்.

சூக்குமதனு=புரியட்டக சரீரம். புரியட்டக மாவது=பூதமைந்து. ரு. தன்மாத்திரையைந்து. ரு. கன்மேந்திரியமைந்து. ரு. ஞானேந்திரியமைந்து. ரு. அந்தக்கரணம். ரு. முக்குணம். ரு. பிரகிருதி ரு. கலாதிபஞ்சகம். ரு. ஆகவெட்டுமாம்.

போற்றுகன்ம ஞானமுடன் சத்தாதி பூதாதி
சாற்றுமன மூன்று தத்துவமு--மேற்றதண
மோன்றுடன் மான்கலாதி யைந்துமுப் பானிவையு
மேன்ற புரியட்டகமேன் றேண்.

காரணதன்மாத்திரைகளைந்து மனம் புத்தி அகங்கார மூன்று ஆக எட்டினாலும் ஆக்கப்பட்ட வுடம்பு என்றலுமாம்.

இவர்கள் அநுதியே மலகன்மங்கள் மாத்திர முடைய பிரளயாகலரும், இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்தம் மாத்திரம் நீங்கி மலகன்மங்கள் இரண்டு முடைய பிரளயாகலருமென இருவகையாகித் தனித்தனி பக்குவ மலகர்மமுடையவர் பக்குவாபக்குவமல கர்மமுடையவர் அபக்குவமலகர்ம முடையவர் என மூவகைப் பட்டிருப்பார்கள்.

## க. பக்குவ மலகர்மமுடையவர்.

இவர்கள் புவனேசர், மஹாதேவர், வாமதேவர், பவோத்பவர், ஏகபிங்கர், ஏகேட்சணர், ஈசானர், அங்குஷ்டமாத்திரர் என்னும் மண்டலர் எண்மரும், இவர்களுக்கு அதிபர்களும் சம்சாரசாகரத்திற் சுழலுகிறவர்களைத் திருப்புகிறவர்களுமாகிய அனந்தர், திரிகலர், கோப்தர், க்ஷேமேசர், பிரமபதி, துருவர், தேஜோதிபர், கஹனேசர் என்னு மெண்மரும் வீரரும் ஸ்ரீகண்டரும் எனப்பதினெண்மர்.

இவர்கள் சிவனுலே அனுக்கிரகத்தைப் பெற்று மலபரிபாகத்தின் மந்தத்தாலே அதிகாரமலத்தோடுங் கூடிஅஷ்ட வித்தியேசுராலே பிரேரிக்கப்பட்டுப் பிரகிருதிமாயைக்குக் கீழுண்டான கிருத்

தியங்களைப் பண்ணிக்கொண்டு *கலாமத்தியத்தில் மாயா கெற்பத்தில் வசிப்பவர்கள். இவர்கள் ஆணவமலங் கன்மமலங்களிரண்டேயுடையவர்களானாலும், முற்செய்த தபோபலத்தால் அவைகள் பரிபாகமாகிற வவதாரத்திலே விஞ்ஞானகலரில் மந்திரேசுரர் பதத்தைப் பெற்று, அந்த அதிகாரம் நடத்த வேண்டுகையாலே மாயையோடுங் கூடியிருந்தாலும் சிவன் பிரபஞ்சத்திற் றோய்வற நின்றாற்போல அதிற்றோய்வற நிற்பார்கள். இவர்களுள் புவனேசராதி மண்டல ரெண்மரும் மாயாதத்துவத்தி லிருக்கும் அஷ்டபுவனங்களுக்கும் அதிபதிகளாவார்கள். இவர்களுள் சிரேஷ்டரான ஸ்ரீ கண்டருத்திரராலே கலையென்னுந் தத்துவத்திலிருந்து பிரகிருதி காரியமான ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்குந் தோன்றும்.

†"இவர் அயன்மால் போலச் சகலரினன்றிப் பிரளயாகலரிற் பக்குவமுடையோராய்க் கட்டுநீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக் குரிய எல்லாப்பெயரும் வடிவுந் தொழிலும் பெற்றுடையவ ராகலானும் அயன் மாலிருவர்க்கு மேலாய்ச் சைவத்தி னெய்தி சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவுளாயினர்" அயன்மாலிருவரும் சகல ரென்பதற்குப் பிரமாணம். தத்துவப்பிரகாசம் செய்யுள் (23) குறித்த......சகலத்தோர்கள் அயன்மாலே முதலாக நிகழ்நரகரீறாகும். எனவரும். இவர்கள் தபோபலத்தால் அதிகாரம் பெறறு முறையே சிருட்டி திதிகளுக்குக் கர்த்தாவானார்கள். இவர்கள் தங்கள்தங்கள் பதம்நிலைக்கச் சிவபிரானைப் பிரார்த்திக்கிறார்க ளென்பதை, திருவாதவூரடிகள் புராணம் திருப்பெருந்துறைச்சருக்கம் செய்யுள் 2—ல் "இதுபானருளை வழங்குவதென்ன வரிபிரம ரெழுந்துதம்—பதநிலைபெற வருளென்றிரு பரிபுர கழல்கள் பணிந்தனர்" எனக்கூறி யிருப்பதாலறிக.

இவர்கள் அனைவரையும் மலபரிபாகத்தின் மிகுதியாலே சிருட்டிகாலத்திலே சிவனிரட்சித் தருளுவர்.

## உ. பக்குவாபக்குவ மலகர்மமுடையவர்.

இவர்கள் பிரமாண்ட தாரகராக விருக்குஞ் சதருத்திரரும் காலாக்கினி யுருத்திரருமாவார்கள். இவர்கள் புவனபதிகள். இவர்

* கலாமத்தி யென்றது வித்தியாகலையை.

† இந்தக் (" ") குறிக்குட்பட்ட வாக்கியங்கள் சிவஞானபோதமாபாடியத்துட் கண்டவை.

களுக்குக் கலாசம்பந்த மிருந்தபோதிலுஞ், சகலரான வணுக்க ளைப்போல் கலாதிகளுக்கு வசப்படாதவராதலால், பரமேஸ்வரர் தாமே நேரில் மலகர்ம பரிபாக தாரதம்மியத்துக்குத் தக்கபடி வித்தியேஸ்வராதி பதங்களைக்கொடுத்துப் பின்பு மோட்சங் கொடுக்கிறார்.

### ௩. அபக்குவ மலகர்மமுடையவர்.

இவர்கள் அனேகர் மிஸ்ராத்துவாவில் வாசஞ்செய்கிறார்கள். இவர்களுக்கும் மலகர்மபரிபாகானுகுணமாகப் பரமேஸ்வரர்தாமே மோட்சங் கொடுக்கிறார்.

## ௩. சகலர்.

ஆணவம் கன்மம் மாயையாகிய மூன்று மலங்களையு முடையவர்களாதலால் சகலரென்றது. இவர்கள் அசுத்தாத்துவா வாசிகள். அசுத்த மாயையின் றூலபரிணுமமாகிய பிரகிருதி மாயையிலுண்டாகிய அசுத்த தனு கரண புவன போகங்களையுடையவர்கள். இவர்களில், தீவிரதரர்க்குத் திருநோக்கம், பரிசம், திகழும்வாக்கு, பாவனையெனு நான்கானும், தீவிரர்க்கு அந்நான்கனோடு மிகு நூலானும், மந்தர்க்கு அவ்வைந்தோடு யோகப்பண்பானும், மந்ததரர்க்கு அவ்வாறோடு அவுத்திரியானுந் தீட்சை செய்து அனுக்கிரகித்தருளுவர்.

அசுத்ததனு=சூக்கும தூலதேகங்கள்.

இச்சகலரும் பக்குவ மலகர்மமாயையுடையவர், பக்குவாபக்குவ மலகர்மமாயையுடையவர், அபக்குவ மலகர்மமாயையுடையவர், என மூவகைப்படுவார்கள்.

### க. பக்குவ மலகர்மமாயையுடைவர்:—

இவர்கள் பிரமாண்டத்திற்குள்ளிருக்கும் அவ்வப் புவனங்களில் வாசஞ் செய்கிறவர்கள். இவர்கள் அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசமென்கிற நால்வகைத் தோற்றத்திலே, தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமாகிய எழுவகைப் பிறப்பினையுமெடுத்து, இருநாற்றிருபத்துநான்கு புவனங்களிலுமுழன்று திரியுமவதாத்தில், இருவினை யொப்பினாலே சத்திநிபாதானுகுணமாக மலபரிபாகமடைவார்கள். சம்சாரத்தில் துவேஷம், முத்தியில் விசுவாசம், சிவபக்தி, குருபணிவிடை

முதலானவை மலபரிபாகம் வந்தவருக்கடையாளம். இவ்வாறு மலபரிபாக முற்றவர்களுக்குப் பரமேஸ்வரர் தாமே * குருமூர்த்தத்தை தியட்டித்து வந்து மலபரிபாகானுகுணமாக மந்திரேஸ்வராதிபதங்களை கொடுத்துப் பின்பு மோட்சங்கொடுத்தருளுவர். இவர்களில் தீவிரதரத்திற்றீவிரதரமான சத்திநிபாத முற்றவர்களைத் தீட்சாதி சமஸ்காரங்களினாலே பாசமோசனஞ் செய்து அனுக்கிரகித்துத் தனது பூரணஞானத்தோடும் உடனே கூட்டிக் கொள்ளுவர்.

அண்டசம்—முட்டையிற் றோன்றுவன. சுவேதசம்—வேர்வையிற் றோன்றுவன. உற்பீசம்—வேர் வித்து கிழங்கு முதலியவற்றை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம்—கருப்பையிற் றோன்றுவன. தாவரம்—மரம் செடிமுதலியவைகள்.

மலபரிபாகமானது மலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக் காரணங்களுடன் கூடுவது.

## உ. பக்குவாபக்குவ மலகர்மமாயையுடையவர்:—

இவர்கள் மோட்சத்திலே விருப்பின்றி, பதபோகங்களை விரும்பியவர்கள். இவர்கள், தங்களுடைய பக்குவானுகுணமாகத் தாங்கள் விரும்பிய பதங்களிலே போகங்களைப் புசிக்கப் பரமேஸ்வரரால் சேர்க்கப்படுவார்கள். இவர்களைப் பதபோக வைராக்கியத்திலே சிவனிரட்சித் தருளுவர்.

## ங. அபக்குவ மலகர்மமாயையுடையவர்:—

இவர்களுக்கு மேற்கண்ட குணங்களொன்றுமில்லை. இவர்கள் சனனமரண சக்கரத்தில் இருவினைக் கீடாய்ப் பிறந்திறந்துழலுவார்கள். இவர்களும் பக்குவானுகுணமாகக் காலாந்தரத்தில் பரமேஸ்வரரால் இரக்ஷிக்கப்படுவார்கள்.

சகலரிலக்கணம் இதுவென்பதற்குப் பிரமாணம். சிவநெறிப் பிரகாசம் 11.

"இனிச்சகலரி லக்கணந்தா னுணவத்தோடிருவினைகள் மாயையமிசைந்துபோக, முனிப்பலவும் பிராகிருத தேகந்தன்னையுற்றவத்தை யைந்தினையு முடைத்தாய் நாளுஞ், சனித்திறந்து தேவருடன் மனிதர்நாகர் தானாதி சராசரங்கள் யோனிபேத, மனைத்தினிலும் வினைக்கீடாய்ச் சுழன்று முத்தி யடைவ ரிருவினையொப்பினருட் குருவினாலே."

---

* குருமூர்த்த மென்றது சப்தகோடி மகாமந்திரருள் பின் மூன்றரைக் கோடிகளை,

இங்ஙனம் கூறிப்போந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனு மூவகையாருள், விஞ்ஞானகலர் ஆணவமலத்தையும், பிரளயாகலர் ஆணவ கன்மமலங்களையும் உடையவர்களேயானாலும், விஞ்ஞானகலருக்குக் கன்மமலமும் மாயாமலமும், பிரளயாகலருக்கு மாயாமலமுமுண்டு. ஏனெனில், இவையில்லையேல் அவர்கள் அவ்வப்புவனபோகங்களை நுகரமுடியாதாகும். ஆனால் விஞ்ஞானகலருக்குப் பிணிப்பாகிய ஆணவமல சத்தி சூக்குமமும், பிரளயாகலர்க்குப் பிணிப்பாகிப ஆணவமல சத்தி தூலமுமாகையால் இம்மலங்கள் அவர்களுக்குப் போகசாதனக் கருவியாய் நிற்ப தொழிந்து அவர்களைப்பந்திப்பாவாகும். எனவே சகலர்க்குப் பிணிப்பாகிய ஆணவமல சத்தி தூல*தரமாமென வறிக. ஆதலினாலன்றோ இம்மூவகை ஆன்மாக்களுக்கும் முதல்வன் அனுக்கிரகிக்குமிடத்து உண்ணின்றுணர்த்தியவாறே எளிதில் நீங்குவதாகிய சூக்குமமலசத்திப் பிணிப்புடைய விஞ்ஞானகலர்க்கு உண்ணின்றுணர்த்துவதும், உபதேசமுகத்தாற் றெரித்துணர்த்தியவழியன்றி நீங்குதல்கூடாத தூலமலசத்திப் பிணிப்புடைய பிரளயாகலர்க்கு மான் மழு சதுர்ப்புஜம் காளகண்டம் திரிநேத்திரங்கொண்டு முன்னின்று உபதேசமுகத்தான் உணர்த்துவதும், பலவேறு வகைப்பட வலியுறுத்தி யுணர்த்திய வழியன்றி நீங்குதல் கூடாத அதி தூலமலசத்திப் பிணிப்புடைய சகலர்க்கு மானுடச்சட்டை சாத்தி குருவுருவாய் எழுந்தருளிவந்து உபதேசமுகத்தானும் நூன்முகத்தானும் பலவேறு வகைப்பட வலியுறுத்தி யுணர்த்துவதுமாம். மேலும் திரோதாயி, மாயேயம் என்னும் இரண்டு மலங்கள் மூவகை ஆன்மாக்களுக்கும் உண்டு.

ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்தப் பாசபேதத்தால் மூவகைப் பட்டிருப்பார்கள் என்பதற்கும், அவர்களுக்குக் கன்ம வொப்பில் இறைவனே அனுக்கிரகிப்பன் என்பதற்கும் பிரமாணம்.

சிவப்பிரகாசம். பாயிரம்–அ.

மூவகையா ருயிர்வர்க்க மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற்

---

* தரமென்பது அதிகமென்பதை யுணர்த்தும் ஒருவிகுதி.

பாவனையான் மிகுநூலால் யோகப் பண்பாற்
பரவிவரு மவுத்திரியாற் பாச நாச
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனும்
வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே. என்றும்

சிவானந்தமாலை. சுஅ.

மும்மலத்தின் மூலமலம் விஞ்ஞாகலர் கன்மமுட
னம்மலமுற் றோர்பிரள யாகலர்கண்—மும்மலமுஞ்
சேர்ந்தார் சகல ரவர்க்குத் திருவுருவா
யோர்ந்தே விழித்துரைப்ப னூற்று. என்றும்

அபிடேகமாலை. உ.

ஒருமலவிஞ் ஞானகலர் பிரணவாதியவணு சதாசிவர்க ளட்டவித்த
ருற்றமந்தி ரேசரிவரைச் சுத்தமாயைபா லுதவி யதிகாரமீந்தே
பொருவின் மந்திரேசர்முன னந்தேசர் சுத்தசுத்தாசத்திபா லிருமலப்
புகலுநூற் றீரொன்பதாம் பிரளயர்க்குநற் புகழ்தூலசூக்கும தனுவும்
பெருமையொடு தந்திவரிலொருவராஞ் சீகண்டர் பிரகிருதிபான்மு மலராம்
பிரிவிலரியயனுதி சகலருக் குடறந்து பின்னுயிர்களுக் கிவர்களா
லருமையைந் தொழில்செய வமைத்த வவிகாரனே யபிடேகமாடியருளே
யமலமுதுகிரி யினமர்குமர சற்குருபர நலபிடேக மாடியருளே. என்றும்

சிவானந்தமாலை. சுகூ.

விஞ்ஞகலர்க் குள்ளே விளக்கொளியாய் நின்றொளிர்வன்
மைஞ்ஞவிலு மாணவகன் மர்க்கருளாற்—பிஞ்ஞகனே
தெய்விகமாய் வந்தளிப்பன் சேர்ந்தசக லர்க்கவர்போ
லவ்வுருவாய் வந்தளிப்ப னுங்கு. என்றும் வருமது கண்டுகொள்க.

ஆன்மாக்கள் தூலசரீர மிழந்து சூக்கும சரீரத்துடன் சுவர்க்க நரகங்களிற் சென்று வினைப்பயன்களை அனுபவித்துத் திரும்பவும் பிறக்குமென்பதற்குப் பிரமாணம்:

சிவப்பிரகாசம். பொது—நூச.

இந்நிரையி னைந்துசுத்த மேழ்சுத்தா சுத்த
மெண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத் தாறு
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தான்
மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவியசூக் குமமாந்
தன்னுருவி னணைந்துபய னருந்தியரு னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே. எனவரும்.

இங்ஙனம் சனன மரணப்பட்டு வருகிற ஆன்மாக்கள் எடுக்கப்பட்ட * யோனிபேதங்களானவை நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் எண்பத்துநான்குநூறாயிர யோனிபேதங்களுமாய் இருக்கும் என்பதற்குப் பிரமாணம்:

சிவப்பிரகாசம். போது-ருடு.

தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்
றுதைந்துவரு முற்பிச்சஞ் சராயுசங்க ளென்கி
னூற்றமிகு தாவரங்கள் பத்தொன்ப தென்று
மூர்வபதி னொந்தமரர் பதினொன் றேடலவா
மாற்றருநீ ருறைவனநற் பறவைசனுற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடரோன் பதின்ம
ரேற்றியொரு தொகையதனி லியம்புவர்கள் யோனி
யெண்பத்து நான்குநூ றுயிரமென் றெடுத்தே. எனவரும்.

பசுஇயல் முற்றிற்று.

## ந. பாசஇயல்.

ஆன்மாக்களைப் பந்தித்தலால் பாசம் எனப்படும். (பச்=பந்தித்தல்; அ=கருவிப்பொருள் விகுதி).

பாசமானது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயமென ஐவகைப்படும்.

### ஆணவம்.

வியாபகவுயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமெனப்பெற்றது.

ஆணவமலம் அநாதியாய், நித்தியமாய், அசித்தாய், ஒன்றாய், செம்பு முதலிய லோகங்களிலிருக்கிற களிம்பானது செம்பு முதலிய லோகங்களுள்ள வன்றே அவற்றை மறைத்து அவற்றினுள்ளும் புறம்புங்கலந்து வெட்டுவாய்தோறும் நின்றாற்போல, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்களின் ஆன்மபோதத்தோடும் அநாதியே கலந்து மறைந்து நிற்பதாய், 'அடர்ந்தவிருளும் பிரகாசமென்னும்படி அஞ்ஞானாந்தகாரமாய், இருள் ஒன்றாயிருந்தும் அனேக கண்களை அவைகளுக்குரிய பிரகாசத்தின் தாரதம்மியத்

* யோனி—சாதி.

திற்குத் தக்கபடி மறைப்பதுபோல், எண்ணில்லாத ஆன்மாக்களை யும் அவரவர்களுடைய * பக்குவாபக்குவங்களுக்குத் தக்கதாக அவரவர்களின் இச்சாஞானக்கிரியைகளைச் சற்றுஞ் சீவியாதபடி மறைத்து நின்று, அவ்வவ்வான்ம போதங்களின் மீட்சியிலே நீங்குவதா யிருக்கிற அனந்த சக்திகளை யுடையதா யிருக்கும். இதற்குப்பிரமாணம்: சிவப்பிரகாசம் பொது 8.

"ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளு
மெண்ணரிய சத்தியதா யிருளொளிர விருண்ட
மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வாது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே.

என்ற திருவிருத்தத்தில் முற்பாதி ஆணவமலத்துக்கு இலட்சணங்கூறுவதைக் கண்டுகொள்க.

ஆணவம் கேவலத்தில் ஆவாரகசத்தியானும் சகலத்தில் அதோநியாமகசத்தியானும் ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தை நிகழ்த்தும்.

ஆணவமலம், சகலர்களுக்குச் சகலாவத்தையில் அராக முதலிய கருவிகளுடன் கூடிநின்றவிடத்து, மோகம், மதம், அராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம் எனும் எழுவகையினை யும் செய்விக்கும்.

மோகமாவது, சிவத்திரவிய அபகாரமுதலாயின அதிபாதகம் என்று ஆசாரியரால் அறிந்தாலும் அந்த உணர்ச்சி சிறிதும் விளங்காமல் அறிவை மயக்கி அதிபாதகாதியவற்றைச் செய்விப்பது.

மதமாவது, யாதாமொருவன், தான் மோகித்துப்புணர்ந்த போது, மடவாரைப் பார்த்து இவள் தேவர்கள் மடவாரிற் சிறந்தாள், இவளைப் பெறும்பேறுபோலப் பேறெமக்கில்லையென்று மதிப்பது.

அராகமாவது, அவளைப்பெறாதபோது மிகவும் வருந்தி அழும்படி ஆசையைச் செய்விப்பது.

விஷாதமாவது, தான் வாஞ்சித்துப் புணர்ந்த மாதர் பிரிந்த பொழுது மிகவும் மனோதுக்கம் செய்விப்பது.

---

* பக்குவம்; அறிவித்தவாறே அறியவல்லுஞ் செவ்வி.

சோஷமாவது, சுற்றத்தை விட்டு எப்படி நீங்குவோம், யாம் மரித்தால் குடும்பத்தை யார்தான் தாங்குவாரென்று அந்த மனோ துக்கத்தாலே உடம்பு உலரும்படிச் செய்விப்பது.

வைசித்திரியமாவது, சிவன் நமக்குள்ள இருவினைகளுக் கீடாகத் தெய்வீக முதலிய இன்பதுன்பங்களை மூவிதத்தால் வருவிப்பனென்னும் உணர்வையழிப்பித்து, அவன் என்னைக் கெடுத்தான், வாழ்வித்தான், நானு மென்னை வணங்கினாரை வாழ்வித்தேனென்று கருதுவிப்பது.

அரிசமாவது புத்திர மித்திராதிகளைக் கண்டு களித்து இனியெமக்கென்றும் குறைவில்லை என்று கருதச் செய்வது.

## கன்மம்.

கன்மம் § ஆகந்துகமாய், ஆணவமல மறைப்பால் ஆன்மாக்கள் சிவத்தை யறியாமை காரணமாகத் தோற்றியதாய், சாதி ஆயுள் போகமென மூன்று வகையால் ஆன்மாக்களிடத்தில் அநாதியே பொருந்தியதாய், சரீர முதலானவைகளோடு ஆன்மாக்கள் பொருந்துகைக்கு ஏதுவாய், பலவித போகங்களுக்கு உற்பத்தித் தானமாயும் நாசத்தைச் செய்வதாயு முள்ளதாய், ஆன்மாக்கள் தோறும் தனித்தனியே யேற்பட்டதாய், புத்திபூர்வம் அபுத்திபூர்வமாகச் செய்யப்படும் இதாகிதங்களாலுண்டாகும் புண்ணிய பாப ரூபமானதாய், மாயையிற் சார்ந்திருப்பதல்லது தனித்து வடிவாய்க் காணப்படாததாய், சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமிய மாக மாறிமாறி மனதிலே தோன்றுவதாய், தெய்விகம் பௌதிகம் ஆன்மிகம் என்னும் மூவகையாலும் ஆன்மாக்களை யடைவதாய், பொருந்தின வொழுங்கிலே யல்லாமல் வன்மை மென்மைகளுக் கீடாக மாறிமாறிப் புசிப்பாவதாய், அநுபவித்தாலன்றி யொன்று லொன்று அழியாததாய், வேதாகமங்களில் விதித்த உபாயங்களினால் தனது சத்தி குன்றுவதாய் உள்ளது.

இதற்குப் பிரமாணம்: சிவப்பிரகாசம் பொது 16.

நண்ணியிடு முருவதனுக் கேதுவாகி
நானாபோ கங்களாய் நாசோற்பத்தி
பண்ணிவரு மாதலா லநாதியாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வதாகி
யெண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயைமேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே. எனவரும்.

---

§ ஆகந்துகம் — இடையிற் பொருந்துவது.

சஞ்சிதமாவது அநாதியே தொடர்ந்து சநநங்கள் தோறும் ஆர்ச்சிக்கப்பட்டு ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டு அளவிறந்து கிடக்கு மிருவினைகள்.

பிராரத்தமாவது அந்தச் சஞ்சித கர்மங்களில் ஏதேனுமொன்று பரிபக்குவமாகிக் காரியத்திற்கு வந்து அதற்கேற்ற தனுகரணாதிகளை யுண்டாக்கிப் புசிப்பிப்பது.

இந்தப் பிராரத்தமானது இச்சாப் பிராரத்தம், அநிச்சாப் பிராரத்தம், பரேச்சாப் பிராரத்த மென மூவிதமாகும். இச்சாப் பிராரத்தமாவது இராசாவின் மனைவியைத் தீண்டலால் வரும் சுகமுந் துக்கமு மாகும். அநிச்சாப் பிராரத்தமாவது இடி மழை முதலியவற்றால் சுகதுக்கங்களை யுறுவது. பரேச்சாப் பிராரத்தமாவது ஒருவன் ஒரு காரியஞ் செய்ய, அதனை லவனை ஆக்கினை யபராதமென்று இராசாங்கத்தார் சொல்ல, அதற் கொருவன் வினை முதலியவற்றா லுறு மிருபயனுமாகும்.

இனி, பிராரத்தமானது தனது சத்தியின் வன்மைமென்மைக் கீடாகத் தீவிரம், மந்தம், சுப்தமென மூவகையாகும். சுப்தமென்பது தூங்கினது. இவற்றுள் சுப்தப்பிராரத்தமானது சிவதருமபராயணனுக் கில்லை. மந்தப்பிராரத்தமானது சிவஞானிக்கில்லை. தீவிரப்பிராரத்தமானது யாருக்கும் நீங்காது; ஆனாலும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது.

ஆகாமியமாவது எடுத்த தேகத்தில் பிராரத்தம் புசிக்கும் போது மேற்சனனத்துக் கேதுவாய் மரணபரியந்தம் செய்யப்படுவது. இவ்வாகாமியம் ஆர்ச்சிக்கப்பட்டுச் சஞ்சிதமாகிப் பிராரத்தமாகும் முறைமையைச் சிறிது கூறுவாம்.

ஆன்மாக்கள் செய்யுந் தொழில்களெல்லாம் புண்ணிய பாவமென்னு மிரண்டினு ளடங்கும். புண்ணியமாவது உயிர்களுக்கு இதஞ்செய்தல். பாவமாவது உயிர்களுக்கு அகிதஞ்செய்தல். இவைகளையே நல்வினை தீவினைகளென்றும் இருவினைகளென்றுஞ் சொல்லுவார்கள். இவைகள், புத்திபூர்வமாகச் செய்யப்படு மிருவினைகளென்றும் அபுத்திபூர்வமாகச் செய்யப்படு மிருவினைகளென்றும் இருவகையாம். புத்திபூர்வமாவது புண்ணியமிது பாவமிது வென்று அறிந்து செய்யப்படுவது; அபுத்தி பூர்வமாவது அங்ங

னம் அறியாமல் செய்யப்படுவது. இன்னும் இவைகள் காமியமென்னும் நிஷ்காமியமென்று மிருவகைப்படும். காமியம் பயன்குறித்துச் செய்யப்படுவது; நிஷ்காமியம் பயன்குறியாது செய்யப்படுவது, இதுவே மேலானது. காமிய கன்மங்கள் திருஷ்டசன்ம போக்கியம், அதிருஷ்ட சன்ம போக்கியம், திருஷ்டாதிருஷ்ட சன்ம போக்கியமென மூன்றுவகைப்படும். இவற்றுள் திருஷ்ட சன்ம போக்கியமாவது அந்தச் சன்மத்திலேயே பலனைத் தருவதான ஔடத மந்திர புத்திர காமேஷ்டியாதி வினைகள். அதிருஷ்ட சன்ம போக்கியமாவது தேகாந்தத்தில் சுவர்க்கத்திலேயாவது, நரகத்திலேயாவது, மறுசனனத்திலேயாவது பலனைத்தரும் வினைகள். திருஷ்டா திருஷ்ட சன்ம போக்கியமாவது அந்தச் சனனத்திலேயும் மறுசனனத்திலேயும் பலனைத் தருவது; அது இம்மையில் அசுவமேதஞ் செய்தவன் இம்மையிற்றானே சுகமடைந்து மறுமையிற் சுவர்க்கமடைவதும், பிர்மகத்தி செய்தவன் இம்மையிற்றானே துக்கத்தை யடைந்து மறுமையில் நரகத்தை யடைவதும் போல்வது. இம்மூன்றும் புசிப்பு முறையான் திருஷ்டப் பிராரத்தம், அதிருஷ்டப் பிராரத்தம், திருஷ்டா திருஷ்டப் பிராரத்தமெனப்படும். இங்ஙனங் கூறப்பட்ட இருவினைகள் தாமே ஆகாமியமெனப்படும். இவை மூவகையான ஆறத்துவாக்களில் எந்த அத்துவாவின் எந்தப்பாகத்தினால் ஆர்ச்சிக்கப்படுகிறதோ அந்த அத்துவாவின் அந்தப்பாகத்தில் அதற்குரிய மூர்த்தியினால் கட்டப்படும். உதாரணமாக, மனதினால் செய்யப்படும் இருவினைகள் மனமென்னுந் தத்துவத்தில் அதற்குரிய மூர்த்தியாலும், வாக்கினாற் செய்யப்படுபவை வாக்குத் தத்துவத்தில் அதற்குரிய மூர்த்தியாலும் கட்டப்படும். இவ்வாறே மற்றவைக்குங் கண்டுகொள்க. இங்ஙனங் கட்டப்பட்ட வினைகளே சஞ்சிதமெனப்படும். சஞ்சித கர்மங்கள் ஏககாலத்திலேயே எல்லாம் பரிபக்குவமாகிப் பயன்றரா; ஒரு சனனத்திலே தானே பயன்றருவதுமில்லை; செய்த வரிசைக் கிரமப்படியும் பயன்படா. எங்ஙனம் ஒரு தோட்டக்காரனால் ஒரு தோட்டத்திலே ஒரே காலத்தில் விதைக்கப்பட்ட கீரை, கத்திரி, மா, புளி, பனைமுதலிய பலவகை விதைகள் அவைகளின் பரிபக்குவ பேதத்தால் முற்பிற்பாடாக அவைகள் அவனுக்குப் பலன் கொடுக்கின்றனவோ அங்ஙனமே ஒருவன் செய்த கன்மங்களும் அவைகளின் வன்மை மென்மைக்கீடாகப் பரிபக்குவ பேதத்தால் முற்

பிற் பாடாகவும் அவனுக்குப் புசிப்பாகும். அங்ஙனம் புசிப்பாகின்றவையே பிராரத்தமெனப்படும்.

ஆன்மாக்களுக்கு அநாதி சிவசம்பந்தம் புண்ணியமாகும், அநாதி ஆணவமலசம்பந்தமும் அதனால் சிவசம்பந்தத்தை யறியாமையும் பாவமாகும். ஆணவமலசத்தி பலதிறப்பட்டு ஆன்மாக்களை மறைத்தலினால் அதனாலாய பாவமும் பலதிறப்படும். ஆகவே புண்ணியமும் பலதிறப்படுமென வறிக. இதனால் வினை அநாதி ஆகந்துகமென்றது வழுவாகாமை கண்டுகொள்க.

இனி, சஞ்சிதம் குருவின் அருள் நோக்காலும், பிராரத்தம் அநுபவத்தாலும், ஆகாமியம் குருவுபதேசப்படி நிற்றலினாலும் அகலும். ஆனாலும் பிராரத்தமாகிய முளைக்கு வித்தின் பருப்புகளைப்போல் உணவாய் நின்று வளர்க்கிற சஞ்சிதமும் ஆகாமியமும் மேற்சொன்ன உபாயத்தால் நீங்கவே, பிராரத்தம் தனது சத்தி குன்றி உடலூழாய் வாசனாமாத்திரமாய்ப் புசிப்பாகும்.

## மாயை.

ஆன்மாக்களுக்கு அறிவை மயக்கி விளக்குவதால் மாயையெனப்பட்டது. மா-ஒடுக்கம், யா-தோற்றம். உலகம் ஒடுங்கித் தோன்றுவதற் கிடனாய் நின்றது மாயை யென்றலுமாம்.

மாயை ஆகந்துகமாய், அசித்தாய், நித்தமாய், அருவாய், உலகத்துக்கு முக்கியோபாதான காரணமாய்,* அநேக சத்திகளையுடையதாய், தன்காரியங்களில் வியாபகமாய், மூவகை யான்மாக்களிடத்து முள்ளதாய், தன்காரியங்களாற் சகலரை மிகவும் பந்திப்பதாய், தம்மிலொன்றை யொன்றொவ்வாத தனுகரண புவன போகங்களைத் தோற்றுவிப்பதாய், சங்காரகாலத்தில் ஆணவமல முற்றிலும் நாசமுறாத சர்வான்மாக்களுக்கும் வாசஸ்தானமாயுள்ளது.

* உபாதான காரணம் என்பது முதற்காரணம்.

காரணமாவது:—யாதொன்று, காரியத்துக்கு முன்னே யுண்டான்துமாய், இஃதில்லாவிடத்திற் காரியம் நிறைவேறா தென்பதுமாய், வேறேயுமொன்றை உண்டாக்காததுமாய் இருக்குமோ அது காரணமெனப்படும்.

இந்த மாயை சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை யென மூவகைப்படும். சுத்தமாயைக்குக் குடிலை, மஹா மாயை, விந்து ஊர்த்துவமாயை, வைந்தவம், குண்டலினி, பரப்பிரகிருதி, பரமாயை யென்றும், அசுத்தமாயைக்கு அதோமாயை, மோகினி, சூக்குமப்பிரகிருதி யென்றும், பிரகிருதிமாயைக்கு மான், தூல(அல்லது மூலப்) பிரகிருதியென்றும் பெயர். பிரகிருதி= காரணம். விகிருதி=காரியம். எனவே காரியம் தோன்றுவதற்கிடனுயுள்ள தெல்லாம் பிரகிருதி யெனப்படும்.




1. படம்:—மாயை.

## சுத்தமாயை.

சுத்தமாயையானது சுத்தரூபமாய், சுத்தாத்துவாவிற்கு உபாதான காரணமாய், மூவகை யான்மாக்களிடத்துஞ் சேர நிறைவுளதாய், சர்வ விஷயஞானாதிகளைப் பிரகாசிப்பிக்கிறதாய், விஞ்ஞானகலர், பிரளயாகலரில் பக்குவ மலகர்மமுடையவர்களாகிய இவர்களுக்குத் தன் காரியமாகிய விந்துவிலிருந்து சுத்த தனுகரண புவன போகங்களை யுண்டாக்கிச் சங்காரகாலத்தில் விஞ்ஞானகலருக்குத் தாரகமாயிருக்கும். (தாரகம்=தரிக்கிறது.)

## அசுத்தமாயை.

அசுத்தமாயையானது அசுத்த சொரூபமாய், மிஸ்ராத்துவாவிற்கு உபாதான காரணமாய், கன்மாதிகாரமுள்ள ஆன்மாக்களைத் தன் காரியங்களாயுள்ள கலாதிகளின் வழியாய்ப் பந்திப்பதாய், அஞ்ஞானத்தைச் செய்து மயக்குவதாய், பிரளயாகலர் சகலர்களுக்குரிய * சூக்கும தேகாதிகளைத் தோற்றுவிப்பதாய், சங்கார காலத்தில் பிரளயாகலருக்குத் தாரகமாயிருக்கும்.

இதற்குப் பிரமாணம்: சிவப்பிரகாசம் பொது. 10.

* இங்கே கூறிய சூக்குமதேகாதிகள் பிரளயாகலரில் கீழ்ப்போக நிலையினராகிய நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுக்குரியவைகள். எனவே சுத்தமாயாகாரியமாகிய சூக்குமதேகாதிகள் பிரளயாகலரில் மேற்பதம் இச்சித்தவர்களாகிய ஸ்ரீகண்டர் வீரர் முதலிய நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுக்கு உரியவைகளாம். ஆதலால் பிரளயாகலர் மேற்பதம் இச்சித்தவர் 118. உருத்திரரும் கீழ்ப்பதம் இச்சித்தவர் 118. உருத்திரருமாக இருவகையர் எனவறிக.

உருவாதி சதுர்விதமா யொன்றென் றெவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்று யென்று
மருவாகிக் கன்மமா ரணுக்க ளியார்க்கு
மாவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மானருளான் மாயை தானே. எனவரும்.

மாயை ஆன்மாக்களுக்கு ஞானத்தைப் பிரகாசிப்பிக்கு மென்று நூல்களிலே கூறியிருக்க அஞ்ஞானத்தைச் செய்து மயக்குவதென்றது என்னெனின், மாயையாலுண்டாகிய ஞானம் அற்பமாய் ஆன்மாவல்லாத சரீராதியில் ஆன்மபாவனையை யுண்டாக்குவதால். அஃதென்போலவெனின், இருளில் தீபம் பிரகாசித்தாலும் மஞ்சள் வர்ணத்தில் வெள்ளை வர்ணமென்னும் விபரீத ஞானத்தையுண்டாக்குவது போலாம் எனவறிக.

## பிரகிருதிமாயை.

பிரகிருதிமாயையானது அசுத்தமாயையின் (முளைப்பதற்கு பக்குவப்பட்டு இருக்கும் உப்பினவிதையைப்போன்ற) தூலபரிணாமமேயாகும். இது அசுத்தாத்துவாவிற்கு உபாதான காரணமாய்ச் சகலருக்குரிய தூலதேகாதிகளைத் தோற்றுவித்துச் சங்கார காலத்தில் அவர்களுக்குத் தாரகமாயிருக்கும்.

சித்தாந்தப்படத்தில் பெரிய வட்டவடிவா யிருப்பதுதான் மாயை. அது பிரணவம்போல் புள்ளிகளால் வரையப்பட்டிருக்கிறது. அந்தப்பிரணவ வடிவம் மனதத்துவச் சக்கரத்தைத் தனக்காதாரமாகக்கொண்டு தொடக்க முற்றுத் தோன்றினவிடத்திலேயே திரும்பவந்து பொருந்தி முடிவதானது மாயைக்கு ஆதியந்தமில்லாமையைக்காட்டுகிறது. மாயைக்குவடிவம் பிரணவம்போன்றதென்பதை மாயைக்கு வடிவங்கூறுமிடத்து "ஓங்காரம்போலெல்லாம் வளைந்துநிற்ற லுருவம்" என்பதனு லறிக.

உயரவிருக்குங் கீழ்நோக்கிய ஒரு விளக்கின்கீழ் ஓர் திரண்ட உருவப்பொருளை உதாரணமாக ஓர் பந்தைப் பிடித்தால் அதின் மேல்பாகம் அதாவது வெளிச்சத்துக்கு நேரிட்டபாகம் பிரகாசமாயும் இரண்டு விலாப்பக்கங்களும் சற்றுக் குறைந்த பிரகாசமாயும்

கீழ்ப்பாகம் முழுமையும் இருண்டதாயும் இருக்குமல்லவா? அது போல இந்த மாயாகோளம் திரட்சியாயிருப்பதாலும், உயரச் சிவ சூரிய னிருப்பதாலும், அச்சிவசூரியனுக்கு எதிர்ப்பாகம் பிரகாச மாயிருப்பதாலும் அந்தப் பாகத்துக்குச் சுத்தமாயை யென்று பெயர். சிவபெருமான் நேரே தாமே யதிட்டித்து நிற்கப்பெற்ற தால் சுத்தமாயை யென்றதுமாம். அந்தப்பாகம் வெண்மை நிற மாகவும் புகை நிறமாகவும் படத்திற் காட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழ்ப்பாகம் சிறிது பிரகாசமான கருமையுடைய தாத லால் அது சிவந்த பாகமாயிருக்கிறது. இதற்கு அசுத்தமாயை யென்று பெயர். மாயாகோளத்தின் அதோ (கீழ்ப்) பாகமானது மூற்றிலும் பிரகாசம் பொருந்தாத பாகமாதலால் அதைச் சுத் தக் கறுப்புநிறமாய்க் காட்டியிருக்கிறது. பிரகிருதி தத்துவத்தில் (அதாவது கோளமத்தியில்) இருக்கும் கறுப்புப் பாகமுதல் கீழ்ப் பாக முழுமையும் கருமையான பாகமாகும். ஆகையால் பிரகிருதி மாயை அசுத்தமாயையின் றூல (தடித்த) பரிணாம மெனப்படும்.

## திரோதாயி.

திரோதாயி என்பது சிவனுடைய அருட்சத்தியானது ஆன் மாவைப் பந்தித்த ஆணவமலம் நசிக்கும்படி அதனோடுகூடித் திரோ பவித்து நின்று காரியப்படுத்தும்அவதரத்தி லடைந்த பெயர். ஆதிசத்தி மலமல்லாமலிருக்கவும் கிராதருடைய ஆசாரியரைக் கிராதாசாரிய ரென்றதுபோல மலத்தை யதிஷ்டித்து நிற்கையால் மலமென்று குறிக்கப்பட்டது. "ஈசனது சத்திமலமூன்றினையு மேவு தலாற்—பாசமெனும் பேரதற்கும் பாங்கு" என்பதனாலு மிது துணியப்படும். இது ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலசத்தி நீங்குமளவும் மறக்கருணை கொண்டு விரோதித்தவர்போல மறைப் பாகத் தானும் மறைத்து நின்று மாயாகாரியங்களை விரித்துக் கலாதி ஞானங்களைக் கொடுக்க, ஆன்மாக்கள் அவற்றைப் பொருந்தி வேதங்கள் கலைஞானங்கள் முதலிய நூல்களை ஆராய்ந்தாலும் அவர்களுடைய கன்மவளவிற்குச் சிவனையறியவொட்டாது மறை த்து நிற்கும்; கன்மவொப்பில் அறக்கருணைகொண்டு சிவனையுந் தெரியும்படிச் செய்யும்.

இதற்குப் பிரமாணம். தத்துவப் பிரகாசம் 37.

திரோதமல மிறைசத்தி யான்மாவைக் கன்மஞ்
சேருமள வாகிமலச் செறிவுநீங் களவும்
விரோதமுறை போலொக்க மறைப்பாக நின்று
மிக்கதுதான் மிகுமாயை விரித்தறிவு பொருந்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைக ளாய்ந்து
வரினுமறி யாதவகை நிரவுமத னாலிப்
பராவருளை மலமெனவும் பகர்வரது தானே
பரமனையுங் கருணையினாற் றெரிவுறப்பண் ணிடுமே.

என்றும்.

### ஞானசாகர வெண்பா.

ஊனையுங் கன்மமுடி வொத்தாற் றிரோதாயி
தானே யருளாகித் தன்கருணைத்—தேனே
யருந்தும் படியருளி யானந்த வீட்டிற்
பொருந்தவுடன் கொண்டு புகும்.

என்றும் வருவன கண்டுகொள்க.

## மாயேயம்.

மாயேயமென்பது * "மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும்" என்றபடி ஆன்மாக்களின் சுகதுக்க விளைவுகட்கெல்லாமிடமாய் நின்று அவர்களின் அறிவிச்சை செயல்களை ஏகதேசம் விளக்கும் மாயாகாரியங்களாகும்.

இங்ஙனங் கூறிப்போந்த ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயமென்ற ஐந்தும் பஞ்சமலங்களெனப் பெயர்பெறும். இதற்குப் பிரமாணம்: சிவப்பிரகாசம் பொது. 14.

மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரு மாமாயைத் திரட்சி யொன்றென்
றாகமல மைந்தென்ப ரைந்து மாறு
தருளென்ப தரிதென்ப ரறிந்து ளோரே.

எனவரும்.

---

* சித்தியார் 2-ம் சூத்திரம். செ. 87.

## அத்துவாக்கள்.

அத்துவா வென்பது வழி; அதாவது மாயை தன்காரியங்களால் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் வழி.

அது சுத்தம், மிச்சிரம், அசுத்தமென மூவகைப்பட்டுப் பொதுவில் தத்துவம், கலை, புவனம், வன்னம், பதம், மந்திரமென ஆறுவகையாகும். தத்துவம் கலை புவனம் மூன்றும் திரவிய வடிவானவை; மற்றவை ஒலிவடிவானவை. இவற்றுள் புவனம் தத்துவத்தைப்பற்றி நிற்கும். தத்துவம் கலையைப்பற்றி நிற்கும். வன்னம் பதம் மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் புவனத்தில் தோன்றிய சரீரங்களைப் பற்றி நிற்கும்.




2. படம்:—அத்துவா.

சுத்தாத்துவாக்களாவன சுத்தமாயையிலுள்ள கலை, தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரங்களாம்.

மிச்சிராத்துவாக்களாவன அசுத்தமாயையிலுள்ள கலாதிகள்.

அசுத்தாத்துவாக்களாவன பிரகிருதிமாயையிலுள்ள கலாதிகள்.

## தத்துவங்கள்.

தாத்துவிகமாகிய சரீராதிகள் போல உடனே அழிவதின்றிப் பிரளயகாலம் வரையும் நிலையுறுதலான் தத்துவ மெனப்படும். பூத லய காலத்தில் மரணமுறுந் தேவர்க்கு அமர ரென்னும் பெயர் ஏற்பட்டதுபோல, காரியக்கேடுடைய கருவிகட்கும் தத்துவமெனப் பெயர் ஏற்பட்டது.

தத்துவங்கள் அகக்கருவி முப்பத்தாறும், புறக்கருவி அறுபதும் ஆகத் தொண்ணூற்றாறுமாம்.

அகக்கருவிகளாவன:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், சுரோத்திரம், துவக்கு சட்சு, சிங்குவை; ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும்,

மனம், அகங்காரம், புத்தி, சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்கும், புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை என்னும் வித்தியா தத்துவம் ஏழும், சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், விந்து, நாதம் என்னும் சிவதத்துவம் ஐந்தும் ஆக முப்பத்தாறுமாம்.

புறக்கருவிகளாவன:—பஞ்சபூதங்களின் காரியம் இருபத்தைந்து, வாக்காதிகளின் தொழிலாகிய வசனாதி ஐந்து, வாயு பத்து, நாடி பத்து, வாக்கு நான்கு, ஏடணை மூன்று, குணம் மூன்று என அறுபதுமாம். இதற்குப்பிரமாணம்: சிவப்பிரகாசக்கட்டளை.

பூதங்கள் பிருதிவப்புத் தேயுவாயு புகழாகாச மைந்தாஞா னேந்திரியங்க, ளோதுசோத் திரந்துவக்கு சட்சு சிங்குவை உயராக்கிராண மைந்தாந்தன் மாத்திரைகேணீ, தாதுசத்தப்பரிச ரூபரசகந்தமைந்து தருகன்மேந்திரியம் வாக்குப் பாதம் பாணி, நீதிபாயுரு உபத்தங் கரணம் மனம் புத்தி நிகழ்ந்த அகங்காரஞ் சித்தம் நின்றதொரு நான்கே.

ஆன்மதத்துவ மிருபது நாலாகச் சொல்வரதின்மேல் வித்தியா தத்துவங்கால நியதி, தானமுறு கலைவித்தை யிராகமுடன் புருடன் தருமாயையேழென்பர் சிவதத்துவம் பின், ஞானமுறு சுத்தவித்தை யீச்சுரஞ் சாதாக்கியம் நயந்தசத்தி சிவமைந்தா நடத்துநூல்கள், மோனமுறு வுட்கருவிபுறக்கருவி கேணீ முதிர் பிருதிவியின் கூறு மயிரெலும்பு தோலே.

என்றும்.

தத்துவப்பிரகாசம். 39.

பூதங்க ளனிற்றோன் றுங் காரியமை யைந்தும்
புகலும்வாக் காதிகளிற் றோன்றுதொழி லைந்தும்
நீதிவா யுவிற்றோன் றும் வாயுப் பத்தும்
நிகழ்பூதந் தனிற்றோன் றும் புகழ்நாடி பத்தும்
கோதில்விந் துவிற்றோன் றும் வாக்கு நாலும்
குலவு மூலந்தோன் றுங் குணங்கண் மூன் றும்
பேசவா காயத்தி லேடணைகண் மூன் றும்
பிறக்கு மறுபது மிவைகள் புறக்கருவி யெனுமே.

என்றும் வருவன கண்டுகொள்க.

## தத்துவங்களின் தோற்றம்.

பரசிவம் ஆன்மாக்களிடத்தில் வைத்த அருளினாலே அவர்களை யிரட்சிக்க விச்சைகூர்ந்து குடிலையின் ஏகதேசத்தைக் கலக்க

அதிலிருந்து நாததத்துவமும், இதிலிருந்து விந்து தத்துவமுந் தோன்றும்.

நாதமென்பது, இரண்டு எதிர் மறையான மின் சாரசத்திகள் (அதாவது பாயுஞ்சத்தியும் தாங்குஞ் சத்தியும்) ஒன்றோடொன்று சேரும்போது தொனியும் பிரகாசமுந்தோன்றுகிறதுபோல, (இதற்கு இடியையும் மின்னலையும் உதாரணமாகக் கொள்ளவும்) சிவசூரியனுடைய கதிர் மாயை (குடிலை)யில் வந்து பொருந்தியவுடன் உண்டாகிய தொனியேயாகும். நாதத்திலிருந்து விந்து தோன்றுமென்றதும் தொனியானது ஆகாயத்தில் பாவுங்கா லுண்டாகிய வட்ட வடிவையே யாகும். விந்து=புள்ளி, வட்டம்.

விந்துவிலிருந்து அக்ஷரங்கள் தோன்றுமென்பது வரிவடிவில் புள்ளியிலிருந்தும் ஒலிவடிவில் தொனியின் வட்டத்திலிருந்துஞ் சகல வெழுத்துக்களுந் தோன்றுவதை. "அகர முதல வெழுத்தெல்லா" மென்னுந் திருக்குறளானுமறிக. அகரம்=விந்து. இவைகளை யூகித்துணரவும்.

சித்தாந்தப்படத்தில் தத்துவங்களைக் கடியாரச்சக்கரம்போல் பல்வைத்த சக்கரங்களாகக் காட்டியிருக்கிறது. அது தத்துவங்களெல்லாம் இயந்திரச் சக்கரங்களைப்போல் ஒன்றாலொன் றசைக்கப்பட்டுத் தத்தம் தொழிலைச் செய்வதைக் குறிப்பிடுகிறது. தத்துவங்கள் சக்கரங்களைப்போல் ஆரங்களையுடையதாய் ஒன்றாலொன் றசைக்கப்படுமென்பதற்குப் பிரமாணம். தைத்திரீய ஆரணியத்து (3-வது) பிரசினம் 11-வது மந்திரம்.

பஞ்சாரம் சக்ரம பரிவர்த்ததே பிரது.

இதன்பொருள்: இவ்வைந்து சக்கரங்களுக்கும் சிருட்டியாதி ஐந்து ஆரங்களையுடைய சக்கரம் மேலே விரிவாயுள்ளது.

என்பதாம்.

மேலும் பாவாஷ்டகமாகிற எட்டாரங்களையுடைய புத்தியாகிற மகாசக்கரம்என்று பவ்ட்கரம் ௬-வது பும்ஸ்த்வ தத்வப்படலம் ௧௨அ-வ்து சுலோகங் கூறுவதாலுமறிக.

நாததத்துவம் சித்தாந்தப்படத்தில் ௩௬-வது சக்கரம். இது தோற்றமுறையில் ௧-வது தத்துவமானாலும் ஒடுக்கமுறையில் ௩௬-வது தத்துவமெனப்பட்டது. இங்ஙனமே மற்றவைக்குங் கண்டுகொள்க.

நாததத்துவத்திற்குச் சிவம் அதிபதியாகலான் இதற்கும் சிவமென்று பெயருண்டு. எவ்வெப்பெயர்கள் எவ்வெத்தத்துவாதிபதிகட் குளவோ அவ்வப்பெயர்கள் அவரவர்களா லதிட்டிக்கப்படும் தத்துவங்களுக்குமாம்.

நாதமாவது சர்வான்மாக்களுக்கும் அறிவை யெழுப்புவித்து நிற்கிறஞானம்.

விந்துதத்துவம் சித்தாந்தப்படத்தில் ௩௫-வது தத்துவம். இதற்குச் சத்தியென்றும் பெயர்.

விந்தாவது சர்வான்மாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற கிரியை.

ஞானமென்பதைச் சித்தாந்தப்படத்தில் நாததத்துவச் சக்கரத்துள் ளிருக்கும் வெண்மை நிறங் காட்டுகிறது. கிரியையென்பதை விந்துதத்துவச் சக்கரத்துள்ளிருக்கும் செந்நிறங் காட்டுகிறது.

விந்து தத்துவத்திலிருந்து சாதாக்கியந் தோன்றும். இது ௩௪-வது தத்துவச் சக்கரம். இதற்குச் சதாசிவமென்றும் பெயர். சாதாக்கியமாவது ஞானக்கிரியைகளாகிய நாதவிந்துக்க ளிரண்டும் சமமாய்க் கூடியது.

சாதாக்கிய தத்துவத்திலிருந்து கிரியை மிகுந்து ஞானங் குறைந்ததாகிய ஈச்சுரம் தோன்றும். இது ௩௩-வது தத்துவச் சக்கரம். இதற்கு மகேச்சுரமென்றும் பெயர்.

ஈச்சுர தத்துவத்தி லிருந்து ஞானமிகுந்து கிரியை குறைந்ததாகிய சுத்தவித்தை தோன்றும். இது ௩௨-வது தத்துவச் சக்கரம்.

சாதாக்கியாதி மூன்று தத்துவங்களின் விவரங்களைச் சித்தாந்தப்படத்தில் நன்றாய்க் காட்டி யிருக்கிறது. இவ்வைந்து தத்துவங்களும் ஞானக்கிரியா சொரூப பேதங்களாகு மென்பதற்குப் பிரமாணம்:

## சித்தியார். க-ம் சூ-ம். சூ௫.

ஞானமே யான போது சிவன்ஞெழின் ஞான மொக்கி
னீனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழி லதேறி
ஞானமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக
மானபே ரதிசா ரத்தோ டதிகா ணத்த னாமே.

எனவரும்.

இவ்விதமாக இந்த ஐந்து தத்துவங்களுந் தோன்றுமென் பதற்குப் பிரமாணம்:

சிவப்பிரகாசம் பொது—கூ.

உன்னலரும் பாசிவன்ற னருளாலே நாத
  முதிக்குமிகுங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி னொளிவளருஞ் சதாசிவரா மவரிற்
  றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனுன்
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையினுன் முன்னே
  வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
  மொழிந்திடுவ ருங்கலைகண் முதிர்ந்து ளோரே.

எனவரும்.

இந்த ஐந்திலும் முதல்வன் ஞானக்கிரியைகள் அதிட்டிக் கையாலும், இவைகளிலுள்ள புவனவாசிகளுக்குச் சர்வஞ்ஞத்துவ சர்வகருத்திருத்துவங்களை விளக்குதற்குச் சாதனங்க ளாகையா லும் இவை சுத்ததத்துவமென்றும், சிவதத்துவமென்றும், பிரேர காண்டமென்றும், பெயர்பெறும். இவைகளே மற்றவைகளைத் தொழிற்படுத்துதலினுலே பிரேரகாண்டமென்றது. பிரேரித்தல்— செலுத்தல்.

இவைகள் சிவபெருமானுல் காரியப்படும். இவைகளுக்கு முறையே சிவம், சத்தி, சதாசிவன், மஹேசுவரன், உருத்திர னெனு மைவரும் கருத்தாவாகுவார்கள்.

முன்னேகூறிய விந்துதத்துவத்திலிருந்து சூக்குமாதி நான்கு வாக்குகள், ஐம்பத்தோரக்கரங்கள், எண்பத்தொரு பதங்கள், சப்த கோடி மகாமந்திரங்கள், வேதாகம புராண சாத்திரங்களும், விஞ் ஞானகலர் பிரளயாகலருக்குத் தனு கரண புவன போகங்களுந் தோன்றும். இவைகள் சுத்தமாயா காரியங்களாகும்.

இதுவரையிற் கூறியது சாக்ஷாத் சிருட்டி யெனப்படும். இனிக் கூறப்படுவது பரம்பரா சிருட்டியாகும்.

ஈச்சுரதத்துவத்தில் வசிக்கிற அட்டவித்தியேஸ்வரர்களில் முதல்வராகிய அனந்ததேவர் மகேசரின் அதிகாரத்தைப்பெற்று வாயுவானது சமுத்திரத்தி லொருபிரதேசத்தை விகாரப்படுத்து வது போல அசுத்தமாயையின் ஏகதேசத்தைக் கலக்க அதி

விருந்து காரியமாயை யென்னுந் தத்துவந் தோன்றும். இதி விருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகமென்னுந் தத்துவங்கள் தோன்றும். இவற்றுள் கலையிலிருந்து வித்தையும் இதிலிருந்து அராகமுந் தோன்றுமென்றுங் கூறுவர்: அராகமு முடன் தோன்று மென்பது சிலர் துணிபு. இவ்வைந்து தத்துவங்களின் சமூகமே புருடதத்துவ மெனப்படும்.

இவைகளின் காரணமாகிய காரியமாயையு மிவற்றுடன் கூட்டி ஆக ஏழுதத்துவங்களையும் வித்தியாதத்துவம், சுத்தாசுத்ததத்துவம், போககாண்டம், அல்லது போகசயித்திரு காண்டமென்று கூறப்படும்.

இவையேழும் ஆன்மாக்களுக்குச் சிறிதறிவை விளக்குதற்குச் சாதனமாகையால் சுத்தமும், சூக்குமரூபவாயிலாக குணரூபமாகிய சுகதுக்க மோகங்களை யுண்டாக்குவதற்குச் சாதனமாகையால் அசுத்தமுமாதலாற் சுத்தாசுத்தமென்றது.

இவை ஆன்மாக்களுக்குச் சகாயமாய் நின்று போகங்களை யுண்டாக்குவதால் போககாண்டமென்றும், அவைகளைப் புசிப்பிக்கையால் போகசயித்திருகாண்டமென்றுங் கூறப்பட்டது. போகசயித்திரு—புசிப்பிக்கிறது.

இவையேழில் காரியமாயையை நீக்கி கலையிற்றோன்றும் பிரகிருதியைக் கூட்டி யுரைப்பாருமுளர். அது பொருந்தாதாகும். ஏனெனில், தத்துவங்களுக்குப் புவனங்களினடைவு கூறும்போது ஏனையவற்றிற்கு உரைத்ததுபோல் பிரகிருதிக்கெனத் தனியே புவனங்கள் கூறப்படாமையானும், பிரகிருதியைக் குணதத்துவத்துடன் கூட்டி அதற்குப் புவனங்களைக் கூறியிருத்தலானும், கலாசோதனை செய்யுமிடத்து பிரதிட்டாகலையில் பிரகிருதியையும் வித்தியாகலையில் மாயையையுங் கூட்டிச் சோதிக்கப்படுதலானும், பிரகிருதிக்குமேலிருக்கும் புருடதத்துவத்தை இருபத்தைந்தாவது தத்துவமென்று நூல்களிற் கூறியிருத்தலின் பிரகிருதியைத் தனியே ஒரு தத்துவமாகக் கொள்ளின் புருடதத்துவம் இருபத்தாறுவது தத்துவமெனப்பட்டு அவற்றோடு மாறுபடுதலானும், பிரகிருதிக்குங் குணதத்துவத்துக்கும் சிறிதே பேதங்கூறப்படுதலானும், மாயாதத்துவத்துக்குத் தனியே அஷ்டபுவனங்கள் கூறப்படுவதாகுலானும், ஆவற்றி னதிபதிகளாகிய மண்டலரெண்மரும்

மாயையில் வசிக்கையானும், மாயையை ஓர் தத்துவமாகக் கொள்ளாவிடின் மாயாதத்துவத்திற்குரிய எட்டுப் புவனங்களுக்கும் இடமின்மையானும், அவற்றை வேறு தத்துவங்களில் அடக்குவது பொருந்தாமையானும், மாயையையும் பிரகிருதியையும் தனித் தனியே சேர்த்து இரண்டு தத்துவங்களாகக் கொள்ளின் தத்துவம் முப்பத்தேழாகிறதானும், தருக்கசங்கிரகத்தில் புரியட்டகத்துக்கு இலட்சணங் கூறுமிடத்து "புரியட்டகமாவது புருடன்றோறு நியதமாகச் சிருட்டிகாலந் துவக்கி மகாப்பிரளயம் வரையில் அல்லது மோட்சம் வரையில் இருக்கின்ற பிருதிவிமுதல் கலைவரையில் முப்பது தத்துவரூபமான அசாதாரணமாகிய சூக்குமதேக" மென்றதில் கலையை ௩௦–வது (இது உணர்த்து முறைமையில்) தத்துவமாகக் கொண்டிருப்பதால் ௩௧-வது தத்துவம் மாயையெனப்பெறுதலானும், பிராசாத மாலையில் பிராசாதமந்திரத்தின் கலைகளுக்குரிய தத்துவங்களின் எல்லை குறிப்பதில் † மேதைகலைக்கு மண்முதல் பிரகிருதி பரியந்த மென்றும் விடகலைக்கு மாயையென்றும் கூறப்படுவதாகலானும், பிரகிருதியை வித்தியாதத்துவத்தில் சேர்க்கமுடியாதென்பதையும் காரியமாயை யென்று ஒருதத்துவம் அவசியங் கொள்ளவேண்டு மென்பதையுமறிக.

வித்தியாதத்துவங்க ளேழும் காரியமாயையை முதலாகக் கொண்டு சித்தாந்தப்படத்தில் முறையே 31-30-29-28-27-26-25 வது தத்துவச் சக்கரங்களாகும்.

இவையேழு தத்துவங்களில் கலை, வித்தை, அராகமாகிய மூன்று தத்துவங்களும் உள்ளந்தக்கரண மெனப்படும்.

இவையெல்லாம் அனந்த தேவரால் காரியப்படும். இந்தஅனந்ததேவர் அசுத்தமாயாகாரிய வதிகாரியானதால் இவருக்கு அசுத்தமாயையினது சிவந்த நிறத்தில் ஓர் நட்சத்திரம்போன்ற வெகு

---

† பிராசாதமாலை. செய்யுள் 10. மண்முதலாம் பரியந்த மேதைவருமருக் கீசம் படருமாயை தவிராறி, லெண்ணும் விடகலைமாயை பொருந்தியிடும் விந்து விலகுசுத்த வித்தையுட்னீச்சுரமட் டிருக்கும், நண்ணுமர்த்த சந்திரனே முதலொரு நான்கினுக்கும் நாட்டு சதாசிவஞ் சத்தி சத்தி முதனூலாய, சண்ணுகலை நாலினுக்குஞ் சிவமாந்தத்துவமாங் கனகமணியம்பலத்தான் சழலிணைக்கீழிவையே.

மானவுருவம் (மெடல்) கொடுக்கப்பட்டிருப்பதையும், இவர் அசுத்த மாயையை ஈட்டியால் குழப்புவதையும் சித்தாந்தப்படத்தில் பார்க்கவும்.

இனி பிரகிருதிமாயா காரியமாவது மாயாகற்பத்தில் வசிக்கிற பிரளயாகலராகிய உருத்திரர்களில் முதல்வரான ஸ்ரீகண்டருத்திரதேவநாயனர் அனந்ததேவர் அதிகாரத்தைப்பெற்று முன்னே கூறிய கலையென்னுந் தத்துவத்தைக் கலக்க மூலப்பிரகிருதி யென்னும் முக்குணசொரூபங்களாகிற மூலப்பகுதி தோன்றும். இந்த ஸ்ரீகண்டதேவர் பிரகிருதிமாயா காரியாதிகாரியாகையால் இவருக்கு நீலநிறத்தில் ஓர்நட்சத்திர வெகுமானவுருவம் (மெடல்) கொடுக்கப்பட்டிருப்பதையும் இவர் ஈட்டியால் கலாதத்துவத்தைக் குழப்புவதையும் சித்தாந்தப்படத்தில் பார்க்கவும்.

பிரகிருதிமாயாதிகாரியாகிய ஸ்ரீகண்டரை குணதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டரென வெண்ணி மயங்கற்க. தத்துவவாசிகளுக்குத் தத்தம் வாசஸ்தானமுதல் கீழுள்ள ஸ்தானங்களுக்கே அதிகாரமுண்மையானும், கீழ்தத்துவ வாசிகளுக்கு மேல்தத்துவவாசிகள் உயர்ந்தவர்க ளாகையானும், பிரகிருதிக்குமேல் உயர்ந்த மூன்றுவது தத்துவமான கலையைப் பிரகிருதி குணதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டர் கலக்க எவ்விதத்தினு முடியாதெனவறிக. ஆதலால் மாயாதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டரே கலாக்ஷோபிதரென்பது துணிபு.

ஆகவே ஈச்சுரதத்துவ நிலையாகும் அஷ்டவித்தியேசரி லொருவரான ஸ்ரீகண்டர், மாயாதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டர், பிரகிருதி குணதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டர், பிரமாண்டத்துள் நிலையாகிய ஸ்ரீகண்டர் என ஸ்ரீகண்டர் நால்வருண் டென்பதையறிக.

இங்ஙனம் மாயாதத்துவ நிலையாகிய ஸ்ரீகண்டரால் கலாதத்துவத்திற் றோன்றிய பிரகிருதியானது முக்குணங்களின் சொரூபம் வியக்தமாகாத அவதாரமானதால் முக்குணங்களின் நிறமான வெண்மை, செம்மை, கருமையாகிய மூன்று நிறங்களுங் கலந்த நிறத்தைச் சித்தாந்தப் படத்தில் பெற்றிருக்கிறது. இது 24 அ. என்னும் தத்துவச் சக்கரம்.

மேற்கண்ட முக்குணங்களும் பிரிந்துத் தம்முள் சமமாய் நின்ற அவதாரம் சித்தமென்றும் ஒருகுணம் மிகுந்த அவதாரம் அஃ

தாவது சாத்துவிதம் மிகுந்து மற்றவை குறைந்த அவதாரம் புத்தியென்றும் பெயர்பெறும். சித்தாந்தப்படத்தில் வெள்ளை சிவப்பு கறுப்பாகிய மூன்று நிறங்களும் சமமாய்ப் பிரிந்துநிற்கும் 24-வது தத்துவச் சக்கரம் சித்தமாகும்; அதன்கீழ் வெள்ளை மிகுந்து மற்றவைக் குறைந்திருப்பதாகிய 23-வது தத்துவச் சக்கரம் புத்தியாகும்.

சித்தம் மனதிற் றோன்றுவதென்று கூறுவர், பௌட்கரம், சித்தியார், சிவப்பிரகாசம் முதலியவைகளில் குணதத்துவத்துக்குத் தோற்றங்கூறி சித்தத்துக்குத் தோற்றமே கூறாமையானும், சித்தியாரில் "சித்தமா மவ்வியத்தஞ்சிந்தனையதுவுஞ் செய்யு" மெனக் கூறியிருத்தலானும், தத்துவவிளக்கத்தில் முக்குணங்களும் சமமாய் ஒத்தவே சித்தமென்பதனானும், புவனங்களினடைவு கூறும்போது ஏனையவற்றிற்குக் கூறியதுபோல் மனத்துக்குப்பின் சித்தத்துக்குப் புவனங்கூறாமையானும், தத்துவங்களினுயரமும் புவனங்களினடைவுங் கூறுமிடத்து குணதத்துவத்துக்கு உயரமும் புவனமுங் கூறுகையான் சித்தம் மனதிற்றோன்றுவதெனக் கொள்ளின் குணதத்துவத்தைத் தனித்தொரு தத்துவமாகக் கொள்ள வேண்டியதாகிறதானும், அவ்வாறு கொண்டால் ஆன்மதத்துவம் 24-என்பதற்கு மாறாகி 25-ஆகிறதானும், பௌட்கரம் 6-வது பும்ஸ்த்வதத்துவப் படலம் சுலோகம் 27½ல் அகிருதர் முதலியோர்க்குக் குணதத்துவத்தி லிருப்பெனக் கூறுகையானும், புத்தியிற்றோன்றிய அகங்காரத்தின் சத்துவகுணம்சமான மனதில் முக்குணசொரூபமான சித்தந்தோன்று மென்பது எவ்வாற்றானும் பொருந்தாமையானும், தத்துவரூபமுதலிய அனேக சாத்திரங்களிலும் ஆகமாந்தரங்களிலும் தத்துவங்களுக்கு நிறமுந் தொழிலுங் கூறுங்கால் மனதுக்குப்பின் சித்தத்துக்குக் கூறாமையானும் மற்றும் பலவாற்றானும், சித்தம் மனதில் தோன்றுமென்பது பொருந்தாமையும் குணதத்துவத்தின் கூறே சித்தமென்பது மறிக.

பிரகிருதித்தத்துவங் குணசொரூபங்களாகத் தோன்ற அந்தக்குணங்கள் தம்மிலொத்தவிடம் சித்தமென்பதற்கும், அதிலேயொருகுண மேறினவிடம் புத்தியென்பதற்கும் பிரமாணம்:

## தத்துவ விளக்கம்.

கூறியமூலப் பகுதியிற் றோன்றுங் குணமவைதான்
றேறிய சாத்திகராசத தாமதமென்று செப்பு
மூறியமுக்குண மொத்தவை மூன்ற முயர்விழிவற்
றேறியக்காற் புத்திதத்துவமா மென் றெண்ணுவரே. எனவரும்.

புத்திதத்துவத்திலிருந்து இராசோகுண மிகுந்து மற்றவை குறைந்ததாகிய அகங்காரந் தோன்றும், இது சித்தாந்தப் படத்தில் சிவப்புமிகுந்து கறுப்பும் வெள்ளையுங் குறைந்திருப்பதாகிய 22-வது தத்துவச்சக்கரம்.

இது தைசதவகங்காரம், வைகாரியகங்காரம், பூதாதியகங்கார மென மூன்ருய் விரியும். அவைகள் முறையே சத்துவாதி குணங்களை யுடையதனுல் அவ்வப்பெயர் பெற்றன. அவைகள் சித்தாந்தப்படத்தில் முறையே 22அ, 22இ, 22உ என இலக்கமிட்டிருக்கும் தத்துவச் சக்கரங்களாகும்.

அவற்றுள் தைசதவகங்காரம் அறிவானபடியாலே அதனோடு சாத்துவிதகுணம் பொருந்த மனமும் சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணங்க ளாகிய ஞானேந்திரியங்களைந்துந் தோன்றும். இவைகள் சித்தாந்தப்படத்தில் முறையே 21, 20, 19, 18, 17, 16-வது தத்துவச் சக்கரங்களாகும். இந்திரியமென்றது வெளியில் தோன்றும் காதுமுதலிய உறுப்புக்களை யன்று; அங்கங்குள்ள சூக்குமமான சத்தியையே யாகும். என்னை? காதுமுதலிய உறுப்புகளிருக்கவும் சத்தாதி விடயங்களைக் கிரகிக்கமாட்டாமல் குருடன் ஊமையன், செவிடனிருப்பது பிரத்தியட்சமே.

விஷயமானது கண்ணுல் பார்க்கப்படுமளவில் அதனுற் பார்க்கப்பட்ட அர்த்தத்தைப் புத்திக்கு விஷயமாகச் செய்ய யாதொன்று நிற்கிறதோ அது மனமெனப் படும்.

தொழிலான வைகாரியகங்காரத்துடன் விகாரமான இராசத குணம் பொருந்த வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரிய பஞ்சகந் தோன்றும். இவைகள் சித்தாந்தப்படத்தில் முறையே 15. 14. 13, 12, 11-வது தத்துவச் சக்கரங்களாகும்.

உருவமான பூதாதியகங்காரத்துடன் மயக்கமான தாமத குணம் பொருந்த சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்த மென்னும் தன்மாத்திரைக ளைந்துந் தோன்றும். இவற்றிற்குச் சூக்குமபூதங்களென்றும் பெயர். இவைகள் சித்தாந்தப்படத்தில் முறையே 10, 9, 8, 7, 6-வது தத்துவச் சக்கரங்களாகும்.

இந்தத் தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளும், ஞானேந்திரியங்களின் விடயமான சத்தாதிகளும் ஒன்றன்று. தன்மாத்திரைக

ளாகிய சத்தாதிகள் பூதங்கள் தோன்றுகைக்குக் காரணமானவை கள்; ஞானேந்திரியங்களின் விடயங்களாகிய சத்தாதிகள் பஞ்ச பூதங்களுடைய குணங்கள். பஞ்சபூதங்களோடு கூடிய தன்மாத் திரா சத்தாதிகளால் ஞானேந்திரியங்களுக்கு ஞானசத்தியையும், கன்மேந்திரியங்களுக்குக் கிரியாசத்தியையும் விளக்கும் அறிவென் றுபசரிக்கப்படும் சாமர்த்திய முண்டாம். சித்தியார் உ-ம் சூ-ம். ௬௪-வது செய்யுளில் "ஆசை சேர்மனுதிதன் மாத்திரை புரியட்ட கந்தான்" என்று புரியட்டக வுடம்புக்குத் தன்மாத்திரைகளைக் கூறியிருக்கிறது. ஆகையால் பூதகாரணமான தன்மாத்திராசத் தாதிகள் வேறு பூதகுணமான சத்தாதிகள்வேறு எனவறிக.

இனி இந்த தன்மாத்திரைகளுள் சத்தத்திலிருந்து ஆகாய மும், பரிசத்திலிருந்து வாயுவும், ரூபத்திலிருந்து தேயுவும், ரசத் திலிருந்து அப்புவும், கந்தத்திலிருந்து பிருதிவியுந் தோன்றும். இவைகளுக்குப் பஞ்சபூதங்களென்றும் தூலபூதங்களென்றும் பெயர். இவைகள் சித்தாந்தப்படத்தில் முறையே 5, 4, 3, 2, 1-வது தத்துவச்சக்கரங்களாகும்.

இவ்வாறு சத்தாதி தன்மாத்திரையிலே பஞ்சபூதங்களும். ஓரோர் தன்மாத்திரையில் ஓரோர் பூதமாகத் தோன்ற வேண் டாம், ஆன்மாவிலே ஆகாயந் தோன்றி, ஆகாயத்தில் வாயுவும், அதிலிருந்து தேயுவும், அதிலிருந்து அப்புவும், அதிலிருந்து பிரு திவியுந் தோன்றுமெனனில், காரியத்திலே யுண்டான குணங்கள் காரணத்திலே யுண்டென்ற நியாயத்தினல் பிருதிவிக்குள்ள கந் தாதி ஐந்து குணங்களும் ஆகாயத்துக்கும் உண்டாகவேண்டும். உண்டாகில் பிருதிவிக்கும் ஆகாயத்துக்கும் வித்தியாச மில்லை யாகும். ஆகாயம் ஆன்மாவிலே தோன்றுமெனனில் அசித்து சித்தினிடத்து உதியாது என்ற நியாயத்தினல் ஆன்மாவும் ஆகா யம்போலச் சடமாகும். ஆனல் ஆகாயத்திலே வாயுவாதி பூதங் கள் ஒன்றிலே யொன்ருய்த் தோன்று மென்ற வேதாதிகளுக்கு விரோதமாகுமே யெனனில், நிமித்தார்த்தத்தில் ஆகாசாதி யொன்றிலேயொன்று தோன்றுமென்றது ஆகாயமுதலாக ஒன் றின்பின் னென்றுண்டாகுங் கிரமத்தினுலும், பஞ்சீகரணத்தி னுலுமே யாகையால் விரோதமில்லையென வறிக.

பஞ்சீகரணமாவது ஒருபூதசுவரூபத்தை யிரண்டாக்கி ஒரு பாதி யந்தப்பூதமாகவே யிருக்க நின்றபாதி நாலாகி மற்ற நாலு பூதங்களிலும் அந்யோந்யம் வியாபித்திருப்பது.

பஞ்சபூதங்களும் சூக்குமம் ஆந்தரம் வாகியமென மூவகை யாகும். சூக்குமம் சூக்குமதேகத் திருந்து இந்திரியவாதாரமாம். ஆந்தரம் தூலதேகத்திருந்து சரீரத்தை வளர்த்து உள்ளிடங் கொடுத்தல் முதலிய தொழிலை யியற்றும். வாகியம் அண்ட புவன போக்கியப்பொரு ளாதாரமா யிடங்கொடுத்தல் முதலிய தொழிலை யியற்றும்.

இங்ஙனம் சித்தமுதல் பிருதிவியீறாகக் கூறப்பட்ட தத்து வங்க ளிருபத்து நான்கும் ஆன்மதத்துவமெனப்படும். இவற் றிற்கு அசுத்த தத்துவமென்றும் போக்கியகாண்டமென்றும் பெயர். இவற்றுள் சித்தம் புத்தி அகங்காரம் மன மென்னும் நான்கு தத்துவங்களும் அந்தக்காண மெனப்படும். இவையெல் லாம் ஸ்ரீகண்டருத்திரராலே காரியப்படும்.

இவ்வகையாய் வித்தியாதத்துவங்களேழும் ஆன்மதத்துவங்க ளிருபத்துநான்கும் தோன்றுமென்பதற்குப் பிரமாணம்: சிவப் பிரகாசம். பொது-14-15.

அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை
யராகமிவை யனந்தரான் மாயைதனி லாகு
முருத்திரராற் கலைதனிற் பிரகிருதி குணங்க
ளுளவாகு மகங்காரம் புத்தியினி லுதிக்குந்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

என்றும்.

மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தந்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
றருமதனில் வானநில மனல்புனன்மண் சத்த
முன்னதனில் வெளியாதி யொன்றொன் றாகு
முறையிலிவை யிருமையயன் முடிவா முன்னே
யுன்னுசதா சிவராதி யதிபதிக ளொடுக்க
முதித்தவடை வெனவுரைப்ப ருணர்ந்து ளோரே.

என்றும் வருவன கண்டுகொள்க.

இங்ஙனம் அகக்கருவி முப்பத்தாறுந் தோன்றும்.

இவ்வாறு மாயையானது சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்த மெனமூவகைப்பட்டு தனது காரியங்களாலும் முக்காண்டமாகி ஆன்மாக்களின் அறிவிச்சைசெயல்களை விளக்குமென்பதற்குப் பிரமாணம்: உபதேசவிளக்கம். 7.

சுத்தமு மசுத்தஞ் சுத்தாசுத்த நித்தியமாய்த் தூய்தாந்
தத்துவ மைந்தோடேழு சகுமிருபத்து நான்கா
யொத்துமுக் காண்டமாகி யுயிருணர் விச்சையாதி
வித்தகக் கலாதிதன்னால் விளக்கிடுமலமா மாயை. எனவரும்.

இவைகளுள் ஆன்மதத்துவம் கீழ்ப்பாகத்திலும், வித்தியா தத்துவம் மத்தியபாகத்திலும், சிவதத்துவம் மேல்பாகத்திலுமாக சித்தாந்தப்படத்து மாயாகோளத்தில் காட்டப்பட்டிருப்பதற்குப் பிரமாணம்: பிருகச்சாபாலோபநிடதம்.

ஆத்மதத்வமதோபாகே வித்யாதத்வஞ்ச மத்யமே।
ததூர்த்⁴வே ஶிவதத்வஞ்ச க்ரமாத்தத்வா நிவஸந்தி ஹி॥

இ-ள். ஆன்மதத்துவம் அதோபாகத்திலும் வித்தியாதத்துவம் மத்தியபாகத்திலும் சிவதத்துவம் ஊர்த்துவ (மேல்) பாகத்திலுமுள்ளனவாம். எ-று.

திருவிளையாடற் புராணம்.

ஆதியிலான்ம தத்துவமான வலர்மகன்பாகமு நடுவி
னீதியில்விச்சா தத்துவமான நெடியவன்பாகமு முடிவி
லோதியசிவதத் துவமெனலான வுருத்திரபாகமு முதிக்கும்
பேதியிம்மூன்றி லெண்ணிறத்துவங் கள்பிறக்குமிம்மூன்றினு முறையால்.
எனவரும்.

இவைகளில் சப்தாதிதன்மாத்திரைகள் பிருதிவியாதி ஐந்து தத்துவங்களினுஞ் சூக்குமம், அகங்காரதத்துவம் அவற்றினுஞ் சூக்குமம், அதினும் புத்திதத்துவம் அதிசூக்குமம், அதினும் பிரகிருதி அத்தியந்தசூக்குமம், அதினும் கலாதிதத்துவங்கள் சூக்குமம், அவற்றினும் காரியமாயை அதிசூக்குமமெனவறிக.

மேலும் இவை பொதுவும் சிறப்பும் பொதுச்சிறப்புமென முத்திறப்படும். புவனவடிவாகிய தத்துவங்கள் எல்லோர்க்கும்

பயன்றருதலிற் பொதுவாம்; சூக்குமதேக வடிவாகிய தத்துவங்கள் போகநுகர்ச்சியின் பொருட்டுத் தனக்குப் பயன்றருதலிற் சிறப்பாம்; தூலதேகவடிவாகிய தத்துவங்கள் தனது போகநுகர்ச்சிக்கும் சந்தனம் பூமாலை போல மனைவிமுதலியோர் அநுபவித்தற்கும் வாய்ந்தமையிற் பொதுச்சிறப்பாம். இதனாற் புவனவடிவாகிய தத்துவங்கள் முப்பத்தாறும் பொதுவாய்ப் புறத்தே நிற்றல் போல அகத்தே ஆன்மாவைப்பற்றி முப்பத்தாறு தத்துவங்களும் சூக்குமமாய் நிற்குமென்றுணர்க.

மாயாகோளத்தில் பொதுவாய்ப் புறத்தேநிற்கும் 36-தத்துவங்களும் சாதாரண தத்துவமென்றும், ஆன்மாக்கடோறும் சூக்குமமாய் வியாபித்துத் தனித்தனியே ஆன்மாக்களைப் பற்றி அகத்தே நிற்கும் 36-தத்துவங்களும் அசாதாரண தத்துவங்களென்றுங் கூறப்படும். சாதாரண தத்துவங்களைச் சித்தாந்தப்படத்தில் பல்வைத்த ஒவ்வொரு சக்கரத்தின் மேலுங்கீழுமாக மாயா கோளவட்டத்தின் கோடுவரையிற் சென்று பொருந்தியிருக்கும் கோடுகளின் மத்தியிலுள்ள பாகங்கள் குறிக்கும். பல்வைத்த தத்துவச்சக்கரங்கள் அசாதாரண தத்துவங்களைக் குறிக்கும்.

சாதாரண தத்துவங்கள் முப்பத்தாறும் பதினாறு அண்டங்கள்கூடிய ஒருபிறக்கிரியையா யிருக்கும். இந்தப் பிறக்கிரியையே ஒருபேரண்டமாகும். இப்பிறக்கிரியைகள் எவ்வளவுண்டெனில் ஆன்மாக்களுக்கு அளவுண்டானால் இவைகளுக்கும் அளவுண்டாகும். சித்தாந்தப்படத்திலிருக்கும் மாயாகோளமானது ஒரு பிறக்கிரியையாகும். அதில் அடங்கியுள்ள பதினாறு அண்டங்களாவன:—1-பிருதிவியண்டம், 2-அப்புவண்டம், 3-தேயுவண்டம், 4-வாயுவண்டம், 5-ஆகாயவண்டம், 6-அகங்காரவண்டம், 7-புத்திதத்துவவண்டம், 8-பிரகிருதிகுணதத்துவவண்டம், 9-அராகதத்துவவண்டம், 10-வித்தியாதத்துவவண்டம், 11-கலாதத்துவவண்டம், 12-மாயாதத்துவவண்டம், 13-சுத்தவித்தியாதத்துவவண்டம், 14-ஈச்சுரதத்துவவண்டம், 15-சாதாக்கியதத்துவவண்டம், 16-விந்துதத்துவவண்டம் என்பனவாம். இவற்றுள், அகங்கார வண்டத்தில் தன்மாத்திரை, கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம் ஆகிய தத்துவங்களும், அராகதத்துவவண்டத்தில் புருடதத்துவமும், கலாதத்துவவண்டத்தில் நியதிகாலங்களும், விந்துதத்துவவண்டத்தில் நாததத்துவமும் அடங்கும். புருடனைப்

பிரகிருதிதத்துவத்தில்கூட்டி யுரைப்பாருமுளர். முற்கூறியபடி பிரகிருதி பிரதிட்டாகலையில் சேர்க்கப்பட்டதால் புருடன் வித்தியாகலையில்சேர்த்துச் சோதிக்கப்படுகையால்பிரதிட்டாகலைக்குரிய பிரகிருதியில் புருடனைக்கூட்டுவது பொருந்தாது.

இனி, புறக்கருவிகள் அறுபதும் அசாதாரணதத்துவங்களின் காரியங்களாகும். அவற்றுள் பிருதிவியின்காரியம் மயிர், தோல் எலும்பு, நரம்பு, தசை ஆக ரு. அப்புவின்காரியம் நீர், உதிரம், மூளை, மச்சை, சுக்கிலம் ஆக ரு. தேயுவின்காரியம்—ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் ஆக ரு. வாயுவின்காரியம் ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல் ஆக ரு. ஆகாயத்தின்காரியம் குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆக ரு.

மயிர்தோ னரம்பென்பு மன்னுதசை யைந்துஞ்
செயிர்சேர் பிருதிவியின் சேர்வா—முயிர்நேர்
நீருதிர மூளை நிணஞ்சுக் கிலமைந்து
மோரினிவை நீர்க்குணமென் றுன்.

பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து—மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை.

ஓங்கும் வெகுளி மதமான மாங்கார
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும்—பாங்காய
வண்ணமுலை மடவாய் வானகத்தின் கூறென்று
ரெண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்.

வசனுதியைந்தாவன:—வாக்கின் தொழிலான வசனமும், பாதத்தின் தொழிலான கமனமும், பாணியின் தொழிலான தானமும், பாயுருவின் தொழிலான விசர்க்கமும், உபத்தத்தின் தொழிலான ஆனந்தமுமாம்.

வாயுபத்தாவன:—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயனென்பவைகளாம்.

ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே—யிப்பாலு
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருதரன்
றீதிலாத் தேவதத்த னே.

இவைகளில் பிராணவாயு மூலாதாரத்தி லடங்கும் நேரம் அபானனும், கண்டத்தில் வருநேரம் வியானனும் உதானனும், புறப்படு நேரம் சமானனும், புருவத்தில் வருநேரம் நாகனும் கூர்மனும் கிருதரனும், கண்டத்தின் மேல் செல்லும்நேரம் தேவதத்தனும், உடல் விடுநேரம் தனஞ்சயனுமாக உடலோடுகூடுநேரம் பூதவாயு காரணமாகத் தோன்றும். இவற்றுள் பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் ஐந்தும் ஞானவாயுக்களாகும். மற்றவை ஐந்தும் கன்மவாயுக்களாகும்.

நாடிபத்தாவன:—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், சங்கினி, குகு என்பனவாம். இவைகள் பிருதிவியிற் றோன்றும்.

இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி பூடாவோ
டங்குகு சன்னி யலம்பு வெனவுரைத்தார்
தங்குதச நாடிக டாம்.

இவைகள் நிற்குமிடமாவன:-இடை பிங்கலைகள் மூலாதாரத்துக்கும் இரண்டுநாசிகளுக்குமாக நிற்கும். சுழுமுனை வீணாதண்டைப் பற்றிநிற்கும். காந்தாரி கண்ணிலும், அத்தி எலும்பிலும், சிங்குவை நாக்கிலும், அலம்புடை செவியிலும், புருடன் கைகளிலும், சங்கினி உபத்தத்திலும், குகு குதமார்க்கத்திலு மாகநிற்கும்.

இந்தப் பத்து நாடிகளிலும் எழுபத்தீராயிரம் நாடிகள் பொருந்தி நிற்கும் விதமாவது:-இடைபிங்கலைகள் 8000-நாடியாய்க் கீழ்நோக்கிப்போகும். அது வேறாயிழிந்து 2000-நாடி வீணாதண்டை (முதுகந்தண்டை)ப் பற்றிநிற்கும். குகுநாடியைத் தலையாய்க்கொண்டு 1000-நாடி மார்க்கத்தை (குதத்தை) வளைந்து கிடக்கும். அத்திநாடி 10000-நாடியாய்ப் பீர்க்கங்கூடுபோல் கழுத்தைப் பின்னிநிற்கும். சங்கினிநாடியைத் தலையாய்க்கொண்டு 14000-நாடி இதயந்தொடங்கிச் சரீரத்திற் கலந்து நிற்கும். அலம்புடைநாடி 20000-நாடிகளுடன் நெற்றி கபாலம் நாசிகளில் பொருந்திநிற்கும். பூடாநாடி (புருடநாடி) 15000-நாடிகளுடன் இரண்டு கைகளையும் அண்ணமணறையும் பொருந்திநிற்கும். சிங்குவைநாடி 1500-நாடிகளுடன் கண்ணிமையைப் பற்றிநிற்கும். சங்கினிநாடியுடன் 500-நாடிகள் முகத்தைப் பொருந்திநிற்குமென வறிக.

இங்ஙனங்கூறிய 72000-நாடிகளும் மேல்-61000. கீழ்-11000 முமாக நிற்கும். இவற்றில் இயங்கும் வாயுவும் 72000-மாகும்.

வாக்கு நான்காவன: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்பனவாம். இவைகள் விந்துவிற்றோன்றும். எங்ஙனமெனில்; விந்துசத்தியானது அறிவுமாய் விளக்கமுமாய் ஆன்மாக்களிடத்திலே அவரவர்களுக்குரிய கன்மங்களுக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கும்பொருட்டு மூலாதாரத்திலே நின்றும் பிரணவத்திலேயொரு நாதமாக வெழுந்து சூக்குமையாகி, நாபியளவிலே திரண்ட நாதம் விந்துவாகிய வட்டமாயையினுள்ளே அக்ஷரசொரூபந் தோன்றாத பைசந்தியாகி, உதானவாயுவாலே கண்டமளவு சென்று பிராணவாயுவின் தொழிலில்லாது உதானவாயுவின் றொழில்மாத்திரையினால் சூக்குமரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும் சொல்லுமேவான்றன் செவியிற் கேட்கப்படாத ஓசையான முழக்கமாயுள்ள மத்திமையாகி, மேல் பிராணவாயுவுடன் கூடி உரைப்போனது செவிக்குமாத்திரம் கேட்கப்படுவதும் பிறர்செவிக்குக் கேட்கப்படுவதுமான வைகரியாகி, அண்ணம், பல், அதரம், மூக்குமுதலியவைகளாலே புறப்பட்டு வாக்கை வசனிப்பித்து வன்னம், பதம், வாக்கியம், பாமுதலியவைகளாய் விளங்கும்.

இதற்குப்பிரமாணம்: தத்துவப்பிரகாசம்: 244.

சத்தியினிற் றோன்றும் வாக்காதி நான்குந்
 தானிவன் வாச்செழுப்பியிடு மததான் றன்மூலத்
தொத்த தொருவிந்துவிலே நாதமாஞ் சூக்க
 முயரும் பைசந்தி யுந்தியி லுதானன்கூடச்
சித்த மயின் முட்டையினிற் சலம்போலாகுஞ்
 சென்று கண்டத்தளவு செவிக்குணரா வோசை
மத்திமையாம் வாக்கு வைகரி தானெட்டு
 வகைதோன்றிச் சொற்பொருளாய் வழங்கியிடுங் காணே.

அநாதிமுத்த சின்மயனைக் காணாத மாசு
மநாதிசுத்த மாயையினான் மாக்கண்—மனுதியினை
யாக்கப் புனிதமந்த நாதத்தாம் விந்துவினும்
வாக்கொருநான் கென்றார் மதித்து.

சூக்குமைநம் பைசந்தி மத்திமைசொல் வைகரியென்
ருக்குமிவற் றின்பே ரடைவறிக—சூக்குமைதான்
* பந்தித்தான் மாவுணர்வைப் பைசந்தி மத்திமையா
மந்தத்திற் றூலவெழுத் தாம்.

வாக்கி னுதித்துப் பொருளை மதிப்பிக்கைக்
காக்கும் பதத்தி னவயவமாய்—வாக்கியமாய்ப்
பாவா யியலாகி நூலாய்ப் பரந்திலங்கு
மோவாதே மத்திமையி னுற்று.

என்றும் வருவது கண்டுகொள்க.

இவற்றுள் வைகரிவாக்குச் சொல்லுவோனுக்கும் கேட்போர்க்கும் சவிகற்பவுணர் வுண்டாதற்கும், மத்திமைவாக்குச் சொல்லுவோனுக்குச் சவிகற்பவுணர் வுண்டாதற்கும், பைசந்திவாக்கு நிருவிகற்பவுணர் வுண்டாதற்கும், சூக்குமைவாக்கு ஞானமாத்திரைக்கும் ஏதுவாயிருக்கும்.

சூக்குமாதி நான்கு வாக்குகளுடன் பஞ்சமையென் றோர் வாக்குண்டென்றுங் கூறுவர். அதற்குத் தானம் மூலாதாரம். இவைகள் முறையே பஞ்சமை முதலாகச் சாந்தியாதீதைமுதலான பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகக்கொண்டு அடைவே பராசத்தியாதி பஞ்சசத்திகளாலே காரியப்படுமெனவறிக.

ஏடணை மூன்றாவன: தாரவேடணை, புத்திரவேடணை, அர்த்தவேடணை யென்பனவாம். இவை ஆகாயத்தில்தோன்றும்.

குணம் மூன்றாவன:— சாத்துவிதம், இராசதம், தாமதங்களாம். இவைகள் மூலப்பிரகிருதியிற் றோன்றும்.

இங்ஙனம் புறக்கருவி 60-ம் கண்டுகொள்க.

## தத்துவங்களின் உயரப்பிரமாணம்.

சாதாரணதத்துவங்கள் முப்பத்தாறில் பிருதிவிதத்துவம் 100-கோடியோசனைதூரம் உயரமுள்ளது. அப்புதத்துவம் பிருதிவிதத்துவத்தினும் பதின்மடங்கு அஃதாவது 1000-கோடி யோசனைதூரம் அதிக வுயரமுள்ளது. அப்புதத்துவத்துக்குப்

---

* வைகரியாதி மூன்றுவாக்கு மொடுங்கியகாலத்துந் தானொடுங்குவதின்றி நிற்கு மான்மஞானக்கிரியாப் பிரதிபந்தகமான வாணவமல நிவிர்த்தியுடனே இதற்கும் நிவிர்த்தியாகையால் சூக்குமையைப் பந்தமென்றது.

பதின்மடங்கு தேயுதத்துவமும், இதற்குப் பதின்மடங்கு வாயு தத்துவமும், இதற்குப் பதின்மடங்கு ஆகாயதத்துவமும், இதற்குப் பதின்மடங்கு (தன்மாத்திரை, கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனங்களடங்கிய) அகங்காரதத்துவமும், இதற்குப் பதின் மடங்கு புத்தியும், இதற்குப் பதின்மடங்கு பிரகிருதிகுணதத்துவமும் அதிகவுயரமுள்ளதாகும். இங்ஙனம் பிருதிவிமுதல் பிரகிருதிவரையில் தத்துவங்களினுயரம் ஒன்றற்கொன்று பத்து மடங்கு அதிகமாகும்.

பிரகிருதி குணதத்துவத்தினும் 100-மடங்கு அதிக உயரங்கொண்டது அராகம், இதனினும் 100-மடங்கு வித்தையும், இதனினும் 100-மடங்கு கலையும், இதனினும் 100-மடங்கு நியதியும், இதனினும் 100-மடங்கு காலமும், இதனினும் 100 மடங்கு மாயையும் அதிகவுயரமுள்ளவையாகும். இவ்விதம் பிரகிருதிக்கு மேல் மாயைவரையில் தத்துவங்களினுயரம் ஒன்றற்கொன்று நூறு மடங்கு அதிகமாகும்.

இவற்றுள் கலைக்குக்கீழ் நியதியென்று கூறுவாருமுளர். கலாசோதனையில் புவனசோதனை கூறுமிடத்துக் கலைக்குமேல் நியதிக்கு 180, 181-வது புவனங்களைக் கூறியிருப்பதால் கலைக்குமேல் நியதியெனத் துணியப்படும்.

இனி மாயையினும் 1000 மடங்கு அதிக உயரங்கொண்டது சுத்தவித்தை, இதனினும் ஆயிரமடங்கதிகங்கொண்டது ஈச்சுரம், இதனினும் ஆயிரமடங்கதிகம் சாதாக்கியம், சாதாக்கியத்துக்கு இலட்சமடங்கதிகம் விந்து, விந்துவுக்கு இலட்சமடங்கதிகம் நாத தத்துவமுயரமுள்ளது.

கருதியமண்சததோடிநீர்தீகால்ககனமகங்காரம்புத்தி
பிரகிருதிவரைபப்பத்திச்சைவித்தைகலைநியதிபிறங்குகாலந்
தருமாயைவரைநூறுநூறுவுருத்திரனீசன்சாதாக்கியம்மா
யிரமாயிரமுமைலட்சமோசனைமீதொன்றற்கொன்றேறுந்தானே.

இவ்வாறு தத்துவங்களினுயரப்பிரமாணங்களிருந்தாலும் சித்தாந்தப்படத்தில் அந்தப்பிரமாணத்துக் கிணங்கக் காட்டக் கூடாமையால் ஒருவாறு ஒருவடிவப்படுத்தி அவையெழுதப்பட்டிருக்கின்றன. இந்த உயரப்பிரமாணக் கணக்கு, படத்தின் வலது பக்கத்து ஓரத்தில் சிவப்புமையால் குறிக்கப்பட்டிருக்கிறது.

யோசனையாவது: இருளறையுள் ஓர்சிறிய துவாரத்தாற் புகுஞ் சூரியகிரணத்துள் தோன்றும் சிறிய அணுக்களில் ஒன்றுக்குக் கதிரெழுதுகளெனப்பெயர்.

| | | |
|---|---|---|
| 24 | கதிரெழுதுகள் | ஒரு மயிர் நுனி |
| 8 | மயிர் நுனி | ஒரு ஈர் |
| 8 | ஈர் | ஒரு பேன் |
| 8 | பேன் | ஒரு நெல்லு |
| 8 | நெல்லு | ஒரு அங்குலம் |
| 24 | அங்குலம் | ஒரு முழம் |
| 4 | முழம் | ஒரு தனு |
| 2 | தனு | ஒரு தண்டம் |
| 2000 | தண்டம் | ஒரு குரோசம் |
| 2 | குரோசம் | ஒரு கவ்யூதி |
| 2 | கவ்யூதி | ஒரு யோசனை |

கந்தப்புராணம் அண்டகோசப்படலம் 5-ம் 6-ம் கவிகள்.

கதிரெழு துகளெண் மூன்று சசாக்கிர கந்தாணுகும்
மிதுதொகை யிருநான் குற்ற திலீக்கையவ் விலீக்கை யெட்டா
லுதிசரும் யூகை யன்ன யூகையெட் டியவை யென்ப
வதினிரு நான்கு கொண்ட தங்குலத் தளவை யாமே.

அங்குல மறுநான் கெய்தி னதுகரங் கரமோர் நான்கு
தங்குத றனுவொன் றாகுந் தனுவிரண் டதுவோர் தண்ட
மிங்குறு தண்ட மான விராயிரங் குரோசத் தெல்லை
பங்கமில் குரோச நான்கோ ரியோசனைப் பால தாமே.

ஒருயோசனைதூரம் இங்கிலீஷ் மயிலால் எவ்வளவென நிதானப்படுத்தக் கூடுமாயில்லை. முன்காட்டிய கணக்கின்படி ஒருயோசனை 64000 முழமேயாம். வேறுசில கணக்கின்படி 32000 முழமென்றும் 16000 முழமென்றும் சொல்வார்கள். ஆயிரத்து அறுநூற்றுச் சில்வான ஆண்டில் சீனதேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த ஓர் சீனச்சந்நியாசி ஒரு யோசனை பூர்விக ஐதீகத்தின்படி 44000 முழமென்றும், இந்திய ராசாங்க வழமைப்படி 33000 முழமென்றும், திவ்வியசாஸ்திர நூல்களிற் கூறியயோசனை 17600 முழமென்றுங் கணக்குக் கொடுத்தார். இக்கடைசியான தூரம் அதாவது 17600 முழம் 5 இங்கிலீஷ் மயிலுக்குச்சரி.

உவெப்ஸ்டர் இயற்றிய இங்கிலீஷ் அகராதியிலும் உவின்ஸ்லோ இயற்றிய தமிழ் இங்கிலீஷ் அகராதியிலும் யோசனை யென்றது வானசாஸ்திரத்தில் 5 மயிலுக்குச் சரியெனக் கூறியதையுங் காண்க.

ககோளசித்தாந்தத்தில் ஒருயோசனை முன்கூறிய கந்தபுராணம் அண்டகோசப்படலத்துக் கணக்கின்படி 64000 முழமானது ஏறக்குறைய மயில் 18, எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## தத்துவவர்ணாதிபதிகள்.

| தத்துவம்: | நிறம்: | அதிபதி: |
|---|---|---|
| பிருதிவிக்கு | பொன்னிறம் | பிரமன் |
| அப்புவுக்கு | வெண்ணிறம் | ஜலேசர் |
| தேயுவுக்கு | செந்நிறம் | துவிஷாணிநிதர் |
| வாயுவுக்கு | புகைநிறம் | மாதரீஸ்வரர் |
| ஆகாயத்துக்கு | நீலநிறம் | சூக்குமர் |
| கந்தத்துக்கு | பொன்னிறம் | கந்தாங்கர் |
| ரசத்துக்கு | வெண்ணிறம் | ஜலதர் |
| ரூபத்துக்கு | செந்நிறம் | பானுமதர் |
| பரிசத்துக்கு | புகைநிறம் | பலவக்திரர் |
| சத்தத்துக்கு | நீலநிறம் | சூக்குமர் |
| உபத்தத்துக்கு | பொன்னிறம் | கனனந்தர் |
| பாயுருவுக்கு | வெண்ணிறம் | குண்டாங்கிருதர் |
| பாணிக்கு | செந்நிறம் | சாமதர் |
| பாதத்துக்கு | புகைநிறம் | ரமணர் |
| வாக்குக்கு | நீலநிறம் | இந்துபர் |
| ஆக்கிராணத்துக்கு | பொன்னிறம் | பிலும்பகர் |
| சிங்குவைக்கு | வெண்ணிறம் | மஹாவக்த்ரர் |
| சட்சுவுக்கு | செந்நிறம் | சூரியன் |
| துவக்குக்கு | புகைநிறம் | சருவாங்கர் |
| சுரோத்திரத்துக்கு | நீலநிறம் | வியோமசரர் |
| மனசுக்கு | வெண்ணிறம் | சங்கற்பர் |
| அகங்காரத்துக்கு | கருமைநிறம் | அங்கிருதர் |
| புத்திக்கு | செந்நிறம் | புத்தர் |
| குணத்துக்கு | வெண்ணிறம் | திரிதேகர் |




Solden & Co., Printers, Madras, S,E

| | | |
|---|---|---|
| பிரகிருதிக்கு | சங்குநிறம் | பிரதானகர் |
| புருஷனுக்கு | கருமை வெண்மைநிறம் | சூக்குமதேகர் |
| அராகத்துக்கு | இருணிறம் | காமதர் |
| வித்தைக்கு | புகைநிறம் | பேதஞானர் |
| கலைக்கு | குந்தபுஷ்பநிறம் | ஞானபிந்து |
| நியதிக்கு | பொன்னிறம் | நியதா |
| காலத்துக்கு | வெண்மை செம்மை கருமைநிறம் | காலநாதர் |
| மாயைக்கு | இருணிறம் | ககனேசர் |
| சுத்தவித்தைக்கு | பொன்னிறம் | ஈஸ்வரர் |
| ஈச்சுரத்துக்கு | இருணிறம் | அனந்தர் |
| சாதாக்கியத்துக்கு | படிகநிறம் | பிர்மண்யர் |
| விந்துவுக்கு | இரத்தநிறம் | சத்திமதர் |
| நாதத்துக்கு | சுவேதநிறம் | சிவர். |

இவற்றுள் சிவதத்துவ மைந்துக்கும் உருத்திராதிகள் அதிபர் எனவும் அவரவர்கள் பெயரால் அதிகாரத்துட்பட்ட தத்துவங்கள் வழங்குமென்றும் 19-வது பக்கம் 50-வது பாராவில் கூறி இங்கே ஈஸ்வராதி ஐவர்களதிபதி யெனக்கூறியது அவர்களால் இவர்களதிட்டிக்கப்பட்டே அதிபதியாயிருக்கின்றதை நோக்கி யென்க. இவ்வாறே மற்றவைக்குங் கண்டுகொள்க.

## கலைகள்.

கலையென்பது பாகம். துவாதசம் அஷ்டத்திரிம்சத் முதலிய கலைகளென்றும் காலவளவு கூறுமிடத்து துடிமுதலிய கலைகள் என்று கூறப்படுகையால் கலையென்பது பாகமெனப்பட்டது. ஆனால் இங்கே பிரகாசத்தோடு கூடிய அலலது பிரகாசத்தைத் தருவதான பாகமெனவறிக.

கல வென்னும் முதனிலைக்கு நீக்கலும் நியமித்தலும் பொருளாகையால் இருளைநீக்கிப் போகநியமனத்தைச் செய்வதெனக் கலையென்றபதத்துக்குப் பொருள் என்றலுமாம்.

முற்கூறிய 36 தத்துவங்களும் அடங்கிய மாயாகோளமானது நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை யென ஐந்து கலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பிருதிவிதத்துவம் ஒன்றைக் கொண்டது நிவிர்த்திகலை. இதற்கு நிறம் பொன்மை. இதற்கு பிர்மா அதிதேவதை. இவருக்கு

இரண்ணியகருப்பர், விராட்டு, புருஷர், காலர்என நான்குவியூகர் உளர். இவர் நிவிர்த்திகலையில் பஞ்சகிருத்திய மியற்றினுலும் இவருக்குச் சிருட்டித்தொழிலே முக்கியம். இது பிருதிவிமண்டலமாகும்.

அப்புதத்துவம்முதல் பிரகிருதிகுண தத்துவ மீருகவுள்ள தத்துவங்கள் 32-ம் கொண்டது பிரதிட்டாகலை. இதற்கு நிறம் அப்புவின்படிக நிறமென்றுலும் ஜலத்துக்குத் தற்காலத்தில் மற்றவர்களால் கொடுக்கப்படுகிற நீல நிறமே படங்களிலுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிபதி விஷ்ணு. இவருக்கு வாசுதேவர், அநிருத்தர், பிரத்தியும்நர், சங்கர்ஷணர்என நான்கு வியூகர் உளர். இவர் பிரதிட்டாகலையில் பஞ்சகிருத்திய மியற்றினுலும் இவருக்குத் திதிதொழிலே முக்கியம். இது அப்புமண்டலம்.

புருடன் முதல் காரிய மாயையீருகிய வித்தியாதத்துவங்கள் ஏழுங்கொண்டது வித்தியாகலை. இதற்குநிறம் அக்கினியின் செந்நிறம். இதற்கு அதிபதி உருத்திரன். இவருக்குச் சிவன், அரர், மிருடர், பவர் என நான்கு வியூகருளர். இவர் வித்தியாகலையில் பஞ்சகிருத்திய மியற்றினுலும் இவருக்குச் சங்காரகிருத்தியமே முக்கியம். இது அக்கினிமண்டலம்.

சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம் எனு மூன்று தத்துவங்களுங்கொண்டது சாந்திகலை. இதற்கு நிறம் வாயுவின் புகைநிறமென்றுலும் படத்தில் சிறிது கருமைகலந்த புகைநிறமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. இதற்கதிபதி மகேசன். இவருக்கு ஈசர், விசுவேசர், பரமேசுவரர், சர்வேசுவரர் என நான்குவியூகருளர். இவர் சாந்திகலையில் பஞ்சகிருத்திய மியற்றினுலும் இவருக்குத் திரோதானகிருத்தியமே முக்கியம்.

விந்துதத்துவம் நாததத்துவ மிரண்டுங்கொண்டது சாந்தியாதீதகலை. இதற்கு நிறம் சுத்தஸ்படிக நிறம். இதற்கதிபதி சதாசிவன். இவருக்கு முன்கூறிய நிவிர்த்தியாதி நான்கு கலைகளுக்கும் அதிபதிகளான பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசன் எனும் நால்வரும் வியூகர்களாவர். இவர் சாந்தியாதீத கலையில் பஞ்சகிருத்தியாதிபதியாஞுலும் இவருக்கு அனுக்கிரக கிருத்தியமே முக்கியம்.

## புவனங்கள்.

மாயா கோளத்திலுள்ள தத்துவங்கள் 36லும் எண்ணில்லாத புவனங்களிருந்தாலும் அவற்றுள் முக்கியமானவை 224-புவனங்கள்.

அவை 36 தத்துவங்களிலும் நிற்குமுறையாவது: பிருதிவிதத்துவத்தில் 108, அப்புவில் 8, தேயுவில் 8, வாயுவில் 8, ஆகாயத்தில் 8, அகங்காரத்தில் 8, புத்தியில் 8, சித்தத்தில் 8, புருடனில் 6, அராகத்தில் 5, வித்தையில் 2, கலையில் 2, நியதியில் 2, காலத்தில் 2, மாயையில் 8, சுத்தவித்தையில் 9, ஈச்சுரத்தில் 8, சாதாக்கியத்தில் 1, விந்துவில், 5, நாதத்தில் 10, ஆக 224.

*மித்திகைநூற் றெட்டுச் சிவந் தசஞ்சுத்த வித்தைநவம் வெளிகா னீர்தீ*
*புத்திபிர கிருதியீச் சுரமாயை யிவையெட்டாம் புருட னாறே*
*சத்தியிரா கம்மைந்து மாத்ரைசதுர் கலைநியதி காலமோ ரிரண்டே*
*வித்தைக்கா மொன்றென்றே மற்றவைக்குப் புவனங்கள் விளம்புங் காலே.*

பிருதிவியிலுள்ள புவனங்கள் 108-ல் பிருதிவியின் கீழிருக்கிற காலாக்கினியில் 6-ம் பிருதிவியின் கிழக்குமுதலிய 10 திசைகளுக்கும் தனித்தனியே பத்தும் பிருதிவியின்மேல் இவைகளின் உயரத்தில் 2-ம் ஆ 108.

பிருதிவியின் கீழிருக்கிற காலாக்கினியில் 1-காலாக்கினி, 2-கூஷ்மாண்ட, 3-ஆடகேஸ்வர, 4-பிர்ம, 5-வைணவ, 6-உருத்திர என ஆறும். இவை சித்தாந்தப்படத்தில் பிரணவத்தின்கீழ் மகாரத்தின் வலைவான விடத்திலுள்ள ஆறுமாம். அவற்றின்பெயரை அவற்றினருகே யெழுத இடம் போதாமையால் அவைகள் படத்தின் வலது புறத்திலிருக்குங் குறிப்பின்கீழ் 1-2-3-4-5-6-என்னு மிலக்கமிட்டெழுதப் பட்டிருக்கின்றன. இவற்றுள் 1-2-3 எனுமூன்றும் கீழுலகத்திலுள்ள புவனங்கள், 4-5-6 எனு மூன்றும் மேலுலகத்திலுள்ள புவனங்கள். அஃதாவது எண்ணு முறைமைக்கண் 104-105-106 வது புவனங்களாகும். எனவே 106 க்குள்பட்ட புவனங்களின் இலக்கவரிசை மாறும். ஆனாலும் புவனசோதனைவிதிக்கும் தீட்சாவிதிகள் கூறும் நூல்களில் கூறியஅடைவே வரிசைப்படுத்தியெழுதாதொழியின் மலைவுகாட்டுமென அவ்வரிசைப்படி எழுதலாயிற்று. இவைகளினதிபர் முறையே காலாக்கினி ருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேஸ்வரர், பிரமா, விஷ்ணு, உருத்திரன் எனஅறுவர். இவர்களைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறது,

பூமிக்குக்கீழ் விஷ்ணுதிசையில் 7-இடப, 8-இடபதர, 9-அனந்த, 10-குரோதன, 11-மாருதாசன, 12-கிரசன, 13-உதும்பரீச, 14-பணீந்திர, 15-வச்சிர, 16-தமுட்டிரீஎன்னும் பத்து. இவைகள் சித்தாந்தப்படத்தில் பிருதிவிதத்துவச் சக்கரத்துள் மத்தியிலிருந்தகறுப்புநிறமான விடத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அந்தக்கறுப்புப்பாகம் பூமியின் கீழ்ப்பாகமாகும். இவைகளின் பெயரை அவ்விடத்தில் எழுதவிடமில்லாமையால் சித்தாந்தப் படத்தின் வலப்புறத்துக் குறிப்பின்கீழ் 7-8-9-10-11-12-13-14-15-16 எனுமிலக்கமிட் டெழுதியிருக்கிறது. இவைகளினதிபர் முறையே இடபர், இடபதரர், அனந்தர், குரோதனர்; மாருதாசனர், கிரசனர், உதும்பரீசர், பணீந்திரர், வச்சிரர், தமுட்டிரி எனும் பதின்மர். இவர்கள்கீழே விஷ்ணுநாயகர்கள்.

பூமிக்கு ஈசானியத்தில், 17-வித்தியாதிப, 18-ஈசான, 19-சர்வஞ்ஞ, 20-ஞானபுக்கு, 21-வேதபாரக, 22-சுரேச, 23-சருவ, 24-சேட்ட, 25-பூதபால, 26-பெலிப்பிரிய எனப்பத்து. இவைகளினதிபர்முறையே வித்தியாதிபர், ஈசானர், சர்வஞ்ஞர், ஞானி, வேதபாரகர், சுரேசர், சருவர், சேட்டர், பூதபாலர், பெலிப்பிரியர் எனும் பதின்மர். இவர்கள் ஈசானநாயகர்கள்.

பூமிக்குவடக்கில், 27-நிதீச, 28-உரூபவான், 29-தன்னிய, 30-சவுமியதேக, 31-சடாதர, 32-இலக்குமிதர, 33-இரத்தினதர, 34-சிரீதர, 35-பிரசாத; 36-பிரகாமத எனப்பத்து. இவைகளினதிபர் முறையே நிதீசர், உரூபவான், தன்னியர், சவுமியதேகர், சடாதரர், இலக்குமிதரர், அரதனதரர், சிரீதரர், பிரசாதர், பிரகாமதர் எனும் பதின்மர். இவர்கள் சோமகும்ப நாயகர்கள்.

பூமிக்கு வாயுவில், 37-சீக்கிர, 38-இலகு, 39-வாயுவேக, 40-சூக்குமு, 41-தீக்கண, 42-சுயாந்தக, 43-பஞ்சாந்தக, 44-பஞ்சசிக, 45-கபர்த்தி, 46-மேகவாகன எனப்பத்து இவைகளினதிபர் முறையே சீக்கிரர், இலகு, வாயுவேகர், சூக்குமர், தீக்கணர், சுயாந்தகர், பஞ்சாந்தகர், பஞ்சசிகர், கபர்த்தி, மேகவாகனர் எனும் பதின்மர். இவர்கள் வாயுநாயகர்கள்.

பூமிக்கு மேற்கில், 47-பெல, 48-அதிபெல, 49-பாசவத்த, 50-மாபெல, 51-சுவேத, 52-செயபத்திர, 53-தீர்க்கவாகு, 54-சலாந்

தக, 55-மேகநாத, 56-சுஞுத எனப்பத்து. இவைகளினதிபர் முறையே பெலர், அதிபெலர், பாசவத்தர், மாபெலர், சுவேதர், செயபத்திரர், தீர்க்கவாகு, சலாந்தகர், மேகநாதர், சுஞுதர் எனும் பதின்மர். இவர்கள் வருணநாயகர்கள்.

பூமிக்கு நிருதியில் 57-நிருதி, 58-மாரண, 59-அந்திரு, 60-குரூரதிட்டி, 61-பயாந்தக, 62-ஊர்த்துவசேப, 63-விரூபாக்க, 64-தூமிர, 65-உலோகித, 66-தமுட்டிரி எனப்பத்து. இவைகளினதிபர் முறையே நிருதி, மாரணர், அந்திரு, குரூரதிட்டி, பயாந்தகர், ஊர்த்துவலிங்கர், விரூபாக்கர், தூமிரர், உலோகிதர், தமுட்டிரி எனும்பதின்மர். இவர்கள் நிருதிநாயகர்கள்.

பூமிக்குத் தெற்கில், 67-யாமிய, 68-மிருத்தியு, 69-அர, 70-தாத்திரு, 71-விதாத்திரு, 72-கருத்திரு, 73-சம்யோத்திரு, 74-வியோத்திரு, 75-தருமபதி, 76-அதருமபதி எனப்பத்து. இவைகளினதிபர் முறையே யாமியர், மிருத்தியு, அரர், தாதா, விதாதா, கர்த்தா, சம்யோக்தா, வியோக்தா, தருமபதி, அதருமபதிஎனும் பதின்மர். இவர்கள் இயமநாயகர்கள்.

பூமிக்குத் தென்கிழக்கில், 77-அக்கினிருத்திர, 78-உதாசன, 79-பிங்கல, 80-காதக, 81-அர, 82-சுவலன, 83-தகன, 84-பப்புரு, 85-பற்பாந்தக, 86-கயாந்தக எனப்பத்து. இவைகளினதிபர் முறையே அக்கினி, உதாசனர், பிங்கலர், காதகர், அரர், சுவலனர், தகனர், பப்ரூ, பற்பாந்தகர், கயாந்தகர் எனும் பதின்மர். இவர்கள் அக்கினி நாயகர்கள்.

பூமிக்குக் கிழக்கில் 87-கபாலீச, 88-அச, 89-புத்த, 90-வச்சிரதேக, 91-பிரமர்த்தன, 92-விபூத, 93-அவ்விய்ய, 94-சாத்த, 95-பிஞுகி, 96-திரிதசாதிப எனப்பத்து. இவைகளினதிபர் முறையே கபாலீசர், அசர், புத்தர், வச்சிரதேகர், பிரமர்த்தனர், விபூதி, அவ்வியயர், சாத்தர், பிஞுகி, திரிதசாதிபர் எனும் பதின்மர். இவர்கள் இந்திரநாயகர்கள்.

பூமிக்குமேலிடமாகிய பிரமன்திசையில், 97-சம்பு, 98-விபு, 99-கஞத்தியக்க, 100-திரியக்க, 101-திரிதசேச, 102-சம்வாக, 103-விவாக, 104-நப, 105-இலீச்சு, 106-திரிலோசன எனப்பத்து, இவைகள் சித்தாந்தப்படத்தில் பிருதிவிதத்துவச் சக்கரத்துள் மத்தியிலிருக்கும் கறுப்புப்பாகத்துக்கும் வெளியிலிருக்கும் புகை

நிறமான பாகத்துக்கும் இடையிலுள்ள இலேசான கறுப்புப்பாகத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அந்தஇலேசான கறுப்புப்பாகம் பூமிக்குமேல் உயர்ந்த பாகமாகும். இப்புவனங்களினதிபர் முறையே சம்பு, விபு, கணத்தியக்கர், திரியக்கர், திரிதசேசர், சம்வாகர், விவாகர், நபர், இலீச்சு, திரிலோச்சனர் எனும்பதின்மர். இவர்கள் பிரமநாயகர்கள்.

இப்புவனங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக பிரமாண்டவாயிலில் 107-வீரபத்திரர், 108-பத்திரகாளி என விரண்டு புவனங்கள் உண்டு. அவை முற்கூறிய பிருதிவிதத்துவச்சக்கரத் துள்ளிருக்கும் புகைநிறமான பாகத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அந்தப்பாகம் பிரமாண்டத்துள் எல்லாவற்றிற்கும் மேலானபாகமாகும். இவைகளினதிபர் முறையே வீரபத்திரர், பத்திரகாளி எனுமிருவர்.

இங்ஙனம் நிவிர்த்திகலைக்குரிய புவனங்கள் 108-ம் கண்டுகொள்க.

இங்ஙனங் கூறிப்போந்த இடபர்முதல் திரிலோச்சன ரீறுக நூறு உருத்திரர்களும் பிரமாண்ட ரக்ஷகரான விஷ்ணு, ஈசானர், குபேரர், வாயு, வருணர், நிருதி, இயமர், அக்கினி, இந்திரர், பிரமர் என்னுந் தசதிக்குப் பாலகர்களுக்கும் நியாமகராய்ப் பத்துத் திக்கிலும் பதின்மர் பதின்மராயிருக்கிறார்கள். இவர்கள் பலவித ரூபமுள்ளவர்களாயும், மிகுந்த சக்தியுள்ளவர்களாயும், சூரியகாந்தியுள்ளவர்களாயும், பலவித ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிற அனேக பரிவாரங்களினாலே சூழப்பட்டிருக்கிறார்கள்.

அப்புதத்துவத்தில், 109-அமரேச, 110-பிரபாச, 111-நைமிச, 112-புட்கர, 113-ஆசாடி, 114-திண்டிமுண்டி, 115-பாரபூத, 116-இலகுளீச என எட்டு. இவை குஃபாட்டகப் புவனமெனப் படும். இவைகளினதிபர் முறையே அமரேசர், பிரபாசர், நைமிசர், புட்கரர், ஆசாடர், திண்டிமுண்டி, பாரபூதி, இலகுளீசர் எனு மெண்மர். இவர்கள் குஃபாட்டகரென்று பெயருள்ளவர்கள்.




3. படம்:—அப்புத்தத்துவ அண்டம்.

தேயுதத்துவத்தில், 117-அரிச்சந்திர, 118-சீசயில, 119-செற்பேச, 120-ஆமிராதிகேசுர, 121-மத்திமேச, 122-மகாகாள, 123-கேதார, 124-பைரவ என எட்டு. இவை அதிகுஃபாட்டகப்புவன மெனப்படும். இவைகளினதிபர் முறையே அரிச்சந்திரர், சீசைலர். செற்பேசர், ஆமிராதிகேசுரர், மத்திமேசர், மகாகாளர், கேதாரர், பைரவர் எனு மெண்மர். இவர்கள் அதிகுஃபாட்டக ரென்று பெயருள்ளவர்கள்.




4. படம் — தேயுதத்துவ அண்டம்.

வாயுதத்துவத்தில், 125-கயை, 126-குருக்கேத்திர, 127-நாகல, 128-நகல, 129-விமலேசுர, 130-அட்டகாச, 131-மயேந்திர, 132-பீமேச எனஎட்டு இவைகளி னதிபர் முறையே கயர், குருக்கேத்திரர், நாகலர், நகலர், விமலேசுரர், அட்டகாசர், மயேந்திரர், பீமேசரென வெண்மர்.




5. படம்-வாயுதத்துவ அண்டம்

ஆகாயதத்துவத்தில், 133-வத்திரபத, 134-உருத்திரகோடி, 135-அவிமுத்த, 136-மகாலய, 137-கோகர்ண, 138-பத்திரகர்ண, 139-சுவர்ணுக்க, 140-தாணு என எட்டு. இவைகளினதிபர் முறையே வத்திரபாதர், உருத்திரகோடி, அவிமுத்தர், மகாலயர், கோகர்ணர், பத்திரகர்ணர், சுவர்ணுக்கர், தாணு எனு மெண்மர். இவர்கள் பவித்திராட்டகர் எனப்படுவார்கள்.




6. படம் — ஆகாயதத்துவ அண்டம்.

அகங்கார தத்துவத்தில், தன்மாத்திரைக ளைந்திற்கும், 141-சகலண்ட, 142-துவிரண்ட, 143-மாகோட, 144-மண்டலேச்சுர வென நான்கும், கன்மேந்திரியங்க ளைந்திற்கும், 145-காளாஞ்சர வென ஒன்றும், ஞானேந்திரியங்களைந்திற்கும் 146-சங்கு கன்னவென ஒன்றும், மனதுக்கு 147-தூலேச்சுர வென ஒன்றும், அகங்காரத்துக்கு 148-தலேச்சர வென ஒன்றும் ஆக எட்டு. இவைகளி னதிபர் முறையே சகலண்டர், துவிரண்டர், மாகோடர், மண்டலேச்சுரர், காளாஞ்சரர், சங்குகன்னர், தூலேச்சுரர், தலேச்சுரர் எனு மெண்மர். இவர்கள் தாணுவட்டக ரெனப்படுவார்கள்.




7. படம்—அகங்கார தத்துவ அண்டம்.

புத்திதத்துவத்தில், 149-பைசாச, 150 இராக்கத, 151-இயக்க, 152-காந்தருவ, 153-ஐந்திர, 154-சௌமிய, 155-பிராசேச, 156-பிராம என எட்டு இவை யெட்டும் தெய்வ யோனிகள். இவை சூக்குமப் புவனாட்டக மென்றும் தேவாட்டகப் புவன மென்றும் பெயர் பெறும். இவைகளினதிபர் முறையே பைசாசர், இராக்கதர், இயக்கர், காந்தருவர், ஐந்திரர், சௌமியர், பிராசேசர், பிரமரென வெண்மர்.




8. படம்—புத்தித்தத்துவ அண்டம்.

பிரகிருதிகுணதத்துவத்தில் 157-அகிருத, 158-கிருத, 159-வைரவ, 160-பிராம, 161-வைணவ, 162-கௌமார, 163-அவும, 164-சிரீகண்ட என எட்டு. இவை யோகாட்டகப்புவன மெனப் படும். இவைகளினதிபர், முறையே அகிருதர், கிருதர், வைரவர், பிரமர், விஷ்ணு, கௌமாரர், அவுமர், சிரீகண்டர் எனு மெண்மர். இதில் க்ஷோபகர், உக்கிரர், மஹாதேஜசர், சிரீகண்டர், அனந்தர், விக்கிரமர், பிரபுத்தர், பரமேசானர் எனும் எண்மர் வசிக்கிறார்கள்.




9. படம். பிரகிருதி குணத்தத்துவ அண்டம்.

இங்ஙனம் பிரதிட்டாகலைக்குப் புவனம் ஐம்பத்தாறு.

புருடதத்துவத்தில் 165-வாம, 166-பீம, 167-உக்கிர, 168-பவ, 169-ஈசான, 170-ஏகவீர என ஆறு. இவைகளினதிபர் முறையே வாமதேவர், பீமர், உக்கிரர், பவர், ஈசானர், ஏகவீர ரென அறுவர். இப்புருடதத்துவத்தில் அட்டசித்திகளும் அட்ட ஐசுவரியங்களும் இருக்கும்.




10. படம். அராகதத்துவ அண்டம்.

அராகதத்துவத்தில், 171-பிரசண்ட, 172-உமாபதி, 173-அச, 174-அனந்த, 175-ஏகசிவ என ஐந்து. இவைகளினதிபர் முறையே பிரசண்டதிருட்டி, உமாபதி, அசேசுவரர், அனந்தர், ஏகசிவர் எனும் ஐவர். இவர்களும் புருடதத்துவ புவனாதிபர்களாகிய வாமதேவர் முதலிய அறுவரும் பிரகிருதி குணதத்துவ மூர்த்தாவிலே (உச்சியிலே) யிருக்கிறார்கள். இவர்கள் மிகுந்த தவத்தினால் மேலிருக்கும் பிரதானேஸ்வரர்களாகிய குரோதேசாதிகளை யுபாசித்து அனுக்கிரக கர்த்தர்களாய்த் தங்களதிகாரத்திற் சமர்த்தர்களாய்ச் சர்வவிஷயஞானக்கிரியை யுள்ளவர்களா யிருப்பார்கள். அராகதத்துவப்புவனங்களில் அப்பிரகிட்ட முதலியவர் ஆசாரியமூர்த்தியாக வெழுந்தருளியிருப்பர். இவர்கள் ஆத்தும இச்சையை நடத்துவார்கள்.

வித்தையென்னுந் தத்துவத்தில், 176-குரோத, 177-சண்ட வெனவிரண்டு. இவ்விடத்தில் மகாதேவர் முதலியோர் ஆன்மஞானத்தை நடத்துவர்.




11. படம். வித்தியா தத்துவஅண்டம்.

கலையென்னுந் தத்துவத்தில், 178-சோதி, 179-சமுவர்த்த வென இரண்டு. இவ்விடத்தில் வாமர் முதலியோர் ஆத்மபோதத்

தில் தொழிலை நடத்துவர். இங்கேகூறிய வாமர் முதலியோர் வேறு, புருடதத்துவ புவனாதிபர்களாகிய வாமாதிகள் வேறு. கீழ்தத்துவத்திலுள்ளவர் மேல்தத்துவத்தொழிலை நடத்தவதிகாரியல்லர் இங்ஙனமே மற்றவைக்குமாம்.




12. படம். கலாதத்துவ அண்டம்.

நியதிதத்துவத்தில், 180-சூர, 181-பஞ்சாந்தகவென இரண்டு. இவற்றில் வாமதேவர் சர்வர் முதலியோரிருந்து ஆத்ம போகத்தில் போகத்தை நியமிப்பர்.

காலதத்துவத்தில், 182-ஏகவீர, 183-சிகேதவென இரண்டு. இவற்றில் சுத்தன் புத்தன் முதலியோரிருந்து காலத்தைப் பிறழாமல் நடத்துவர்.

இங்ஙனங்கூறப்பட்ட குரோதாதியெட்டுப் புவனங்களுக்கும் அதிபர்கள் முறையே குரோதேசர், சண்டர், சோதிபிங்கர், சமுவர்த்தர், சூரகர், பஞ்சாந்தகர், ஏகவீரர், சிகேதர் எனவெண்மர். இவர்கள் முற்கூறிய வாமதேவாதிகளுக்குப் (இவர்கள் அராகபுருடதத்துவபுவனாதிபர்கள்) பத்துப்பங்கதிகமான ஐசுவரியமுள்ள பிரதானேஸ்வரர்கள்.

மாயாதத்துவத்தில் 184-அங்குட்டமாத்திர, 185-ஈசான, 186-ஏகேக்கண, 187-ஏகபிங்க, 188-பவோற்பவ, 189-வாமதேவ, 190-மகாதேவ, 191-புவனேச என எட்டு. இவற்றுள் ஏகேக்கணவென்ற பதத்தையும், ஏகபிங்கவென்ற பதத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து ஏகபிங்கேக்கணவென்றும், பவோற்பவ என்பதை இரண்டாய்ப் பிரித்து, பவ, உற்பவ என்றும் பல கிரந்தங்களில் தவறி எழுதியிருக்கிறார்கள். புவனங்களின் பெயர்கள் அவ்வவற்றின் அதிபர்களின் பெய




13. படம். மாயாதத்துவ அண்டம்.

ரால் வழங்கப்பெற் றிருப்பதானும், இவற்றினதிபர் புவனேசராதி மண்டலர் எண்மராகையானும் இதிற்கண்டபடி முற்கூறிய புவனங் களின் பெயரைத் திருத்திக்கொள்ளவும். சித்தாந்தப்படத்தில் சிலவிடங்களில் அவ்வப்புவனங்களுக்கு மேலுயரத்தில் அவ்வவற் றின் அதிபர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இனி இவைகளினதிபர் முறையே எதிர் நிரைநிரையாக புவனேசர், மகாதேவர், வாமதேவர், பவோற்பவர், ஏகபிங்கர், ஏகேக்கணர், ஈசானர், அங்குட்டமாத்திரர் என வெண்மர். இவர்கள் மிகுந்த காந்தியுள்ளவர்கள், பரமேஸ்வர சமான சத்தியுள்ளவர்கள், மண்ட லாதிபதிகள். இம்மாயாட்டகப் புவனங்களில் கீழ்ப்புடத்தில் கக னேசர் முதலியோரிருப்பர், மேற்புடத்தில் கேமேசர் முதலியோ ரிருப்பர், நடுப்புடத்தில் அனந்த னிருப்பன். மேற்புடத்துக்கு மேல் உருத்திராங்கிசத்திலே மாயாசத்திகளிருந்து ஆத்மபோத மான விஷயத்திலுள்ள போகத்துக்கு அங்குரமாய் சிவதருமங்க ளில் அறிவுபோகாதபடி தடுக்கும். இந்தச் சத்திபதத்தில் வந்து சேர்பவர் உபதேசமில்லாமல் தருக்கஞ்செய்து திரிபவர்.

இங்ஙனம் வித்தியாகலைக்குப் புவனம் இருபத்தேழு. ஞான மில்லாதவர்கள் சேற்றிற்காலிட்டப் பசுக்களைப்போல அகப்பட்டுக் கொண்டு அசத்தர்களாய்த் துக்கப்படுகின்ற பயங்கரமான சர்வப் பிராணிகளு முண்டாகும் பூமி யிவ்வளவே.




14. படம். சுத்தவித்தியா தத்துவஅண்டம்.

சுத்தவித்தையென்னுந்தத்துவத்தில், 192-வாமை, 193-சேட்டை, 194-இரௌத்திரி, 195-காளி, 196-கலவிகரணி, 197-பலவிகரணி, 198-பலப்பிரதமனி, 199-சர்வபூததமனி, 200-மனோன்மனி என ஒன்பது. இவற்றுள் மனோன்மனி புவனத்தைச் சாதாக்கியதத்துவத்திற் சேர்த்து சதாசிவபுவனத்துடன் அந்த தத்துவத்துக்குப் புவனம் இரண்டு என்றும் சுத்த வித்தியாதத்துவத்துக்குப் புவனம் எட்டென்றும் ஒருபட்சமுண்டு. இதுவேயுத்திக்குப்பொருத்தமாயிருந்தாலும் மிருகேந்திரமுதலிய ஆகமங்களிற் கண்டபடி இவ்வாறு எழுதப்பட்டது. இவைகளினதி பர்முறையே வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி,

பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி, மனோன்மனி என ஒன்பதின்மர். இவர்களுள் வாமை சேட்டை இரௌத்திரி மூவரும் சத்தகோடிமகாமந்திரரில் முற்பாதி மூன்றரைக்கோடியால் வழிபாடுடையவர்கள்.

ஈச்சுரதத்துவத்தில் 201-சிகண்டி, 202-சிகண்ட, 203-திரிமூர்த்தி, 204-ஏகருத்திர, 205-ஏகநேத்திர, 206-சிவோத்தம, 207-சூக்கும, 208-அனந்த என எட்டு. இவைகளினதிபர் முறையே எதிர் நிரைநிரையாக அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகவுருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், சிகண்டியெனும் அட்டவித்தியேசுரர்கள்.




15 படம்—ஈச்சுரதத்துவ அண்டம்.

சாதாக்கியதத்துவத்தில் 209—சதாசிவ எனப் புவனம் ஒன்று. இதற்கதிபர் சதாசிவர். இவர் பஞ்சப்பிரம சடங்கங்களை யுடையவர்; சுவாலினி முதலான சகளநிட்களரான எட்டு ருத்திரர்களைப் பரிவாரமாக உடையவர்.

இங்ஙனம் சாந்திகலைக்குப் புவனம் பதினெட்டு.

விந்து தத்துவத்தில் 210-நிவிர்த்தி, 211-பிரதிட்டை, 212-வித்தை, 213-சாந்தி, 214-சாந்தியாதீதை யென ஐந்து. இவை அபர விந்து கலா புவனங்கள். இவைகளினதிபர் முறையே நிவிர்த்திமான், பிரதிட்டாவான், வித்தியேசர், சாந்திமான், சாந்தியாதீதர் எனு மைவர். இவர்களுடைய சத்திகள் முறையே நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை யென்பவர்கள். இவர்களிற் சாந்தியாதீதர் சாந்தியாதீதை யாகிய தனது சத்தியை வாமத்திலே யுடையவராய் நிவிர்த்தியாதி நாலுசத்திகளும் தத்தம் மூர்த்திகளுடனே கூடி அடைவே மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு என்னுந் திசைகளிலே யிருந்து தோத்திரஞ் செய்யப் பதுமாசனத்திலே எழுந்தருளி யிருப்பர்.




16. படம்—விந்துதத்துவ அண்டம்.

இவர்களுள் நிவிர்த்தியென்னுஞ் சத்தியானது ஆன்மாக்களைப் பதினான்குவித பூதசர்க்கத்தையும் சனனமார்க்கத்தில் ஆசையையும் விட்டுத் திருப்பி கைவல்யாபிமுகமாகச் செய்யும். பிரதிட்டையென்னுஞ் சத்தியானது அவ்வாறு திரும்பினவனுக்கு மீட்டுந் தாழ்ந்த சம்சாரமார்க்கத்தில் கதியில்லாமற் றடுத்து நிறுத்தும். வித்தையென்னுஞ் சத்தியானது அவ்வாறு நிலைபெற்ற ஆன்மாவுக்குச் சப்தானுமானங்களை விட்டு நேரிட சுவரூபசாட்சாத்காரத்தைக் கொடுக்கும். சாந்தியென்னுஞ் சத்தியானது அங்ஙனம் சொரூபசாட்சாத்காரத்தைப் பெற்றச் சீவனுக்குச் சகல துக்கங்களையும் சாந்திசெய்யும். சாந்தியாதீதையென்னுஞ் சத்தியானது அங்ஙனம் சாந்தமாய் நின்றதும் ஒழியச்செய்யும்.

இதன்மேல் காந்தி, சிவை, யோசசினி, யோசசினுதி, சுப்பிரபை, இந்தினி, திரோதி, உருத்திரை, ஞானபோதை, தமோப்கை முதலியோரிருப்பர். இவர்வசிக்குந் தலங்களைப்பற்றி இனியெழுதப்படும் பிராசாதத் தற்பணத்தில் விளக்கமாய்க் கூறப்படும்.

நாததத்துவத்தில், 215-இந்திகை, 216-தீபிகை, 217-உரோசிகை, 218-மோசிகை, 219-ஊர்த்துவகையென ஐந்து. இவை அபரநாதகலா புவனங்கள். இவைகளினதிபர் முறையே இந்திகாவான், தீபிகாவான், உரோசிகாவான், மோசகர், ஊர்த்துவமேகசரெனும் ஐவர். இவர்களின்சத்திகள் முறையே இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை யென்பவர்கள்.

முமுட்சுவான ஆன்மாவிற்கு மேலுங்கீழும் எங்குமுண்டாகும் பிரகாசமானது எந்தச் சத்திகளாலே பெரிதாகவும் மிகப்பெரிதாகவும் மிகமிகப்பெரிதாகவுஞ் செய்யப்படுகிறதோ அந்தச் சத்திகள் மூன்றிற்கும் முறையே இந்திகை, தீபிகை, உரோசிகையென்று பெயர். வித்தியேசர் முதலான அதிகாரிகளுக்கு சருவஞ்ஞத்துவாதி குணமிருந்தபோதிலும் மலாம்சம் சிறிதிருப்பதாலுண்டான பிரேரிக்கப்படுந் தன்மை யாதொரு சத்தியாலேவிடுவிக்கிறதோ அதற்கு மோசிகை யென்று பெயர். எந்தச்சத்தியாலே அவ்வாறனுக்கிரகிக்கப்பட்ட ஆத்மாவை ஈசுவரனாகச் செய்கிறதோ அந்தச் சத்திக்கு ஊர்த்துவகை யென்று பெயர்.




17. படம்—நாததத்துவ அண்டம்.

இதன்மேல் பரவிந்து; அதில் சத்தியெழுந்தருளி யிருக்கும். அவரை சூக்குமை, அசூக்குமை, அமிருதை, மிருதை, வியாபினி யென்னு மிவர் சேவித்திருப்பர். இந்தச்சத்திதான் பரவாகீஸ்வரி யெனப்படுவர்.

பரநாதகலையில், 220-வியாபினி, 221-வியோமரூபை, 222-அனந்தை, 223-அனாதை, 224-அனாசிருதையென ஐந்து. இவைகளின திபர் முறையே வியாபகர், வியோமரூபர், அநந்தர், அநாதர், அநாசிருதரென்பவர்கள். இவர்களுடைய சத்திகள் முறையே வியாபினி, வியோமரூபை, அனந்தை, அனாதை, அனாசிருதை யென்பவர்கள். இவர்களைப்பற்றி முன்னங்கூறியாயிற்று. இவர்களில் வியாபகருக்குக் காரணவியாபக ரென்றும் பெயர். இந்தப்பரநாதகலையில் சிவ ரிருப்பர். இவர் அனாகதசிவரென்று கூறப்படுவர். இவரே பரவாகீஸ்வரர்.

இங்ஙனஞ் சாந்தியாதீதகலைக்குப் புவனம் பதினைந்து.

இவ்வாறு கூறப்பட்ட கலைகளும் சாதாரண தத்துவங்களும் புவனங்களும், கண்டம், தேசம், இராசதானி முதலிய உலகப்பிரிவினைகளைப்போல் மாயாகோளத்தின் பிரிவினைகளாகும். கலைகளைக் கண்டங்களுக்கும், சாதாரண தத்துவங்களைத் தேசங்களுக்கும், புவனங்களை இராசதானிகளுக்கும் ஒப்பிடலாம். எப்படி ஒவ்வொரு இராசதானியிலும் அனேக ஜில்லாக்களும் தாலுக்காக்களும் இருக்கின்றனவோ அப்படியே ஒவ்வொரு புவனத்திலும் அனேக உலகங்களும் அவ்வவற்றின் பிரிவுகளுமிருக்கும். ஆதலால் சித்தாந்தப்படத்தில் காட்டியிருக்கும் பச்சைப்புள்ளிகளைப் பார்த்து அவைகளைப்போலவே உருண்டையாய்ப் புவனங்களிருக்குமென எண்ணக்கூடாது. ஒவ்வொரு சாதாரண தத்துவத்திலும் இத்துணைப் புவனங்களிருக்கின்றன வென்று அஃதாவது தத்துவமொவ்வொன்றும் புவனமெனப்படும் இத்துணைப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று மட்டும் அவைகள் குறிப்பிடுகிறதென அறியவேண்டியது. புவனங்கள் பெரும்பாலும் ஒன்றின்மேலொன்று யிருப்பதால் அதுபோல் காட்டுவதற்கு இவ்வொரு படத்தில் முடியாதாகையால் அவ்வாறு காட்டப்பட்டன. அதற்காகவே தனித்தனியே பிரித்துவிளக்கும் படங்களும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில்கூறிய புவனங்களின் பெயர்கள் சிருட்டிப்பேதத்தால் வித்தியாசப் படுவதும் உண்டு. இதில்கூறப்பட்

டில்லாத புடைபுவனங்களும் உண்டு. அவைகளின் பெயர்களையும் புவனங்களின் உட்பிரிவுகளையும் ஆகமங்களால் அறியவேண்டியது.

நாம் வசிக்கும் இவ்வண்டத்திற்குப் பிரமாண்ட மெனப் பெயர். இது நூறுகோடியோசனை உயரமும் அவ்வளவு அகல நீளமும் உடையது. இதற்குவகை:—கீழ் அண்டச்சுவர்க்கனம் ஒருகோடியோசனை. அதன்மேல் காலாக்கினிருத்திர உலகம் ஒருகோடியோசனை. இவ்வுலகத்தில் காலாக்கினி ருத்திரர் ஆயிரம்யோசனை உயரமும் 2,000. யோசனை யகலமு முடைய சிங்காதனத்தில் செந்தழல்மயமான திருமேனி 10,000. யோசனை உயரமுடையவராய் வலக்கரத்தில்வாளும் அம்பும், இடக்கரத்திற் கேடகமும் வில்லும் உடையவராய் எழுந்தருளியிருப்பர். அவரைச் சூழப் பரிவாரமாய் அவரோடொத்த வடிவுடையவராய் உருத்திரர் பதின்மருளர். அவருள் ஒவ்வொருவரையும் கோடியுருத்திரர் பரிவாரமாய்ச் சூழ்ந்திருப்பர். ஆதிகமடம அந்தக் காலாக்கினி ருத்திரரது பாதத்தைத் தொழுதுகொண்டிருக்கும். இப்படிப் பட்ட காலாக்கினி ருத்திரரது திருமேனியின் மேனோக்கியெழுந்த சுடர்க்கொழுந்து காலாக்கினி யுலகத்தின்மேல் 10–கோடியோசனை. அதன் புகைப்படலம் அதன்மேல் 5–கோடியோசனை. ஆக காலாக்கினிப் புவனம் 16–கோடியோசனை. அண்டச்சுவர்க்கனம் 1–கோடியுங்கூட்டி 17–கோடியோசனைக்குமேல் ஆகாய வெளி கோடியோசனை. இதற்குமேல் நரகலோகங்கள் ஒன்றின் மேலொன்றாக அடுக்கினாற்போல் 28–கோடிநரகங்க ளிருக்கும். அவற்றினுயரம் 28–கோடியோசனை. முன்னுங்கூட்டி நரகங்களினுயரம் 29–கோடியோசனை. அவற்றின் அகலநீளம் காலாக்கினி ருத்திரர் புவனம்போலப் பிரமாண்ட கடாகவரையுமாம். இனி கூறப்படும் உலகங்களுக்கும் அகலநீளம் இவ்வாறேயறிக. அதற்கு மேல் ஆகாயவெளி 12–லட்சம்யோசனை. அதன்மேல் கூஷ்மாண்டருலகம் 99–லட்சம் யோசனை. அதன்மேல் ஆகாயவெளி 9–லட்சம் யோசனை. அதன்மேல் ஏழுபாதாளமும் ஒவ்வொன்று 9–லட்சம் யோசனையாக 63–லட்சம் யோசனை. மேல் கனிட்டபாதாளம் 8–லட்சம் யோசனை. இதற்குமேல் ஆடகேசுரர் புவனம் 9–லட்சம் யோசனை. அதன்மேல் ஆகாயவெளி 120–லட்சம் யோசனை. அதன்மேல் பூவுலகம் 80–லட்சம் யோசனை. ஆக பூமியின் கீழ் அண்டகடாகம் வரையில் 50–கோடியோசனை யெனவறிக.

பூமியின்மேல்புவர்லோகம் 15-லட்சம்யோசனை. அதன்மேல் சுவர்லோகம் 85-லட்சம் யோசனை. அதன்மேல் மகாலோகம் 2-கோடியோசனை. அதன்மேல் சனலோகம் 8-கோடியோசனை. அதன்மேல் தபோலோகம் 12-கோடியோசனை. அதன்மேல் சத்தியலோகம் 16 - கோடியோசனை. அதன்மேல் பிரமலோகம் 3-கோடியோசனை. அதன்மேல் விஷ்ணுலோகம் 3-கோடியோசனை. அதன்மேல் சிவலோகம் 4-கோடியோசனை. அதன்மேல் அண்டச்சுவர் 1-கோடியோசனை. ஆக பூமியின்மேல் பிரமாண்டகடாகம் வரையில் 50-கோடியோசனை. இங்ஙனம்பூமியின்கீழ் 50-கோடியோசனையும், பூமியின்மேல் 50-கோடியோசனையுமாக பிரமாண்டத்தினுயரம் 100-கோடியோசனை யெனவறிக.

## நரகங்கள்.

பாபிகள் சென்றடைந்து 28-கோடிபேதமாய்த் தெண்டிக்கப்படும் நரகங்கள் 28-கோடியுண்டு. அவைகள் நரகம், மாநரகம், இராசநரகம், இராசராசேசுர நரகமென நான்குவகைப்படும். அவற்றுள் நரகம் இரௌரவம், துவாந்தம், சீதம், வெப்பம், சந்தாபம், பற்மம், மாபற்மம், காலசூத்திரமென எண்வகைப்படும். மாநரகம் சூசிமுகம், காலகடகம், மகுரதாரம், அம்பரீடம், தத்தாங்காரம், மாதாகம், சந்தாபம், பீபற்சமென எண்வகைப்படும். இராசநரகம் இலாக்காப்பிரலேபம், மாஞ்சாதம், நிருச்சுவாசவுச்சுவாசம், யுக்குமாத்திரி, சான்மலி, உலோகப்பிரதீர்த்தம், சுரபிபாசம், கிருமிநிசயமென எண்வகைப்படும். இராசராசேசுரநரகம் உலோகத்தம்பம், விண்மூத்திரம், வைதரணியம், தாமிச்சிரம், அந்ததாமிச்சிரம், கும்பிபாகம், மாரௌரவம், அபீசியென எண்வகைப்படும். இந்த நால்வேறு வகையில் எவ்வேழுக்கு ஒவ்வொன்று பிரதானநரகமாகவிருக்கும். பிரதானங்கள் நீக்கி நின்ற 28-நரகமும் கோடிக்கொன்றாக 28-கோடி நரகங்களுக்கும் பிரதானங்களாயிருக்கும். இன்னுமிவற்றின் உட்பிரிவாக சூகரம், தப்தகும்பம், தப்தலோகம், தப்தகலம், அவிசிரோதம், லாலாபக்கம், விச்சனம், உருதிராந்தம், அசிபத்திரவனம், வன்னிசுவாலை, சந்தம்சம், சுவபோசனம், உரோதம், தாலம், திவசனம், மகாசுவாலை, தப்தலவணம், விலோகிதம், பூயவாகி, கிரிமிலகா, கிருமிபோசனம், அபாயம், அதசிரசு, தமசு, விசிரோதனம், அதிருட்டம் முதலிய பலநரகங்களுண்டு.

இவற்றுள், சிவஞானி, வேதியர் முதலியோருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னவன் ரௌரவத்தையும், சிசுகத்தி கோகத்தி பிரமகத்தி செய்தவனும் பிறர்பொருளை யபகரித்தவனும் விசுவாசகாதகனும் சுராபானஞ் செய்தவனும் பொன் திருடினவனும் இப்பாவிகளோடு சினேகஞ்செய்தவனும் சூகரமென்னும் நரகத்தையும், ஆசாரியனைக் கொன்றவனும் உடன்பிறந்தாளுடன் போகித்தவனும், தாயைப் புணர்ந்தவனும் தப்தகும்பமென்னும் நரகத்தையும், பதிவிரதைகளைப் பலாத்காரமாகப் புணர்ந்தவனும் தன் மனைவியைப் பிறனுக்குச் சேர்ப்பித்தவனும் தப்தலோகமென்னும் நரகத்தையும், ஆசிரியனை அவமதித்தவனும் தன் தாய் தந்தையர் குழந்தைகள் முதலியோரை வஞ்சித்துப் புசித்தவனும் தேவதூடணஞ் செய்தவனும் வேதவிக்கிரயஞ்செய்தவனும் சேரத்தகாத ஸ்திரீகளைச் சேர்ந்தவனும் தப்தசுலமென்னும் நரகத்தையும், தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவன் அவிசிரோதமென்னும் நரகத்தையும், தேவபிதுர்க்களைத் துவேஷித்தவனும் இரத்தினங்களைக் குறைத்து மதித்தவனும் புனிதமான விரத்தினங்களுக்குத் தோடஞ்சொன்னவனும் தேவர் பிதுரர் முதலியோருக்கு நிவேதியாது புசித்தவனும் லாலாபக்கமென்னும் நரகத்தையும், அன்னபானங்களில் விஷங்கலந்துகொடுத்தவன் விச்சனமென்னும் நரகத்தையும், அசத்தியவான்களோடு சினேகித்தவனும் புசிக்கத்தகாதவற்றைப் புசித்தவனும் யாகஞ்செய்ய அருகரல்லாதவர்க்கு யாகஞ்செய்வித்தவனும் உருதிராந்தமென்னும் நரகத்தையும், சிநேகிதனைக் கொன்றவனும் மதுவைக் காரணமின்றி விரும்பியபொழுது பருகினவனும் வாலிபத்தால் மத்தனாகித் தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவனும் தன் சீவனமார்க்கத்தை விடுத்துக் கபடமார்க்கமாகச் சீவித்தவனும் வைதரிணி என்னும் நரகத்தையும், பசுமையான மரங்களை வெட்டுகிறவன் அசிபத்திர நரகத்தையும், மிருகங்களை யிம்சிப்பவனும் வீடுமுதலியவற்றை நெருப்பாற்கொளுத்தினவனும் வன்னிசுவாலை யென்னும் நரகத்தையும், தனது ஆச்சிரம தருமங்களை விடுத்தவனும் பிறருடைய விரதங்களைக் கெடுத்தவனும் சந்தபசம் என்னும் நரகத்தையும், பகற்காலத்தில் ரேதஸ்கலனஞ்செய்தவன் சுவபோசனமென்னும் நரகத்தையும் அடைந்து சொல்லத்தரமில்லாத பலவித கஷ்டங்களை யனுபவிப்பார்கள். இந் நரகவாசிகள் ஒருநாளுந் தேவர்களைப் பார்க்கிறதில்லை. பாவத்தை

அறிவில்லாமற் செய்துவிட்டபோதிலும் அதற்குத்தக்கபடி மனுஸ்மிருதிமுதலிய நூல்களில் கூறியபடி பிராயச்சித்தங்களைச்செய்து அந்தப்பாவத்தின் சத்தியைக் குறைத்துக் கொள்ளாதவர்கள் இவ்வாறு நரகலோகங்களை யடைந்து துன்பப்படுவார்கள். பிராயச்சித்தங்களைச் செய்துக்கொள்ளச் சத்தியில்லாவிடின் நாம் பாவஞ் செய்தோமே யென்ற ஏக்கத்துடனும் பதைப்புடனும் தனித்திருந்து சிவபெருமானைத் தியானித்துத் தன் பாவங்களை மன்னிக்க வேண்டுமென்று கண்ணீர்விட்டுக் கரைந்து காலை மாலை உச்சிகளில் பிரார்த்தித்தல்வேண்டும். இவ்வாறு செய்யவே பாவம் வலிகெட்டொழியும்.

இந்நரகங்களுக்குமேல் கூஷ்மாண்டபுவனமானது அதன் கீழ்பால் மண்ணும் நடுவில் இரும்பும், மேல்பால் பொன்னுமாக மூன்றுகூறுயிருக்கும். அவற்றுள்மேல்பாலில் நரகங்களுக்கு அதிபதியான கூஷ்மாண்டர் ஊழிக்காலத்துச் சூரியனைப்போன்ற வடிவமும் கராளமுகமும் முக்கரமும் உடையவராய்த் தம்மோடொத்த உருத்திரகணங்களுட னிருப்பார்.

## பாதாளம்.

அதற்கு மேலுள்ள அதல, விதல, சுதல, நிதல, நிராதல, மகாதல, பாதலமாகிய சப்தபாதலங்களும் ஒவ்வொன்று கீழ், நடு, மேல்பாலாக மூன்று கண்டமாய் கீழ்பாற் கண்டங்களில் அதல முதல் ஏழினும் அடைவே சங்கசுருதி, பிரகலாதன், சிசுபாலன், சுற்கந்துகன், இரணியாக்கன், பிரகற்கருப்பன், பெலி என்னும் அசுரவேந்த ரெழுவரும், நடுக்கண்ட மேழினும் முறையே குடிலகன், வாசுகி, கம்பலன், காற்கோடகன், காளாங்கன், தூர்த்தரிசன், தக்ககன் என்னும் சற்பவேந்த ரெழுவரும், மேல்பாற் கண்ட மேழினும் முறையே விகடன், உலோகிதாக்கன், இயமன், விகாடனன். காளன், பீமநிருதிராதன், பிங்கலன் என்னும் இராக்கதவேந்த ரெழுவரும் அவ்வப்பாதாளங்களின் அவ்வக் கண்டங்கட்கு அதிபதிகளாயிருப்பர். இந்தப் பாதாளங்களில் இரத்தின மயமான பூமியும் இரத்தினங்களிழைத்த உப்பரிகைகளும் மதில்களும் பொன் விளையும் பூமியு முள்ளன. அவைகளில் காசிபமுனிவருக்குத் திதியென்பவளிடந் தோன்றிய அசுரர்களும் நாகர்களும் இராக்கதர்களும் வசிக்கிறார்கள். இம்முனிவருக்கு அதிதிபால் தோன்றிய தேவர்களை மேலுலகவாசிகளெனவறிக. காந்தியுள்ள சப்த பாதா

ளங்களானவை அளவில்லாத சந்தோஷத்தை யுண்டு பண்ணு மென்றும் அவைகளுக்குச் சமானமான வுலகங்கள் இல்லவே யில்லையென்றும் தேவ தானவ கன்னிகைகளா லுண்டாகும் மோகத்தை விடுத்த விரக்தனுக்கும் பாதாள லோகங்களில் விருப்ப முண்டாகத் தடையிரா தென்றும் நாரதமகாமுனிவர் இந்திராதி தேவர்களுக்குக் கூறியிருப்பதனாலேயே பாதாளங்களினழகு கணிக்கப்படும். அவைகளின் மேற் கண்ணதாகிய கனிட்டபாதலத்தின் மேலுள்ள ஆடகேச் சுரபுவனத்தில் பாதாளங்களுக்கு அதிபதியாகிய ஆடகேசுரர் அவுணர் இராக்கதர் இயக்கர் முதலியோர் துதிசெய்ய வீற்றிருப்பர்.

## பூவுலகம்.

இனிப் பிரமாண்டத்தின் நடுவிலுள்ள பூமியின் மேற்பரப்பானது அண்டகடாகம் வரையில் 100-கோடி யோசனை விரிவும் ஏழு பெருங் கடலும், ஏழு பெருந் தீவும், நடுவே மேரு கிரியு முடைத்தாய்ப் பூலோக மெனப் பெயர்பெறும். தீவென்பது சலத்தாற் சூழப்பட்ட பூமி.

ஏழு பெருந்தீவில் நடுத் தீவாவது நாவலந் தீவு. இது 1,00,000 யோசனை அகலம் உடைத்தாய், வட்டமாய் நிலமகட்கு உந்தித் தான மாயுள்ளது. இந்த நாவலந் தீவின் நடுவில் சூரியப் பிரகாசமும் மழுங்கும்படி பேரொளி வீசும் பொன் மயமான மேரு மலை 1,00,000-யோசனை அளவுடையது: அதில் 16,000-யோசனை பூமிக்குள் ஆழ்ந்து, 84,000-யோசனை பூமிக்கு மேலுயர்ந்து, மூலத்தில் 16,000-யோசனை விரிவும், முடியில் 32,000-யோசனை விரிவுமுடைத்தாயிருக்கும். அது முக்கூறாய், முக்கூற்றினும் முறையே ஒன்றற் கொன்று மேன்மேல் 4,000-யோசனை அகலம் அதிகமுடைய மூன்று மேகலைகளை யுடைத்தாய்த் தாமரைப் பொகுட்டு (காய்) வடிவுபோ லிருக்கும். முக்கூற்றில் அடிக்கூறு பூமிக்கு மேல் 25,000-யோசனை உயரம். அதன்மேலுள்ள முதன் மேகலை 3,000-யோசனை உயரமும். 10,000-யோசனை அகலமு முடையதாய்க் கடகம்போல் விளங்கும். அதன்மேல் நடுக்கூறு 25,000-யோசனை உயரம். அதன் மேலுள்ள நடுமேகலை 3,000-யோசனைஉயரமும் 14,000. யோசனை அகலமு முடையதாய்க் கடகம் போல் விளங்கும். அதன் மேல் நுனிக் கூறு 25,000-யோசனை உயரம். அதன்மேல் மூன்றும் மேகலை 3,000-யோசனை உயரமும் 18,000-யோசனை. அகலமு

முடையதாய்க் கடகம்போல விளங்கும்; இதற்குச் சக்கரவாள மென்றும் பெயர். இங்ஙனம் பூமிக்குமேல் உயரம் மூன்று கூறுக்கும் 75,000-மும் மூன்று மேகலைக்கும் 9,000-மும் ஆக 84,000-மும், பூமியின் கீழ் 15,000-மும், ஆக மேருகிரியி னுயரம் 100,000 யோசனையுங் கண்டு கொள்க.

மேருவின் மேகலை மூன்றனுள் கீழிரண்டு மேகலையினுஞ் சித்தர் கந்தருவர் முதலியோர் வசிப்பர். உச்சியி லுள்ளதாகிய சக்கரவாளமேகலையின் மேல் பலபல கொடுமுடிகளுள; அவற்றுட் கிழக்கு முதலிய எட்டுத் திக்கினும் ஒவ்வொன்று 9,000-யோசனை அகலமுடையவாய் அதி விசித்திரமாய்ப் பலவேறு வகைப்பட்ட வளங்களுடைய நகரங்கள் எட்டுள. அவற்றுள், கீழ்பால் அமராபதி யென்னும் நகரம்: தென்கீழ்பால் தேஜோவதி, தென்பால் சமுயமனி, தென்மேல் பாற் கண்ணவதி, மேல்பாற் சுத்தவதி, வடமேல் பாற் கந்தவதி, வடபால் மகோதையை, வடகீழ்பால் எசோவதி, என்னும் நகரங்கள் உண்டு. இவ்வெட்டினும் முறையே இந்திரன் அங்கி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திசை காப்பாளர் எண்மரும் தத்தம் பரிசனங்களோடு வைகுவர்.

மகாமேருவின் நடு வுச்சியில் 14,000-யோசனை உயரமும் அகலமுமுடைய மனோவதியும், அதன்மேல் பால் அத்துணை உயரமும் நீளமு முடைய வைகுந்தமும், அதன்வடபால் 20,000-யோசனை உயரமும் அகலமுமுடைய சோதிட்கமும் என மூன்று கொடுமுடிகளுள. இம்மூன்றினும் முறையே பிரமன், மால், உருத்திரன் என்னும் மும் மூர்த்திகளும் வைகுவர். இவருள் வைகுந்த வாசியாகிய விஷ்ணு விருப்பத்தாற்பெற்ற கங்கையானது மேருவினடியில் இழிந்து சீதை, அலகநந்தா, சுசக்ஷூசு, பத்ரா வென நான்கு கிளைநதிகளாகப் பிரியும். அவற்றுள், சீதை யென்னும் நதி கீழ்திக்கிலும், அலகநந்தா தென்கிழக்கிலும், சுசக்ஷூசு மேற்கிலும், பத்ரா வடக்கிலுமாகப் பிரவாகித்துப் பர்வதங்களை யதிக்கிரமித்து சமுத்திரத்தை யடைகின்றன.

இத் தன்மைத்தாகிய மேருவரையின் தென்பால் நிடதம், ஏமகூடம், இமயம் என மூன்று மலைகளும், வடபால் நீலம், சுவேதம், சிருங்கவான் என மூன்று மலைகளும், ஒவ்வொன்று 2,000-

யோசனை அகலமும், 10,000–யோசனை உயரமும், 9,000 யோசனை இடைவெளியு முடையதாய்க் கிழக்கு மேற்கு உவர்க்கடல்வரையும் நீண்டு கிடக்கும். மேருவரையின் கீழ்பால் மாலியவான் என்னும் மலையும், மேல்பாற் **கந்தமாதன** மென்னும் மலையும் ஒவ்வொன்று 1000–யோசனை அகலமும், 2000-யோசனை உயரமும், 34000 யோசனை நீளமும் உடைத்தாய்த் தெற்கு வடக்கு நிடதம் நீல மென்னும் மலை யிரண்டினும் முட்டி நிற்கும்.

இம் மலை யெட்டி னுள்ளும் நிடதம், கந்தமாதனம், நீலம், மாலியவான் என்னும் நான்கிற்கும் நடுவாக மேருவைச் சூழ்ந்து நாற்றிசையினும் 9000-யோசனை அகலமுடைய நிலம் இளாவிரத வருடமெனப்படும். மாலியவான் மலைக்குக்கிழக்கு உவர்க்கடற்கு மேற்கு 32,000–யோசனை அகலமுடைய நிலம் பத்திராசுவ வருடமெனவும், கந்தமாதனத்திற்கு மேற்கு உவர்க்கடலுக்குக் கிழக்கு 32,000-யோசனை அகலமுடைய நிலம் கேதுமால வருடமெனவும் பெயர் பெறும். தென்பால், நிடதத்திற்கும் ஏமகூடத்திற்கு மிடையே 9000–யோசனை அகலமுடைய நிலம் அரிவருட மெனவும், ஏமகூடத்திற்கும் இமயத்துக்கு மிடையே 9,000–யோசனை அகலமுடைய நிலம் கிம்புருடவருடமெனவும், இமயத்திற்கு தென்கடற்கு மிடையே 9000–யோசனை அகலமுடைய நிலம் பாரதவருடமெனவும் பெயர் பெறும். வடபால் நீலமலைக்குஞ் சுவேதமலைக்கு மிடையே 9000-யோசனை அகலமுடைய நிலம் இரமிய வருடமெனவும், சுவேத மலைக்கும் சிருங்கவானுக்கும் இடையே 9000–யோசனை அகலமுடைய நிலம் இரணிய வருட மெனவும், சிருங்கவானுக்கும் வடசடற்கு மிடையே 9000-யோசனை அகலமுடைய நிலம் குரு வருடமெனவும் பெயர் பெறும்.

இவற்றுள் மேருவைச் சூழ்ந்த நிலத்தில் மேருமலை சலியாது நிலைபெறுதற் பொருட்டுக் கிழக்கில் வெண்மையான மந்தரமும், தெற்கில் பொன்மையான கந்தமாதனமும், மேற்கில் கருமையான விபுலமலையும், வடக்கில் செம்மை நிறமான சுபாரிச மலையுமெனப் பெயர்பெறும் நான்கு விட்கம்ப மலைகள் உண்டு. இவை ஒரோவொன்று 50,000–யோசனை உயரமுடையவையாயிருக்கும். இந்த நான்கு மலைகளுள் மந்தர மலையில் கடம்பும், கந்தமாதனத்தில் நாவலும், விபுலத்தில் அரசும், சுபாரிசத்தில் ஆலும் என நான்கு கற்பக

மரங்கள் 1000-யோசனை உயரமுடையனவையாய் நிற்கும். இவற்றுள் தென்திசையில் நிற்கும் நாவல்மரம் மற்ற மூன்றினுஞ்சிறந்து அதிமிக்குடையதாகலின் அதன் பெயரானே உவர்க்கடலாற் சூழப்பட்டு இலக்கம் யோசனை யளவும் ஒன்பது வருடமு முடையதாகிய இந்த நடுத்தீவு நாவலந்தீவென வழங்கப்படும். இந்த நாவற்பழத்தின் சாறொழுகி ஆறுய்ப்பாய்ந்து மேருவைச் சூழ்ந்து அந்நிலத்தினையும் பொன்மயமாக்கி மேருவின் மூலத்திற் சென்றடையும். அந்தச் சாற்றினை அருந்திய பறவை விலங்கு முதலாயினவும் பொன்னிறம் பெறும். இந்தவிட்கப்பமலை நான்கனுட் கீழ்பால் நிற்கும் மந்தரமலை யடிவாரத்தில் சயித்திராத மென்னும் உய்யான வனமும் அருணோதக மென்னும் மடுவும், தென்பாற் கந்தமாதனத்தின் அடிவாரத்தில் * நந்தன மென்னும் வனமும் மானச மென்னும் மடுவும். மேல்பால் விபுலமலை யடிவாரத்தில் வைப்பிராச மென்னும் வனமும் சீதோதக மென்னும் மடுவும், வடபாற் சுபாரிச மலை யடிவாரத்தில் † சுருமா னென்னும் வனமும் பத்திராக மென்னும் மடுவும் உளவாம். இந்நந்தவனங்களில் சயித்திரா தத்தில் தாமரைமலருடன் கூடிய தாகமும், நந்தனத்தில் குமுதங்களோடு கூடிய மானதசரசும், வைப்பிராசத்தில் செந்தாமரையுடன் கூடிய விமலோதகமும். சுருமானில் நீலோற்பலத்துடன் கூடிய மனோதமு மென நான்கு ஓடைகளுண்டு.

இன்னும் சிதாஞ்சனம், குமுதஹா, குராஹா, மால்யவான் என்னும் மலைகள் கிழக்கிலும், திரிகூடம், சிசிரம், பகதம், ரஜதம், நிஷதம் என்னும் மலைகள் தெற்கிலும், சிசிவாசசு, வைதூரியம், கபிலம், கந்தமாதனம், ஜாருதி என்னும் மலைகள் மேற்கிலும், சங்கசூடம், ரிஷபம், ஹம்சம், காலாஞ்சரம் என்னும் மலைகள் வடக்கிலுமாக பர்வத கேசரங்களா யிருக்கும்.

இவை யெல்லா முடைத்தாகிய மேருவைச் சூழ்ந்த நிலமாகிய இளாவிரத மென்னும் வருடத்தில் வாழ்வோர் நாவற்பழச் சாற்றினைப் பருகிப் பொன்மயமாய் 13,000-வருடம் நிலை பெறுவர். கேதுமாலவருடத்தில் வாழ்வோர் பலாப் பழத்தின் சாற்றைப் பருகி குவளைப்பூ நிறமுடையராய் 10,000-வருடம் சீவிப்பர். பத்தி

---

* இதனை விசித்திரை யென்றலு முண்டு.

† இதனைத்திருதாக்கிப்மென்றுங் கூறுவர்.

ராசுவ வருடத்தில் வாழ்வோர் கருங்குவளைப் பூவையுண்டு மதி யொளி போலும் நிறமுடையராய் 10,000-வருடம் சீவிப்பர். குரு வருடத்தில் வாழ்வோர் ஆலம்பழத்தை நுகர்ந்து கருங்குவளைப்பூ நிறமுடையராய் 12,000—வருடம் நிலை பெறுவர். இந்தக் குருவருடத்திற்கு அருகே வடதிசையினும் வாயுதிசையினும் உவர்க்கடலின்கட் சந்திரத்தீவு, பத்திராகரத்தீவு என இரண்டு தீவுகளுண்டு. அவற்றில் வாழ்வோர் கனிகிழங்குகளை யுண்டு முறையே சந்திர நிறமும் செந்தாமரைப்பூ நிறமு முடையராய்க் கனி கிழங்குகளை யுண்டு 13,000—வருடம் நிலைபெறுவர். இரணியவருடத்தில் வாழ்வோர் எலுமிச்சம் பழத்தை நுகர்ந்து மதிபோலும் வெண்ணிறமுடையவராய் 12,000—வருடம் சீவிப்பர். இரமிய வருடத்தின் வாழ்வோர் கருப்பஞ் சாற்றைப் பருகி வெள்ளை நிறமுடையராய் 12,000—வருடம் நிலைபெறுவர். அரி வருடத்தில் வாழ்வோர் தத் தமக்கு வேண்டுங் கனிகளை யுண்டு பச்சிலை மரப்பூ நிறமுடையராய் பெண்ணு மாணுமாகிய இரட்டைப் பிள்ளைகளைப் பெற்று 30,000-வருடம் சீவிப்பர் ஏமகூடத்திற்கும் இமயத்திற்கும் இடையிட்ட கிம்புருட வருடத்தில் வாழ்வோர் இறலியின்கனி நுகர்ந்து பொன்னிற முடையராய் 10,000—வருடம் சீவிப்பர். இங்ஙனம் இளாவிரத முதலிய வருடங்க ளெட்டினும் வாழ்வோர் அவை போகபூமி யாகையால் நால்வகை யுகங்களான் வரும் அவத்தை வேறுபாடின்றி என்றும் ஒரு தன்மையராய் இன்பம் நுகர்ந்து வாழ்வார்.

இமயத்திற்கும் தென்கடற்கும் நடுக்கண்டமான பாரத வருடத்தில் வாழ்வோர் நால்வகையுகங்களின் அவ்வவ் வுகங்கட்குத் தக்க அறிவும் ஆயுளும் வடிவும் செல்வமும் மக்களுமுடையராய், உழவு முதலியவற்றான் வரு முணவுகளைப் புசித்து, அத்தியாத்துமிகம் ஆதிபௌதிகம் ஆதிதெய்வீகம் முதலிய மூவகைத் துக்கங்களிற் பட்டு வாழ்வர்.

அத்தியாத்துமிகமானது சரீரமென்றும் மானசமென்றும் இருவகைப்படும். சரீரமாவது குன்மம், வாதம், அதிசாரம், சுரம் சூலை முதலியவைகளும் மனிதராலேல மிருகங்களினாலே பைசாசங்களினாலே பட்சிகளினாலே இராட்சதர்களினாலே வருந்துக்கங்களுமாகும். மானசமாவது சோகம் அசூயை அவமானம் மாற்சரியமுதலானவை.

ஆதிபௌதிகமாவது குளிர், வெப்பம், காற்று, மழை, மின், இடி முதலியவற்றால் வருந் துக்கம்.

ஆதிதெய்விகமாவது கருப்பம், சனனம், நரை, திரை, அஞ்ஞானம், மரணம், நரகமுதலியவற்றால் வருந் துக்கம்.

இந்தப் பாரதவருடத்தில் ஆர்ச்சிக்கப்படுங் காமியங்கள் ஏனையிடங்களிற் சென்று அனுபவிக்கப்பட்டு அழிவெய்துமாகலின் இஃதோர் பெருங் குணமுடைய பாரதவருடம் கருமபூமியென்றும் மற்றையவெல்லாம் போகபூமியென்றும் வழங்கப்படும்.

நாவலந் தீவிற்கு வேந்தனாக மனு மரபிற் றோன்றிய ஆக்கினீத்திர னென்னு மரசன் தன் புதல்வராகிய பரதன் முதலிய ஒன்பதின்மர்க்கும் பகுத்துக்கொடுத்ததால் அவரவர் பெயர் அவ்வவ் வருடங்களுக்காயின.

இவற்றுட் பாரத வருடமும் ஒன்பது கண்டமாய் இந்திரத் தீவு, கசேருகத் தீவு, தாமிரபன்னித் தீவு, கபத்தித் தீவு, நாகத் தீவு, சவுமியத்தீவு, காந்தருவத்தீவு, வாருணத்தீவு, குமரித்தீவு எனப் பெயர் பெற்றுப் பலபல மலைகளும் பலபல நதிகளும் பலவேறு வகைப்பட்ட சாதிகளு முடைத்தாய் விளங்கும். இவ்வொன்பதினுள்ளும் குமரிகண்ட மொன்றே வேதாகம வழக்கமும் சாதி வரம்பும் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களும் காசி முதலிய புண்ணியத் தலங்களு முடையதாய்ச் சிறந்தது. இதுவே பரதக் கண்டமெனப்படுவது. மற்ற எட்டுக் கண்டங்களும் மிலேச்சர் வாழிடங்களாம். இப் பரதகண்டத்தில் பாரியாத்திரம், விந்தியம், சகியம், மலயம், மஹேந்திரம், சுக்திமான், ரிக்ஷம், என்று ஏழு குலபர்வதங்க ளிருக்கின்றன. அவற்றுள் பாரியாத்திர மென்னும் பர்வதத்தில் வேதஸ்மிருதி, நர்மதா, சுரஸா என்னும் நதிகளுற்பத்தியாகி நான்கு புறத்திலும் பரவி இப்பூமியைப் பரிசுத்தஞ் செய்கின்றன. விந்திய பர்வதத்தினின்று கோதாவரி, பீமரதி, தாபி முதலிய மகாநதிகள் தோன்றி தங்களைத் தோய்ந்தோரது பாவங்களைப் போக்கிப் பரிசுத்தஞ் செய்கின்றன. சகியபர்வதத்தில் கிருஷ்ணவேணி, காவேரி முதலிய மகா நதிகள் தோன்றித் தட்சிணதேசத்தைப் பரிசுத்தஞ் செய்கின்றன. மலயபர்வதத்தில் கிருதமாலா, தாம்ரபர்ணி முதலிய நதிகள் உற்பத்தியாகி அவ்விடங்களைச் சுத்தி செய்கின்றன. மகேந்திர பர்வதத்தினின்று

திரியாமா, ரிஷிக்குல்யா என்னும் நதிகளுற்பத்தியாகி அவ்விடங்களைச் சுத்தி செய்கின்றன. சுக்திமானென்னும் மலையில் குமாரி என்னும் நதியுண்டாகிப் பரவுகின்றது.

இந்நதிகளால் சுத்திசெய்யப்பட்ட குமரிகண்டமொன்றே சிறந்தது. இதில் பிறப்பதும் வசிப்பதும் அநேக சன்மத்தில் செய்த புண்ணிய மேலீட்டால் சம்பவிக்கும். சுவர்க்க மோட்சங்களை யடையக் காரணமா யிருக்கிறது இப்பாரத கண்டமானதையால் தேவர்களும் இதில் தோன்றி தவஞ்செய்து தங்கள் இஷ்டசித்தி யடைகின்றனர்.

இதுவரை நாவலந் தீவின் இயல்பு சுருக்கிக் காட்டப்பட்டது. இதனைச் சூழ்ந்து கிடக்கும் உவர்க்கடலும் இதுபோல 1,00,000-யோசனை அகல முடையது.

இந்த உவர்க்கடலைச் சூழ்ந்து 2 00,000-யோசனை விரிவுடையது சாகத்தீவு இது சாகமென்னும் மரத்தாற் பெற்ற பெயர். இதில் உதயகிரி, ஜலதாரம், ரைவதா, சாமம், அஸ்தகிரி, அம்பிகாகிரி, கேசரி யென்னும் ஏழு பர்வதங்களும், சுகுமாரி, குமாரி, நளினி, வேணுகா, இட்சுஹு, ரேணுகா, கபஸ்தி என்னும் ஏழு பெரிய நதிகளும், அநேக சிறிய மலைகளும் நதிகளு மிருக்கின்றன. இதனைச் சூழ்ந்திருக்கும் பாற்கடலும் இதுபோல 2,00,000-யோசனை அகல முடையது.

இந்தப் பாற்கடலைச் சூழ்ந்து 4,00,000-யோசனை விரிவுடையது குசத்தீவு. இது பிரமன் யாகஞ் செய்யும்போது அவ்விடத்தில் முளைத்த குசப்புல்லாற் பெற்ற பெயர். இதில் குசேசயம், ஹரி, ஜுதிமான், புஷ்பவான், மணித்ருமம், மஹாசைலம், மந்தராசலம் என்னும் ஏழுபர்வதங்களும், தூதபாவை, சிவை, பவித்திரை, சம்மதி, வித்யை, தம்பாமஹீ என்னும் ஏழு நதிகளும் இன்னும் பல மலைகளும் நதிகளு முண்டு. இதைச் சூழ 4,00,000-யோசனை அகல முடைய தயிர்க்கடலிருக்கிறது.

தயிர்க்கடலைச் சூழ்ந்து 8,00,000-யோசனை அகலமுடையது கிரௌஞ்சத்தீவு. இது அதில் உள்ள கிரௌஞ்ச மென்னும் மலையாற் பெற்ற பெயர். அம்மலையில் கிரௌஞ்ச னென்னும் அசுரன் சுப்பிரமணியக் கடவுளுடன் பொருது மடிந்தமையாற் பெற்ற பெயரென்பதுமுண்டு. இதில் கிரௌஞ்சம், வாமனம், அந்தகாரம்,

திவாவிருக்ஷம், புண்டரிகம், துந்துபி, சுமனசு என்னும் ஏழுவர்ஷ பர்வதங்களும், கௌரீ, குமுத்வதி, சந்தியா, ராத்ரீ, மனோஜவா, கியாதி, புண்டரீகா என்னும் ஏழு நதிகளும் இன்னும் அனேக மலைகளும் நதிகளுமுண்டு. இதனைச் சூழ்ந்திருக்கும் நெய்க் கடலும் இதுபோலவே 8,00,000-யோசனை அகலமுடையது.

நெய்க்கடலைச் சூழ்ந்து 16,00,000-யோசனை அகலமுடையது **சான்மலித்தீவு.** இது அவ்விடத்தில் 1000-யோசனை வளர்ந்திருக்கிற பொன்மயமான சான்மலி யென்னும் மரத்தாற் பெற்றபெயர். இதில் சுவேதம், ஹரிதம், சீமூதம், உரோஹிதம், வைத்யுதம், மானவம், சுப்பிரபமெனஏழுவர்ஷபர்வதங்களும்; சுக்லா, இரக்தா, இரண்யா, சந்த்ரா, சுக்ரா, விமோசனு, நிவிர்த்தி யென்னும் ஏழு நதிகளும், இன்னும் பலமலைகளும் நதிகளு முண்டு. இதைச் சூழ்ந்திருக்கும் கருப்பஞ் சாற்றுக் கடலும் இதுபோலவே 16,00,000-யோசனை விரிவுடையது.

கருப்பஞ் சாற்றுக் கடலைச் சூழ்ந்து 32,00,000-யோசனை விரிவுடையது **கோமேதத்தீவு.** கோபதி யென்னும் அரசனது யாக பசுக்கள் கௌதமரின் கோபத் தீயால் வெந்தழிய, அவைகளின் மேதை நிறைந்தமையாற் பெற்ற பெயர். இதில் கோமேதம், சந்திரம், நாரதம், துந்துபி, சோமகம், சுமனஸ், விப்பிராராஜம் என்னும் ஏழு பர்வதங்களும்; அநுதப்தா, சிகா, பாபக்னி, த்ருதிவா-கிருபா, அமிர்தா, சுகிர்தா என்னும் ஏழு நதிகளும் இன்னும் அனேக மலைகளும் நதிகளு முண்டு. இதனைச் சூழ்ந்து 32,00,000-யோசனை அகலமுடையது தேன்கடல்.

தேன்கடலைச் சூழ்ந்து 64,00,000-யோசனை விரிவுடையது **புட்கரத்தீவு.** இது அவ்விடத்திலுள்ள புட்கரணி யென்னும் நதியாற் பெற்ற பெயர். இதிலுள்ள புட்கரம், தாதகி, கண்டம், மகாவீதம், நியக்ரோதம் என்னு மிடங்களில் தேவாசுரர்களாற் பூசிக்கப் பட்டவராய்ப் பிரமதேவர் எழுந்தருளி யிருப்பார். இதனைச் சூழ்ந்து 64,00,000-யோசனை அகலமுடைய சுத்த நீர்க்கடலிருக்கிறது.

இங்ஙனம் சம்புத்தீவின் நடுவில் மேருவின் மையத்திலிருந்து சுத்த நீர்க்கடல் வரையில் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்றிலக்கத்து ஐம்பதினாயிரம் யோசனை யென்றறிக.

இனி சுத்தநீர்க் கடலைச் சூழ்ந்து கனகமயமாய் மாணிக்கம் முதலிய பலவேறுவகைப்பட்ட மணிகளை யெல்லா முடைத்தாய் வயங்குவதாகிய பொன்னிலம் பத்துக் கோடியோசனை விரிவுடையது. அதில் கடவுளர் வந்து விளையாடி வாழ்ந்து தத்த முலகிற்குச் செல்வர்.

இந்தப் பொன்னிலத்தைச் சூழ்ந்து லோகாலோகமெனுஞ் சக்கரவாளகிரி 10,000-யோசனை பரப்புடைத்தா யிருக்கும். பொன் பூமி பக்கத்து ஒளியும் மற்றப்பக்கத்து அஃதாவது பெரும்புறக் கடல் பக்கத்து இருளு முடைமையான் அஃது லோகா லோக மலை யெனப் பெயர் பெற்றது. அந்தமலையின் புறத்தைச் சூழ்ந்து இருள்மயமான நிலம் 35,19,40,000-யோசனை பரப்புடையது. இது கோபம் முதலியவற்றால் தம்முயிரைப் போக்கிக் கொண்டவர்பேய் வடிவெடுத்து உழன்று துன்பமுற்றலையுமிடம்.

அவ் வந்தகார நிலத்தைச் சூழ்ந்து 1,27,00,000 யோசனை அகலமுடையது நாயகக்கடலாகிய பெரும்புறக்கடல். அதனைச் சூழ்ந்த அண்டச்சுவர்க் கனம் 1,00,00,000-யோசனை யாகும். இங்ஙனம் மேரு மத்திமுதல் அண்டகடாக மீறாக எத்திசையினும் ஐம்பது கோடி யோசனை அகலமுடைய பூலோகத்தின் குறுக்களவு நூறுகோடி யோசனை என வறிக.

## புவர்லோகம்.

இத்தன்மைத்தாகிய பூவுலகத்திற்கு மேற்கண்ணதாகிய புவர் லோகத்தில் முதல் ஆதித்தமண்டலம் பூமியிலிருந்து ஓரிலட்சம் யோசனையுயரம். அதனுள் மேகமண்டலம் வாயுமண்டலங்க ளடங்கும். முதல்வாயுவாகிய விதனுவானிலே சித்தரும், இரண்டாம் வாயுவாகிய பிரசேதசனியிலே சத்தமாதர்களும், மூன்றாம் வாயுவாகிய அக்கினிப்பிரதேதசனில் சித்தசாரணரும், நாலாம் வாயுவாகிய செசனியிலே ஆயுத்தேவதைகளும், ஐந்தாம் வாயுவாகிய ஔகனிலே அட்டகயங்களும், ஆறாம்வாயுவாகிய வச்சிராங்கனிலே கருடராயனும், ஏழாம் வாயுவாகிய வைததுதனிலே கிரியாசத்தியாகிய கங்கையும், எட்டாம்வாயுவாகிய ரைவதனிலே விருஷபராயனும், ஒன்பதாம் வாயுவாகிய சம்வர்த்தனிலே தக்கனும், பத்தாம் வாயுவாகிய விசமவாததனிலே துவாதசாதித்தர்களும் அட்டவசுக்களும் ஏகாதசருத்திரர்களும் மருத்துக்களு மிருப்பார்கள்.

இந்த ஆதித்தமண்டலத்தின்மேல் சந்திர மண்டலம் ஓரிலட்சம் யோசனையுயரமுள்ளது. அதன்மேல் நட்சத்திர மண்டலம். 1,00 000–யோசனை. அதன்மேல் புதன் மண்டலம், 2,00,000–யோசனை. அதன்மேல் சுக்கிரமண்டலம் 2.00,000-யோசனை. அதன்மேல் செவ்வாய் மண்டலம் 2,00,000–யோசனை அதன்மேல் வியாழமண்டலம் 2,00.000–யோசனை அதன்மேல் சனிமண்டலம் 20,00,000–யோசனை. அதன்மேல் சத்தவிருடிகள் மண்டலம் 1,00,000–யோசனை. அதன்மேல் துருவமண்டலம் 1,00,000–யோசனை. இதில் துருவன் அசையாமலிருந்து கீழுள்ள தேவர்களை நடத்துவர். ஆகப் புவர்லோகம் 15,00,000–யோசனையும் கண்டு கொள்க. புவர்லோகத்துக்கதிபதி உருத்திரர்.

ஐரோப்பிய வானசாஸ்திரிகள் பூமிக்குமேல் சூரியனுக்குக் கீழ் சந்திரனென்ன இங்கே சூரியமண்டலத்துக்குமேல் சந்திர மண்டலமென்பது முரணாகுமே யெனின் முரணாகாது. ஏனெனில் ககோள சித்தாந்தத்தில் புதன் வியாழன் சனி முதலிய கிரகங்கள் தத்தம் சந்திரனுடனே சஞ்சரிக்கின்றன வெனப் படுகிறது. அதனை, ககோள சித்தாந்தத்தின் ஒருபகுதியின் மொழி பெயர்ப் பாசிரியர் "புந்தி சுக்கிரன், பூமி செவ்வாய், குரு, மந்தன் றத்தம்மதிகளோடவனே" எனக் கூறியிருத்தலினுனுமறிக. இதனால் ஐரோப்பியர்கள் கூறும் சந்திரனாகிய பூமிக்குரிய சந்திரன் வேறு மற்றக்கிரகங்களுக்குரிய சந்திரன் வேறு எனப் பெறப்படுகிறது. மேலும் ககோள சித்தாந்தத்தில் பூமிக்கு ஒருசந்திரனும், வியாழனுக்கு நாலு சந்திரனும், சனிக்கு எழுசந்திரனுமுண்டென்றுகூறப்பட்டிருக்கிறது. இதனைமேற்படி ஆசிரியரவர்கள் தமது மொழிபெயர்ப்பில் மற்றோரிடத்தில் "சந்திரன் புவிக்குச் சாற்றிரினொன்றும், இந்திரன் குருவுக்கியைந்திடு நான்குஞ் சனிக்கோரேழுமாய்த் தயங்குறும்" என்று கூறியிருக்கிறார்கள். சூரியமண்டலத்துக்குமேல் வியாழன் சனிமண்டலங்க ளுண்டென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் அல்லவா? பூமிக்கும் சூரியனுக்குமிடையே சந்திர னுண்டென்றும், வியாழன் சனிமுதலிய கிரகங்களுக்கும் சந்திரர் உண்டென்றுங் கூறுவதால் சூரியமண்டலத்துக்கும் நட்சத்திர மண்டலத்துக்கு மிடையே சந்திரமண்டலமொன்றுண்டென்பதை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? நமதுமுன்னோரியற்றிய நூல்களை ஆராயாது விட்டு நவீன ஐரோப்பியர்களது

சாத்திரங்களை மட்டும் பயின்ற நமது சகோதரர்கள் தாம்பயின்ற ஐரோப்பியர்களது சாத்திரங்களையே புகழ்ந்து தமது முன்னோரியற்றிய நூல்களைச் சிலபோலி நியாயங்கள் கூறி யிகழ்கின்றனர் அவர்கள் கூறும் நியாயங்களாவன:—1-இராகுகேது வென்னும் பாம்புகள் சூரிய சந்திரர்களை விழுங்குவதனால் சூரிய சந்திர கிரணகங்களுண்டென்பது. 2-ஆதிசேஷனென்னும் சர்ப்பராசன் தனது ஆயிரஞ் சிரசுகளால் பூமியைத் தாங்கியிருக்கிறானென்பது. 3-சூரிய மண்டலத்துக்குமேல் சந்திரமண்டலமுண்டென்பது. 4-மேகங்கள் கடல் நீரைப்பருகி வருஷிக்கிறதென்பது. முதலியவைகளே.




சூரிய சித்தாந்தம் 4-ம் அத்தியாயம் 9-ம் சுலோகப் பொருள்: சந்திரனானது சூரியனுக்குக் கீழ்ஓர் முகிலைப்போல் வந்து அதை மறைக்கச் சூரியகிரகணமுண்டாகிறது. சந்திரன் கிழக்குமுகமாய்ப் பூமிச் சாயைக்குட்புக அச்சாயையாற் சந்திரகிரகண முண்டாகின்றது என்பது. இதனை விளக்குகிறது. மேலும் சோதிட நூல்களில் இராகுகேதுக்களுக்குச் சாயாக்கிரகங்களெனப் பெயரிட்டிருக்கின்றது. ஆகையால் சூரியசந்திரகிரகணங்கள் அவையிற்றின் சாயைகளாலுண்டாவதென்பதே நமது முன்னோர்களின் துணிபும். ஆனால் புராணங்கள் அவ்வாறு கூறுவது யென்னையெனின், வர்ணனுவலங்கார ரசம்பற்றி அவ்வாறு கூறலாம் என்பது இலக்கண நூற்றுணிபாகலின் அது பற்றிக் கூறும் உண்மை யுணர்ந்தார்க்கு அதுமாறுகோளாகாதென அறிக. இங்ஙனமே மற்றவைக்குங் கண்டுகொள்க.

ஆடகேசுரர் புவனத்துக்குமேல் பூமிக்குங்கீழ் இடைவெளியாகிய ஆகாயம் 120-லட்சம் யோசனையென்று முன்னமே கூறியிருக்கிறோம். பூமியின்கனம் 80-லட்சம் யோசனையும் குறுக்களவு 100—கோடி யோசனையும் கூறுவதால் பூமியானது சற்று நீண்ட ஒருமுட்டையின் வடிவமுள்ளதே. அதைப்போலவே மற்றக்கிரகங்களும் நட்சத்திரம் முதலியவைகளும் வடிவுள்ளனவாகும் இப்படி நீண்டமுட்டை போன்ற வடிவில்லாமல் சிலர் நினைக்கிறதுபோல் திரண்டபந்து போன்றவடிவமாயிருந்தால் அவைகளின் கதியில்

ஒன்று மற்றொன்றைச் சுற்றிவரவும் அச்சுற்றால் காலபேதங்களும் சீதோஷ்ண விகாரங்களு முண்டாகவும் முடியாது. அவைகளின் ஓட்டத்திற்கும் அவைகள் ஒன்றை யொன்று சுற்றிவரும்போது உண்டாகும் அண்டாகார மானகதிக்கும் காரணம் இங்கே காட்டுகிறோம்.

சூரியசித்தாந்தம் 2-ம் அத்தியாயம், முதல் 5-சுலோகங்களிற் கிரகங்களின் ஓட்டத்திற்குக் காரணம் யாதென்பதை விளக்கியிருக்கின்றது. அவையாவன:

1. இராசிவட்டத்தி லமைந்த அரூப வஸ்துவாகிய காலவிகற்பமே கிரகங்களின் ஓட்டத்திற்குக் காரணம். அது சீக்கிரோச்சம், மந்தோச்சம், பாதம் எனச்சொல்லப்படும்.

2. கிரகங்கள் வாயுப் பாசத்தால் அவைகளுடன் தொடுக்கப்பட்டு வலசாரியிடசாரி யாகவும், கிட்டவிருப்பதற்குத் தக்கதாய் முன்னும் பின்னுமாகவும் தத்தம் ஸ்தானத்தை நோக்கி யிழுக்கப்படுகின்றன.

3. அன்றியும்பிறவக என்னும்வாயு உச்சத்தைநோக்கி அவைகளைச் செலுத்துகின்றது. அங்ஙனம் முன்னும் பின்னுமிழுக்கப்படுகின்றமையால் விசறப்பமான இயக்கத்தோடு போகின்றன.

4. உச்சமெனப்பட்டது கிரகத்தின் முற்பாகத்துப் பாதி அயனத்திலே நிற்கும்போது அக்கிரகத்தை முன்னே யிழுக்கின்றது. அங்ஙனமே பிற்பாகத்துப் பாதியயனத்திலே நிற்கும்போது பின்னேயிழுக்கின்றது.

5. உச்சத்தாலிழுக்கப்படுகின்ற கிரகங்கள் தமது அயனத்திலே முன்னே யோடும்போது ஓட்டக்கதியைத் தனம் எனவும் பின்னே யோடும்போது ரணம் எனவுஞ் சொல்லப்படும்.

இதற்கிணங்க ஐரோப்பியர் கூறுவதியாதெனில்: கிரகங்கள் புறச்சாரசத்து அகச்சாரசத்து என்னு மிருவகைக் கவர்ச்சியின் சபலத்தால் வட்டாகாரமா போடுகின்றன. இதற்கு உதாரணம்: ஓர் வஸ்து இயக்கம் பெறும்போது அதனோட்டத்தை வேறோரெதிர்ச்சத்துத் தடுத்தாலன்றி மற்றபடி ஒரேநேராகப் போகுந் தன்மை யியல்பிலே அதற்குண்டு. நாம் ஒருகல்லை நம்சிரசுக்குமேலாக ஆகாயத்தி லெறிந்தால் அது திரும்பப் பூமியில் விழவேணு

யென்ற அபிப்பிராயம் நமக்கில்லா திருந்தும் அது கொஞ்ச உயரத்திற்குப் போய்த் திரும்பப் பூமியில் விழுகின்றது. ஏனெனில் பூமியின் திண்மைக் கவர்ச்சி அதன் விசையைத் தடுத்துக்கீழே யிழுக்கின்றது. அன்றியும் அந்தக்கல் திரும்பவிழும்போது நிலத்தைக் கிட்டக் கிட்ட அதன்கதி அதிகதீவிரமாயிருக்கும். இது சடபதார்த்தத்தின் தீவிரகதி யெனப்படும்.

மேலும் அக்கல்லை ஆகாயத்தில் உச்சமாயெறியாமல் சாய்வாயெறிந்தால் அதுகொஞ்சத் தூரத்துக்குப் போய் அவ்விடத்தினின்று நிலத்தில் நேரே விழுகிறதில்லை, ஆனால் ஒரு வளைந்த வில் வடிவான வரியையுண்டாக்கி விழுகின்றது. ஏனெனில்நாம்செலுத்தின விசையினாற் கல்லு நேர்வரியாய்ஓடு மியல்பினைக் கொண்டிருக்கப் பூமிக்கவர்ச்சி அதைக்கீழே யிழுத்தலால் ஒவ்வொரு கணப்பொழுதிலும் அவ்விசை குறைந்து குறைந்து கடைசியாய் நிலத்தில் விழுகின்றது.

கல்லு நேரே யோடுதற்கான சார்புதான் புறச்சாரசத்து. அதைப் பூமியிழுக்குங் கவர்ச்சியே அகச்சாரசத்து. இருவகைச் சத்துங் கூடி ஒன்றற்கொன்று எதிராயிழுக்க அக்கல்லின் ஓட்டம் வில்வளைவாய் இருக்கின்றது. பூமியிழுக்குங் கவர்ச்சியை அதாவது பூமியின் அகச்சாரசத்தைப் பூமியின் திண்மைக் கவர்ச்சி யென நாம் கூறுகிறோம். அத்திண்மைக் கவர்ச்சி பூமிக்குச் சகசமாயுள்ளது என சித்தாந்த சிரோமணி 3-ம் அத்தியாயம் 6-வது சுலோகங் கூறுகிறது.

அதன் பொருள் பூமிக்குத் திண்மைக் கவர்ச்சி சகசமாயுள்ளது. இக்கவர்ச்சியால் அந்தரத்துள்ள வஸ்துக்களைப் பூமி தன் வசமிழுக்கின்றது. வஸ்துக்கள் விழுவதாய்த் தோற்றுவது பூமியாலிழுக்கப்படுந் தன்மையே. ஆகாயம் எங்குஞ் சுற்றிலும் பரந்திருக்கப் பூமி விழுவதெங்கே? என்பதாம்.

இதுவே கிரகங்கள் ஒன்றையொன்று சுற்றி அண்டாகாரமாயோடுதற்கு நியாயாதாரமா யிருக்கின்றது. இன்னமும் அதை ஓர் படவாயிலால் விளக்குவோம்.

மேலே வரைந்திருக்கிற அண்டாகாரமானவரி சூரியனைச் சுற்றி வியாழன் ஓடுகிற அயனம் அதாவது பாதையென்று வைத்துக் கொள்க. வியாழன்(அ) என்ற அட்சரங் குறித் திருக்கிற தானத்தில் வரும்போது அதன் புறச்சாரசத்தினால்(இ) குறித்திருக்கிற இடத்தை நோக்கி யோடு மியற்கைச் சார்பைக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் அகச்சாரசத்தினால் அதாவது சூரியனின் கவர்ச்சியால், சூரியனை நோக்கியோடுஞ் சார்பைக் கொண்டிருக்கின்றது. ஆகையால் ஒருபொருளில் இரண்டுகயிறு கட்டி எதிர்வழியா யிழுக்க




அது இடைநடுவாய்ப் போவதுபோல வியாழன் (உ) குறித்திருக்கிற இடத்துக்கு ஓடும். இக்காரணம்பற்றியே பின்பு (க-த-ப-ய-ல-ள குறித்திருக்கிற இடங்களுக்கோடும். இவ்வாறாய் ஒவ்வொரு கணப்பொழுதிலும் இருவகைச் சத்தினாலும் இழுக்கப்பட்டு வியாழன் இடைநடுவாயோடும் பாதையானது அண்டாகாரமாயிருக்கும். இங்ஙனமே மற்றைக்கிரகங்களுந் தத்தம் பாதையில் ஒன்றையொன்று சுற்றியோடுகின்றன.

அன்றியுஞ் சூரியனுக்கு அதிக தூரத்தானமாகிய (த) குறித்த விடத்திலே கிரகம் வரும்போது மந்தோச்சம் என்றும், அதிக சமீபத் தானமாகிய (ள) குறித்த விடத்திலே வரும்போது சீக்கிரோச்சம் என்றும் சொல்லப்படும். கல்லின் உதாரணத்தில் காட்டியபடி மந்தோச்சத்திலிருந்து சூரியனுக்குக் கிட்டக்கிட்டச் சீக்கிரோச்சத்திற்கு வரும்போது சூரியகவர்ச்சி யதிகரித்து அதனாற் கிரகத்தின் கதியுந் தீவிரகதியாயிருக்கும். ஆனால் சீக்கிரோச்சத்திலிருந்து மந்தோச்சத்துக்கு வரும்போது சூரியனினின்று தூரப்பின்னிடுதலால் சூரியக் கவர்ச்சியின் பெலம் வரவரக்குறையும். கிரகங்கள் ஓடும்பாதையில் வெவ்வேறிடத்திலே வெவ்வேறு கதிகொள்வதற்கு இதுவோர் காரணம்.

கிரகங்களினோட்டத்தில் இன்னுமொரு நுணுக்கமிருக்கின்றது. மந்தோச்சத்திலிருந்து சிக்கிரோச்சத்துக்கு வரும்போது அகச்சாரசத்தும் புறச்சாரசத்தும் கூடிக்கிரகத்தை யொரேவழியா யிழுக்கின்றன. ஆனால் சிக்கிரோச்சத்திலிருந்து மந்தோச்சுத்துக் குப் போகும்போது அச்சத்துக்கள் ஒன்றற்கொன்று மாறாயிழுக்கின்றன. கிரகங்களோடும் பாதையிலே வெவ்வேறிடத்தில் வெவ்வேறுகதி கொள்வதற்கு இதுவும்வேறோர் காரணமாயிருக்கின்றது.

இதுதான் ஐரோப்பியர் சாஸ்திரவிதி, மேற்காட்டிய சமஸ்கிருத சுலோகங்களின் கருத்தை யித்துடனொட்டிப்பார்த்தால் நன்றாய் விளங்கும். ஆகவே இந்திய சாஸ்திரங்களில் கிரகங்கள் அண்டாகாரமாயோடுதற்குக் கூறிய காரணங்களே ஐரோப்பிய சாஸ்திரத்திலும் கூறி யிருக்கின்றது. அவைகள் சொற்களில் வித்தியாசமாயிருந்தாலும் பொருளளவில் ஒன்றற்கொன்று சமமாயிருக்கின்றன வென்பதறிக.

இங்ஙனங் கூறியவகையால் கிரகங்கள் ஒன்றையொன்று தத்தம் சத்திகளாலிழுக்கப்பட்டு நிற்கின்றனவெனப் பெறப்பட்டமையின் பூமி நிலை யுறுதற்குரிய சத்திகளையே நம்மவர்கள் ஆதிசேடனென்று உருவகஞ்செய்து கூறினராகும்.

சூரியமண்டலத்துக்குமேல் சந்திரமண்டல முண்டென்பதை மேலே விளக்கினோம்.

விடுப்பது கொண்டாயிரமா மடங்குநிலன் விழுப்புனலை
எடுப்பது கொண்டுளசோதி யிருங்கதிரோ னியற்கையெனக்
கெடுப்பது கொண்டறியாத கிளர்சனங்கட் கம்முறையே
கொடுப்பது கொண்டிறைவிதியாற் கொள்ளுவது மூளன்மன்னே.

என்ற இரகுவம்மிசச் செய்யுளில் சூரியன் பூமியின்நீரை ஆவியாய்ச் சுவற்றி மழையாய் வருஷிக்கிறதென்னுங் கருத்துப்படக் கூறியிருப்பதால அவ்வாவியைச் செலுத்துகின்ற சக்தியையே மேகமென்று உருவகித்ததாகும்.

இவ்விதமாக நமது முன்னோர்கள் முன்னமேயே கண்டு கூறியிருக்கிற விஷயங்களை யுய்த்துணராது அவற்றை யிகழ்ந்து தாம் பயின்ற மேனாட்டார் சாஸ்திரத்தைப் புகழ்வது ஆராய்ச்சிக் குறைவேயாம்.

மேலும் தற்காலத்தில் ஐரோப்பியர் அங்கீகாரம் பண்ணிவருகிற வானசாஸ்திரம் பூரணசாஸ்திரமெனப் புகழத்தக்கதாயில்லை. ஏனெனில் இப்பொழுதுந் திருத்தமடைந்து கொண்டே வருவதன்றி நவநூதன காரியங்கள் நித்தியமுங் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. எங்ஙனமெனில்,

சந்திரகாந்தி சூரியகாந்தியினின்று ஒரு லட்ச மடங்கு குறைவென்று முன்னே கணிக்கப்பட்டது. பின்பு, "லெஸ்லீ" என்னும் பண்டிதர் அது லட்சத்தைம்பதினாயிரமடங்கு குறைவென்று கணித்திருக்க, இப்போது மூன்றுலட்சமடங்கு குறைவென்று பிறர் கணிக்கிறார்கள். ஆகையால் இன்னுங் காலஞ்செல்லச்செல்ல எத்தனைமடங்கு குறையுமென்பாரோ தெரியாது.

மேலும் ஆதியிலே சந்திரன் பூமியைச் சுற்றியோடும் ஒரு உபக்கிரக மென்றறிந்ததேயன்றி வேறொன்று மதிகமா யதைப் பற்றி யறிந்திலர். ஆனாற் பின்பு சந்திரனில் ஏறக்குறைய நூற்றைம்பது மலைகளிருக்கின்றனவெனவும், அவைகளினுயர்ச்சி கால் மயில்முதல் ஐந்துமயில் வரையிலும் அடியகற்சி ஒரு மயில்முதல் எழுபதுமயில் வரையிலு முள்ளனவெனவும், அனேக அலைகளும் குழிகளுமிருக்கின்றனவெனவும், அக்குழிகளிற் சில நாலுமயில் தாழ்வும் நாற்பதுமயில் அகலமுமுள்ளனவெனவுங் கண்டிருக்கிறார்கள். சந்திரனில் இருபது, முப்பது சுடல்களிருந்தனவென்று முன்னொருகாலத்திலெண்ணினார்கள்; ஆனாலிக்காலத்துச் சாஸ்திரிகள் யாதொருகடலு மில்லையெனச் சாதாரணமாய் நினைக்கிறார்கள். சில வருடத்திற்குமுன் ஒரு பண்டிதர்சந்திரனிலே கோட்டையை நிகர்த்த ஓர் கட்டிடத்தையுஞ் சில தெருவீதிகளையுங்கண்டேன் எனக்கூறினார். வேறொரு பண்டிதர் சந்திரனின் கீழ்ப்பாகத்தில் ஓர் பாரியநகரமும் ஓரிடத்திலொரு விஸ்தாரமான வெட்டாறும் மற்றோரிடத்தில் பயிர்ச்செய்கையுள்ள வயல்களுமிருக்கிறதா யுத்தேசித்தார். ஆகையால் இவற்றினும் மிக்கநூதனங்களைச் சுறுக்கிற கண்டுபிடிக்கக் கூடியது ஆச்சரியமன்று.

அன்றியும் முற்காலத்திலே சூரியன் ஓரேயிடத்தில் அசலமாய் நின்றதெென நினைத்தார்கள். ஆனாலிப்போது அது தன்னைப் பார்க்கிலும் பெரிய வேறோர் வஸ்துவைத் தன் கிரகங்களோடு சுற்றுகின்றதெனக் கொள்ளுகின்றார்கள். "அல்சியோன்" என்ற

பிரமாண்ட நட்சத்திரம் அண்டத்தின் நடுமையாயிருக்க அதைச் சுற்றிச் சூரியனுங் கிரகங்களுமோடுகிறதாய்க் கண்டுபிடித்தே னென ருஷியதேசத்துச் சாஸ்திரி ஒருவர் கூறினர். அந்த நட்சத்திரத்தைச் சுற்றிச் சூரியனொருதரமோடி முடித்தற்கு ஒரு கோடியே எண்பதிலட்சம் வருஷம் செல்லுமெனவும் ஒருமணி நேரத்தில் 28,000-மயில் வீதம் ஓடுகின்றதெனவும் கணக்கிட்டிருக்கிறார்கள். அப்போது அந்த நட்சத்திரத்தைச்சுற்றிச் சூரியனேடும் பாதையின் தூரத்தைக் கணக்கிட்டால் நாற்பத்துநாலு மகாகோடியே பதினேந்துலட்சத்து நாலாயிரகோடி மயிலேயாம்.

மேலுஞ் சூரியனைச்சுற்றிக் கிரகங்கள் வட்டமாயோடின வென்று முன்னைக்காலத்தில் நினைத்தார்கள். ஆனால் ஆயிரத்து நானூற்றுச்சில்வான ஆண்டில் ஜெர்மனிதேசத்துச் சாஸ்திரியாகிய "கெபிலர்" என்றவர் இது தப்பிதமென்றுங் கிரகங்கள் அண்டாகாரமாய்ச் சுற்றுகின்றனவென்றுங் கண்டுபிடித்தார்.

முன்னே சூரியன்தான் பிரமாண்டத்திற்கு நடுமையமென்று நினைத்தார்கள். ஆனலிப்போது ஒவ்வொரு நட்சத்திரமும், ஒவ்வொரு சூரியனைப்போலிருக்க அதைச்சுற்றி வேறு கிரகங்களோடுகின்றனவென்று நிதானித்திருக்கிறார்கள்.

மேற்காட்டிய தொலிமியின்விதியே சரியான விதியென்று அக்காலத்து ஐரோப்பியர் அங்கீகாரம் பண்ணினபோது அதுவே பூரணமான சத்தியசாஸ்திரமென்று அவர்கள் சாதித்திருக்கலாம். ஆகில் கொப்பேணிக்கஸ் என்பவர் அவ்விதிகளில் முக்கியமான அநேக விஷயங்களை முற்றாய்த்தள்ளிப் புதுவிதிகளைக் கற்பித்திருக்கவும், அங்ஙனங் கற்பித்தபின் அனேக நவமான காரியங்களைக் கண்டுபிடித்திருக்கவும், சில முக்கியவிஷயங்களைத் திருத்தியிருக்கவும், இவ்விதி பூரணமானதென்று சொல்வதெப்படி? இப்போது பூமியில் வசிக்கிற நம்மைவிட அதிக விவேகிகள் இனிமேல் ஒரு காலத்திற் பிறந்திருக்கும்போது இவ்விதியையும் முற்றாய்த் தள்ளி வேறு புதுவிதிகளைச் செய்யவுங் கூடியதே.

மேலுங் கண்ணுக்குத் தோற்றாத நட்சத்திரங்கள் அதாவது உலகங்கள் பிரமாண்டத்திற் பத்துக்கோடி யளவுக்கு இருக்கின்றனவென்று சிலகாலத்துக்கு முன் தூரதிருட்டிக் கண்ணாடி மூலமாய்க் கணித்திருக்கிறார்கள். நட்சத்திரத் தொகை எண்ணிறந்த

தென்றுஞ் சிலர் வாதிக்கிருர்கள். ஏனெனில் எண்ணுக்கடங்கி யள வற்ற ஆகாயவிரிவி லொருபகுதியில் மாத்திர மிருக்கின்றன வென் கில் முடிவிலிருக்கிற நட்சத்திரங்களை யுள்ளே யிருக்கிறவைகள் கவர்ந்திழுத்துக் காலஞ் செல்லச்செல்ல ஒன்றுபடக் கூடிக்கொள் ளும். ஆகில் நட்சத்திரங்கள் எண்ணிறந்தவைகளாயிருந்து அளவி றந்த ஆகாயவிரிவு முழுதிலும் பரம்பியிருந்தால் நட்சத்திரங்க ளெல்லாஞ் சரிசமனுய் ஒவ்வொருபக்கத்திலும் ஒன்றை யொன்றி ழுத்து எல்லாந் தத்தம் இடத்தில் நிற்கும் என்கிருர்.

இவ்வாறு ஐரோப்பிய வானசாஸ்திரிகள் தம் ஆராய்ச்சியில் ஒருவர்க்கொருவர் மாறுபட்டும் முடிவுபெருதும் இருப்பதால் அவர்கள் சாஸ்திரம் பூரணசாஸ்திர மெனப் புகழத் தக்கதன்று மெனவறிக.

இத்தன்மைத்தாகிய புவர்லோகத்தின் மேற் கண்ணதான சுவர்லோகத்தில் தேவர்கள் போற்றத் தேவேந்திரனிருப்பன், அதற்கதிபதி பீமன். அதன்மேலுள்ள மகலோகத்தில் மார்க்கண் டேயர் மரீசி முதலான 48,000-இருடிகள் வைகுவர். அதற்கதிபதி பவன். அதன்மேலுள்ள சனலோகத்தில் தென்புலத்தாராகிய பிதிர் தேவதைகள் வைகுவர். அதற்கதிபதி உருத்திரன். அதன்மே லுள்ள தவலோகத்தில் சனகாதி முனிவர் வைகுவர். அதற்கதி பதி மகாதேவன். அதன்மேலிடமாகிய சத்தியலோகத்தில் சரஸ் வதி பிரமகாயத்திரி யிருப்பள். அதுவேபிரமலோகப் பிரமாவிற்குப் போகதலம். அதிலிருந்து பிரமாசிருட்டிப்பர். அதற்கதிபதி ஈசா னன். அதன்மேலுள்ள பிரமலோகத்தில் புவனேசுரன் என்னும் நாமத்தை யுடைய பிரமாவிருப்பர். அதன்மேற் கண்ணதான விஷ் ணுலோகத்தில் விஷ்ணு பதுமாசனத்தி லிருந்து தமது முத் தொழிலைச் செய்வர். அதன்மேற்பட்ட சிவலோக மென்னும் உருத்திர லோகத்தில் வைகும் உருத்திரர் பரமசிவனுடைய இச் சாசத்தியைப் பொருந்தி உமையோடு கூடியிருந்து பிரமவிஷ்ணுக் களைத் தத்தம் தொழிலிலேவித் தம்தொழிலாகிய சங்கார கிருத்தி யத்தைச் செய்வர். இவரைவழிபடுவோர் சிகண்ட வுருத்திரால் அனுக்கிரகிக்கப் பட்டுச் சிவலோகமடைவர்.

இங்ஙனம் 100-கோடி யோசனையுள்ள பிரமாண்ட லட்சணம் ஒருவாறு தொகுத்துக் காட்டப்பட்டதென அறிக.




வண்ணத்துவா.

Solden & Co., Printers, Madras, S,E




பதாத்துவா.

Solden & Co., Printers, Madras, S,E

## வன்னம்.

வன்னமென்பது வர்ணமென்னும் வடமொழிச் சிதைவு. வர்ணம்=அக்கரம்.

அக்கரகங்கள் முன்னர்க் கூறியபடி விந்துசத்தியின் காரியங்களாகும். அவை, ஐ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஐ, ஐ். ஏ, ஐ, ஓ, ஔ, ஓ, ஔ, அம், அ: எனும் உயிரெழுத்துப் பதினாறும், க, வ, ம, ஙு, ஜ, வு, ஹ, ஜ, ஸ, ஞ, ட, ம, வ, வ, ண, த, ய, ஒ, ய, ந, வ, ஸ, ஸ, ஹ, ழ, ய, ர, ல, வ, ஶ, ஷ, ஸ, ஹ, ஊ, க்ஷ எனும் மெய்யெழுத்து முப்பத்தைந்தும் ஆக ஐம்பத்தொன்று. அவற்றுள் க முதல் கஃ வரை பதினாறும் சாந்தியாதீதகலையிலும், க, வ, ம எனு மூன்றுஞ் சாந்திகலையிலும், வ முதல் ஞ வரை எழும் வித்தியாகலையிலும், ட முதல் ஊ வரை இருபத்துநான்கும் பிரதிட்டாகலையிலும், க்ஷ ஒன்றும் நிவர்த்தி கலையிலும் அடங்கும்.

அகார முதலிய உயிரெழுத்துக்களுக்கு அதிபதி சிவமும், ககாரமுதலிய மெய்யெழுத்துக்களுக்கு அதிபதி சத்தியுமாவர். மேலும் அவைகள் எட்டு வர்க்கங்களாகப் பிரிக்கப்படின் அகாராதி பதினாறுக்கும் அதிதேவதை கணேசர்; ககாராதிக்ஷகாராந்தமான எழுவர்க்கங்களுக்கும் அதிதேவதை பிராமியாதி சப்தமாதர்கள். அகாராதி பதினாறு எழுத்துக்களும் பராசத்திக்குச் சூக்குமரூபமென்றும், ககாராதி முப்பத்தைந்து எழுத்துக்களும் தூலரூபமென்றுங் கூறுவர்

## பதம்.

மேலே கூறிய எழுத்துக்களின் சேர்க்கையாலானவை பதங்கள். அத்துவாவின்பாற்பட்ட பதங்கள் எண்பத்தொன்றும். அவையாவன: ஓம் வ்யோமவ்யாபிநே, வ்யோமரூபாய, ஸர்வவ்யாபிநே, ஶிவாய, அநந்தாய, அநாதாய, அநாஶ்ரிதாய, த்ருவாய, ஶாஶ்வதாய, யோகபீடஸம்ஸ்திதாய, நித்யயோகிநே, த்யாநாஹாராய, ஓம் நமஶ்ஶிவாய, ஸர்வப்ரபவே, ஶிவாய, ஈஶாநமூர்த்தயே, தத்புருஷ வக்த்ராய, அகோரஹ்ருத

𑌯𑌾𑌯, 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌯, 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇, 𑍐
𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃. 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌤𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌯, 𑌗𑍋𑌪𑍍𑌤𑍍𑌰𑍇, 𑌅𑌨𑌿𑌧𑌨𑌾𑌯,
𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌾𑌯, 𑌜𑍍𑌯𑍋
𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌯. 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑌰𑌾𑌯, 𑌅𑌚𑍇𑌤𑌨 𑌅𑌚𑍇𑌤𑌨,
𑌵𑍍𑌯𑍋𑌮𑌿𑌨𑍍 𑌵𑍍𑌯𑍋𑌮𑌿𑌨𑍍, 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍍 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍍, 𑌅𑌰𑍂𑌪𑌿𑌨𑍍 𑌅𑌰𑍂
𑌪𑌿𑌨𑍍, 𑌪𑍍𑌰𑌥𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮, 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌃, 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃,
𑌅𑌰𑍂𑌪, 𑌅𑌨𑌗𑍍𑌨𑍇, 𑌅𑌧𑍂𑌮, 𑌅𑌭𑌸𑍍𑌮, 𑌅𑌨𑌾𑌦𑍇, 𑌨𑌾 𑌨𑌾 𑌨𑌾 𑌨𑌾,
𑌧𑍂𑌧𑍂𑌧𑍂𑌧𑍂, 𑍐𑌭𑍂𑌃, 𑍐𑌭𑍁𑌵𑌃, 𑍐𑌸𑍍𑌵𑌃, 𑌅𑌨𑌿𑌧𑌨,
𑌨𑌿𑌧𑌨, 𑌨𑌿𑌧𑌨𑍋𑌦𑍍𑌭𑌵, 𑌶𑌿𑌵, 𑌸𑌰𑍍𑌵, 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍, 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰,
𑌮𑌹𑌾𑌦𑍇𑌵, 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍇𑌶𑍍𑌵𑌰, 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌃, 𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌪𑌤𑍇,
𑌮𑍁𑌞𑍍𑌚 𑌮𑍁𑌞𑍍𑌚, 𑌪𑍍𑌰𑌥𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮, 𑌶𑌰𑍍𑌵 𑌶𑌰𑍍𑌵, 𑌭𑌵 𑌭𑌵, 𑌭𑌵𑍋
𑌦𑍍𑌭𑌵, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦, 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌕𑌰, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁
𑌰𑍁𑌦𑍍𑌰𑌪𑌰, 𑌅𑌨𑌰𑍍𑌚𑌿𑌤 𑌅𑌨𑌰𑍍𑌚𑌿𑌤, 𑌅𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤 𑌅𑌸𑌂
𑌸𑍍𑌤𑍁𑌤, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤, 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌨𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌨𑍍, 𑌤𑍁𑌰𑍁
𑌤𑍁𑌰𑍁, 𑌪𑌤𑌙𑍍𑌗 𑌪𑌤𑌙𑍍𑌗, 𑌪𑌿𑌙𑍍𑌗 𑌪𑌿𑌙𑍍𑌗, 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨, 𑌶𑌬𑍍𑌦
𑌶𑌬𑍍𑌦, 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮, 𑌶𑌿𑌵, 𑌶𑌰𑍍𑌵, 𑌸𑌰𑍍𑌵𑌦, 𑍐𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃,
𑍐 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃. 𑍐||

ஓம், வ்யோமவ்யாபிநே, வ்யோமரூபாய, ஸர்வவ்யாபிநே, சிவாய, அநந்தாய, அநாதாய, அநாச்ரிதாய, த்ருவாய, சாச்வதாய, யோகபீடஸம்ஸ்திதாய, நித்யயோகிநே, த்யாநஹாராய, ஓம்நமச்சிவாய, ஸர்வப்ரபவே, சிவாய, ஈசாநமூர்த்தாய, தத்புருஷவக்த்ராய, அகோரஹ்ருதயாய, வாமதேவகுஹ்யாய, ஸத்யோஜாதமூர்த்தயே, ஓம்நமோநம:, குஹ்யாதிகுஹ்யாய, கோப்த்ரே, அநிதநாய, ஸர்வயோகாதிக்ருதாய, ஸர்வவித்யாதிபாய, ஜ்யோதிரூபாய, பரமேச்வரபராய, அசேதந அசேதந, வ்யோமிந் வ்யோமிந், வ்யாபிந் வ்யாபிந், அரூபிந் அரூபிந், ப்ரதம ப்ரதம, தேஜஸ்தேஜ:, ஜ்யோதிர்ஜ்யோதி:, அரூப, அநக்நி, அதூம, அபஸ்ம, அநாதே, நாநா நாநா,

தூதூதூதூ, ஓம் பூ:, ஓம்புவ:, ஓம்ஸுவ:, அநிதந, நிதந. நிதநோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மந், மஹேச்வர, மஹாதேவ, ஸத்பாவேச்வர, மஹாதேஜ:, யோகாதிபதே, முஞ்சமுஞ்ச, ப்ரதமப்ரதம, சர்வசர்வ, பவபவ, பவோத்பவ, ஸத்வபூதஸுகப்ரத, ஸர்வஸாந்நித்யகர, ப்ரஹ்மவிஷ்ணுருத்ரபர, அநர்ச்சித அநர்ச்சித, அஸம்ஸ்துத அஸம்ஸ்துத, பூர்வஸ்தித பூர்வஸ்தித, ஸாக்ஷி ஸாக்ஷி, துருதுரு, பதங்க பதங்க, பிங்கபிங்க, ஜ்ஞாநஜ்ஞாந, சப்த சப்த, ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம, சிவ, சர்வ, ஸர்வத, ஓம்நமோநம:, ஓம்சிவாய நமோநம: ஓம், என்பனவாம்.

இவற்றில் சாந்தியாதீதகலையில், ஓம் என்னும் பதம் ஒன்று; சாந்திகலையில், வ்யோமவ்யாபிநே முதல் நித்யயோகிநேயீறாக, பதம் பதினொன்று; வித்தியாகலையில், த்யாநஹாராய முதல் வ்யாபிந் வியாபிந் ஈறாக, பதம் இருபது; பிரதிட்டாகலையில் அரூபிந் அரூபிந்முதல் மஹேச்வர ஈறாக, பதம் இருபத்தொன்று; நிவிர்த்திகலையில் மஹாதேவமுதல் ஓம் ஈறாக, பதம் இருபத்தெட்டு.

## மந்திரம்.

மந்திராத்துவாவிற்குரிய மந்திரங்களாவன: சிவ, ஈசாந, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத, அஸ்த்ர, கவச, சிகா, சிரோ, ஹ்ருதய எனும் பதினொன்று.

இவற்றுள் சாந்தியாதீதகலையில், சிவ, ஈசாந, அஸ்த்ர எனு மூன்று; சாந்திகலையில் தத்புருஷ, கவச எனும் இரண்டு; வித்தியாகலையில், அகோர, சிகா எனும் இரண்டு; பிரதிஷ்டாகலையில், வாமதேவ, சிரோ எனும் இரண்டு; நிவிர்த்திகலையில் ஸத்யோஜாத, ஹ்ருதய எனும் இரண்டு.

இங்ஙனம் கூறிப்போந்த ஆறு அத்துவாக்களில் வர்ணாத்துவா, பதாத்துவா, மந்திராத்துவா எனும் மூன்றும் சொற்பிரபஞ்சமாகவும், புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா எனும் மூன்றும் பொருட்பிரபஞ்சமாகவும் கொள்ளப்படும்.

## இதயதாமரை.

இங்ஙனம் கூறிய ஆறத்துவாக்களில் தத்துவாத்துவாவின்பாற் பட்டமுப்பத்தாறு தத்துவங்களும் சிவபெருமானை அகத்தே பூசித்தற்குரிய இதயதாமரையாயமைந்து நிற்கும். அஃதாமாறு:—

பிருதிவிதத்துவம் நாபித்தானத்திலே மாணிக்கம் போன்ற நிறத்தையுடைய கிழங்கு.

அப்பு முதல்காலமீறாக. 29–தத்துவங்களும் நீல நிறத்தையுடைய நாளம் (தாமரைக்கொடி.) அது எட்டங்குல நீளமும் நவத்துவாரமும் பொருந்தியது. புத்தியின் காரியமாகிய ஐம்பது விதபாவங்களும் அத்தாமரைத் தண்டினூல்கள்.

மாயையென்னுந் தத்துவமானது அந்தநாளத்தி னுனியிலே பூவினடியிலே பொருந்திய முடிச்சு.

காலாக்கினி முதல் புவனேச மீறாகிய புவனம் 191–ம் தாமரைத் தண்டின்மேலுள்ள பவளம்போன்ற 191–முட்கள்.

சுத்தவித்தியா தத்துவம் சுவேதநிறத்தினை யுடைய தாமரைப் பூ. இதில் கிழக்குமுதலாகக் கொண்டு அடைவே ஓம் என்னும் எட்டக் கரங்களும் நாலங்குல நீளத்தினையுடைய எட்டுமுழுவிதழ்களாயுள்ளன. இந்திராதி திக்குப்பாலகர் பீஜமான யகராதிஹகாராந்த மெட்டு அக்கரங்களென்றலு முண்டு. இவ்வெட்டிதழ்களையும் அட்ட வித்தியேசுரர் அதிட்டித்து நிற்பர். இதுமலர்ந்த போது பன்னிரண்டங்குல விரிவினையுடையது. இதற்கு உபதளங்கள் அனேகமுள.

ஈச்சுரதத்துவம் ஓடவைத்த பொன்போன்றதும், நுனியில் முத்துப் போன்றதுமான கேசங்கள் 64.

சாதாக்கிய தத்துவம் பூவின்மத்தியிலுள்ள கர்ணிகை (தாமரைக்காய்) அது ஓரங்குல உயரமுடையது; பொன்போன்ற நிறமுடையது.

விந்துதத்துவமானது அந்தக்கர்ணிகையிலுள்ள அ. முதல் க்ஷ ஈறாகிய 51–அக்கர சொரூபமான 51–விதைகள்.

நாததத்துவமானது அவைகளுக் குள்ளிருக்கும் முளையும் அப்பூவின் கந்தமுமாகும்.

இவற்றுள் இதழ் முனைகளாலாகிய விருத்தம் சூரியமண்டலம். கேசாமுனைகளாலாகிய விருத்தம் சந்திரமண்டலம். கர்ணிகையின் முனை விருத்தம் அக்கினி மண்டலம்.




Solden & Co., Printers, Madras, S,E




20 படம். இதயதாமரை.

அன்றியும் மூலாதாரத்திலே கூர்மமும், கூர்மத்தின் நடுவே ஆதாரசத்தியும், கூர்மத்தின்மேல் அனந்தனுக்குப் பத்மாசனமும் அதன்மேலே அநந்தன் நாபியளவும், அவ்வனந்தன் சிரசிலே பிருதிவியாகிய தாமரைக் கிழங்கு முதலாகக் கொண்டுங் கூறுவர்.

இத்தன்மைத்தாகிய இதைய பதுமம் வாழைப் பூப்போல அதோமுகமாய் (கீழ்முகமாய்) நாலங்குலந் தாழ்ந்திருக்கும். அதனை உத்தம பீஜமந்திரத்தால் மேனோக்கி மலரச்செய்து அதன்மத்தியில் ஷடத்துவ சொரூப சிவலிங்கத்தில் ஈசுரனைப் பூசிப்பது கடமையாகும்.

## சிவலிங்கம்.

முற்கூறிய ஆறத்துவாக்களும் சிவலிங்கத்தில் நிற்குமுறைமையெங்ஙன மெனின்: நிவிர்த்திகலை பிரதிட்டாகலை இரண்டுங் கொண்டது பிரமபாகமும் வித்தியாகலை ஒன்றும் விஷ்ணுபாகமும் சாந்திகலை சாந்தியாதீதகலை யிரண்டுங் கொண்டது உருத்திரபாகமுமாகும். அதைச்சித்தாந்தப் படத்தில் அமைந்திருக்கும் சிவலிங்க வடிவத்தினால் நன்கறியலாம். ஏனையதத்துவ புவன வர்ண பத மந்திரங்களில் அவ்வக்கலைக் குரியவற்றை முன்னர்க் கூறியிருக்குமடைவிலறிக.

மேலும் இவ்வத்துவாக்கள் ஆறும் ஈஸ்வரனுக்குச் சரீரமாம். எங்ஙனமெனின், சாந்தியாதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலை மார்பு, பிரதிட்டாகலை குய்யம், நிவிர்த்திகலை முழந்தாளும் பாதமுமாக இவ்வாறு பஞ்சகலைகளும் அங்கமாகும்: புவனங்கள் உரோமமும், வர்ணங்கள் தோலும், மந்திரங்கள் இரத்தமும், பதங்கள் நரம்பும், தத்துவங்கள் என்புந் தசையுமாகும்.

அவயவங் கலைக ளாகு மாதிய புவன ரோமஞ்
சுவையுறு துவக்கு வன்னஞ் சோரிமந் திரம தாகுந்
தவமுறு பதந ரம்பு தத்துவந் தாது வாகுஞ்
சிவமுயர் சதாசி வர்க்குச் சிறந்தவா றுறுப்புந் தானே.

## தத்துவங்களியங்கு முறைமை.

இனி ஆன்மாவைப் பற்றிநிற்கும் அசாதாரண தத்துவங்கள் தொழிற்படுவ தெவ்வாறெனில்,

இச்சாசத்தி ஈச்சுரதத்துவத்தை நடத்தும் (இயக்கும் என்றபடி). ஞானசத்தி நாததத்துவத்தையும் சுத்த வித்தியா தத்துவத்தையும் நடத்தும். கிரியாசத்தி விந்துதத்துவத்தையும் சாதாக்கிய தத்துவத்தையும் நடத்தும். இவ்விதஞ் சுத்ததத்துவங்களைந்தும் சிவசத்திகளாலே தொழிற்படும்.

இச்சை நடத்தியிடு மீச்சுரா தத்துவத்தை
மெய்ச்சத்தி சாதாக்கிய மேவியிடும்—நிச்சயமே
யேன்ற கிரியை நடத்தியிடு மெய்ஞ்ஞான
மேன்றசிவஞ் சுத்தவித்தை யாம்.

சுத்தஞ் சிவமிரண்டுந் தோன்றியிடு ஞானத்திற்
சத்திசா தாக்கியமுஞ் சார்கிரியை—யிச்சைதரு
மீசர்தமை யிம்மூன்று மெண்ணுபரை யிப்பரைக்கிங்
காசிலரு ணற்சிவமே யாம்.

இனி இந்தச் சிவதத்துவங்களைந்தும் வித்தியா தத்துவங்களேழையும் நடத்துமாறு: நாததத்துவம் மாயை (காரியமாயை) என்னுந் தத்துவத்தை நடத்தும். விந்துதத்துவம் காலம் நியதி கலையென்னும் மூன்றையும் நடத்தும். சுத்தவித்தியா தத்துவம் வித்தையை நடத்தும். ஈச்சுரதத்துவம் அராகதத்துவத்தை நடத்தும். சாதாக்கிய தத்துவம் புருடதத்துவத்தை நடத்தும். இங்ஙனம் வித்தியாதத்துவங்களேழும் காரியப்படும்.

கால நியதி கலைசத்தி தானடத்து
மேலும்வித்தை வித்தையரா கம்மீசர்—சாலவே
மாயை சிவம்புருடன் சாதாக்கிய மேவி
நேய முடனடுத்து நின்று.

இனி விந்துவிற் றோன்றிய பிரணவம் அந்தக்கரணங்களை நடத்துமாறு: அகங்காரத்தை § அகாரமும், புத்தியை உகாரமும் மனதை மகாரமும், சித்தத்தை விந்துவும் நடத்தும். உள்ளமென்று ஓர் அந்தக்கரண முண்டென்பாரு முளர். அதைநாதஞ் செலுத்தும்.

## துகளறுபோதம் நூல். 11.

மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை
யுன்னு முகார முபகரிக்கு—முன்னகு
மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு
நீங்காத சித்தம்விந்து நேர் என்றும்.

அன்றியும் மூலாதாரத்திலே கூர்மமும், கூர்மத்தின் நடுவே ஆதாரசத்தியும், கூர்மத்தின்மேல் அனந்தனுக்குப் பத்மாசனமும் அதன்மேலே அநந்தன் நாபியளவும், அவ்வனந்தன் சிரசிலே பிருதிவியாகிய தாமரைக் கிழங்கு முதலாகக் கொண்டுங் கூறுவர்.

இத்தன்மைத்தாகிய இதைய பதுமம் வாழைப் பூப்போல அதோமுகமாய் (கீழ்முகமாய்) நாலங்குலந் தாழ்ந்திருக்கும். அதனை உத்தம பீஜமந்திரத்தால் மேனோக்கி மலரச்செய்து அதன்மத்தியில் ஷடத்துவ சொரூப சிவலிங்கத்தில் ஈசுரனைப் பூசிப்பது கடமையாகும்.

## சிவலிங்கம்.

முற்கூறிய ஆறத்துவாக்களும் சிவலிங்கத்தில் நிற்குமுறைமையெங்ஙன மெனின்: நிவிர்த்திகலை பிரதிட்டாகலை இரண்டுங் கொண்டது பிரமபாகமும் வித்தியாகலை ஒன்றும் விஷ்ணுபாகமும் சாந்திகலை சாந்தியாதீதகலை யிரண்டுங் கொண்டது உருத்திரபாகமுமாகும். அதைச்சித்தாந்தப் படத்தில் அமைந்திருக்கும் சிவலிங்க வடிவத்தினுல் நன்கறியலாம். ஏனையதத்துவ புவன வர்ண பத மந்திரங்களில் அவ்வக்கலைக் குரியவற்றை முன்னர்க் கூறியிருக்குமடைவிலறிக.

மேலும் இவ்வத்துவாக்கள் ஆறும் ஈஸ்வரனுக்குச் சரீரமாம். எங்ஙனமெனின், சாந்தியாதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலை மார்பு, பிரதிட்டாகலை குய்யம், நிவிர்த்திகலை முழந்தாளும் பாதமுமாக இவ்வாறு பஞ்சகலைகளும் அங்கமாகும்: புவனங்கள் உரோமமும், வர்ணங்கள் தோலும், மந்திரங்கள் இரத்தமும், பதங்கள் நரம்பும், தத்துவங்கள் என்புந் தசையுமாகும்.

அவயவங் கலைக ளாகு மாதிய புவன ரோமஞ்
சுவையுறு துவக்கு வன்னஞ் சோரிமந் திரம தாகுந்
தவமுறு பதந ரம்பு தத்துவந் தாது வாகுஞ்
சிவமுயர் சதாசி வர்க்குச் சிறந்தவா றுறுப்புந் தானே.

## தத்துவங்களியங்கு முறைமை.

இனி ஆன்மாவைப் பற்றிநிற்கும் அசாதாரண தத்துவங்கள் தொழிற்படுவ தெவ்வாறெனில்,

இச்சாசத்தி ஈச்சுரதத்துவத்தை நடத்தும் (இயக்கும் என்றபடி). ஞானசத்தி நாததத்துவத்தையும் சுத்த வித்தியா தத்துவத்தையும் நடத்தும். கிரியாசத்தி விந்துதத்துவத்தையும் சாதாக்கிய தத்துவத்தையும் நடத்தும். இவ்விதஞ் சுத்ததத்துவங்களைந்தும் சிவசத்திகளாலே தொழிற்படும்.

இச்சை நடத்தியிடு மீச்சுர தத்துவத்தை
மெய்ச்சத்தி சாதாக்கிய மேவியிடும்—நிச்சயமே
யேன்ற கிரியை நடத்தியிடு மெய்ஞ்ஞான
மேன்றசிவஞ் சுத்தவித்தை யாம்.

சுத்தஞ் சிவமிரண்டுந் தோன்றியிடு ஞானத்திற்
சத்திசா தாக்கியமுஞ் சார்கிரியை—யிச்சைதரு
மீசர்தமை யிம்மூன்று மெண்ணுபரை யிப்பரைக்கிங்
காசிலரு ணற்சிவமே யாம்.

இனி இந்தச் சிவதத்துவங்களைந்தும் வித்தியா தத்துவங்களேழையும் நடத்துமாறு: நாததத்துவம் மாயை (காரியமாயை) என்னுந் தத்துவத்தை நடத்தும். விந்துதத்துவம் காலம் நியதி கலை யென்னும் மூன்றையும் நடத்தும். சுத்தவித்தியா தத்துவம் வித்தையை நடத்தும். ஈச்சுரதத்துவம் அராகதத்துவத்தை நடத்தும். சாதாக்கிய தத்துவம் புருடதத்துவத்தை நடத்தும். இங்ஙனம் வித்தியாதத்துவங்களேழும் காரியப்படும்.

கால நியதி கலைசத்தி தானடத்து
மேலும்வித்தை வித்தையரா கம்மீசர்—சாலவே
மாயை சிவம்புருடன் சாதாக்கிய மேவி
நேய முடனடுத்து நின்று.

இனி விந்துவிற் றோன்றிய பிரணவம் அந்தக்கரணங்களை நடத்துமாறு: அகங்காரத்தை § அகாரமும், புத்தியை உகாரமும் மனதை மகாரமும், சித்தத்தை விந்துவும் நடத்தும். உள்ளமென்று ஓர் அந்தக்கரண முண்டென்பாரு முளர். அதைநாதஞ் செலுத்தும்.

துகளறுபோதம் நூல். 11.

மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை
யுன்னு முகார முபகரிக்கு—முன்னகு
மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு
நீங்காத சித்தம்விந்து நேர் என்றும்.

### சிவஞானபோதம் 4-சூ-ம். 1-அ-ம்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்தி—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று. என்றும் வரும்.

மற்றைய கருவிகள் இவ்வந்தக்காணங்களாற் றொழிற்படும். அவை தொழிற்படு முறையை அவஸ்தைவகையில் கூறப்படும்.

இங்ஙனந் தத்துவங்களெல்லாம் சிவசத்திகளாலே தொழிற்படும்.

### தத்துவங்களின் தொழில்.

அவ்வாறு சிவசத்திகளாலே காரியப்பட்ட தத்துவங்கள் ஆன்மாவுக் கறிவைப் பிரகாசிப்பிக்கும். எப்படியெனில்: கிரியா சத்தி சத்தி தத்துவத்தை யெழுப்பச் சத்தி தத்துவம் காலம் நியதி கலைகளை யெழுப்ப கலை தழற் பொடிநீங்கினாற்போலவும், பாசிமூடின குளத்தில் கல்லு விட்டெறிந்த பொழுது அந்தக்கல்லு விழுந்த விடம் பாசி நீங்கினாற்போலவும் ஆணவமலத்தை ஆன்மாவின்கன்மத்துக் கீடாகச் சிறிதே நீக்கி அதற்குச் சிறிதறிவைப் பிரகாசிப்பிக்கும். அதனால் இந்திரியங்களின் பயனாகிய விடயங்களை ஆன்மாப் பொருந்தும்.

ஞானசத்தி சுத்தவித்தையை யெழுப்பச் சுத்தவித்தை வித்தையை யெழுப்ப வித்தையானது அந்தவிடயங்களை ஆன்மாக் கொள்ளுமிடத்து இன்னதென்று நிரூபித்தறியத்தக்க ஞானத்தை ஆன்மாவுக்கும் விடயங்களுக்கும் நடுவே நின்று அறிவுண்டாம் படிக் கூட்டும். விஷயதரிசனத்திலே ஆன்மாவுக்கு யாதொன்று உதவியோ அது வித்தையெனப் படும்.

இச்சாசத்தி யீச்சுரதத்துவத்தை யெழுப்ப ஈச்சுரதத்துவம் அராகதத்துவத்தை யெழுப்ப அராகதத்துவம் ஆன்மாக்கள் செய்தகன்மத்துக் கீடாகப் பெற்றதிலே நின்றும் பெறாததுக்காசையை மிகவு முண்டாக்கும். இந்த அராகம் அப்பியாசரூப மென்றும் அறிவு ரூபமென்றும் இருவகைப்படும். அப்பியாச ரூபமானது ஆன்ம ஞானசம்பந்தியாயிருக்கும். அறிவுரூபமானது புத்தியோடு கூடிவிடயங்களைப் பற்றினதாயிருக்கும். ஆணவதர்மமாகிய மோகாதிகளின் பரிபாகத்திலே விடயவைராக்கியம் தோன்றி விடயத்தி

யாகம் பண்ணவே அறிவுருபவராகம்போம். அப்போது வாசனுருப வராகமானது மோட்சத்திலே யிச்சையைச் செய்ய அதனாலே சத்திநிபாத முண்டாகத் தீக்கையினால் அறவொழியும்.

சத்திதத்துவத்தால் எழுப்பப்பட்ட நியதிதத்துவமானது அரசனுடைய ஆக்கினையைக்கொண்டு உலகிலான்மாக்களை எல்லை விட்டுக் கடவாதபடி யந்தவாக்கினையிலே நிறுத்தி நடத்தும் மந்திரியைப்போல் காலநியமனத்தைப் பண்ணி ஒருவர்பண்ணின கர்ம பலத்தை வேறொருவர் புசியாதபடியும் விஷயசௌந்தரியத்தினாலே அதிகப் பிரவிர்த்திகள் வாராதபடியும், பிராப்தமான பாபபலபோகம் அநிஷ்டமென்று விடாதபடியும் பரிபக்குவமான கர்மபலத்தை முன் பின்னாகப் புசிப்பிக்க வொட்டாமலும் ஆன்மாக்கள் செய்தக்கன்மத்தின் வழியன்றி யேறக்குறையப் போகாதப்படியும் அறுதியாக நிறுத்தும்.

காலதத்துவமானது சத்திதத்திவத்தா லெழுப்பப்பட்டு நிகழ் காலம், இறந்தகாலம், எதிர்காலமென்று சொல்லப்பட்டுக் கணம் நொடிமுதலிய காலங்களை யுண்டாக்கிக்கொண்டு ஆன்மாக்கள் தனுகரணாதிகளை யெடுத்துச் சாதாரண வசாதாரணமாகிய புவனத்துண்டாகிய போகங்களைப் புசித்தற்குரிய அவதாரங்களைக் கூட்டும்.

யாதொரு காலத்தில் யாதொரு தொழில் செய்து முடிக்கப்படும் அது இறந்தகாலம்.

யாதாமொருவனால் யாதாமொரு கன்மந்தொடங்கப் பட்டு அது முடிவின்றி யிருக்கும் அது நிகழ்காலம்.

யாதொருகாலம் யாதொருவனால் ஒன்றைச் செய்யவேண்டுமென்று விரும்புதல் அது வருகாலம்.

இனி ஆன்மாவானது காலம், நியதி, கலை, வித்தை, அராகம், இவை ஐந்தும் தனக்குடம்பாகக் கொண்டு இந்திரியங்களுடனே கூடிச் சத்தாதி விடயங்களைப் புசிக்கவருகிற அவதாரத்தில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு கூடினபோது அதிலே சிவப்புநிறம் தோன்றுவது போலப் புருடதத்துவ மென்றொன்று தோன்றி ஆன்மாவை யாவரித்துப்பரிச் சேதித்துக்கொண்டு விபுவாயிருக்கிறஆன்மாவுக்கும் போக்குவருத்து நிகழ்த்தி விடயத்திலே அழுத்திவிக்கும். சிவதத்துவத்தால் எழுப்பப்பட்ட மாயை மயக்கத்தைச் செய்யும்.

இனி ஆன்மாக்கள் முற் சனனத்திற் செய்த கன்மத்துக் கேதுவாயுள்ள சுகதுக்கங்களை யிப்பொழுதுண்டாக்கும் குணங்களின் வடிவாய்ப் பிரகிருதி பொருந்தும். குணங்கள் சாத்துவித இராசத தாமதமென மூன்றாய்ப் பின் சாத்துவிதத்திற் சாத்துவிதம், சாத்துவிதத்திலிராசதம், சாத்துவிதத்தில் தாமதம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் சாத்துவிதம், இராசதத்தில் தாமதம், தாமதத்திற்றாமதம், தாமதத்திலிராசதம், தாமதத்திற் சாத்துவிதமென ஒன்பது வகையாய் விரியும். இவற்றுள் சாத்துவிதம் ஸ்படிகப் பிரகாசமாகவும் ஞானமாகவுமிருக்கும். இராசதம் கெம்புபிரகாசமாகவும் தொழிலுமாகவிருக்கும். தாமதம் இந்திரநீலப்பிரகாசமாகவும் மயக்கமாகவுமிருக்கும். சாத்துவிதத்தில் சாத்துவிதமானது துறவும் சாந்தமும் உறுதியும் திரிவித கரணமொத்தலும் பெற்றதுகொண்டே மகிழ்தலும், பேறிழவிலும் சந்தோஷமும் கபடமின்மையும் மோட்சத்திலே மிகுந்த விருப்பமுஞ் செய்யும்.

சாத்துவிதத்தி விராசதமானது துறவுஞ் சாந்தமுமிடையே நழுவ முத்தியில் முயலச் செய்யும்.

சாத்துவிதத்தில் தாமதமானது துறவுஞ் சாந்தமும் மோட்சத்திலே முயலுகையின்றி விடயவிருப்பமு முண்டாக்கும்.

இராசதத்தி விராசதமானது (தன்மத்தில் விருப்புடன் இடைவிடாமற் செய்தலும்) இலௌகிக கர்மத்தில் உத்ஸாகமும் குரூரத்துவமும் யான் செய்தேனென்னும் அபிமானமும் செய்யும்.

இராசதத்தில் சாத்துவிதமானது யாவர்க்குங் கிருபையோடே யறங்களைச் செய்விக்கும்.

இராசதத்தில் தாமதமானது இவையிற்றை யிகழ்தலும் பாவத்தொழிலையியற்றலுஞ் செய்யும்.

தாமதத்திற்றாமதமானது மயக்கமும், இகழ்ச்சியும், பாவமும், உறக்கமும், ஆசையும், பயமும், சோம்பலுஞ் செய்யும்.

தாமதத்தி விராசதமானது தகாதனசெய்தல், ஈனவிருத்தி, கோள் சொல்லல், தகாதவுணவு, அதிகபோஜனம், கர்வம் முதலியவைகளைச் செய்யும்.

தாமதத்தில் சாத்துவிதமானது வேதாகமங்களில் விருத்தமாயிருக்கிற கிருத்தியமான சிறு தேவதைகளைப் பிரதிபத்தி பண்ணுதலைச் செய்யும்.

இவ்வாறு குணங்கள் எண்ணிறந்து விரிந்து எண்ணிறந்த தொழிலைச் செய்யும்.

சித்தமானது ஒரு பொருளைத் தூக்கி நினைவுமாத்திரமாய்ச் சிந்திக்கும்.

புத்தியானது பாவரூபமும் வியவசாயரூபமுமாக இருவகையாம். பாவரூபபுத்தியானது விஷயங்களைப் பகுத்தறியும். விவசாயரூப புத்தியானது விஷய நிச்சயத்தைப் பண்ணும். அவை எண்ணிறந்த விருத்தியாகிய விடயங்களை இந்திரியங்களைக் கொண்டு ஆன்மாக்கொள்ளுமிடத்து அவைகளைப் பலவகையாலும் கொள்ளத்தக்கதிது தள்ளத்தக்கதிது அலட்சியம் செய்யத்தக்கதிதுவென நிச்சயித்தலைச்செய்து ஐம்பதுவிதமான பாவகத்தைச்செய்யும். ஐம்பது விதமான பாவகங்களாவன காரணம் பதின்மூன்று, காரியம் பத்து, இந்திரியபேதம் பதினொன்று, ஆங்கார மெட்டு, புத்தி யெட்டு ஆக ஐம்பதுங் கண்டுகொள்க. இவற்றுள் புத்திபேதமான குணபாகத்தைச் சொல்லுமிடத்து, தருமம் பத்து, ஞானம் எட்டு, வைராக்கியம் ஒன்பது, ஐசுவரியம் எட்டு, அதர்மம் பத்து, அஞ்ஞானம் எட்டு, அவைராக்கியமொன்பது, அனைசுவரியம் எட்டு ஆகப் புத்திபேதம் எழுபது.

புத்தியினைம்பது பாவகங்களுக்கும் பிரமாணம்.

சதாசிவரூப வகவல்.

தாங்கிய புத்தி தத்துவ மதனிற்
பாங்கினி லுதித்த பாவக மைம்பதுவே
கரணம் பதிமூன் றொருபது காரியம்
பரவுறு மிந்தியப் பந்தம் பதினொன்
றியலாங் காரம் புத்தியெட் டெட்டே
பன்னிய கரணம் பதின்மூன் றுவன
மன்னிய செவிமுதல் வாக்கு முதலெனப்
புனையுமீ ரைந்து புறக்கா ணங்களு
மனமொடு புத்தி வருமாங் கார
மெனுமூன் றந்தக் காணமு மிவையே
காரியம் பத்தே காசினி முதலைந்
தேறிய கந்த முதலொலி யீருஞ்

சீரிய தன்மாத் திரையைந் திவையே
இந்திய பந்த மீரைந் தொன்றவை
முந்துரை செவிமுதல் மொழிமுதல் மனமே
கைதரு மெட்டாங் கார மியம்பிற்
றைசத வைகா ரிகபூ தாதியென்
றெய்தாங் கார மிவையொரு மூன்றுடு
தமமே மோகந் தனிமிக மோக
மமையுறு தாமிச் சிரமே யதனோ
டந்த தாமிச் சிரமெனு மிந்த
வைந்தாங் கார பேதமு மவையே
புத்தி எட்டே புகழ்தரு மாதரு
மத்திற மிருநான் கென்றறைந் தனரே.      எனவரும்.

இவற்றுள் தருமம் பத்தும் இயமமென்றும் நியமமென்றும் இரண்டுவிதமாம். இயமம் பத்தாவன: கொல்லாமை, சத்தியம், திருடாமை, பிரமச்சரியம், தயை, வஞ்சனையற்றிருக்கை, பொறுமை, அற்பாகாரம், சுசித்துவம் என்பனவாம்.

நியமம் பத்தாவன: தபசு, சந்தோஷம், தெய்வமுண்டென்கை, தானம், ஈஸ்வரபூஜை, ஞானசாத்திரத்தைக்கேட்டல், வெட்கம், புத்தி, ஜபம், விரதம் என்பனவாம்.

ஞானம் எட்டாவன: ஆதியாத்மீகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிக மெனப்பட்ட தாபத்திரயத்தை அறிந்து நீங்கின விடத்திலுண்டாம் ஞானம் மூன்று, இஷ்டமா யிருக்கிறவர்களுடைய உபதேசத்தினலே யுண்டாம் ஞானமொன்று, தானே பூர்வஜன்மவாசனுரூபமான சாஸ்திரத்தை ஆலோசனை பண்ணுகையினலே யுண்டாம் ஞானமொன்று, தத்தம்மதப் பிரவிருத்திகளாயிருக்கிற குருபதேசத்தினலே யுண்டாம் ஞானமொன்று, குருமுகமாகச் சாத்திரம் அப்பியசித்தலினலேயுண்டாம் ஞானமொன்று, தான ஜப தீர்த்த யாத்திரா தேவதாபக்தியாதி சத்கருமங்களினலே சித்தசுத்தித் துவாரா உண்டாம் ஞானம் ஒன்று என்பனவாம்.

வைராக்கியம் ஒன்பதாவன: ஜனனவைராக்கியம், தேகவைராக்கியம், ஐஸ்வரிய வைராக்கியம், பிரபஞ்சவைராக்கியம், திரவியவைராக்கியம், சங்கவைராக்கியம், ஸ்திரீவைராக்கியம், புசிப்புவைராக்கியம், பிரதிக்கிரக வைராக்கியம் என ஏதுவகையால் ஒன்பதுவகைப்படும். இவற்றோடு நிரோதுக வைராக்கியமென்பதைக் கூட்டிப் பத்தென்றுங் கூறுவர்.

ஜனனவைராக்கியம் வியாதிபீடையாலே வரும்.

தேகவைராக்கியம் தன்னுடைய தேகதோஷத்தைக் கண்டு வரும்.

ஐஸ்வரிய வைராக்கியம் சகலஐஸ்வரியங்களையும் குறைவற அனுபவித்து இனிபோதுமென்றுவரும்.

பிரபஞ்சவைராக்கியம் ஆதிஆத்மிகம், ஆதிதைவிகம் ஆதிபௌதிகங்களாகிய தாபத்திரயங்களினாலே வரும்.

திரவியவைராக்கியம் பொருளைத் தேடுகிறதினாலும், இரட்சிக்கிறதினாலும், இழக்கிறதினாலும், கள்ளர் முதலியோர் அபகரித்துப்போகிறதினாலும் உண்டாகும் துக்கத்தினால் வரும்.

சங்கவைராக்கியம், மாதா, பிதா, மனைவி, புத்திரன், மித்திரன், சுற்றம் முதலியவர்களைப் பிரிந்ததினாலே வரும்.

ஸ்திரீவைராக்கியம் காமுகன் தான் மோகித்த ஸ்திரீயின் குணத்திலேயாவது தேகத்திலேயாவது வைராக்கிய ஏதுவான ஒரு தோஷத்தைக் காண்டலினால் வரும்.

புசிப்பு வைராக்கியம் அன்னபானாதிகள் ஒருபொழுதில்லாதிருக்கினும் தேகம் நில்லாது, எத்தனைநாள் எத்தனை வகையிலே புசித்தாலும் திருப்தியை அடையாது எனவரும்.

பிரதிக்கிரக வைராக்கியம் ஒரு இடத்துக்குப்போய்த்தள்ளுண்டதினால் வரும்.

நிரேதுக வைராக்கியம் முற்கூறிய யாதொரு ஏதுவுமில்லாமல் பூர்வஜன்ம சிவபுண்ணியத்தினாலே தேகாதியான சர்வவஸ்துக்களிலும் வரும்வைராக்கிய மாகும் இதுவே உத்தமம் மற்றவை மத்திமமாகும்.

ஐசுவரியம் எட்டாவன: அணிமா, மகிமா, லகிமா, கிரிமா, ஈசத்துவம், வசித்துவம், பிராப்தி, பிராகாமியம் என்பனவாம். இவற்றுள் அணிமா வாவது பரமாணுவிலும் சூக்குமமான தேகத்தையுடைத்தாயிருக்கை.

லகிமாவாவது சீக்கிரவேகியாய்ச் சேற்றிலும் சலத்திலும் அடி அமிழ்ந்தாமற் செல்லுந்தேகத்தை யுடைத்தாயிருக்கை.

மகிமாவாவது தேகேந்திரியாதிகளினாலே வியாபியாய் பிரம லோக பரியந்தமுமாம் தேகத்தை யுடைத்தாயிருக்கை.

இவைமூன்றும் தேகசித்தியான ஐஸ்வரியங்கள்.

கிரிமாவாவது பர்வதத்திலும் பாரமாய் மகா வாயுவினாலும் அசைக்கப் போகாமலிருக்கை.

பிராப்தியாவது மனசினாலே நினைத்த பதார்த்தங்களெல்லாம் முன்னே வந்திருக்கை.

பிராகாமியமாவது திவ்விய ரூபமான ஸ்ரீதிரீகள்அநேகரை மனச்சங்கற்பத்தினா லுண்டாக்கி யெல்லாருடனும் ஏககாலத்திலே அப்படிப்பட்ட ரூபங்களைக் கொண்டு கூடி யிருக்கை.

ஈசத்துவமாவது பிரமாதிகளான சர்வரிடத்திலும் தன்னு டைய ஆக்கினையைச் செலுத்துகை.

வசித்துவமாவது சர்வஜனங்களையும், பிரகிருதியையும் வசீக ரணம் பண்ணிக்கொண்டு சிருஷ்டியும் பண்ணுகை.

இவை ஐந்தும் அந்தக்கரண சித்தியாகிய ஐசுவரியங்கள்.

இவ்வைசுவரியங்கள் பூலோகத்துக்கு மேலாகப் பிசாசலோக முதற்கொண்டு மேன்மேலும் இரட்டிப்பாய் அறுபத்து நாலுகுண மாம்.

அவையாவன:—பிசாசலோக வாசிகளான ருத்திர பிசாச கணங்களுக்குப் பிருதிவி தத்துவத்துள்ளிருக்கும் புவனங்களை வியாபித்த அணிமாதி எட்டு குணங்களுண்டு.

மனுஷ்யரிலே சிவபூஜாதாரதம்மியத்தினாலே ருத்திர பிசாச கணபதத்தை யடைந்தபேர்களுக்கு மிவ்வாறேயுண்டு.

ரக்ஷோலோக வாசிகளுக்குப் பிருதிவி அப்பு வாகிய இரண்டு தத்துவ புவனங்களையும் வியாபித்த இருமடங்கான ஐசுவரிய முண்டு.

யக்ஷலோகவாசிகளுக்குப் பிருதிவி அப்பு தேயுவெனு மூன்று தத்துவங்களுடைய புவனங்களையும் வியாபித்த மும்மடங்கான ஐசுவரிய முண்டு.

கந்தர்வலோக வாசிகளுக்குப் பிருதிவி அப்பு தேயு வாயு வாகிய நாலுதத்துவ புவனங்களையும் வியாபித்த நான்குமடங்கான ஐசுவரிய முண்டு.

இந்திரலோக வாசிகளுக்குப் பஞ்சபூதமான தத்துவ புவனங்களை வியாபித்த பஞ்சகுணமான ஐசுவரியமுண்டு.

சோமலோக வாசிகளுக்கு முன் சொன்ன பஞ்சபூதங்களுடன் மனஸ்தத்துவ முள்ளிட்ட தத்துவ புவனங்களை வியாபித்த ஆறு குணமான ஐசுவரியமுண்டு.

பிராஜாபத்ய லோகவாசிகளுக்கு அவற்றுடன் அகங்காரத்தையுங் கூட்டி யேழுதத்துவபுவனங்களையும் வியாபித்த ஏழுமடங்கான ஐசுவரியமுண்டு.

பிரமலோகவாசிகளுக்கு அவற்றுடன் புத்திதத்துவத்தையுங் கூட்டி எட்டு தத்துவபுவனங்களையும் வியாபித்த எண்மடங்கான ஐசுவரியமுண்டு.

இப்படியே மனிதரிலும் சிவபூஜாதாதம்மியத்தால் அந்தந்த லோகத்தை யடைந்தபேர்களுக்கும் இவ்வாறே ஐசுவரிய சித்திகளுண்டாம்.

இனி அதர்மம் பத்தாவன:—நிஷித்த இம்சை, பரஸ்திரி வியாபாரம், அசத்தியஞ் சொல்லுகை, குருபத்தினி கமனம், தனக்கு அபகாரஞ்செய்தவனுக்குத் தானும் திரும்பப் பிரதியபகாரம் செய்கை, கோபம், நித்தியகருமாதிலோபம், அசுசி, அசந்தோஷம், வக்ரதை அதாவது கோணல் என்பனவாம்.

இவ்வித அதர்மங்களை யெண்ணினவன் ஈஸ்வராஞ்ஞையாலே அஞ்ஞானத்திலே பிரவிர்த்திப்பன். அந்த அஞ்ஞானம் அஞ்சு விதமாம்: அவையாவன தமசு (இருட்டு) மோஹம், மஹாமோஹம், தாமிச்சிரம் (அந்தகாரம்), அந்ததாமிச்சிரம் (காடாந்தகாரம்) என்பவையாம்.

இதிலே தமசாவது அநாத்துமாவாகிற தேகாதிகளை ஆன்மாவென்று புத்திபண்ணுகை. அதுதான் பத்துவகைப்படும் எங்ஙனமெனின்:—

1. நாலுபூதசம்யோகமே ஆன்மாவென்று கூறுகிறதொன்று.
2. அவற்றுடன் ஆகாசமுங்கூட்டி ஐந்து பூதங்களும் ஆன்மாவென்கிறதொன்று.
3. ஞானேந்திரியங்களே ஆன்மாவென்கிறதொன்று.
4. பஞ்சதன்மாத்திரையே ஆன்மாவென்கிறதொன்று.
5. மனமே ஆன்மா வென்கிறதொன்று.
6. அகங்காரமே ஆன்மா வென்கிறதொன்று.
7. புத்தியே ஆன்மாவென்கிறதொன்று.
8. குணதத்துவமே ஆன்மாவென்கிறதொன்று.
9. அவ்வியத்தஹோபாகமாகிய சித்தமே ஆன்மாவென்கிறதொன்று.
10. புருஷதத்துவமே ஆன்மாவென்கிறதொன்று.

மோஹ மெட்டுவிதமாயிருக்கும். அணிமாதி சித்தியே பாரப்பிரயோசன மென்கிறது எட்டினாலும் எட்டுவித மென்று சொல்லப்பட்டது.

மஹாமோஹமாவது சத்தாதி ஐந்து விஷயங்களும் அதிமானுஷ்ய கிருத்தியமாக தூரசிரவணாதிகளுண்டாய் அஞ்சுசித்தியிலும் தேவலோக பரியந்தம் சப்தாதிகளை கிரகிக்கையினாலும் இவ்வாறு பூலோகத்திலே தூரசிரவணாதி சித்திஐந்தும் இந்தபத்துமே பாமப் பிரயோசன மென்கை.

தாமிச்சிரமாவது திவ்யாதிவ்ய பேதமாகிய சப்தாதி தச சித்தியின் பொருட்டும் அணிமாதி அஷ்ட சித்தியின் பொருட்டும் பண்ணும் சாதனம் குறைவுவந்த காலத்திலும் சித்தியாய் இவைகளுக்கு நாசம்வந்த காலத்திலும் இந்தப்பதினெட்டிலும் வரும்தாபமாகும்.

அந்ததாமிச்சிரமாவது திவ்யாதிவ்ய பேதத்திலே சப்தாதிகள் பத்தும் அணிமாதி சித்திகளெட்டும் பெற்று அதிலே அத்தியந்த மனப்பற்றுவைத்தல்.

ஆக அஞ்ஞானபேதம் அறுபத்துநாலு.

அவைராக்கிய மாவது வைராக்கிய குணங்களின் எதிர்மறையான துக்கமாதி நூறு குணத்தையு முடையதாய் நிந்திக்கப்பட்டப் பொருள்களிலும் நிந்தைவாராமல் இச்சையைப் பண்ணுவிக்கும்.

அநைசுவரியமாவது ஐசுவரியகுணங்களின் எதிர்மறையான எட்டுக்குணங்களையுமுடையதாய் நூற்றெழுபத்தாறு பேதமுமாம். இந்த பாவங்கள் சம்சாரியான வாத்மாவிற்குச் சாம்சித்தகங்கள் வைனயிகங்கள் பிராகிருதங்கள் என மூன்று விதமாயிருக்கும். சிறந்தகோயில் குளமுதலானவை செய்வித்த தருமவாசனையால் நின்மலமான சித்த முள்ளவர்கட்குத் தேக நீங்கின பின்பும் முன் போலவே பிரகாசிக்கும் குணம்சாம்சித்திக மெனப்படும்.

லோகத்தார் புத்தியாலும் குருமுகத்தாலும் சாஸ்திரத்தாலும் பிரகாசிக்குங்குணம் வைநயிகமெனப்படும். அதுமனோவாக்குக் காயங்களின் வியாபாரங்களால் வருவது. ஸ்வப்னமுதலான வற்றைப்போல் தேகமிருக்கும் போது மாத்திரம் தோற்றிக்கொண்டு அப்பால் தோற்றுமல் இருக்குங் குணம் பிராகிருத மெனப்படும்.

வைநயிகப் பிராகிருத தருமாதிகுணங்களால் வரும் பயன்களாவன தருமத்தால் ஸ்வர்க்கமும் ஞானத்தால் முத்தியும் வைராக்யத்தாற் பிரகிருதிலயமும் ஐஸ்வரியத்தால் தடையில்லாமையும் அதருமத்தால் திரியக்கு முதலான யோனிப்பிராப்தியும் அஞ்ஞானத்தால் நரகமும் அவைராக்கியத்தால் பந்தமும் அநைசுவரியத்தால் தடையுமுண்டாகின்றன.

சாம்சித்தகதருமாதி குணங்களால் வரும்பயன்களாவன:—தருமத்தால் அவ்விஷய ஞானயோகமும் வைராக்கியத்தால் போகத்தி லிச்சையில்லாமையும் ஐஸ்வரியத்தால் விக்னங்களின் நீக்கமும் அதருமத்தால் போகத்திலிச்சையும் அஞ்ஞானத்தால் தாழ்வும் அவைராக்கியத்தால் தேகப்பிராப்தியும் அநைசுவரியத்தால் விக்நமுமுண்டாகின்றன.

அகங்காரமானது சரீரத்திலுள்ள வாயுக்களை இயக்குவதுடன் யானெனத தென்னும் மமதையுண்டாக்கும்.

மனது, இந்திரியங்கள் விடயங்களைப் புசிக்குமிடத்து அதற்கு முந்திச் செல்லுமிச்சையே தனக்கு வடிவாய்த் தனக்கு வேண்டியதிலே சதாகாலமுஞ் சங்கற்பித்துக்கொண்டு ஆமோ அல்லவோவென்கிற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும். இது இருதயத்தையே தனக்கு இருப்பிடமாகக் கொண்டு வாயுவைப்போல் சதா அசைந்துகொண்டிருக்கும். இது சலமெனவும் அசலமெனவு மிருவிதமாம்.

சலமாவது உள்ளே நின்று சங்கற்ப விகற்பங்களைப் பண்ணும். அசலமாவது புறம்பே யிந்திரியங்களின் வழியாய்ப் புறப்பட்டு நின்று பொருளுடன் இந்திரியங்களைச் சம்பந்தம் பண்ணிநிற்கும்.

ஆன்மா விந்திரியங்களுடன் கூடிநிற்பினும் மனமொரு விடயத்திலே பொருந்தாத காலத்து இந்திரியங்கள் அவ்விடயத்தைக் கிரகிக்க மாட்டாவாகையால் இந்திரியங்களுக்கு மனமே பிரதானம். ஆகையால் சிவஞானபோதம் 8-சூத்திரத்து 3–4–ம்அதிகாரணங்களிற் கூறியவண்ணம் இந்திரியங்களை ஆன்மா பற்றுவதே தன்னையுந்தலைவனையும் அறியாமைக்குக் காரணமென்றும், இந்திரியங்களின் பற்றறுதி யுற்றால் தன்னையும் தலைவனையும் அறியுமென்றும் கூறுகிற சிறந்த சாதனங்களைப் பழகவேண்டின் மனத்தை இந்திரியங்களுடன் கூடாமலும் அசையாமலும் செய்யவேண்டிய தவசியம். அங்ஙனஞ் செய்வதற்குரிய வழிகள் பலவுள அவற்றுட்சிறந்தவொன்றை குருமுகமாய் அறிந்து பழகல்வேண்டும்.

சுரோத்திரம் காதுக்குட்பட்ட ஆகாயமிடமாக நின்று சத்தத்தைக் கேட்டறியும்.

துவக்கு சரீரத்தோலின் சூக்குமபூத வாயு விடமாக நின்று குளிர்வெப்பம் கடினம் மிருதுக்களை கிரகித்தறியும்.

சட்சு நேத்திர கோளகையில் சூக்குமபூத தேயுவினிடமாக நின்று ரூபமுள்ள பதார்த்தங்களைப்போய்க் கிரகித்தறியும்.

சிங்ஙுவை நாவில் சூக்குமபூத அப்புவினிடமாக நின்று தன்னைப் பொருந்தின மதுராதி அறுவகை யுருசிகளையுங் கிரகித்தறியும்.

ஆக்கிராணம் மூக்கில் சூக்குமபூத பிருதிவியை ஆச்ரயித்து நின்று வாயுவசத்தினாலே வந்தடைந்த சுகந்த துர்க்கந்தங்களைக் கிரகித்தறியும்.

இங்ஙனம் ஞானேந்திரியங்கள் தத்தம் விடயங்களை யறிவதைப்பட வாயிலாகப் பின்னர் விளக்குவாம்.

வாக்கு என்பது வாய். இது வசனிக்கும், பாதம் கமனஞ் (சஞ்சார) செய்யும், பாணிஎன்பது கை; இது இடுதல் ஏற்றலைச் செய்யும், பாயுருவென்பது குதமார்க்கம்; இது மல விசர்க்கம் பண்

ணும்; உபத்தம் என்பது ஆண்குறி பெண்குறிகள். இது ஆனந்தத்தை யுண்டுபண்ணும்.

ஆகாயமானது சர்வமுந் தன்னிடத்திலே வந்து பொருந்துகைக்கு இடங்கொடுத்து வெளியாய் நிற்கும்.

வாயுவானது எல்லாவற்றையு மியக்குவித்துக் கூட்டும்.

தேயுவானது உஷ்ணத்தை யுண்டாக்கித் தன்னை யடைந்தவற்றைச் சுட்டு ஒன்றுபடுத்தும்.

அப்புவானது தன்னோடு கூடினவையிற்றைக் குளிர்வித்து நெகிழ்ச்சியாக்கும்.

பிருதிவியானது கடினமாயெல்லா வற்றையுந் தாங்கும்,

மேலும் இந்தப்பஞ்ச பூதங்களும் காரணதத்துவ மென்றும் காரிய தத்துவமென்று மிருவகைப்படும். காரணதத்துவமாவது வியாபகமாய் ஆத்மாவினுடைய அறிவிலே கட்டுப்பட்டிருப்பது. காரியதத்துவமாவது அண்டத்திலும் பிண்டத்திலும் சீவனத்திலுமாக மூன்றுவகையாயிருக்கும்.

இவற்றுள் பிருதிவியானது அண்டத்தில் பஞ்சலோகமும் நவரத்தினமும் கண்டிப்பான க்ஷேத்திரமுதலாகிய செல்வமாகவிருக்கும்; பிண்டத்தில் தோல் எலும்பு நரம்பு தசை மயிராகவும், 72,000-நாடிகளாகவு மிருக்கும்; சீவனத்தில் ஆக்கிராணம் உபத்தங்களுக் கிடங்கொடுத்திருக்கும். ஆகக்காரியம் 3-க்கும் உரத்துத் தரிக்கிற குணமுண்டு.

அப்புவானது அண்டத்தில் நெகிழ்ந்தகுணமாய் ரசபதார்த்தங்களாயிருக்கும்; பிண்டத்தில் நீர் உதிரம் மூளை மச்சை சுக்கிலமாகவிருக்கும்; சீவனத்தில் சிங்குவை பாயுருவுக் கிடங்கொடுத்திருக்கும். ஆகக்காரியம் 3-க்கும் குளிர்ந்து பதஞ் செய்கிறகுணமுண்டு.

தேயுவானது அண்டத்தில் சோமசூரியாக்கினிப் பிரகாசமாகவும் ரூபவர்ணங்களாகவு மிருக்கும்; பிண்டத்தில் ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் சோம்பாகவும் தச அக்கினியாகவு மிருக்கும். சீவனத்தில் சட்சுவுக்கும் பாணிக்கும் இடங்கொடுத்திருக்கும். ஆகக் காரியம் 3-க்கும் சுட்டொன்றுவிக்கிற குணமுண்டு.

வாயுவானது அண்டத்தில் பிரசண்டவாயு 5– சூராவளி, வாடை, தென்றல், கோடை, கொண்டலாகவுஞ் சலிக்கும்; பிண்டத்தில் ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், தத்தல் 5-ம் பிராணாதி தசவாயுவுமாக எழுபத்தீராயிரம் நாடிகளிலுஞ் சலிக்கும்; சீவனத்தில் தொக்கு பாதத்துக்கு இடங்கொடுத்திருக்கும். ஆகக்காரியம் 3–க்கும் சலித்துத் திரட்டுகிற குணமுண்டு.

ஆகாயமானது அண்டத்தில் இடிமுதலாகிய சத்தங்களாயிருக்கும்; பிண்டத்தில் குரோத லோப மோக மத மாற்சரியம் 5, ஏடணை, மூன்றாகவிருக்கும்; சீவனத்தில் சோத்திரத்துக்கும் வாக்குக்கும் இடங்கொடுத்திருக்கும். ஆகக்காரியம் 3–க்கும் நிரந்தரமாயிடங்கொடுத்திருக்கிற குணமுண்டு.

அகக்கருவி 36-ன் தொழிலாகும். இனிப்புறக் கருவிகளின் தொழில் கூறப்படும்.

பிராணவாயு இடைபிங்கலை சுழுமுனைகளைப் பொருந்திஇடைபிங்கலை வழியாய்ச் சுழிமுனையை யொட்டி உச்சுவாச நிச்சுவாசங்களைச் செய்யும். அதிற் சுழுமுனை வழங்காது. உச்சுவாசமாவது வாயுவை நாசித்துளை வழியாய் உள்ளே யிழுத்தல், நிச்சுவாசமாவது அங்ஙனம் உள்ளே இழுத்த வாயுவை வெளியேவிடல். பிராணவாயுவானது மூலாதாரத்தினுள்ளிருக்கும் மேனோக்கிய திரிகோணத்தில் கீழின்மூலைகளிரண்டினும் இடக் கோணத்திலே இடையென்னும் நாடியும் வலக்கோணத்திலே பிங்கலையென்னும் நாடியும் தோன்றி மேல்நோக்கும். அக்கோணத் துள்ளுக்கு கீழேஇருகோணத்துக்குள்ளே வலப்புறததே. ஹம் என்றும் இடப்புறத்தே ஸம் என்றும் அசபாமந்திரம் நிற்கும். அதற்குள்ளாக சுழுமுனை நாடி திரிகோணத்துக் கீழ்க் கொடியைப் பற்றி ஓங்காரம்போல வலமே வளைந்து கீழே சென்று மடித்து ஓங்காரத்தின் நடுவே பிளந்து புறப்பட்டுத் திரிகோணத்திற் றலையாலே நேரேயோட, அந்தச்சுழுமுனையை யிச்சித்து இடைகலை பிங்கலை யிரண்டும் மாறிமாறிச் சுற்றிக் கோணத்தலை யளவிலே யொருவளைவும் நாபியளவிலே யொருவளைவும் இதயத்தளவிலே யொருவளைவும், பிடரியளவிலே யொருவளைவும் நெற்றியளவிலே யொருவளைவுமாக வளைந்து மேற் சுழு

முனையை விட்டு விழுந்து நாசிமுனையிலே தங்கும். அந்தவளைவுகளுக்குப் பஞ்சக்கிரந்தி யென்று பெயராம். நடுவே நேர்போன சுழுமுனை வீணைத்தண்டு தொடங்கி யெலும்பூடே போய்க் கபாலத்தை முட்டி நிற்கும். அதற்குள்ளே குழலுக்குள்ளே குழல் சொருகினாற்போலச் சித்திர நாடியும் அதனுள் வச்சிர நாடியும் நிற்கும். இந்தச் சுழுமுனை நடுவில் கிரந்தியிலே மேனோக்கியுங் கீழ் நோக்கியும் முடிந்தவுறிபோல எழுபத்தீராயிரம் நாடிகளும் பேதித்தோடும். பிராணவாயு முற்கூறிய ஓங்காரத்தினடியாய்க் கோணக்கீழ்விளிம்பிலே தோன்றி நேரே சுழுமுனையிலோடு மளவிற் சுழுமுனைத் துளையுள்ளே வச்சிரநாடி செறிந்து அதனுட்டுளை யொரு மயிர்த் துணையளவுபோகும். அதனை நிணந் துன்னி அந்த




21—படம்.
வீணைத்தண்டி னூடே செல்லும் சுழுமுனை நாடியின் ஒரு துண்டு.

துவாரத்தை யடைத்தபடியாலே சுழுமுனையிலோடாது ஒருகாலிடையாலும் ஒரு காற்பிங்கலையாலும் ஓடிக் கணுக்களிலே யிடறி வாயுச்சிதறி மேலேபோய்க் கபாலத்தைச் சுற்றி நாசியாலே புறப்படும். இங்ஙனம் இயங்கும்போது நாசியினிரண்டு துவாரத்தானும் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒருமாத்திரையில் நூற்றுப் பன்னிரண்டரைச் சுவாசமாய் ஒருசுவாசத்திலே பன்னிரண்டங்குலம் வாயுப்பிறப்பட்டு வெளியில் நாலங்குலங் கழிந்து எட்டங்குலம் உள்ளடங்கும். மாத்திரையாவது இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்டதில் ஒரு கூறென்றறிக. எட்டங்குலம் உள்ளடங்கிய பிராணவாயு மீட்டும் வெளிவரும்போது நாலங்குலம் உள்ளே விளைந்ததில் சேர்த்துக் கொண்டு பன்னிரண்டங்குலம் வெளிவரும். பிராணவாயு உள்ளே விளைவ தெப்படியெனில் பிராணிகள் அயின்ற வுணவின் சாரம் இரத்தமாய் மாறிப் பின் அது சுக்கிலமாய்ப் பின் அது பிராணவாயுவாய் மாறுமெனவறிக. பிராணவாயு தன தியக்கத்தில் வெளியில் ஒவ்வொரு சுவாசத்திற்கும் நாலங்குலமாகக் கழிவதை ஒருகாரணமாகக் கொண்டும் ஆயுள் குறைவுதாகும். ஆகையாற்றான் யோகிகள் நாலங்குலத்தையும் கழியாமல் கட்டவேண்டு மென்றும் சுக்கிலநாசங் கூடாதென்றும் அவற்றைக் கட்டப் பலவகையான முயற்சி செய்கிறார்கள். அம்முயற்சி கைகூ

டியசிலரும் நீடித்திருக்கிறார்களென்பது அனுபவசித்தமே; ஆனால் இதையே முடிந்தமுடிவாகக்கொண்டு முயற்சிப்பது நீர்க்குமிழிக்கு இருப்புப்பூண் கட்டுவதாகும். என்னை? தோன்றியது ஒருகாலம் மறையுமென்பது சித்தாந்தமன்றோ! பாஞ்சபௌதிக காரியங்களாகிய தனுவாதிகள் தங்காரணமான பாஞ்சபௌதிகங்களொடுங்கும்போது நில்லாதொழிவதால் ஞானிகள் இதனை உவர்த்தார்களெனவறிக. இனி முற்கூறிய பிராணவாயு, சடமாயிருக்கவும் உள்ளும் வெளியுமாகப் போக்குவரத்துச் செய்வதெப்படியெனில், அருள்சத்தியினாற் செலுத்தப்பட்டக்கிரியாசத்தி மூலாதாரத்தின் முக்கோணத்தின் கீழ்க்கோணங்களிரண்டினுள்ளும் வலமிடமாகவிருக்கும் அசபாமந்திரத்தை ஒருகால் ஹம் என்றும் ஒருகால் ஸம என்றும் அசைத்தலினாலே இயந்திரத் துருத்திப்போல் உள்ளும் வெளியுமாக வாங்கி விடுகிறதெனவறிக. இதனை யூகித்துணர்க.

சுழுமுனை நாடி இங்ஙனம் அமைந்திருப்பதற்குப் பிரமாணம் பிராசாத அகவல்.

போற்றியதலைமை நாற்சதுரத்துள்
ஓங்காரஞ்சேர் ரீங்காரத்து
மூலையிரண்டினுஞ் சாலத்தோன்றி
யிடைபிங்கலைக ளிடம்வலம் நிற்கு
மேலை மூலை மூலமாகச்
சுழுமுனைசித்திரம் வழுவில்வச்சிர
மொன்றுக்கொன்று சென்றுள்ளாகி
யுரைசெய்கோணத் தொருதலைசொருகி
இருதலைதிரண்ட வொருவேய்போலக்
கோணறநிற்கும் வீணாதண்டி
னூடேயூடி நாடிமூன்றும்
பிரமரந்திர முருவிநிற்கு
மிடைபிங்கலைக ணடுவுதண்டுடனே
தொடர்வறப்பின்னி யடைவாதாா
மாறினுங்கூடி வேறுவேறாகிப்
புருவமத்திம மருவிநாசிக்
கிடமும்வலமு மிடமெனநிற்கும். எனவரும்.

மூலாதாரமாவது சரீரத்தின் மையத்தானம். அதாவது சரீரத்தின் அளவு அவரவர் கையால் தொண்ணூற்றாறு அங்குலமா

கும்; அதில் மேலே நாற்பத்தேழரை யங்குலமும் கீழே நாற்பத்தேழரை யங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குல மாகும். இதனை,

துய்யவுடம் பாவன தொண்ணூற்ரு றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்—வையத்
திருபாலு நாற்பத் தெழுபாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்.

என்ற வெண்பாவும் வலியுறுத்துகிறது.

இனி அபானவாயு கீழ்நோக்கிக் குருநாடியைப் பொருந்தி மலசலங்களைக் கழிப்பிக்கும்.

வியானவாயு காந்தாரியென்னும் நாடியைப் பொருந்திவாக்கை (வாயை) அசைவித்து அயின்ற வுணவின் சாரத்தைச் சரீரமெங்குங் கலப்பிக்கும்.

உதானவாயு கண்டத்தில் அத்திநாடியைப் பொருந்தி பிராணவாயுவைத் தகைந்து விக்கல் மிடறுவிம்மல்களைச் செய்விக்கும்.

சமானவாயு சங்கினி நாடியைப் பொருந்தி இதய முதற் கலந்து உடலை ஒப்புப்பண்ணும்.

நாகவாயு அலம்புடை யென்னும் நாடியைப் பொருந்தி கண்ணுக்கும் நாசிக்கும் நடுவே பிராணவாயுவைக் குறுக்கிட்டுத் தும்மலைச் செய்யும்.

கூர்மவாயு பூடா என்னும் நாடி (புருடநாடி) யைப்பொருந்தி கைகளையும் அண்ணமணறையும் பற்றிச் சோம்பு கொட்டாவிகளை யுண்டாக்கும்.

கிருகரவாயு சிங்குவை யென்னும் நாடியைப் பொருந்தி கண்ணிமையைப் பற்றிக் கண்ணை விழிப்பித்தும் இமைப்பித்தும் நிற்கும்.

தேவதத்தவாயு சங்கினி நாடியைப் பொருந்தி முகத்தைமலர்வித்து நகைப்பிக்கும்.

தனஞ்சயவாயு, இவ்வாயுக்களியக்கமறுதலிடறுதல் செய்தபோது துவக்கைப் பொருந்தி கிரந்தி (முடிச்சு) முதலியனவும் வீக்கமுமாய் உடல் சவமானல் உடல்முழுமையையும் வீங்கவும் விரியவுஞ் செய்யும்.

இங்கே கூறப்பட்டதத் தசவாயுக்களல்லாமல் வயிரன், முக்கியன், அந்தரியாமி, பிரவஞ்சகன் என்கிறவாயுக்களு முண்டு. இவற்றில் வயிரன் காலெலும்பு இரண்டும் கதிரெலும்பு இரண்டும் கூடினவிடத்தில் நின்று உடம்புக்கு மேல்வலி யுண்டாக்கி வாதம் ஈளை இருமல் முதலானவைகளை உண்டாக்கும்.

முக்கியன் கையெலும்பு இரண்டும் கதிரெலும்பு இரண்டுங் கூடின விடத்தில் நின்று சரீரத்தை யாக்கைகளைச் செவ்விதாக நிறுத்தும்.

அந்தரியாமி புருஷனுக்கு வாகனமாய் நின்று பிராணவாயுவைத் தோற்றுவிக்கும்.

பிரவஞ்சகன் பிரணவத்திற் கிருப்பிடமா யிருக்கும்.

அந்தரியாமியும் பிரவஞ்சகனுஞ் சரீரத்துக்குக் கடையாணியாகவும், வயிரனும் முக்கியனும் அச்சாணியாகவும் இருக்கும். அச்சாணிகுலையச் சரீரங் குலையும்.

பாசஇயல் முற்றிற்று.

---

# ஒழிபு இயல்.

## அவத்தை.

மேற்கூறிப்போந்த கருவிகளுடன் கூடி ஆன்மா கேவல சகல சுத்தமென மூன்றவத்தைப்படும்.

இவை மூன்றும் ஒவ்வொன்று ஐந்தாய்க் காரியப்பட்டு காரியாவத்தைப் பதினைந்தும் முன்னுங் கூட்டிப்பதினெட்டு அவத்தையெனப்படும். அவையாவன:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனக் காரிய கேவலாவத்தை ஐந்து; சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம் எனக் காரிய சகலாவத்தை ஐந்து; நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மலதுரியம், நின்மல துரியாதீதம் எனக் காரிய சுத்தாவத்தை ஐந்து; இவற்றிற்குக் காரணமான

காரணகேவலம், காரணசகலம், காரண சுத்தமெனக் காரணாவத்தை மூன்று; ஆக அவத்தை 18.

இவற்றுள் கேவலசாக்கிரமாவது, ஆன்மா ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, தன்மாத்திரை 5, அந்தக்கரணம் 4, புருடன் 1, வாயு 10, வசனாதி 5, ஆக முப்பத்தைந்து கருவிகளுடன் கூடி புருவமத்தியில் நிற்கும் அவதாம்.

கேவல சொப்பனமாவது, ஆன்மா மேற்கூறிய முப்பத்தைந்து கருவிகளில் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்து கருவிகளும் புருவமத்தியில் நிற்க எஞ்சிய இருபத்தைந்து கருவிகளுடன் கூடி கண்டத்தானத்தை யடைந்து நிற்கும் அவதாம்.

கேவல சுழுத்தியாவது, ஆன்மா அந்த இருபத்தைந்து கருவிகளில் இருபத்திரண்டு கருவிகள் கண்டத்தில் நிற்க எஞ்சிய சித்தம் பிராணன் புருடன் என்னும் மூன்று கருவிகளுடன் கூடி இதையத்தானத்தை யடைந்து நிற்கும் அவதாம்.

கேவல துரியமாவது, அவற்றுள் சித்தம் ஒன்றும் இதயத்தானத்தில் நிற்க பிராணன் புருடனென்னும் இரண்டு கருவிகளுடன் கூடி ஆன்மா நாபித்தானத்தை யடைந்து நிற்கும் அவதாம்.

கேவல துரியாதீதமாவது, பிராணவாயு வொன்றும் நாபியில் நிற்க புருடனுடம்பாக ஆன்மா மூலாதாரத்தில் அடங்கி நிற்கும் அவதாம்.

இங்ஙனம் கேவல காரியாவத்தை ஐந்திற்கும் கருவிகள் நிற்பதற்குப் பிரமாணம்: தாயுமானவர்பாடல்.

சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்தஞ்
சத்தாதி வசனாதி வாயு பத்து
நீக்கமிலந் தக்கரணம் புருட னேடு
நின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயு பத்து
மடுத்தனசத் தாதிவச னாதி யாக
நோக்குகர ணம்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே.

சுழுத்தியித யந்தனிற் பிராணன் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கு
மழுத்திடுமூ லந்தன்னிற் றுரியா தீத
மதனிடையே புருடனொன்றி யமரு ஞானம்
பழுத்திடுபக் குவாறிவ ரவத்தை யைந்திற்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே. எனவரும்.

இனி ஆன்மா சாக்கிரத் தானத்திலே அடையும் ஐந்தவத்தைகளுக்கு விவரமாவது: ஒரு பொருளை மறந்தவன் அந்தப் பொருளைக் காணாதபோது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் றுரியாதீதம். இனி அந்தப் பிராணவாயு இயங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்து அறிவோமென்று நின்ற அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் றுரியம். இனி அவ்விடத்திலேயல்லோ போனதென்று நினைவெழுந்திருந்த அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் சுழுத்தி. இனி இன்னவிடத்திலேயல்லோ பொருளை வைத்தோமென்று விசாரப்பட்டு அறிந்த அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் சொப்பனம். இனி அந்தப் பொருளை வைத்தவிடத்திலே சென்று கண்ட நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் சாக்கிரம். இதற்குப் பிரமாணம்:

விரும்பு மரும்பொருளை வீழ்த்து மயங்க
விரித்தவ னிலன் பெறுகை—வருந்தறிவு
தோன்றாத லையம்விழுந்த விடந் தோன்றுதலென்
றூன்றவைந்துஞ் சாக்கிரத்தி னும். எனவரும்.

இவ்வாறு அடைந்த அவத்தைகளுக்குக் கருவிகள் நிற்குமுறைமை: சாக்கிரத்திற் சாக்கிரமாவது சுத்த தத்துவங்கள் ஐந்தும் தொழிற்படும் அவதரம். சாக்கிரத்திற் சொப்பன மாவது சிவம் சத்தி சாதாக்கியம் ஈச்சுரங்களாகிய நான்கு தத்துவங்களும் தொழிற்படும் அவதரம். சாக்கிரத்திற் சுழுத்தியாவது சிவம் சத்தி சாதாக்கியமெனும் மூன்று தத்துவங்களும் தொழிற்படும் அவதரம். சாக்கிரத்திற் றுரியமாவது சிவம் சத்தியெனும் இரண்டு தத்துவங்களும் தொழிற்படும் அவதரம். சாக்கிரத்திற் றுரியா

தீதமாவது சிவதத்துவம் ஒன்றே தொழிற்படும் அவதாரம் இதற்குப் பிரமாணம், சித்தியார் 4-ம் சூத்-36.

ஐந்துசாக் கிரத்தி னான்கு கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயலறு முணர்ந்து கொள்ளே.

எனவரும்.

இனி நின்மல சாக்கிரமாவது சிவதத்துவம் ஐந்தில் சுத்தவித்தை நீங்காமல் நீங்கின அவதாரம்.

நின்மல சொப்பனமாவது சுத்தவித்தையும் ஈச்சுரமும் நீங்காமல் நீங்கின அவதாரம்.

நின்மல சுழுத்தியாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியமெனும் மூன்றும் நீங்காமல் நீங்கின அவதாரம்.

நின்மலதுரிய மாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியம் சத்தியெனும் நான்கும் நீங்காமல் நீங்கின அவதாரம்.

நின்மல துரியாதீதமாவது சுத்ததத்துவம் ஐந்தும் நீங்காமல் நீங்கின அவதாரம். இவை ஐந்து தத்துவங்களும் நீங்காமல் நீங்க வென்றது கொண்டே இவை ஐந்தாலும் செலுத்தப் பட்ட கருவிகளும் நீங்காமல் நீங்க வென்பதாயிற்று. இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் 4-ம் சூ. 3-ம் அதி:

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

என்றதில் "அது வாங்கு" என்பதைக் கண்டுகொள்க.

இனி காரண கேவலமாவது, சர்வசங்கார காலத்தில் ஆன்மாக்கள் மாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு ஒன்றும் அறியாமற் கிடக்கும் அவதாரம்.

காரண சகலமாவது, ஆன்மாக்கள் சிருட்டி தொடங்கிச் சர்வசங்காரமளவும் ஆன்மாக்கள் யோனிவிட்டு யோனிபற்றி எண்பத்து நான்குநூறாயிர யோனிபேதங்களிலும் பிறந்து இறந்து வருகிறது

காரண சுத்தமாவது, ஆன்மாக்கள் இறைவனது திருவடிகளிலே யிரண்டறக் கூடிநிற்கும் பரமுத்தியாகும். இவைகளுக்குப் பிரமாணம், சித்தியார் 4-ம் சூத்.

கேவல சகல சுத்த மென்று மூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாங்
காவலன் கொடுத்த போது சகலனு மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையனுற் பவந் துடைத்தே. 37

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்தி லான்மா. 38

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே. 39

இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே. 40

எனவரும்.

இனி ஆன்மா சாக்கிராவத்தையை அடைந்து சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களின் வாயிலாய் சப்தாதி விடயங்களை அறியும் வகையைச் சிறிது விளக்குவாம்.

## சுரோத்திரம்.

சுரோத்திரமானது நம்மைச்சூழ ஏற்படும் பேரிரைச்சல்களையும் சத்தங்களையும் நமக்கு அறிவிக்கின்ற ஓர் இந்திரியமாகும். அதற்கு முக்கிய அவயவம் காது.

காதில் வெளிக்காது, நடுக்காது, உள்காது என மூன்று பிரிவுகள் உண்டு.




22. படம். காது. C, காதுமடல்; o, m, நடுக்காது; A,E, தொண்டைக்குப்போகும்குழல் v, வாரி; c,c, திரிதடங்கள்.

வெளிக்காதானது காதுமடலும் காதுத் துவாரமுஞ் சேர்ந்தது. காதுமடல் முருந்தால் (குருத்தெலும்பால்) எற்பட்டது. அது மேடு பள்ளமாயிருக்கும். காதுமடலின்கீழ்த் தொங்கிக்கொண்டிருக்கிற மிருதுவான சருமத்துக்குச் சோணைக்காது என்று பெயர். காதுத்துவாரம் காது எலும்பில் சாய்வாய்த்தோண்டப்பட்டது அது சுமார் ஒரு அங்குலநீளம் உள்ளது. அதில் உரோமங்கள் உண்டு. அதில் குறும்பி சுரக்கும். அந்த உரோமங்களும் குறும்பியும் தூசு எறும்பு முதலியவைகளைக் காதுக்குள் பிரவேசிக்க வொட்டாமற் செய்யும். காதுக்குள் அண்டவடிவான ஓர் சவ்வு உண்டு. அதற்குக் காதின் உட்சவ்வு அல்லது பறையென்று பெயர். இந்தச் சவ்வுதான் நடுக்காதை வெளிக்காதினின்று பிரிக்கிறது.




23—படம்.
1, சுத்தியல் எலும்பு; 2, பட்டடை எலும்பு; 3, கற்களிஞ்சில் எலும்பு; 4, அங்கபடி எலும்பு.

நடுக்காது:—காதின் உட்சவ்வுக்குப் பின்புறமாயுள்ள இடத்திற்கு நடுக்காதெனப் பெயர். அதில் நான்கு சிறிய எலும்புகள் ஒன்றின்பின் ஒன்றாய்க் காதின் உட்சவ்விலிருந்து உட்காதின்வாசல் வரையில் செல்லுகிற சங்கிலிபோன்றும் வில்வளைவாயும் அமைந்திருக்கின்றன. அவைகளில் சுத்தியல்போன்றிருப்பதற்குச் சுத்தியல் எலும்பென்றும், பட்டடை (அடைகல்) போன்றிருப்பதற்குப் பட்டடை யெலும்பென்றும், கற்கிளிஞ்சில் போன்றிருப்பதற்குக் கற்கிளிஞ்சில் எலும்பென்றும், அங்கபடியைப்போன்றிருப்பதற்கு அங்கபடி எலும்பென்றும் பெயர்.

நடுக்காது ஆகாயம் நிறைந்தது அதிலிருந்து பங்கா போன்று சுமார் $1\frac{3}{4}$ அங்குல நீளமுள்ள குழல் ஒன்று தொண்டைக்குப் போகும். அந்தக் குழல் மார்க்கமாய்க் காற்றுச் சஞ்சரிக்கும். அத

ஞல் காதினுட் சவ்வின் இரண்டுபுறமும் ஆகாயத்தின் மோதுதலு க்கு எப்போதும் உட்பட்டிருக்கிறது. ஆதலினுற்றான் வெளியி லுண்டாகுஞ் சத்தத்தையும் கண்டத்திலுண்டாகுஞ் சத்தத்தை யுங் கேழ்க்க இடனுகிறது.

கண்டத்துக்கும் நடுக்காதுக்கும் உண்டாகிய தடையற்றச் சம் பந்தத்தை வெகு சுலபமா யறியலாம். மூக்கின் துவாரங்களை அடைத்துக்கொண்டு எச்சிலை விழுங்கினுல் உடனே காதில் ஒரு எதிர்தாக்கை உணருகிறோம். அது, நாம் எச்சிலை விழுங்குங்கால த்தில் கண்டநாளத்தில் உள்ள ஆகாயம் நாசித்துவாரத்தின் வழி யாய்ப் போகமுடியாமல் நடுக்காதுக் குழலில் நுழைகிறதால் உண் டாகிறது.

உட்காது நடுக்காதினின்றும் அண்டவடிவும் வட்டவடிவு மான இரண்டு சன்னல்கள் வழியாய்ப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அண்டவடிவான சன்னலில் அங்கபடி எலும்பின் அடிப்புறம் பொருந்தியிருக்கிறது. வட்டவடிவச் சன்னல் ஒரு சவ்வால் மூடப் பட்டிருக்கிறது. உட்காதில் ஒரு பள்ளமும் மூன்று வளைந்த குழல் களும் நாகர்வண்டின் ஓடுபோன்ற ஓர் எலும்பும் இருக்கின்றன. பள்ளத்துக்கு வாரி யென்றும் வளைந்த அம்மூன்று குழல்களுக்கும் திரிதடங்க ளென்றும், எலும்புக்குக் கம்பு என்றும் பெயர். வாரி யென்னும் பள்ளம் அண்டவடிவச் சன்னலின் பின்னுல் இருக்கி றது அதில் அந்த மூன்று குழல்களும் சேர்ந்திருக்கின்றன. உட் காதில் ஓர்வித விசேஷமான நீர்நிறைந் திருக்கிறது. அதின்மேல் கேள்வி நரம்பின் இழைகள் மிதந்துக்கொண்டிருக்கின்றன.

இத்தன்மைத்தாகிய காதின் படலில் மோதுகிற சத்தத்தின் அலைகள் ஒன்றுய்ச் சேர்க்கப்பட்டுக் காதுத்துவாரத்துள் செல்லு கின்றன; பின் அவைகளின் சேர்க்கையில் காதின் உட்சவ்வில் (பறையில்) ஓர் அதிர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. அவ்வதிர் ச்சி நடுக்காதிலுள்ள எலும்புச் சங்கிலியின் மூலமாய்ச் செலுத்தப் பட்டு உட்காதினுள்ளிருக்கும் நீரிலும் கேள்விநரம்புகளிலும் சல னத்தை யுண்டுபண்ணுகிறது. இவ்வாறு தூண்டப்பட்டக் கேள்வி நரம்புகளின் மூலமாய் ஆன்மசிற்சத்தி சத்தத்தை யறிகிறது.

செவிட்டுத்தன்மை காதினுட் சவ்வின் தடிப்பினுலும், நடுக் காதிலுள்ள எலும்புச் சங்கிலியின் அசைவின்மையினுலும், சந்நு

பொருந்தாமையினாலும், வெகு அரிதாய்ச் சம்பவிக்கிற உட்காதின் அவயவங்களின் சிலகெடுதியினாலும் உண்டாகின்றது. நடுக்காதுக்குங் கண்டத்துக்குமுள்ள குழாய் வியாதிகளினால் அடைபட்டால் காது மந்த முண்டாகிறது. இந்தக் குழாயினது ஆகாயத்தின் தடையற்றத் தன்மையானது கேள்வி நரம்புகள் சத்தத்தைக் கிரகிப்பதற்கு இன்றியமையாத முக்கியமாயிருக்கிறது. நன்றாய்க் கேழ்க்க விரும்பினோரிற் சிலர் வாயைத் திறந்துகொண்டு கேழ்ப்பதே அதனை வலியுறுத்திகிறது.

செவிட்டுத் தன்மை பிறப்பிலேயே உண்டாயிருந்தால் பிள்ளைகளுக்குக் கேட்குந் தன்மை யில்லாமையால் அவர்கள் பேசப் பழகக் கூடுமாயில்லை. ஆகையால் அவர்கள் பிறவிச் செவிட்டுடன் ஊமையாயும் இருக்கிறார்கள்.

## துவக்கு

துவக்கு இந்திரியமானது வஸ்துக்களின் இருத்தலையும், வடிவத்தையும், பருமனையும், சீதோஷ்ணங்களையும் நமக்கு நிச்சயிக்கச் செய்யும் அறிகருவியாகும். அது தோலைத் தனக்கு அவயவமா யுடையது; ஆனால் அது எவ்விடத்திலும் ஓரேவித நுட்பமாயறிகிறதில்லை. ஆகையினாற்றான் மனிதர்களுக்கு விரல்களின்முனையிலும் நாவின் முனையிலும் அக்கருவி அதிகரித்தச் சக்தியுடையதாயிருக்கிறது.

சரீரத்தை மூடிக்கொண் டிருக்கிற தோலுக்கு ஒன்றின்மேல் ஒன்றாயிருக்கிற இரண்டு புரைகள் உண்டு. மேற்புரைக்கு வெளித்தோல் என்றும் அதற்கடியி லிருப்பதற்கு உள்தோல் என்றும் பெயர். இந்த இரண்டு தோல்களுக்கும் இடையில் ஓர்வித பசையானவஸ்து உண்டு. அதற்குச் சருமமத்திய வஸ்துவென்றுபெயர். அதுசரீரத்துக்குநிறத்தைக்கொடுக்கிறது அந்தப் பசை உஷ்ணப் பிரதேசிகளுக்குக் கறுத்தும், சீதளப் பிரதேசிகளுக்கு வெளுத்தும், சீதோஷ்ண விகாரத்துக்குத் தக்கபடி பலநிறமாயும் இருக்கும். ஆகையால் அததற்குத் தக்கதாகத் தேசவாசிகளின் தேகநிற மிருக்கும்.




24—படம் தோல்.
1, வெளித்தோல்; 2, உள்தோல்; 3, நிணக்கோளங்களும் சுவேத கோளங்களும் இருக்குமிடம்; 4, வேர்வை வரும் வழி; 5, சுவேதகோளம்.

வெளித்தோல் பெரும்பாகம் மெல்லியதா யிருக்கும். அது "பாபில்லி" என்று பெயருள்ள ஓர் வகை வஸ்துக்களைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறது. அவைகளில் உள்தோலை ஊடுருவி வருகிற பரிசநரம்பின் நிரைகள் இருக்கும். எண்ணில்லாத பரிசநரம்புகளும் இரத்த நரம்புகளும் ஊசிமுனை நாட்ட இடமில்லாமல் அவ்வளவு நெருக்கமாய் வெளித்தோலில் நிறைந்திருக்கின்றன. வெளித்தோல் எடுபட்டபோதுபரிச நரம்புகள் வஸ்துக்களில்நேரே சம்பந்தம் உறுவதால்பரிசவுணர்ச்சி நீங்கித் துன்பம் உண்டாகிறது. வெளித்தோல் தேய்த்தலினால் அதாவது இழைதலினால் மிகுந்ததடிப்பான கனத்தை அடைகிறது. வேலைக்காரர்களின் கைகளிலுண்டாகும் காய்ப்பே அதற்குச் சான்றாகும். நகம், உரோமம், பட்சிகளின் இறகு, சிப்பி, ஓடு, கொம்பு, குளம்பு முதலியவை வெளித்தோலின் விளைவேயாகும். ஒரு உரோமத்தின் அடிப்பாகத்தை 25-வது படம் காட்டுகிறது.




25—படம்.
*E*, வெளித்தோல்; *D*, உள்தோல்; **P**, உரோமம்; *g*, *g*, உரோமத்தின் கிளைவேர்; **C**, உரோமத்தின்வேர்.

உள்தோலானது இரத்த நரம்புகளாலும் பரிசநரம்புகளாலுமான பின்னலை யுடையதா யிருக்கிறது. உள்தோலின் அடிப்பாகத்தில் நிணக்கோளங்களும் சுவேத கோளங்களும் உண்டு. நிணக்கோளங்களில் உண்டாகிற எண்ணெய்ப் பசையானது உரோமக்கால் வழியாய் வெளிப்பட்டுச் சருமத்துக்கு மிருதுத்தன்மையைக் கொடுக்கிறது. குளிர்ச்சியினால் எண்ணெய்ச் சனிப்பு நின்றுவிட்டால் காய்ந்து வறண்டு வெடித்துப்போகும். பனிக் காலங்களில் இந்தச் சம்பவம் விசேஷமாய் நிகழும். சுவேதகோளங்களில் வேர்வை உண்டாகிறது. பதனிடப்பட்டு உபயோகிக்கத் தக்கது மிருகங்களின் உள்தோலே யாகும்.

இத்தன்மைத்தாகிய தோலில் பாவி யிருக்கும் பரிசநரம்புகளின் மூலமாய் ஆன்மசிற்சத்தி பரிசத்தை யறியும்.

## சட்சு.

சட்சு இந்திரியமானது, தனக்கு அவயவமானதும் வெளிச்சத்தை இன்றியமையாத் துணையாகக் கொண்டதுமான பார்வை மண்டலத்தின் உதவியால் வஸ்துக்களின் நிறம் வடிவம் பருமன் அசைவு முதலியவைகளை ஆன்மாவுக்கு அறிவிக்குங் கருவியாகும்.

பார்வை மண்டலமானது விழியையும் (ஐபால்) பார்வை நரம்பையும் (ஆப்டிக் நேர்வ்) சில சேர்க்கையான அவையவங்களையும் தனக்கு அங்கமாக உடையது. கண்கோளம் உருண்டையா யிருக்கிறது. அது, ஒரேமையத்தில் ஒன்றுய்க்கூடுகிற மூன்று மூடிகளை (புரைகளை) உடையது. அவையாவன: 1-சுக்கிலமண்டலம் (கண்ணின் மேற்றோல்,) 2-கிருஷ்ணமண்டலம், 3-ரூப உற்பத்திசவ்வு (ரெடின) என்பவைகளாம். இவைகண் கோளத்தின் வெளியிலிருந்து உட்புறமாக அடைவே ஒன்றின்மேல் ஒன்றுயிருக்கும்.




26—படம். கண்.

1, வெள்ளை விழி; 2, கிருஷ்ண மண்டலம்; 3, ரூப உற்பத்தி சவ்வு, 4, பார்வை நரம்பு; 5, ஒளியூடுருவுஞ் சலம்; 6, பின்னறை; 7, முன்னறை; 8, ஆணிச்சவ்வு; 9, கண்தாரை; 10, கண்மணி.

சுக்கில மண்டலமானது வெள்ளைவிழி ஆணிச்சவ்வுஎன இரண்டுவகையாயிருக்கும். வெள்ளைவிழி வெண்மையாய் உறுதியாயிருக்கும். அது சவ்வினத்தைச் சேர்ந்தது. ஆணிச்சவ்விற்குச் சுக்கிலமண்டலமெனச் சிறப்புப் பெயருண்டு. இது விழியின் முன்புறமாய் வளைந்து, வட்டமாய் வெள்ளையாய் அழுத்தமாய் கைக்கடியாகக் கண்ணுடிபோன்றிருக்கும். இது கண்ணுடியைப் போலவேபிரகாசம் ஊடுருவிச் செல்லுந் தன்மையதாதலால் இதற்குப் பின்னுலிருக்கும் கறுத்தச் சவ்வால் இதுவுங் கறுப்பாகவே காணப்படுகிறது. இது அடுத்த வெள்ளைச் சவ்வோடு ஒட்டிக்கொண்டிருக்கும்.

கிருஷ்ணமண்டலம்: இதுவிழியின் மத்தியபுரை இரத்தநரம்பு களால் ஏற்பட்டுக் கறுத்திருக்கும். பின்னுல் கறுத்தப் பசை ஒட்டிக்கொண் டிருக்கும். அது முன்சொன்ன வெள்ளைவிழியில் ஒட்டியதுபோலப் பொருந்தியிருக்கும். அது கண்ணுக்குள் பிரவேசிக்கிற அதிககிரணங்களைக் கிரகித்துக்கொள்ளும். அது இல்லாவிட்டால் பார்வை சிதறிப்போகும். அது முன்பக்கத்தில் கிருஷ்ண மண்டல மென்று சிறப்புப் பெயருடைய ஒருகறுத்தப் பாகத்தால் (ஐரீஸ்) முடிவுறும். அந்தக்கறுத்தப் பாகத்தின் மத்தியில் ஒரு துவாரமிருக்கும். அதற்குக் கண்தாரை அல்லது பாவை யென்று பெயர். அந்தத்துவாரம் வெளிச்சத்திற்குத் தக்கபடி சுருங்கவும் விரியவுஞ் செய்யும் மெல்லிய ஓர்வகை நரம்புகளா லானது. இந்தக் கிருஷ்ணமண்டலம் சிலருக்குக் கறுப்பாயும், சிலருக்கு நீலமாயும், சிலருக்கு ஊதாவாயும் இருக்கும். சில பிராணிகளுக்கு இது வட்டமின்றி நீண்டிருக்கும்.

ரூப உற்பத்தி சவ்வு: இதற்கு நேத்திர சித்திர சவ்வு என்றும் பெயருண்டு. இது பார்வை நரம்பின் பரிணுமமே யாகும். இது விழியின் உட்புரை. இது துல்லியமாயிருக்கும் இது முன் கூறிய கிருஷ்ணமண்டலத்தில் ஒட்டியிருக்கும். இது மிகமெல்லிய நரம்புகளின் செறிவாலானது.

கண்ணின் மத்தியில் ஒளியூடுருவுகிற பாகமானது கண்மணி, தெளிந்த நீருக்கொப்பானசலம், பளிங்குபோன்று ஒளியூடுருவுகிற சலம் என மூன்று பகுப்புகளை யுடையதாகும்.

கண்மணியானது யானைக்குன்றிபோல் இருபக்கமும்முகிழ்த்த ஓர் படிகம் போன்றது. மச்சங்களின் கண்களில் இது உருண்டையாயிருக்கும். இது கண்பார்வைக்குப் பின்னுல் உள்ளது.

தெளிந்த நீருக்கொப்பான சலம்: இது முன் சொன்ன கண்மணிக்கும் ஆணிச் சவ்வுக்கும் இடையிட்டபாகத்தில்நிறைந்திருக்கிறது. அந்தப் பாகம் முன்னறை, பின்னறை யென இரண்டாய்ப் பிரிக்கப்படும். ஆணிச் சவ்வுக்குங் கிருஷ்ண மண்டலத்துக்கும் இடையிட்ட பாகம் முன்னறை யாகும். கிருஷ்ண மண்டலத்துக்கும் கண்மணிக்கும் இடையிட்ட பாகம் பின்னறை யாகும்.

பளிங்குபோன்று ஒளியூடுருவுகிற சலமானது வேகாத முட்டையின் வெள்ளைக்கருவைப் போன்ற குழகுழப்பான ஓர்வித

நீராகும். அது கண்மணிக்கும் வெள்ளை விழிக்கும் இடையிட்ட பாகம் முழுமையும் நிரம்பி ஓர்வித சவ்வினாலான பைக்குள் அடங்கி யிருக்கும். அந்தச் சவ்விற்கு "ஹையெலாயிட்மெம்பிரேன்" என்று மேனாட்டார் பெயரிட்டிருக்கிறார்கள். இது விழியின் பிரமாணத்தின் முக்கால் பாகம் நிறைந்து கண் சவ்வுகளை விரிவாக வைத்திருக்கும். இந்த நீர் போய்விட்டால் கண் சொள்ளையாகி விடும்.

இவ்வகையான கண்கோளங்கள் அடங்கியிருக்கும் கண்குழிகளானவை எழு எலும்பின் சேர்க்கையாலானவை. அவை ஒருமுனை நீண்ட வட்டவடிவம் அதாவது பம்பரம்போன்ற வடிவமுள்ளவை. அவைகளின் அகன்ற பாகத்தில்தான் கண்கோளங்கள் அடங்கியுள்ளன. மற்றப் பாகங்களில் விழியை அசைக்கின்ற தசைகளும் இரத்த நாடிகளும், நேத்திர நரம்பு பரிச நரம்புகளும், கொழுப்பும் அடங்கியிருக்கும். அந்தக் கொழுப்பின் மேல்தான் விழி சுழன்றுக்கொண்டிருப்பது.




27. படம்.

1,2,3,4,5,6, விழியை அசைக்குந் தசைகள்; 7, புருவம்; 8, மேல் நிமையைத் தூக்குந்தசை; 9, கண் நிமையில் சேர்க்குந்தசை; 10, மேல் நிமை; 11, நிமை மயிர்; 12, கீழ் நிமை; 13, கன்ன எலும்பு; 14, பார்வை நரம்பு; 15, நெற்றி எலும்பு.

புருவங்கள் கண் குவளைகளின் மேலெல்லையில் அதாவது நெற்றியின் கீழ்ப்பாகத்தில் அமைந்த மயிர்வரிசை யுடையன. வேர்வை முதலிய நீர்கள் நெற்றியிலிருந்து வடிந்து கண்ணிற் பிரவேசிக்காமலும் அதிக வெளிச்சம் படவொட்டாமலும் அவை காக்கின்றன.

கண் நிமைகள் (இரப்பைகள்) கண்களின்மேற்பரப்பில் கண்ணீரைப் பரவச் செய்வதற்கான திரைபோன்றவை. அவற்றின்

ஓரங்களில் மயிர் வரிசையுண்டு. அவைகள் கண்ணில் யாதொரு தூசி விழாமல் காப்பாற்றி நிழலைத் தருகின்றன.




28. படம்.

1. கண்ணீர்க்கோளம்; 2, கண்ணீர்க் குழல்; 3, கண்ணீர் நிறைந்த தசை; 4, 5, கண்ணீர் மூக்கிற்குப் போகும் வழி; 6, மூக்குத்துவாரம்.

கண்ணீர்க்கோளமானது கண் குழிக்குமேல் வெளிப்புறமாய் அமைந்திருக்கும். அதற்குக் குழல்களுண்டு. அந்தக் குழல்கள் வழியாகக் கண்ணீரிறங்கி, விழிக்கு ஊர்த்தமுகமாகக் கண்சவ்வின் மேல் வடியும். கண்ணீரால் கண் எப்பொழுதும் ஈரமாகவே யிருக்கும்; குறைந்தால் வரட்சியும் வேதனையுந் தரும். மூக்குப் பக்கமாய் கண்ணிரப்பை முனைகளில் மொக்குள்போன்ற சிறிய பிதுக்கங்களுண்டு. அவைகளின்மேல் ஒரு சிறிய துவாரங் காணப்படும். அத்துவாரத்தில் கண்ணீரிறங்கி நாசிக்கடியிற் போய் விழும். கண்ணீரானது காரமான சில வஸ்துக்கள் கண்ணிற் படுவதால் தூண்டப்பட்டு வெளிவரும்; சில சமயத்தில் நாவிலுள்ள உருசியை அறியுங் கருவிகளாலும் சந்தோஷ மிகுதியாலும் துக்க மிகுதியாலும் அன்புமிகுதியாலும் தூண்டப்பட்டு வெளிவருவதுண்டு.

இத்தன்மைத்தாகிய கண்ணில் ஆன்மசிற்சத்தி நின்று ரூப விடயங்களைக் கிரகிக்குங் காலத்து கண்ணில் ரூபம் அமையும் வகையாவது: ஆணிச் சவ்வில் விழுகின்ற பிரகாசத்தின் கதிர்களில் ஒரு பகுதி திரும்பி விடுகிறது; மற்றொருபகுதி கண்ணுள் நுழைகிறது. ஆணிச் சவ்வின் முகிழ்ப்பும் முன்னறையிலுள்ள நீரும் கண்ணுள் நுழையுங் கிரணங்களைக் கண்மணியில் ஒரே புள்ளியில் (ஒரேயிடத்தில் என்றபடி) ஒன்றாய்ச் சேரச் செய்கின்றன. கண்மணி, இரண்டு பக்கங்களும் முகிழ்த்தக் கண்ணாடியைப்போல அந்தக் கதிர்களைக்கொண்டு வஸ்துவின் உருவத்தைத் தலைகீழாய் உண்டு பண்ணுகிறது. எப்படியெனில்:—

இருபக்கங்களும் முகிழ்த்த கண்ணாடியில் குறுக்காக நேரே போகும் வரிக்கு மத்தியவரி யென்று பெயர். கண்ணாடியில் பட்ட

பிரகாசக் கிரணங்கள் ஒன்று கூடு மிடத்துக்கு வரிகள் கூடும் முக்கிய ஸ்தானம் என்று பெயர். நீண்ட வட்டமான ஒவ்வொரு




29. படம்.

கண்ணாடியிலும் பார்வை மத்தியென்று ஒரு இடமுண்டு. அதன் வழியே யூடுருவிச் செல்லுகிற கதிர்களெல்லாம் கோணாது ஒரே நேராய்ப் போகும். A, என்ற இடத்திலிருந்து ஒரு உருவத்தை உண்டு செய்ய மத்தியவரிக்குச் சரியாய்ச் சமனகலத்தில் A, L, ஒரு கதிர் இழு. அது வளைவினால் F', என்ற முக்கிய ஸ்தானத்துக்குச் செல்லுகிறது. பிறகு A யிலிருந்து O, என்ற பார்வை மத்தியஸ்தானத்தின் வழியாய்ச் செல்லுவதால் வளைந்து சாயாதல்லவா? X F' கதிரும் A.0 கதிரும் சந்தித்து A' என்று A படத்தைக் கொடுக்கிறது. இவ்விதமாகவே B க்கும் L' க்கும் ஒரு கதிரும் B க்கும் 0. க்கும் ஒருகதிரும் இழுத்து Y, F'. ம் B. 0. ம் சந்திக்கச் செய்தால் B' என்றுB படத்தைக் கொடுக்கிறது. இவ்வாறே A B யின் பல விடங்களிலிருந்து உண்டாகுங் கதிர்களின் சந்திப்பால் A'B' என்றபடம் அமைகிறது. முக்கியஸ்தானத்துக்கு வெளியில் வைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவால் அதை விடச் சிறியதும் தலைகீழானதும் நிச்சயமானதுமான படம் அமைகிறது. அவ்வாறு அமைந்தபடத்தை ஆன்மசிற்சத்தி நேரா யறிகிறது.

வஸ்துவின் உருவம் ரூப உற்பத்தி சவ்வின்மேல் அமைய வேண்டியதா யிருக்கிறது; அதாவது கண்மணியின் ஒருபோதும் மாறாத தூரத்தில் அமைய வேண்டியதாயிருக்கிறது. அது கண்மணியின் செயலினாலேயே ஆகவேண்டியது. கண்மணி தூரத்திலிருக்கும் பொருள்களுக்குத் தட்டையாகவும், நெருங்கியிருக்கும் பொருள்களுக்கு முகிழ்ப்பாகவும் ஆகிறது. கண்ணிற்கு வேண்டிய அளவிற்கே பிரகாசம் கண்ணுள் நுழையவேண்டும். அதிகவெளிச்சம் கண்ணிற்கு வருத்தத்தைக்கொடுத்துப் பார்க்க முடியாமற் செய்கிறது; குறைந்த வெளிச்சம் மயக்கஞ் செய்கிறது. ஐரீஸ்

கள

தான் தனது சுருங்கல் விரிதல்களினால் கண்ணிற்கு வேண்டிய அளவிற்குப் பிரகாசத்தை அளவு படுத்துகிறது.

சிலருக்குச் சமீபதிருஷ்டியானது கண்மணியின் அதிக முகிழ்ப்பினால் உண்டாகிறது. அப்போது பொருளின் உருவம் ரூப உற்பத்தி சவ்வை அடைவதற்கு முன் அமைந்து விடுகிறது. ஆகையால் உருவம் சரியாய்ப் புலனாகிறதில்லை. வேண்டிய தூரத்தில் பார்வை அமைகிறதற்கு, அதற்குத் தக்கபடி உள்வளைந்த கண்ணாடியை உபயோகித்தல் வேண்டும்.




30. சமீப திருஷ்டியைக் குறிக்கும் படம்.

*a*, சாதாரணத்தில் அமையும்உருவம்; *a'*, இருபக்கமும் உள்வளைந்த கண்ணாடியை உபயோகித்தபோது அமையும் உருவம்.

கண்மணிக்குப் போதுமான முகிழ்ப்பில்லாமையால் சிலருக்குத் தூரதிருஷ்டி யுண்டாகிறது. அப்போது பொருளின் உருவம் ரூப உற்பத்தி சவ்வைக் கடந்துபோகிறது. அதனாலும் உருவம் சரியாய் அமைகிறதில்லை. சரியானபடி பார்வை அமைய அதற்குத் தக்கபடி முகிழ்த்த கண்ணாடியை உபயோகித்தல் வேண்டும்.




31. தூரதிருஷ்டியைக் குறிக்கும் படம்.

*a*, சாதாரணத்தில் அமையும் உருவம்; *a'*, இருபக்கமும் முகிழ்த்த கண்ணாடியை உபயோகித்தபோது அமையும் உருவம்.

## சிங்குவை.




32. படம் நாக்கு. *m*, தசை; *p*, *p'*, நாக்கடு; 1, உருசியறியும் நரம்பு.

சிங்குவை என்னும் இந்திரியமானது வஸ்துக்களின் உருசியை அறிவிக்கிற கருவியாகும். அதற்கு அவயவம் நாக்கு. நாக்கானது பலவகையிலும் குறுக்காய் வளர்ந்திருக்கும் தசைகளால் ஏற்பட்டது. நாக்குக்கு அடியில் சவ்வுமடிந்து நீண்டு இருக்கும். அதன் இரண்டு பக்கங்களிலும் உமிழ் நீர்க்கோளங்களுடைய குழல்களின் துவாரங்கள் உண்டு. நாக்கின்மேல் முள்ளுகள் காணப்படும். அவைகளுக்கு நாக்கடு என்று பெயர். அடிநாக்கில் முள்ளுகள் பெரிதாயிருக்கும். உருசியை அறிகிற நரம்புகள் மூன்று உண்டு. அவைகள் நாக்கு முள்ளுகளிற் சென்று முடிந்துவிடும். அவைகளின் உதவியினாலேதான் ஆன்மசிற்சத்தி வஸ்துக்களின் உருசியை அறிகிறது.

## ஆக்கிராணம்.

ஆக்கிராண மென்பது வஸ்துக்களின் வாசனையை நமக்கு அறிவிக்குங் கருவியாகும். அதற்கு நாசி அவயவமாயிருக்கிறது. எலும்பு, முருந்து எலும்பு, தசைகளால் நாசி யேற்பட்டிருக்கிறது. நாசிக்குள் மத்தியிலிருப்பதற்குத் தண்டு என்று பெயர். அது நாசியை இரண்டு துவாரங்களாகப் பிரிக்கும். ஒவ்வொரு நாசிதுவாரத்தில் மூன்று பள்ளங்களுண்டு. கீழ்ப் பள்ளத்தில் நாசித் தாரைவந்து முடிந்திருக்கும். இந்தத் தாரையானது கண்ணிலும் சம்பந்தப்பட்டிருக்கும்; இதன் வழியாகக் கண்ணீர் நாசியில் இறங்கும். நாசியில்சளியூறுஞ் சவ்வு இருக்கிறது. அதன்மேல் பாகத்தில் வாசனைநரம்புகளின் இழைகள் வியாபித்திருக்கும். அவைகளின்உதவியால் ஆன்மசிற்சத்தி வாசனையை அறியும்.




33—படம். மூக்கு.

1, வாசனை நரம்புகள்; 2, நெற்றி எலும்பு; 3, பிடரித்துவாரம். 4, 5, 6, நாசிப்பள்ளங்கள்; 7, காதுக்குப் போகுங் குழல்; 8, அண்ணம்; 9, பின்வாய்.

இவ்வாறு ஆன்மாகருவிகளுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்பட்டு வரும் அவதாரத்திலே புண்ணிய மேலீட்டினாலே அநாதிபந்தமான மூலமலம் தனது மறைக்குஞ் சத்தி மேதய்தற்குரிய துணைக்காரணங்களுடன்கூடிப் பாகம் வந்தவிடத்துச் சத்திநிபாதம் நிகழப்பெற்று அதனாலிருவினை யொப்பையடையும்.

சத்திநிபாதமாவது:—பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அனுகூலமாய் நின்று நடாத்திய திரோதான சத்தி மலம்பரிபாகமெய்திய வழி அம்மறக் கருணையாகிய செய்கைமாறி அறக்கருணைரூபமாய் ஆன்மாக்கள் மாட்டுப் பதிதல். இது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்பட்டு ஒரோவொன்று நான்காய்ப் பதினாறு வகையாகி இன்னும் பலதிறப்பட்டு விரியும்.

இனி இருவினை யொப்பாவது ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின்பயன்களினும் ஒப்பஉவர்ப்பு நிகழ்ந்து விடுவோன தறிவின்கண் அவ்விருவினையும் அவ்வாறொப்ப நிகழ்தல்.

இவ்வாறு மலபரிபாகஞ் சத்திநிபாதம் இருவினை யொப்புப் பெற்ற ஆன்மாக்கள் அவரவர்கள் மாட்டு நிகழ்ந்த சத்திநிபாதத்துக்கேற்பக் குருவினாலே தீட்சித்து அனுக்கிரகிக்கப் பெற்றுச் சரியை கிரியா யோக ஞானங்களை யனுட்டித்து அவற்றின் பயனாகிய சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுவார்கள்.

இவற்றிற்குப் பிரமாணம் சிவப்பிரகாசம். பொது.

இனையபல பிறவிகளி னிறந்து பிறந்தருளா
    விருவினைகள் புரிந்தருந்து மிதுசகல மகலா
முனமருவு மிருபயனு மொருகாலத் தருந்த
    முந்தநுகருந்துபய னந்தமுறவந்த
வினையு மெதிர்வினையு முடிவினை யுதவுபயனா
    னேராக நேராதல் மேவுங் கான்முற்
சினமருவு திரோதாயி கருணையாகித்
    திருந்திய சத்திநிபாதந் திகழுமன்றே. (36)

நாடிய சத்திநிபாத நாலு பாத
    நண்ணும்வகை யெண்ணரிய ஞானபாதங்
கூடுமவர் தமக் குணர்வாய் நின்ற ஞானக்
    கூத்தனொரு மூர்த்திகொடு குறகிமோக

நீடிய கேவல சகல நிகழாவாறு
நிறுத்திமலமறுக்கு மிது நிலையார்சுத்தங்
கேடில்புகழ் தருசரிதை கிரியாயோகக் [37)
கேண்மையரே விவையுணர்த் தக்கிளக்குநூலே. என்றும்.

விநாயக புராணம்.

பக்குவமூலபாகஞ்சத்தி பதிதலிருவினை யொப்புபயின்றகாலைத், தொக்கமல பந்தமெலாங் கழித்தவான்மா சுத்தமாய்ச் சுத்தவவத்தை யினிற் சொன்ன, பத்துவித புண்ணியமும் புரிந்து மேலாம் பாத்தினொடு மொன்றுகா திரண்டுமாகா, தத்துவிதமா யேகமா யின்பாயபாவமா நிலையகச் சம்பந்த மாகும். என்றும் வரும்.

இனி சரியைமுதலிய நான்கும் சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீக்கையின்றி செய்யப்படும் உபாயச் சரியை கிரியை யோக ஞானமென்றும் சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீக்கையுடையோராற் செய்யப்படும் உண்மைச் சரியை கிரியை யோக ஞானமென்றும் இருவகைப்படும்.

இவற்றுள் உண்மைச் சரியையிற் சரியைமுதல் உண்மைஞானத்தில் ஞானமீறாகிய பதினாறுக்கும் விவரமாவது:

சரியையிற் சரியைமுதலியன: திருக்கோயில் அலகிடல் மெழுகல் முதலியன சரியையிற் சரியை. சந்திரசேகரர் உமாமகேசர் முதலியயிருபத்தைந்து மூர்த்திகள் விநாயகக்கடவுள் முதலிய பரிவார மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சின்கண் உருத்திரக் கடவுளைத் தியானஞ் செய்தல் சரியையில் யோகம். அத்தியானபாவனையின் உறைப்பான் ஓரநுபவவுணர்வு நிகழ்தல் சரியையில் ஞானம்.

கிரியையிற் சரியை முதலியன: சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்க ளெல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச் சுத்திமுன்னாகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம் கிரியையில் யோகம். அவ்வந்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓரநுபவ வுணர்வு கிரியையில் ஞானம்.

யோகத்திற் சரியைமுதலியன: இயமம், நியமம். ஆசனம் பிராணுயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை, பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை, தியானம் யோகத்தில் யோகம், சமாதி யோகத்தில் ஞானம்.

ஞானத்திற் சரியை முதலியன.

கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற்கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டைகூடல் ஞானத்தில் ஞானம்.

இவற்றுள் உபாயச்சரியையிற் சரியைமுதல் உபாயஞானத்தில் ஞானமீருகிய பதினறு வகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வவற்றிற்கேற்பக் காலாக்கினி யுருத்திரர்முதல் குணதத்துவ மத்தகத்திற் சிகண்ட புவனத்தின் கீழுள்ள உருத்திரரீருன அவ்வப்புவனபதிகளுலகத்திற் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியங்களைப் பெறுதலாம். உண்மைச்சரியையிற் சரியைமுதல் உண்மையோகத்தின் ஞானமீருகிய பன்னிருவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பச் சிகண்டபுவனம் முதற்சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம்முதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மைஞானத்திற் சரியைமுதலிய மூவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்கட்கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பச் சுத்தவித்தைமுதலிய அதிகாரதத்துவம் போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர்முதலியோர் புவனத்துச் சாலோகமுதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். பலவேறுவகைப்பட்டு விரியும் ஞானத்தின் ஞானங்களுக்குப் பயன், இலயதத்துவத்திற் பலவேறுவகைப்பட்ட அபரமுத்தியாம்.

பதமுத்திகளைப் பெற்றவர்கள் தங்கள் பதபோகமுடிவின்கண் மீண்டு பூமியில் ஒரு சனனம் நற்சார்பில் எடுத்து சிவஞானத்தால் முத்தியைப் பெறுவார்கள். அபரமுத்தியைப் பெற்றவர்கள் மீளப் பிறவாமல் அங்கிருந்தவாறே பரமுத்தியைப் பெறுவார்கள்.

சாலோகம்.

அவ்வச்சரியைக்கேற்ப அவ்வப்புவனபதி யுலகங்களிளெய்தி ஒருவர் மனையிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க்குளதாகிய உரி

மைபோல, அவ்வவ்வுலகத்துள் எங்குந்தடையின்றிச் சஞ்சரித்து அவ்வப்போகங்களை அனுபவித்து வாழ்வது சாலோகம்.

### சாமீபம்.

அவ்வளவினன்றி மைந்தர்க்குளதாகிய உரிமைபோல் அவ்வக் கிரியைக்கேற்ப அவ்வப்புவனபதிகளுக்குச் சமீபத்தில் பொருந்தி வசித்துக்கொண்டு அவ்வப்போக விசேடங்களை அனுபவித்து வாழ்வது சாமீபம்.

### சாரூபம்.

அவ்வளவினன்றித் தோழர்க்குரிய உரிமைபோல அவ்வப் போகத்திற்கேற்ப அவ்வப்புவனபதிகளோடொத்த வடிவமும் ஒத்த அணிகலனும் ஒத்தபோக நுகர்ச்சியும்பெற்று வாழ்வது சாரூபம்.

### சாயுச்சியம்.

சரியையில் ஞானம் முதல் யோகத்தின் ஞானமீறுகிய ஞான விசேடங்கட்குப் பயனெனப்படும் சாயுச்சியமாவது, ஒத்தவடிவினராய் வாழ்தன்மாத்திரையேயன்றி அவ்வப்புவனபதிகளான் அதிட்டிக்கப்பட்டு அவ்வவ்வதிகாரங்களை அவ்வவர் போலவே செய்து கொண்டு வாழ்வது.

இச்சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்கள் உரிமை விசேடம்பற்றி முறையே தொண்டர் முதலியோரியல்பை யொத்தலின் இவற்றை அடைவதற்கு நெறியாகிய சரியைமுதலிய நான்கும் தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப் பெயர்பெற்றன.

தாதமார்க்கம். சித்தியார் அ-ம். சூ-ம்.

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமல கிட்டிலகு திருமெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்து திருவேடங் கண்டாலடியேன்செய்வ
தியாது பணியீரென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவ திச்சரியை செய்வோ ரீசனுலகிருப்பர்.

புத்திரமார்க்கம்.

புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய் தாசனமூர்த்தி மூர்த்தி மானாஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினா லருச்சித்துப் பரவிப் போற்றி
பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே. (20)

சகமார்க்கம்.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர மூலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதி மண்டலத்துண்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத் தலுழந்தவர் சிவன்ற னுருவத்தைப் பெறுவர். (21)

சன்மார்க்கம்.

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கடாம் பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசு பாசந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
பெருமை யுடையோர் சிவனைப்பெறுவர் காணே. (22)

இனி ஞானத்தில் முடிவாகிய ஞானத்திற்குப் பயனாவது, நாலாஞ் சத்திநிபாதமானது மந்ததரமுதலிய நால்வகை யாதலால் அந்நால் வேறுவகைச் சத்திநிபாதம் பற்றி உணர்த்தப்பெற்று மந்ததரத்தாற் சாதகநிலையும், மந்தத்தாற் சீவன் முத்திநிலையும், தீவிரத்தால் அபர முத்திநிலையும், தீவிரதரத்தாற் பரமுத்திநிலையும் அடைவதாம். ஆனால் விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் நாலாஞ் சத்திநிபாதம் தீவிரமாயும் தீவிரதரமாயுமே நிகழுமாக

லின் அவர்கள் அவ்விருவகைச் சத்திநிபாதம்பற்றி யுணர்த்தப் பட்டு தீவிரத்தான் உணர்த்தப்பட்டார் அபாமுத்தியும் தீவிரதாத் தான் உணர்த்தப்பட்டார் பாமுத்தியு மடைவர்.

இங்ஙன முணர்த்தப்படும் ஆன்மாக்களுக்குக் குருவினாலே செய்யப்படுந் *தீட்சையானது சட்சுதீட்சை, பரிசதீட்சை, வாசக தீட்சை, மானததீட்சை, சாத்திரதீட்சை, யோகதீட்சையென அறுவகைப்படும். இவற்றின் முறைமையாவது:—அத்துவா மார்க் கங் குறியாமற் குறித்துச் சிவோகம்பாவனைப் பண்ணி ஞானக் கண்ணால் சீடனுடைய பாசம் சாம்பறவெந்தொழியும்படிப் பார்த் தல் சட்சு தீட்சை; அப்படிப்பார்த்துச் சிவஹஸ்தம் வைத்தல் பரிசதீட்சை; அப்படிக்குறித்து மந்திரமுபதேசித்தல் வாசகதீட் சை; அப்படிக் குறித்து யோகவழியால் சீடனது இருதயத்திற் பிரவேசித்துச் சிந்தித்தல் மானததீட்சை; ஆகமப்பொருளை யுப தேசித்தல் சாத்திரதீட்சை; யோகத்தாற் சீடனுடைய இருத யத்திற் பிரவேசித்துச் சீவனைப் பாசம்பறியப்பார்த்துச் சிவனிடத் திலே யோசித்தல்(சேர்த்தல்) யோகதீட்சை.

இங்ஙனங் கூறிய தீட்சைகளால் மலங்கள் கழலுமுறைமைக் குப் பிரமாணம்.

நோக்கான் மாயைபரிசத்தா லுண்மைவினை மந்திரச் சொல்லாற்
றூக்குஞ்சுத்த மாயையது தியானந் தன்னாற் சாருமலம்
பார்க்குமிகு பாவனையா லேபகைத்த திரோதம் யோகத்தாற்
றேக்குமான்ம போதமிவை சேரக் கழலுங் கண்டீரே.

எனவரும்.

இங்ஙனம் கூறிப்போந்த வகையிலடையும் முத்தியின் முப் பதுவகையான நெறியினைப் பின்வரும் சிவானந்த வாசிரியப்பாவிற் கூறியவாற்றாலறிக.

"ஆசிரியப்பா"

முப்பதுவகைப்படும் முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தசகா ரியத்திற்
பொறையிலும் பூதமும் பொய்யென வருளான்
முறையுற நீங்கு முத்திச் சகலமும்

* தீ - என்பது தானம், க்ஷீ - என்பது க்ஷயம்; புத்தி முத்தி தானமும் பாச க்ஷயமுஞ் செய்வதால் தீட்சையெனப்படும்.

பஞ்ச பூதப் பழிப்புறு முடலு
மஞ்சு புலன்றனை யறிந்திடும் பொறிகளுஞ்
செறிந்திடு புலனைத் தெரிந்திடிற் றனித்தனி
யறிந்திட வறியா வந்தக் கரணமு
மக்கர ணங்க ளகல வகன்றிடுந்
தக்க கலாதித் தத்துவக் குழுவு
மத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்ததத் துவமுந் தொடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்கவிவ் வேழுந்
தத்துவ ரூபந் தத்துவ தரிசனம்
தத்துவ சுத்தி தன்னு ளடங்கும்
மாயையுங் கன்மமு மாமா யையுமென
வாயவிம் மூன்று மகன்றிடு மிவணே
தத்துவா தீதந் தன்னின்மைக் குழம்பினை
யொத்திடு மலவிரு ளுறுவது கேவலம்
அற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது *கேவல நிலையது வாகும்
இருண்மல நீங்குதற் கெண்ணு தறிரோத
மருள்வடி வான வவதார மாகும்
அங்குயிர் காண்பதற் காதர வுறமிடஞ்
சங்கர னிச்சா சத்தியின் றெரிசனம்
மருவுயிர் வெளிப்பட வல்லிரு ணீக்கந்
தருவது கிரியா சத்திய தாகும்

---

* ஈண்டு கூறியகேவலம் அருட்கேவல மெனப்படும் எனவே கேவலம் மருட் கேவலம், சகலகேவலம், பிரளய கேவலம்,விஞ்ஞானகேவலம், அருட்கேவலமென ஐவகைப்படுமென வறிக. அவற்றுள்; 1 மருட் கேவலமாவது அநாதி கேவலம். 2. சகலகேவலமாவது சங்கரித்த பின்னர்ப்புனருற்பவத்திற் கேதுவாய்ப் படும் கேவலம். ஆண்டுச்சூக்கும வைந்தொழிலுண்டென மிருகேந்திரத்துட் கூறுதலின் அனாதி கேவலத்தோடு இதனிடை வேற்றுமை யுண்டெனவறிக. 3 பிரளயகேவல மாவது மாயையோடு இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். 4 விஞ்ஞான கேவலமா வது மாயைகன்மங்க ளென்னும் இரண்டனோடும் இயைபின்றி ஆண்டுப்படுங்கேவ லம். 5 அருட்கேவலமாவது தத்துவ சுத்திப் பின்னர்ப்படுங் கேவலம். இதனை. ,'அன்றிவந்த தத்துவங்க ளெல்லா மகன்றிடவே யொன்றிநின்ற வாணவந்தா னொன் றுமே—யென்றுந்தா, னீங்கா விருள்விழிபோ னிற்குமே யான்மாவும், பாங்காக வாங்கே பதிந்து. பகலிழந்த வான்போற் பரவுமல நீயா, யிகலறவே நின்று யிழந்தா—யகலறிவு, வாடாத முத்தியினில் வந்தவருட் கேவலநீ, நாடாத கேவல முன் னுள்." என்னுந் துகளறுபோதச் செய்யுள்களா லறிக.

அந்தவா ருயிர்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்
முழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியு
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்
புணர்ந்தவல் விருளினைப் புரைபுரை தொறுஞ்சென்
றுணர்ந்திடு மறிவாத் மரூபம தாகும்
கேவல வல்விருள் கீழ்ப்படத் தான்முழு
தாவதே யாத்ம தரிசன மாகும்
நயந்திடு மிச்சா ஞானக் கிரியையிற்
பயின்றி டாநிலை யதுபரை தெரிசன
மெதிர்ப்படு பரையினிற் சேதன வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி
விரவியப் பரையினில் வியாபகத் துடனுயிர்
பரவிநின் றறிவது பரையினில் யோகம்
ஆங்குறு பரையி னனுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரைதனிற் போகம்
முற்பரை யோக முழுப்பரை சாக்கிரந்
தற்பரை போகஞ் சாக்ரா தீத
மோர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சோர்ந்திட லாத்ம சுத்திய தாகு
மிருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலுளத்
தருளெழ வாணவ மகன்றது மிவனே
யறிவகல தீதத் தனுபவஞ் சிறிதாங்
குறுவ தேசுக ரூபம தாகு
மான்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்ற நிற்பதுவே சுகாதீ தமாகும்
அகண்டமுஞ் சுகவடி வாஞ் சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்
எங்குங் கலந்த விறை வனைந் தொழிலையும்
அங்கங் கறிவ தருஞ்சிவ தரிசனம்
மருளதி கார மலமகன் றிடவே
யிருளது மேவிடு மவ்தர மிவனே
யற்புத வருளா லத்து விதம் பெறச்
சிற்பரத் திசைவது சிவயோக மாகும்
நற்பர சிவத்துற நண்ணுபே ரின்பஞ்
சிற்பரா னந்த தெரிசன மாகும்
பெறுபரா னந்தப் பெருக்கினைக் கவர்ந்தாங்
குறுவதா னந்த யோகம தாகும்

அருந்துமா னந்த அவச மேலீடு
பொருந்திய நிலை சிவபோகம்'தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையகங் காண்பது மறித்துமக் காட்சியே

இங்ஙனம் பஞ்சமலங்களும் பஞ்சசத்திகளும் தீட்சையானும் அனுபவத்தானும் நீங்கப்பெற்றே ஆன்மா முடிவான பரமானந்தாவச சாயுச்சிய சிவபோகத்தி லழுந்தும். பஞ்சமலங்கள் அனுபவத்தாலும் நீங்குமென்பதற்குப் பிரமாணம்.

சிவஞானதீபம். 108.

எண்ணியமுற் புசிப்பகலா மாயா போகத்
திதமகித மறுகையினுற் றிரோதாயி நட்ட
நண்ணுமிரு வினைதுலையொப் பாத லாலே
நாடியமா மாயையுமைந் தொழிலு நட்டம்
பண்ணுமவ னவளதுவா முன்னிலைச்சுட் டொழியிற்
பற்றுருகுங் கன்மமலம் நட்ட மாகுந்
திண்ணமிகும் வடிவகல மாயை நட்டஞ்
சிவபோகம் விளைந்திடம்விட் டகன்றிமோ ணவமே.

பஞ்சசத்திகளும் நீங்குமுறைமைக்குப் பிரமாணம்:

சிவஞானதீபம். 109.

கூட்டரவு வொழிகையினுற் கிரியையவிழ்ந் தகலும்
குலவுதரி சனமகல வனுபோகம் விளையி
னூட்டரிய ஞானசத்தி வேற்றுமையா யகலும்
நவையாரும் பெறுதியொழிந் திடுதலினு லெவையுஞ்
சேட்டிதமா மிச்சையுமங் கப்பரிசே யகலுஞ்
சிவம்பிரகா சிக்கையினுற் றிரோதாயி யகலு
நீட்டியதற் போதமறச் சிவானுபவத் தழுந்தி
னித்தியமாம் பராசத்தி விட்டகலுங் காணே. எனவரும்.

சத்திகளும்நீங்கியே சாயுச்சியமென்பதற்குப்பிரமாணம்:

பட்டினத்தார்பாடல்.

மாயநட் போரையும் மாயாமலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் கூடிபின் தாதையைச் சேர்ந்துபின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே.

எனவரும்.

இனி பரமானந்தாவச சாயுச்சிய சிவபோகமென்பதை:

பரமபர மானந்தம் பார்கீழ்மேன் மற்று
மரவம்வா ராதே யகலும்—புரணமா
யாங்கே யமிழ்ந்தி யவசமா மானந்த
நீங்காதது வாகி நில்.

உற்றபர மானந்தத் தொன்று யதிலுறங்கி
முற்றுவதே முத்திமுடி வென்றுரைக்குங்—குற்றமிலா
வைதிக சைவம் வழிநூல்பு ராணமற்றுஞ்
செய்வனநூ லெல்லாந் தெளி.

என்பதனாலறிக.

இங்ஙனம் சர்வசாத்திரார்த்தமான பதி பசு பாசங்களின் தத்துவங்களை ஒருவாற்றாற் புலப்படுத்தச் சித்தாந்தப்படம் எழுதப்பட்டது. உலகம் பொறுக்க.

ஒழிபு இயல் முற்றிற்று.

சித்தாந்தப்படவிளக்கம்

முற்றிற்று.

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| பதி | ௩ |
| பசு | ௧௩ |
| விஞ்ஞானகலர் | ௧௪ |
| பிரளயாகலர் | ௧௯ |
| சகலர் | ௨௨ |
| ஆணவம் | ௨௬ |
| கன்மம் | ௨௮ |
| மாயை | ௩௧ |
| திரோதாயி | ௩௪ |
| மாயேயம் | ௩௫ |
| அத்துவாக்கள் | ௩௬ |
| தத்துவங்கள் | ௱ |
| தத்துவங்களின் தோற்றம் | ௩௭ |
| தத்துவங்களின் உயரப்பிரமாணம் | ௫௩ |
| தத்துவ வர்ணாதிபதிகள் | ௫௬ |
| கலைகள் | ௫௭ |
| புவனங்கள் | ௫௯ |
| நரகங்கள் | ௭௨ |
| பாதாளம் | ௭௪ |
| பூவுலகம் | ௭௫ |
| புவர்லோகம் | ௮௩ |
| வன்னம் | ௯௩ |
| பதம் | ௱ |
| மந்திரம் | ௯௫ |

| | பக்கம். |
|---|---|
| இதயதாமரை | ௬௫ |
| சிவலிங்கம் | ௬௮ |
| தத்துவங்களியங்கு முறைமை | ஷை |
| தத்துவங்களின் தொழில் | ௧00 |
| அவத்தை | ௧௧௬ |
| சுரோத்திரம் | ௧௨0 |
| துவக்கு | ௧௨௩ |
| சட்சு | ௧௨௫ |
| சிங்குவை | ௧௩0 |
| ஆக்கிராணம் | ௧௩௧ |
| ஞானத்திற் சரியைமுதலியன | ௧௩௪ |
| சாலோகாதி | ஷை |

அட்டவணை முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௬ | ௨௮ | இர்கள் | இவர்கள் |
| ௯ | ௧௨ | நிரைநிறை | நிரைநிரை |
| ௧௭ | ௩௦ | இவர்களும் | இவர்கள் |
| ௧௮ | ௩௪ | நிவிர்த்தாதி | நிவிர்த்தியாதி |
| ௨௨ | ௨௫ | மாயையுடைவர் | மாயையுடையவர் |
| ௨௩ | ௪ | தியட்டித்து | யதிட்டித்து |
| ,, | ௧௪ | மலபரிபாகமானது | மலபரிபாகமாவது |
| ௨௪ | ௯ | பிணிப்பாகிப | பிணிப்பாகிய |
| ௨௫ | ௧௯ | சர்க்குரு | சற்குரு |
| ௩௮ | ௨௪ | சக்ரம | சக்ரம் |
| ௪௨ | ௧௫ | குரிப்பதில் | குறிப்பதில் |
| ௪௩ | ௩௨ | ௨௪-அ | ௨௪ A |
| ௪௫ | ௯ | ௨௨அ, ௨௨இ, ௨௨உ | ௨௨A, ௨௨B, ௨௨C |
| ௬௩ | ௫-,பட | ௧௨௮நாகல; ௧௨௭நகல | ௧௨௮நகல; ௧௨௭நாகல |
| ௭௧ | ௧௫ | ஆதிகமடம | ஆதிகமடம் |
| ௭௬ | ௫ | ௧௫,000 | ௧௬,000 |
| ௭௭ | ௧௯ | இமயத்திற்கு | இமயத்திற்கும் |
| ௭௮ | ௩ | அதி | அதிசய |
| ௮௭ | ௨௨ | சிரோமணி | சிரோமணி |
| ௮௯ | ௫ | மங்தோச்சுத்துக்குப் | மங்தோச்சத்துக்குப் |
| ௯௫ | ௫ | ஸத்வபூத | ஸர்வபூத |
| ௯௬ | ௧௩ | என்னும் | முதலிய |
| ,, | ௨௧ | கேசங்கள் | கேசரங்கள் |
| ௧௦௧ | ௧௫ | தத்திவத்தா | தத்துவத்தா |
| ௧௦௩ | ௧௦ | விவசாய | வியவசாய |
| ௧௦௬ | ௯ | ஸ்ரீதிரிகள் | ஸ்திரீகள் |